# பகுதி III

# பகுதி III

## 2014 ஆம் ஆண்டில் நாணயச் சபையால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய நிருவாக வழிமுறைகள்

### தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள், சுற்றறிக்கைகள், பணிப்புரைகள் மற்றும் அறிவித்தல்கள்


| | | தொடர்பு எண் | பக்கம் |
|---|---|---|---|
| | **வங்கி மேற்பார்வைத் திணைக்களம்** | | |
| 1. | இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டத் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் | | 1 |
| 2. | திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 86ஆம் பிரிவின் கீழ் திரவச் சொத்துக்களின் வரைவிலக்கணம் | 02/17/550/0016/001 | 2 |
| 3. | பாசல் II மூலதனப் போதுமைக் கட்டமைப்பின் கீழ், தொழிற்பாட்டு இடர்நேர்வுகளுக்கான இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட தொகையின் கணிப்பு மீது தரமிடப்பட்ட அணுகுமுறையினை நடைமுறைப்படுத்தல் | 02/17/600/0029/001 | 2 |
| 4. | 2014ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் அசையாச் சொத்துக்களின் மதிப்பீடு மீதான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு | | 11 |
| 5. | அசையாச் சொத்துக்களின் மதிப்பீடு தொடர்பில் வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் | 02/17/600/0003/002 | 14 |
| 6. | 2014ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் கடன் வசதிகளின் உயர்ந்தபட்சத் தொகை மீதான 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளுக்கான திருத்தம் | | 14 |
| 7. | 2014ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் கடன் வசதிகளின் உயர்ந்தபட்சத் தொகை மீதான 2007ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப்பணிப்புரைகளுக்கான திருத்தம் | | 15 |
| 8. | 2014ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் உரிமம் பெற்ற வங்கிகளுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பு மீதான பணிப்புரைகளுக்கான திருத்தம் | | 16 |
| 9. | முதலீட்டு நிதியக் கணக்கு | 02/17/800/0014/02 | 27 |
| 10. | முதலீட்டு நிதியக் கணக்குகள் | 02/17/800/0014/02 | 28 |
| 11. | ஏற்றுமதியாளர்களுக்கான கடன் வசதிகளை அறவிடல் | 02/17/600/002/001 | 28 |
| 12. | இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை (அதிவிசேடமானது) | 1891/11 | 28 |
| 13. | 2014ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத் தீர்மானம் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் ஆண்டு உரிமக் கட்டணம் | | 29 |
| 14. | வங்கிகளின் குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாட்டினை அதிகரித்தல் | 02/17/402/0073/002 | 29 |
| 15. | வங்கிகளின் குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாட்டினை அதிகரித்தல் | 02/17/402/0073/002 | 30 |
| 16. | நிதியியல் துறை ஒருங்கிணைப்பினை வசதிப்படுத்துவதற்காக 2006ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க உள்நாட்டரசிறைச் சட்டம் மற்றும் 2002ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க பெறுமதிசேர் வரிச் சட்டம் என்பனவற்றின் ஏற்பாடுகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட திருத்தங்களைத் தொடர்வதற்கான வழிகாட்டல்கள் | | 30 |
| | **நாணயத் திணைக்களம்** | | |
| 17. | தன்னியக்கக் கூற்றுப் பொறியிலிருந்து காசினை மீளப்பெறல் | 12/02/0001/0036/002 | 33 |
| 18. | மத்திய வங்கியுடனான காசுக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான வழிகாட்டல்கள் | 12/02/008/0007/001 | 33 |

உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம்

| | | | |
|---|---|---|---|
| 19. | உந்து ஊர்திகளின் இறக்குமதிக்கான நாணயக் கடிதத்திற்கெதிரான அளவுத் தேவைப்பாடுகள் | 35/01/005/0010/18 | 35 |
| 20. | இலங்கை மத்திய வங்கியின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் மீதான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் | 35/01/005/006/33 | 35 |
| 21. | இலங்கை மத்திய வங்கியின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் மீதான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் | 35/01/005/0006/34 | 36 |

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்

| | | | |
|---|---|---|---|
| 22. | இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை (அதிவிசேடமானது) | 1854/3 | 36 |
| 23. | வெளிநாட்டுப் பயண அட்டைகள் | 06/04/01/2014 | 36 |
| 24. | சிறப்பு வெளிநாட்டு முதலீட்டு வைப்புக் கணக்குகள் | 06/04/02/2014 | 38 |
| 25. | மாணவர் விசாவினைப் பெறுவதற்கு முன்கூட்டியே நிதிகளை அனுப்புதல் | 06/04/03/2014 | 38 |
| 26. | வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் | 06/04/04/2014 | 38 |
| 27. | வதியும் இலங்கையரல்லாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் | 06/04/05/2014 | 39 |
| 28. | பன்னாட்டு பணி வழங்குவோர் மற்றும் அவர்களது ஊழியர்களுக்கான வெளிநாட்டு நாணயக் கணக்குகள் | 06/04/06/2014 | 39 |
| 29. | வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்கு | 06/04/07/2014 | 39 |
| 30. | இலங்கைக்கு வெளியே வதியும் வழங்குநர்களினால் இலங்கையில் வதியும் இறக்குமதியாளர்களுக்கான கடன் வசதிகள் | 06/04/09/2014 | 42 |
| 31. | நாணயக் கடிதங்கள் | 06/04/10/2014 | 43 |
| 32. | இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை (அதிவிசேடமானது) | 1864/38 | 44 |
| 33. | இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை (அதிவிசேடமானது) | 1864/39 | 45 |
| 34. | இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை (அதிவிசேடமானது) | 1864/40 | 46 |
| 35. | வெளிமுக முதலீட்டுக் கணக்கிற்கான திருத்தம் | 06/04/11/2014 | 47 |
| 36. | வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்குகளின் உடமையாளர்களுக்கான கடன் வசதிகள் | 06/04/12/2014 | 48 |
| 37. | சீன றென்மின்பி இல் கணக்குகளைத் திறந்து பேணுதல் | 06/04/13/2014 | 49 |
| 38. | பயண நோக்கங்களுக்காக வெளிநாட்டு நாணயத் தாள்களை வழங்குதல் | 06/04/15/2014 | 49 |
| 39. | இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை அதிவிசேடமானது | 1895/15 | 49 |

நிதியியல் உளவறிதல் பிரிவு

| | | | |
|---|---|---|---|
| 40. | பயங்கரவாதத்திற்கும் பயங்கரவாதிகளுக்கும் நிதியிடுவதனை தடை செய்தல் மற்றும் ஒடுக்குதல் அறிக்கையிடுகின்ற நிறுவனங்களின் கடப்பாடு | 01/14 | 50 |
| 41. | பயங்கரவாதம் மற்றும் பயங்கரவாதிக்கு நிதியிடுவதனைத் தடை செய்கின்ற மற்றும் ஒடுக்குகின்றமை தொடர்பாக அறிக்கையிடும் நிறுவனங்களின் கடப்பாடு | 02/14 | 50 |
| 42. | பயங்கரவாதம் மற்றும் பயங்கரவாதிக்கு நிதியிடுவதனைத் தடை செய்கின்ற மற்றும் ஒடுக்குகின்றமை தொடர்பாக காப்புறுதிக் கம்பனிகளின் கடப்பாடுகள் | 03/14 | 52 |
| 43. | பயங்கரவாதம் மற்றும் பயங்கரவாதிக்கு நிதியிடுவதனைத் தடை செய்கின்ற மற்றும் ஒடுக்குகின்றமை தொடர்பாக பங்குத் தரகர்களின் கடப்பாடுகள் | 04/14 | 54 |
| 44. | வெளிநாட்டு உள்முகப் பணவனுப்பல்களை அறிக்கையிடுதல் | 05/14 | 55 |

கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்

| | | | |
|---|---|---|---|
| 45. | பெப்பச்சுவல் ரெஸரீஸ் லிமிடெட்டினை லங்கா செட்டில் முறைமையின் பங்கேற்பாளராக நியமித்தல் | ஆர்ரிஜிஎஸ்/01/2014 | 56 |
| 46. | 2014 பெப்புருவரி 23ஆம் நாளன்று நேரடி பரீட்சிப்புக்களை நடத்துவதற்காக லங்கா செட்டில் முறைமையைத் திறந்து விடுதல் | ஆர்ரிஜிஎஸ்/02/2014 | 56 |
| 47. | 2014ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க பொதுவான பணிப்புரை - பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழியினூடாக மேற்கொள்ளப்படுகின்ற கொடுக்கல்வாங்கல்கள் மீது விதிக்கத்தக்க கட்டணம் | | 57 |
| 48. | லங்கா செட்டில் முறைமை 2014 மாச்சு 14ஆம் திகதி (வெள்ளிக்கிழமை) அன்று அதன் மாற்று அமைவிடத்திலிருந்து நேரடித் தொழிற்பாடுகளை மேற்கொள்ளும் | ஆர்ரிஜிஎஸ்/03/2014 | 57 |
| 49. | கார்கில்ஸ் பாங்க் லிமிடெட்டினை லங்கா செட்டில் முறைமையின் பங்கேற்பாளராக நியமித்தல் | ஆர்ரிஜிஎஸ்/04/2014 | 58 |
| 50. | 2014ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க பொதுவான பணிப்புரை - பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழியின் தொழிற்பாடுகள் | | 58 |
| 51. | 2014 ஒத்தோபர் 6ஆம் திகதியை அரச மற்றும் சிறப்பு வங்கி விடுமுறையாகப் பிரகடனப்படுத்தல் | ஆர்ரிஜிஎஸ்/05/2014 | 61 |
| 52. | வரையறுக்கப்பட்ட அமானா வங்கியின் பெயர் மாற்றம் | ஆர்ரிஜிஎஸ்/06/2014 | 61 |
| 53 | லங்கா செட்டில் முறைமை 2014 நவெம்பர் 07ஆம் திகதி (வெள்ளிக்கிழமை) அன்று அதன் மாற்று அமைவிடத்திலிருந்து நேரடித் தொழிற்பாடுகளை மேற்கொள்ளும் | ஆர்ரிஜிஎஸ்/07/2014 | 61 |

பிரதேச அபிவிருத்தி திணைக்களம்

| | | | |
|---|---|---|---|
| 54. | சுயவேலை வாய்ப்பு ஊக்குவிப்பு முன்னெடுப்புக் கடன் திட்டத்தின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கான திருத்தங்கள் | ஆர்டிடி/எஸ்ஈபிஜ/ 2009/07/(ஏ-02) | 62 |
| 55. | புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்திற்கு ஏற்புடைத்தான நிதியின் அளவு, வட்டி வீதம் மற்றும் அரச வட்டி உதவுதொகை வீதம் என்பனவற்றில் திருத்தம் | | 63 |
| 56. | இலங்கை மத்திய வங்கி அடகுபிடித்தல் முற்பணங்களுக்கான கொடுகடன் உத்தரவாதத்திட்டம் | ஆர்டிடி/சிஜிஎஸ்பிஏ /14/1 | 64 |
| 57. | வர்த்தக அளவிலான பாற்பண்ணை அபிவிருத்திக் கடன் திட்டத்தின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கான திருத்தம் | ஆர்டிடி/சிஎஸ்டிஎல்எஸ்/ 2013/01/(ஏ-01) | 71 |
| 58. | அடகு முற்பணங்களுக்கான கொடுகடன் உத்தரவாதத் திட்டம் இல. ஆர்டிடி/சிஜிஎஸ்பிஏ/14/1 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தலுக்கான திருத்தம் | ஆர்டிடி/சிஜிஎஸ்பிஏ/ 14/1/(ஏ-01) | 71 |
| 59. | சுபீட்சக் கடன் திட்டம் (சௌபாக்கியா) - வட்டி வீதங்களுக்கான திருத்தங்கள் | ஆர்டிடி/பிஆர்/ 2010/03/(ஏ-03) | 71 |
| 60. | வர்த்தக அளவிலான பாற்பண்ணை அபிவிருத்திக் கடன் திட்டத்தின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கான திருத்தம் | ஆர்டிடி/சிஎஸ்டிஎல்எஸ்/ 2013/01(ஏ-02) | 72 |
| 61. | அடகு முற்பணத்திற்கான கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின் இல. ஆர்டிடி/சிஜிஎஸ்பிஏ/14/1 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கான திருத்தம் | ஆர்டிடி/சிஜிஎஸ்பிஏ/ 14/1(ஏ-02) | 72 |

வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்

| | | | |
|---|---|---|---|
| 62. | 2014 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நிதி குத்தகைக்கு விடுதல் (பதிவு செய்தல் மற்றும் ஆண்டு உரிமக் கட்டணங்கள்) ஒழுங்குவிதிகள் | | 73 |
| 63. | 2014ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (வட்டி வீதங்கள்) பணிப்புரை | | 74 |

**சுற்றறிக்கை எண்: 01/2014** 2014 சனவரி 07

சேரல்: இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்தின்
அனைத்து உறுப்பினர் நிறுவனங்களினதும் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

அன்புள்ள ஐயா/ அம்மணி

**இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டத் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்**

பின்வரும் விடயங்களை அறிவிப்பதற்காக இதனை எழுதுகின்றோம்:

1. 2013.12.30ஆம் திகதியிடப்பட்ட 2013ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்ட ஒழுங்குவிதிகளின் நியதிகளுக்கிணங்க “இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டம்” என்ற பெயர் “இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டம்” என மீளப் பெயரிடப்பட்டதுடன் “வைப்புக் காப்புறுதி நிதியம்” என்ற பெயர் 2013.11.22ஆம் நாளிலிருந்து “இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவு நிதியம்” என மீளப் பெயரிடப்பட்டுள்ளது. ஒழுங்குவிதிகளின் பிரதியொன்று இணைக்கப்பட்டுள்ளது.
2. மேலும், இலங்கை மத்திய வங்கியினால் புதிய “பொதுப் பேரேட்டு கணக்கீட்டு முறைமை” நடைமுறைக்கிடப்பட்டதன் காரணமாக இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவு நிதியத்தின் கணக்கு இலக்கம் “4681” 2014.01.01 இலிருந்து **“54523”** என மாற்றமடைந்துள்ளது.
3. இதற்கிணங்க அனைத்து உறுப்பினர் நிறுவனங்களும் உடனடியாக நடைமுறைக்குவரும் விதத்தில் பின்வரும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன:

   (i) திருத்தப்பட்டவாறான, 2010.09.28ஆம் திகதியிடப்பட்ட 2010ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவு நிகழ்ச்சித்திட்ட ஒழுங்குவிதிகளின் நியதிகளில் தகைமையுடைய வைப்புக்கள் மீதான தவணைக் கட்டுப் பணம் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையினூடாக “இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவு நிதியத்திற்கு”, குறிப்பாக **“இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவு நிதியம் - கணக்கு இலக்கம் 54523”** எனக் கணக்கின் பெயரிடப்பட்டு செலுத்தப்படுதல் வேண்டும் அல்லது குறிப்பிட்ட கணக்கின் பெயரின் காசோலை வரையப்படுதல் வேண்டும்.

   (ii) “இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டம்” என்ற பெயரை “இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டம்” எனவும் “வைப்புக் காப்புறுதி நிதியம்” என்பதனை “இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவு நிதியம்” எனவும் மீளப் பெயரிடும் பொருட்டு இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை திட்டத்துடனான கடிதத் தொடர்புகளில் தேவையான திருத்தங்களைச் செய்து கொள்ளுதல் வேண்டும்.

   (iii) இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவ ஆதரவுத் திட்டத்தின் முன்னைய மின்னஞ்சல் முகவரியான "sldis@cbsl.lk" ஆனது இப்பொழுது "sldilss@cbsl.lk" என மாற்றப்பட்டிருப்பதுடன் இதன் காரணமாக மின்னஞ்சல் தொடர்புகளை sldilss@cbsl.lk என்ற முகவரிக்கும் ஒரு பிரதியை dbsd@cbsl.lk இற்கும் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

உங்கள் உண்மையுள்ள
திருமதி ரி எம் ஜே வை பி பர்னாந்து
**வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை**
**அதிவிசேடமானது**

1843/8 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 30 ஆந் திகதி திங்கட்கிழமை

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**

பகுதி I : தொகுதி (I) - பொது
**இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்**
**நாணய விதிச் சட்டம்**

நாணய விதிச் சட்டம், (அத்தியாயம் 422) பிரிவு 32உ இன் கீழ் நாணயச் சபையால் மேற்கொள்ளப்பட்ட ஒழுங்குவிதிகள்.

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
**தலைவர்**
**நாணயச் சபை**

இலங்கை மத்திய வங்கி
கொழும்பு
2013 திசெம்பர் 23

**இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்ட ஒழுங்குவிதிகள்**
**2010ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்ட ஒழுங்குவிதிகளுக்கான திருத்தம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | **எடுத்துக்காட்டல்** | 1.1 | இந்த ஒழுங்குவிதிகள் 2013ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்ட ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்பட வேண்டும். |
| 2. | **மூல ஒழுங்குவிதியில் திருத்தங்கள்** | 2.1 | 2010ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 28ஆந் திகதியிடப்பட்ட 1673/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட 2010ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்ட ஒழுங்குவிதிகள் பின்வருமாறு திருத்தப்படுகின்றது: |

2.2 ஒழுங்கு விதி 3.1இல் "இந்தத் திட்டம் இலங்கைக் காப்புறுதித் திட்டம் எனப் பெயரிடப்படும்" எனும் சொற்களுக்குப் பதிலீடாக "இந்தத் திட்டம் இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்டம் எனப் பெயரிடப்படும் (இதனகத்துப் பின்னர் இது "இத்திட்டம்" எனக் குறிப்பிடப்படும்)."

2.3 ஒழுங்குவிதி 7.1இல் "இத்திட்டமானது "வைப்புக் காப்புறுதி நிதியம்" எனும் பெயரைக் கொண்ட நிதி ஒன்றைக் கொண்டிருக்கும்" எனும் சொற்களுக்குப் பதிலீடாக இத்திட்டமானது "இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவி நிதியம்" எனும் பெயரைக் கொண்ட நிதி ஒன்றைக் கொண்டிருக்கும் என்ற சொற்களைக் கொண்டிருக்கும்.

2.4 ஒழுங்குவிதி 9.7இல் "வைப்புக் காப்புறுதி நிதியம்" எனும் சொற்களுக்குப் பதிலீடாக இச்சொற்கள் ஒழுங்குவிதியில் இடம்பெறும் இடங்களிலெல்லாம் "இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவி நிதியம்" என்ற சொற்களைக் கொண்டிருக்கும்.

2.5 ஒழுங்குவிதி 10.5இல் "இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டம்" எனும் சொற்களுக்குப் பதிலீடாக இச்சொற்கள் ஒழுங்குவிதியில் இடம்பெறும் இடங்களிலெல்லாம் "இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்டம்" என்ற சொற்களைக் கொண்டிருக்கும்.

**3. நடைமுறைக்கு வரும் திகதி**

3.1 இத்திருத்தங்கள் 2013 நவெம்பர் 22ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதலாதல் வேண்டும்.

**தொடர்பு எண்: 02/17/550/0016/001** 2014 பெப்புருவரி 17

சேரல்: உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

அன்புள்ள ஐயா/ அம்மணி

## திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 86ஆம் பிரிவின் கீழ் திரவச் சொத்துக்களின் வரைவிலக்கணம்

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 21(1)ஆம் பிரிவு மற்றும் 86ஆம் பிரிவின் பந்தி (எ) இலுள்ள "திரவச் சொத்துக்கள்" இன் வரைவிலக்கணத்திற்கிணங்க நாணயச் சபையானது, உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் இலங்கை மத்திய வங்கியில் வைத்திருக்கின்ற துணைநில் வைப்பு வசதி மீதிகள் திரவச் சொத்துக்களாகும் என வரைவிலக்கணம் செய்திருக்கிறது.

2. உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவிற்கான நியதிச் சட்டத் திரவச் சொத்து வீதத்தின் மாதாந்த வெப்தளக் கூற்றின் (பீஎஸ்டி-எம்எவ்-04-எல்டி) 4.1.2.3.0.0 எனும் குறியீட்டு இலக்கத்தின் கீழ் இவ்வுரித்துடைய துணைநில் வைப்பு வசதியின் பெறுமதியினை அறிக்கையிடுதல் வேண்டும்.

உங்கள் உண்மையுள்ள
திருமதி ரி எம் ஜே வை பி பர்னாந்து
**வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

**தொடர்பு எண்: 02/17/600/0029/001** 2014 மாச்சு 31

சேரல்: அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

அன்புள்ள ஐயா/ அம்மணி

## பாசல் II மூலதனப் போதுமைக் கட்டமைப்பின் கீழ், தொழிற்பாட்டு இடர்நேர்வுகளுக்கான இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட தொகையின் கணிப்பு மீது தரமிடப்பட்ட அணுகுமுறையினை நடைமுறைப்படுத்தல்

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பான எமது முன்னைய கடிதத் தொடர்புகள் மற்றும் கலந்துரையாடல்கள் தொடர்பில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான தொழிற்பாட்டு இடர்நேர்வு மூலதன விதிப்புக்களை கணிப்பது தொடர்பான திருத்தப்பட்ட வழிகாட்டல்கள் மற்றும் அறிக்கையிடும் படிவம் என்பனவற்றை இணைத்துள்ளோம்.

இதற்கமைய 2014.07.01ஆம் நாளிலிருந்து

அ. உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கும் முறையே 2007ஆம் ஆண்டிற்கான 9 மற்றும் 10ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளின் அட்டவணை Iஇல் குறிப்பிடப்பட்டுள்ள தொழிற்பாட்டு இடர்நேர்விற்கான இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட தொகையினைக் கணித்தல் தொடர்பான பகுதி V இன் 6.8 ஆம் இலக்க வழிகாட்டலானது அட்டவணை Iஇல் உள்ள திருத்தப்பட்ட வழிகாட்டல்களின் மூலம் பதிலிடப்படுகின்றது; அத்துடன்

ஆ. உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கும் முறையே 2007ஆம் ஆண்டின் 9 மற்றும் 10 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளின் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ள தொழிற்பாட்டு இடர்நேர்விற்கான இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட தொகையினைக் கணித்தல் தொடர்பான தற்போதைய அறிக்கையிடல் படிவமானது அட்டவணை II இல் உள்ள புதிய படிவங்களின் மூலம் பதிலிடப்படுகின்றது.

உங்கள் உண்மையுள்ள
திருமதி ரி எம் ஜே வை பி பர்னாந்து
**வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

அட்டவணை I

## தொழிற்பாட்டு இடர்நேர்வுகளுக்கான இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட தொகையினைக் கணிப்பது தொடர்பான திருத்தப்பட்ட வழிகாட்டல்கள்

6.8. பகுதி V - தொழிற்பாட்டு இடர்நேர்வுகளுக்கான இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட தொகையினைக் கணித்தல்

6.8.1. பொதுநோக்கு

6.8.1.1. தொழிற்பாட்டு இடர்நேர்வின் வரைவிலக்கணம்

தொழிற்பாட்டு இடர்நேர்வு என்பது போதுமானதற்ற அல்லது முறிவடைந்த உள்ளகச் செயன்முறைகள், மக்கள் மற்றும் முறைமை அல்லது வெளிநிகழ்வுகளிலிருந்து தோன்றுகின்ற இடர்நேர்வுகளின் இழப்பு என வரைவிலக்கணம் செய்யப்படுகிறது. இவ்வரைவிலக்கணமானது சட்ட ரீதியான இடர்நேர்வினை உள்ளடக்குகின்றதெனினும் உபாய ரீதியான மற்றும் கீர்த்தி ரீதியான இடர்நேர்வுகளை உள்ளடக்கவில்லை. சட்ட ரீதியான இடர்நேர்வானது தண்டப் பணம், தண்டம் அல்லது மேற்பார்வை நடவடிக்கைகளிலிருந்து தோன்றுகின்ற கடுமையான சேதங்கள், அதேபோன்று தனிப்பட்ட தீர்ப்பனவுகள் என்பனவற்றை உள்ளடக்குகின்றதெனினும் இது இவற்றிற்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டதாகக் காணப்படவில்லை.

6.8.1.2. அளவிடும் முறையியல்கள்

அதிகரித்துச் செல்கின்ற நவீனத்துவம் மற்றும் இடர்நேர்வு உணர்திறனின் தொடர்ச்சியான தன்மையில் காணப்படும் தொழிற்பாட்டு இடர்நேர்வு மூலதன விதிப்புக்களைக் கணிப்பதற்காக பாசல் II: (i) அடிப்படைக் குறிகாட்டி அணுகுமுறை; (ii) நியமப்படுத்தப்பட்ட அணுகுமுறை மற்றும் (iii) முன்னேற்றம் கண்ட அணுகுமுறை ஆகிய மூன்று முறைகளைக் கொண்ட கட்டமைப்பினைத் தருகின்றது. அடிப்படைக் குறிகாட்டி அணுகுமுறையுடன் ஒப்பிடுகையில், தொழிற்பாட்டு இழப்புக்களை உள்ளடக்குவதற்குத் தேவையான மூலதனத்தினை நிர்ணயிப்பதற்கு மற்றைய அணுகுமுறைகள் மிக முன்னேற்றம்கண்ட முறைகளாகக் காணப்படுகின்றன. எனவே, தகைமைபெற்ற பிரமாணங்களுக்கு இணங்கியொழுகுவதற்கு உட்பட்டு வங்கிகள் மேற்பார்வை ஒப்புதல்களுடன் அடிப்படை குறிகாட்டி அணுகுமுறையிலிருந்து மற்றைய முன்னேற்றம் கண்ட அணுகுமுறைகளுக்கு மாறுதல் வேண்டும்.

6.8.2. தொழிற்பாட்டு இடர்நேர்வினைக் கணிப்பதற்கான அணுகுமுறை

6.8.2.1. வங்கியொன்று அதன் தொழிற்பாட்டு இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட தொகையினைக் கணிப்பதற்குப் பின்வரும் அணுகுமுறைகளிலொன்றினைப் பின்பற்றுதல் வேண்டும்.

அ) விடயம் 6.8.3 இற்கு இணங்க அடிப்படைக் குறிகாட்டி அணுகுமுறை; அல்லது

ஆ) விடயம் 6.8.4 இற்கு இணங்க நியமப்படுத்தப்பட்ட அணுகுமுறை; அல்லது

இ) விடயம் 6.8.5 இற்கு இணங்க மாற்று நியமப்படுத்தப்பட்ட அணுகுமுறை

6.8.2.2. நியமப்படுத்தப்பட்ட அணுகுமுறையினை அல்லது மாற்று நியமப்படுத்தப்பட்ட அணுகுமுறையினைப் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்பட்ட வங்கியொன்று இலங்கை மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளரின் எழுத்து மூலமான ஒப்புதல் இல்லாமல் இலகுவான அணுகுமுறையொன்றினைப் பயன்படுத்த முடியாது.

6.8.2.3. வங்கியொன்று இலகுவான முறைக்கு மாறியதும் அத்தகைய வங்கி, வங்கி மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளரின் ஒப்புதல் இல்லாமல் முன்னேற்றம் கண்ட உயர்தர அணுகுமுறைகளைப் பயன்படுத்த முடியாது. வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர் தொடர்பான உயர்தர அணுகுமுறைக்கு மாறுவதற்கு முன்னதாக மற்றைய நிபந்தனைகளுக்கு இணங்கியொழுக வேண்டுமென்ற தேவைப்பாட்டிற்கு உட்பட்டு அத்தகைய ஒப்புதலை வழங்கலாம்.

6.8.2.4. குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு நியமப்படுத்தப்பட்ட அணுகுமுறைகளை அல்லது மாற்று நியமப்படுத்தப்பட்ட அணுகுமுறையொன்றினைப் பின்பற்றும் வங்கியொன்று இணங்கியொழுகுவது தொடர்பில் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர் திருப்திப்படாத பொழுது பணிப்பாளர் இலகுவான அணுகுமுறையினைப் பயன்படுத்துமாறு வங்கியினைக் கேட்டுக் கொள்ளமுடியும்.

6.8.3. அடிப்படை குறிகாட்டி அணுகுமுறை

6.8.3.1. வங்கியானது அதன் தொழிற்பாட்டு இடர்நேர்வு மூலதனத் தேவைப்பாட்டினைப் பின்வருமாறு கணித்தல் வேண்டும்.

$$K_{BIA} = [\Sigma(GI_{1....n} \, x\alpha)]/n$$

இங்கு;

அ) $K_{BIA}$ = அடிப்படை குறிகாட்டி அணுகுமுறையின் கீழ் தொழிற்பாட்டு இடர்நேர்வுகளுக்கான மூலதன விதிப்பு

ஆ) GI = ஆண்டு மொத்த வருமானம், நேர்க்கணியமாக இருக்குமிடத்து விடயங்கள் 6.8.3.2 இலிருந்து 6.8.3.4 வரையான விடயங்களில் குறிப்பிடப்பட்டவாறு முற்போந்த மூன்றாண்டு காலப்பகுதி

இ) n = ஆண்டு மொத்த வருமானம் நேர்க்கணியமாக இருக்கின்ற பொழுது முற்போந்த மூன்றாண்டுகளிலுள்ள ஆண்டுகளின் எண்ணிக்கை

ஈ) α = 15 சதவீதம், இது வங்கித்தொழில் மேற்பார்வை தொடர்பான பாசல் குழுவினால் நிர்ணயிக்கப்பட்டது.

6.8.3.2. பின்வரும் சீராக்கங்களைக் கவனத்தில் கொண்டு வங்கி அதன் தேறிய வட்டி வருமானத்தினதும் வட்டியல்லா வருமானத்தினதும் மொத்தமாக அதன் மொத்த வருமானத்தினைக் கணித்தல் வேண்டும்.

அ) ஏதேனும் ஏற்பாடுகள்/ பெறுமதி இழப்புக்களின் (செலுத்தப்படாத வட்டி உட்பட) மொத்தம்

ஆ) வெளியிலிருந்து பணிகளை வழங்குவோருக்கு செலுத்தப்பட்ட கட்டணம் உட்பட தொழிற்பாட்டுச் செலவினங்களின் மொத்தம், வெளிமூலங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பணிகளுக்குச் செலுத்தப்பட்ட கட்டணத்திற்கு மாறாக வெளிமூலங்களுக்கான பணிகளை வழங்கிய வங்கிகளினால் பெறப்பட்ட கட்டணம், மொத்த வருமானத்திற்கான வரைவிலக்கணத்தில் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

எனினும் பின்வருவன நீக்கப்படுதல் வேண்டும்.

அ) வங்கித்தொழில் ஏட்டில் காணப்பட்ட பிணையங்களின் விற்பனையிலிருந்து தோன்றிய ஏதேனும் இலாபங்கள்/ இழப்புக்கள். இலங்கை கணக்கீட்டு நியமம் - 39 இற்கிணங்க வங்கித்தொழில் ஏட்டில் காணப்படும் பிணையங்கள் "முதிர்ச்சிக்காக வைத்திருக்கப்படுபவை" அல்லது "விற்பனைக்காக கிடைக்கத்தக்கவை" என வகைப்படுத்தப்பட்ட பிணையங்களாக இருத்தல் வேண்டும்.

ஆ) வங்கியின் வழமையான நடவடிக்கையிலிருந்து பெறப்படாத ஏதேனும் வருமானம் அல்லது செலவினங்களாக இருக்க வேண்டியதுடன் அடிக்கடி அல்லது கிரமமாக மீண்டெழுமெனவும் எதிர்பார்க்கப்படாதவை அதாவது நிலையான சொத்துக்களின் விற்பனைக் காப்புறுதி அறவிடல்கள் போன்றவற்றிலிருந்து பெறப்பட்ட வருமானம்.

6.8.3.3. குறிப்பிட்ட ஏதேனுமொரு ஆண்டில் வருடாந்த மொத்த வருமானம்/ ஏதேனும் குறிப்பிட்டதொரு ஆண்டிற்கான மூலதன விதிப்பு எதிர்க்கணியமாக அல்லது பூஜ்யமாக இருக்குமிடத்து, சராசரி மூலதன விதிப்பினை கணிக்கின்ற பொழுது அதனை பின்னத்தின் தொகுதி மற்றும் பகுதி எண் இரண்டிலிருந்தும் நீக்குதல் வேண்டும்.

6.8.3.4. வங்கியொன்று கடந்த நான்கு நிதியியல் காலாண்டுகளுக்கான மொத்த வருமானத்தின் கூட்டுத் தொகையினைக் கணிப்பதன் மூலம் மிக அண்மிய ஆண்டிற்கான ஆண்டு மொத்த வருமானத்தினைக் கணிக்கலாம் என்பதுடன் இதே முறையினைப் பின்பற்றி மிக அண்மைய ஆண்டின் முற்போந்த ஒவ்வொரு இரண்டு ஆண்டுகளுக்குமான ஆண்டு மொத்த வருமானத்தினைக் கணிப்பதற்கு பின்பற்ற முடியும். வங்கியொன்று 2014 யூன் இறுதியிலுள்ளவாறான அதன் தொழிற்பாட்டு ரீதியான இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சராசரியினைக் கணிப்பதற்கான முன்னைய மூன்றாண்டுகளுக்கான வருடாந்த மொத்த வருமானத்தின் கணிப்பினை அட்டவணை 20 தெளிவுபடுத்துகின்றது.

**அட்டவணை 20**

**ஆண்டு மொத்த வருமானத்தினை கணிப்பதற்கான தெளிவுபடுத்தல்**

| | 3ஆம் ஆண்டு | 2ஆம் ஆண்டு | 1ஆம் ஆண்டு |
|---|---|---|---|
| நிதியில் காலாண்டு முடிவில் மொத்த வருமானம் | 2014 யூன் ($GI_{3a}$) | 2013 யூன் ($GI_{2a}$) | 2012 யூன் ($GI_{1a}$) |
| | 2014 மாச்சு ($GI_{3b}$) | 2013 மாச்சு ($GI_{2b}$) | 2012 மாச்சு ($GI_{1b}$) |
| | 2013 திசெம்பர் ($GI_{3c}$) | 2012 திசெம்பர் ($GI_{2c}$) | 2011 திசெம்பர் ($GI_{1c}$) |
| | 2013 செத்தெம்பர் ($GI_{3d}$) | 2012 செத்தெம்பர் ($GI_{2d}$) | 2011 செத்தெம்பர் ($GI_{1d}$) |
| மொத்தம் | $GI_3 = GI_{3a} + GI_{3b} + GI_{3c} + GI_{3d}$ | $GI_2 = GI_{2a} + GI_{2b} + GI_{2c} + GI_{2d}$ | $GI_1 = GI_{1a} + GI_{1b} + GI_{1c} + GI_{1d}$ |

இங்கு GI = மொத்த வருமானம்

6.8.4. நியமப்படுத்தப்பட்ட அணுகுமுறை

6.8.4.1. எந்தவொரு வங்கியும் விடயம் 6.8.4.4 இல் குறிப்பிடப்பட்டிருக்கும் தகைமை பெறுகின்ற பிரமாணங்களுக்கு இணங்கியொழுகின்றமைக்கு உட்பட்டு வங்கி மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளரின் முன்னொப்புதலுடன் தொழிற்பாட்டு இடர்நேர்வின் மூலதன விதிப்பினைக் கணிப்பதற்கு நியமப்படுத்தப்பட்ட அணுகுமுறையினைப் பயன்படுத்தமுடியும்.

6.8.4.2. நியமப்படுத்தப்பட்ட அணுகுமுறையினைப் பின்பற்றுகின்ற வங்கி அவற்றின் வியாபாரத் துறைகளை கம்பனி நிதி, வர்த்தகம் மற்றும் விற்பனைகள், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு, முகவர் பணிகள், சொத்து முகாமைத்துவம், சில்லறைத் தரகுகள், சில்லறை வங்கித்தொழில் மற்றும் வர்த்தக வங்கித்தொழில் என எட்டு வியாபாரத் துறைகளாக வகைப்படுத்தல் வேண்டும். இவ்வியாபாரத் துறைகளின் வரைவிலக்கணம் அட்டவணை 21இல் விபரமாகத் தரப்படுகிறது.

**அட்டவணை 21**

**வியாபாரத் துறைகளின் விளக்கப்படம்**

| | மட்டம் 1 | மட்டம் 2 | நடவடிக்கைக் குழுக்கள் |
|---|---|---|---|
| 1 | கம்பனி நிதி | கம்பனி நிதி | இணைப்புக்கள் மற்றும் கையேற்புக்கள், ஒப்புறுதிகள், தனியார்மையப்படுத்தல், பிணையமையப்படுத்தல், ஆராய்ச்சி, படுகடன் (அரச, உயர் விளைவு), பங்குரிமை மூலதனம், கூட்டமைப்புக்கள், பொதுமக்களுக்கான ஆரம்ப வழங்கல்கள், இரண்டாந்தர தனியார் வைப்புக்கள் |
| | | அரச நிதி | |
| | | வணிக வங்கித்தொழில் | |
| | | மதியுரைப் பணிகள் | |
| 2 | வர்த்தகப்படுத்தல்கள் மற்றும் விற்பனைகள் | விற்பனைகள் | நிலையான வருமானம், பங்குரிமை மூலதனம், வெளிநாட்டுச் செலாவணிகள், கொடுகடன் சாதனங்கள், நிதியிடல், சொந்த நிலைமைகளிலுள்ள பிணையங்கள், கடன் வழங்கல் மற்றும் மீள்கொள்வனவுகள், தரகுப் பணம், படுகடன், முதன்மைத் தரகு நடவடிக்கைகள் மற்றும் சில்லறை முதலீட்டாளர்களுக்கான அரச முறிகளின் விற்பனை |
| | | சந்தைப்படுத்தல்களை மேற்கொள்ளுதல் | |
| | | தனியுரிமை நிலைமைகள் | |
| | | திறைசேரி | |
| 3 | கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு | வெளிநாட்டு வாடிக்கையாளர்கள் | கொடுப்பனவு மற்றும் சேகரிப்புக்கள், வங்கிகளுக்கிடையிலான நிதிய மாற்றல்கள் (அதேநேர மொத்தத் தீர்ப்பனவுகள், இலத்திரனியல் நிதிய மாற்றல் போன்றவை), தீர்ப்பனவு மற்றும் கொடுத்துத் தீர்த்தல் |

| | | | |
|---|---|---|---|
| 4 | முகவர் பணிகள் | கட்டுக்காப்பு | இஸ்ரோ உடன்படிக்கைகள், பிணையக் கடன் வழங்கல்கள் (வாடிக்கையாளர்), கம்பனி நடவடிக்கைகள், வைப்புப் பணிகள் |
| | | கம்பனி முகவராண்மை | வழங்குநர் மற்றும் கொடுப்பனவு முகவர்கள் |
| | | கம்பனி நம்பிக்கை | தொகுதிக் கடன் நம்பிக்கைப் பொறுப்பாளர் |
| 5 | சொத்து முகாமைத்துவம் | தற்றுணிபு நிதிய முகாமைத்துவம் | குழுமப்படுத்தப்பட்டது, பிரிக்கப்பட்டவை, சில்லறை விற்பனை, நிறுவன ரீதியான மூடப்பட்ட, திறந்த, தனியார் பங்குரிமை மூலதனம் |
| | | தற்றுணிபு அல்லா நிதிய முகாமைத்துவம் | குழுமப்படுத்தப்பட்டது, பிரிக்கப்பட்டவை, சில்லறை விற்பனை, நிறுவன ரீதியான மூடப்பட்ட, திறந்த. |
| 6 | சில்லறைத் தரகுத் தொழில் | சில்லறைத் தரகுத் தொழில் | நிறைவேற்றல் மற்றும் முழுமையான பணிகள் |
| 7 | சில்லறை வங்கித்தொழில் | சில்லறை வங்கித்தொழில் | சில்லறை கடன் வழங்கல் மற்றும் வைப்புக்கள், வங்கித்தொழில் பணிகள், நம்பிக்கைப் பொறுப்புக்கள் மற்றும் சொத்துக்கள் |
| | | தனியார் வங்கித்தொழில் | தனிப்பட்ட கடன் வழங்கல் (தனியாள் கடன்கள்) மற்றும் தனிப்பட்ட (நிறுவன ரீதியான) வைப்புக்கள், வங்கிப் பணிகள், நம்பிக்கைப் பொறுப்பு மற்றும் உண்மைச் சொத்துக்கள், முதலீட்டு மதியுரைகள் |
| | | அட்டைப் பணிகள் | வணிக/ வர்த்தக/ கம்பனி அட்டைகள், தனியார் சுட்டுத் துண்டுகள் மற்றும் சில்லறை |
| 8 | வர்த்தக வங்கித்தொழில் | வர்த்தக வங்கித்தொழில் | செயற்றிட்ட நிதி உட்பட கடன் வழங்கல்கள், கம்பனிக் கடன்கள், உண்மைச் சொத்துக்கள், ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக் கடன்கள் உட்பட வர்த்தக நிதி, நாணயக் கடிதம், மாற்று உண்டியல்கள், குத்தகைக்குவிடல், காரணிப்படுத்தல் மற்றும் உத்தரவாதங்கள், வைப்புக்கள் மற்றும் ஏனைய மீள்செலுத்தத்தக்க நிதிகள் |

6.8.4.3. ஒவ்வோராண்டிலுமுள்ள ஒவ்வொரு வியாபாரத்துறை முழுவதினதும் தொழிற்பாட்டு இடர்நேர்வு மூலதன தேவைப்பாடுகளின் மொத்தத் தொகையினது மூன்றாண்டுகளின் சராசரியினைக் கவனத்தில் கொள்வதன் மூலம் வங்கியானது அதன் தொழிற்பாட்டு இடர்நேர்வு மூலதனத் தேவைப்பாட்டினைப் பின்வருமாறு கணித்தல் வேண்டும்.

$K_{TSA} = \{\Sigma_{Years\ 1-3} \max[\Sigma(GI_{1-8} \times \beta_{1-8}),0]\}/3$

இங்கு: $\Sigma_{Years} = \Sigma_{ஆண்டுகள்}$ , max= கூடிய

அ) $K_{TSA}$ = நியமப்படுத்தப்பட்ட அணுகுமுறையின் கீழ் தொழிற்பாட்டு இடர்நேர்வுகளுக்கான மூலதன விதிப்பு

ஆ) $GI_{1-8}$ = மேலேயுள்ள அட்டவணை 21இல் காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு எட்டு வியாபார துறைகளுக்குமாக குறிப்பிட்ட ஆண்டொன்றில் வருடாந்த மொத்த வருமானமானது அடிப்படைக் குறிகாட்டி அணுகுமுறையின் கீழ் விடயம் 6.8.3.2 மற்றும் 6.83.4 என்பனவற்றிற்கிணங்க கணிக்கப்பட்டது.

இ) $\beta_{1-8}$ = வங்கித்தொழில் மேற்பார்வை தொடர்பான பாசல் குழுவினால் நிர்ணயிக்கப்பட்ட நிலையான பீற்றாக் காரணி (கீழேயுள்ள அட்டவணை 22) எட்டு வியாபாரத் துறைகள் ஒவ்வொன்றுக்குமான மொத்த வருமான மட்டத்திற்கான மூலதனத் தேவைப்பாட்டின் மட்டம் தொடர்பானது.

**அட்டவணை 22**

**ஒவ்வொரு வியாபாரத் துறைக்குமான பீற்றாக் (β) காரணிகள்**

| இல. | வியாபாரத் துறைகள் | β காரணிகள் |
|---|---|---|
| 1 | கம்பனி நிதி ($\beta_1$) | 18% |
| 2 | வர்த்தகப்படுத்தல் மற்றும் விற்பனை ($\beta_2$) | 18% |
| 3 | கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு ($\beta_3$) | 18% |
| 4 | முகவர் பணிகள் ($\beta_4$) | 15% |
| 5 | சொத்து முகாமைத்துவம் ($\beta_5$) | 12% |
| 6 | சில்லறைத் தரகுத்தொழில் ($\beta_6$) | 12% |
| 7 | சில்லறை வங்கித்தொழில் ($\beta_7$) | 12% |
| 8 | வர்த்தக வங்கித்தொழில் ($\beta_8$) | 15% |

ஈ) எந்தவொரு குறிப்பிட்ட ஆண்டிலும் (எந்தவொரு வியாபாரத் துறையிலும் எதிர்மறையான மொத்த வருமானத்திலிருந்து தோன்றுகின்ற) எதிர்கணியமான மூலதன விதிப்பினை நேர்க்கணியமான மூலதன விதிப்பினைக் கொண்ட ஏனைய வியாபாரத் துறையின் மூலம் எதிரீடு செய்யலாம். எனினும், குறிப்பிட்டதொரு ஆண்டிலும் அனைத்து வியாபாரத் துறைகளிலும் கூட்டு மொத்த தொழிற்பாட்டு இடர்நேர்வு மூலதன விதிப்புக்கள் எதிர்க்கணியமாகக் காணப்படுமிடத்து அவ்வாண்டிற்கான வங்கிக்கான தொழிற்பாட்டு இடர்நேர்வு மூலதன விதிப்புக்கள் பூஜ்யமாகக் கருதப்படும் (அவ்வாண்டிற்கான தொகுதி எண்ணிற்கான உள்ளீடு பூஜ்யமாக விளங்கும்).

உ) ஒவ்வொரு வியாபாரத் துறைகளுக்குள்ளேயுமுள்ள மொத்த வருமானம் பரந்த குறிகாட்டியாக விளங்கி வியாபார தொழிற்பாடுகளின் அளவொன்றிற்கான பதிலியாக தொழிற்படுவதுடன் இதன் காரணமாக இவ்வியாபாரத் துறைகள் ஒவ்வொன்றிற்கும் தொழிற்பாட்டு இடர்நேர்விற்கு வகைப்படுத்துகையின் அளவொன்றாகவும் காணப்படுகிறது.

ஊ) குறிப்பிட்டதொரு வியாபாரத் துறைக்கான தொழிற்பாட்டு இடர்நேர்வு இழப்பு அனுபவத்திற்கும் அவ்வியாபாரத் துறைக்கான மொத்த வருமானத்தின் மொத்த மட்டத்திற்குமிடையிலான தொழில் துறை அடிப்படையிலான தொடர்புகளுக்குமான பதிலியாக ஒவ்வொரு பீற்றாக் காரணியும் தொழிற்படுகின்றது.

எ) மொத்த வருமானமானது ஒவ்வொரு வியாபாரத் துறைகளுக்குமாக அளவிடப்பட வேண்டுமேயன்றி முழு நிறுவனங்களுக்குமாகக் கணிக்கப்படக்கூடாது. அதாவது, வர்த்தக வங்கித்தொழிலில், குறிகாட்டியானது வர்த்தக வங்கித்தொழில் துறையில் உருவாக்கப்பட்ட மொத்த வருமானமாகக் காணப்படுகின்றது. எனினும், எட்டு வியாபாரத் துறைகளினதும் மொத்த வருமானத்தின் கூட்டுத்தொகையானது வங்கியின் மொத்த வருமானத்திற்குச் சமமாக இருக்க வேண்டும்.

**6.8.4.4. தகைமைப் பிரமாணங்கள்**

6.8.4.4.1. பணிப்பாளர் சபையும் மூத்த முகாமைத்துவமும் வங்கியின் தொழிற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவத்தின் மேற்பார்வையில் தீவிரமாக ஈடுபடுதல் வேண்டும்.

6.8.4.4.2. கோட்பாட்டு ரீதியில் ஆற்றல்வாய்ந்த தொழிற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவ முறைமையொன்றினைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் இதனை ஒருங்கிணைந்த முறையில் நடைமுறைப்படுத்த வேண்டியதுடன் தொழிற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவ தொழிற்பாடொன்றிற்கான தெளிவான பொறுப்புக்களும் ஒப்படைக்கப்படுதல் வேண்டும். வங்கி பின்வரும் தொழிற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவத் தொழிற்பாடுகளை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

i. தொழிற்பாட்டு இடர்நேர்வினை அடையாளம் கண்டு, அதனை மதிப்பீடு செய்து, கண்காணித்து, கட்டுப்படுத்தவும் தொழிற்பாட்டு இடர்நேர்வினைத் தணிப்பதற்கும்

ii. தொழிற்பாட்டு இடர்நேர்வினை முகாமைப்படுத்திக் கட்டுப்படுத்துகின்ற விடயத்தினைக் கருத்தில் கொண்டு, வங்கி மட்டத்திலான கொள்கைகளையும் நடைமுறைகளையும் குறியீடு செய்தல்; அத்துடன்

iii. தொழிற்பாட்டு இடர்நேர்வு மதிப்பீட்டு முறையியலையும் வங்கியின் தொழிற்பாட்டு இடர்நேர்வு அறிக்கையிடல் முறைமையினையும் வடிவமைத்து நடைமுறைக்கிடல்

6.8.4.4.3. நியமப்படுத்தப்பட்ட அணுகுமுறையினைப் பயன்படுத்துகையில் வங்கியானது பிரதான வியாபாரத் துறையிலும் அதேபோன்று கட்டுப்பாடு மற்றும் கணக்காய்வுத் துறையிலும் போதுமான மூலவளங்களை கொண்டிருத்தல் வேண்டும்.

6.8.4.4.4. வங்கியானது பொருண்மிய தொழிற்பாட்டு இழப்புக்கள் உட்பட தொழிற்பாட்டு வெளிப்படுத்துகை தொடர்பாக வியாபாரப் பிரிவின் முகாமைத்துவத்திற்கும் மூத்த முகாமைத்துவத்திற்கும் பணிப்பாளர் சபைக்கும் கிரமமாக அறிக்கையிடுவதற்கான முறைமையொன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

6.8.4.4.5. வங்கியின் தொழிற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவ முறைமை சிறந்த முறையில் ஆவணப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். இது, இணங்கி நடக்காமை தொடர்பான பிரச்சனைகளைக் கையாள்வதற்கான கொள்கைகள் உட்பட உள்ளகக் கொள்கைகள், கட்டுப்பாடுகள் மற்றும் நடவடிக்கைகள் சிறந்த ஆவணப்படுத்தலுடன் இணங்குவிக்கப்படுவதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான நடைமுறையைக் கொண்டிருக்க வேண்டும்.

6.8.4.4.6. தொழிற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவச் செயன்முறையும் மதிப்பீட்டு முறைமையும் குறைந்தபட்சம் ஆண்டுதோறும் மதிப்பீட்டிற்கும் கிரமமான சுதந்திரமான மீளாய்விற்கும் உட்பட்டதாயிருத்தல் வேண்டும். இம்மீளாய்வுகள் வியாபார அலகுகளின் நடவடிக்கைகள் மற்றும் தொழிற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவத் தொழிற்பாடுகளையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

6.8.4.4.7. விடயம் அ, ஆ, இ மற்றும் மேலேயுள்ள அட்டவணை 21 என்பனவற்றுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் பொருத்தமான வியாபாரத் துறைகளுக்கு அதன் தற்போதைய வியாபார நடவடிக்கைகளைத் திட்டமிடுவதற்காக வங்கியானது ஆவணப்படுத்தப்பட்ட முன்மதியுடைய நடவடிக்கைகளை விருத்தி செய்து கொள்ளுதல் வேண்டும்.

அ) மூத்த முகாமைத்துவம் கொள்கைகளை வரைந்து விருத்தி செய்வதற்குப் பொறுப்புடையதாகவிருக்கும். இது பணிப்பாளர் சபையின் ஒப்புதலுக்குட்பட்டதாக இருத்தல் வேண்டும். இவ்வரையப்படும் கொள்கைகள் மீளாய்வு செய்யப்பட வேண்டியதுடன் பொருத்தமானதாக காணப்படும் வியாபார நடவடிக்கைகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் சீராக்கப்படவும் வேண்டும்.

ஆ) வங்கியானது பொருத்தமான வியாபாரத் துறைகளுக்கு வியாபார நடவடிக்கைகளைத் திட்டமிடும் பொழுது வங்கியானது பின்வரும் கோட்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

i. கீழேயுள்ள விடயம் ii இல் உள்ளவற்றிற்குட்பட்டு, வங்கியின் ஒவ்வொரு நடவடிக்கையும் அல்லது வியாபாரமும் பிரத்தியேகமான பரஸ்பரபுரிந்துணர்வுத் தன்மையுடனும் கூட்டான பூரணமான விபரங்களைக் கொண்ட முறையிலும் எட்டு தளம் 1 வியாபாரத் துறைகளுக்கு (அட்டவணை 21 இனைப் பார்க்கவும்) திட்டமிடப்பட வேண்டும்.

ii. ஏதேனும் வங்கித்தொழில் அல்லது வங்கியல்லா நடவடிக்கைகள் அல்லது எந்தவொரு வியாபாரத் துறைக்குள்ளும் உடனடியாக திட்டமிட முடியாத சாதனங்கள் மற்றும் வியாபாரத் துறைகளுக்கான துணையானதாக அமைந்து வியாபாரத் துறைக்கு ஆதரவாக இருப்பவைகள் என்பன ஆதரவிற்கான வியாபாரத் துறைக்கு ஒதுக்கிக் கொள்ளமுடியும். நடவடிக்கையானது ஒன்றிற்கு மேற்பட்ட வியாபாரத் துறைக்கு ஆதரவளிக்கின்றவிடத்து ஆண்டு மொத்த வருமானத்தினை ஒதுக்குவதற்கு குறிக்கோளினைக் கொண்ட பிரமாணமொன்றினைப் பயன்படுத்தமுடியும்.

iii. உடனடியாக எந்தவொரு வியாபார வகைக்குள்ளும் அடக்கமுடியாத ஏதேனும் நடவடிக்கையினை உயர்தர பீற்றா காரணிகளுக்குள், அதாவது 18 சதவீதத்திற்குள் அடக்கமுடியும்.

iv. வங்கிக்கான மொத்த வருமானம் (அடிப்படை குறிகாட்டி அணுகுமுறையின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்கக் கூடியவாறு) எட்டு வியாபாரத் துறைகளுக்கான மொத்த வருமானத்தின் கூட்டுத்தொகைக்கு இன்னமும் சமமானதாக இருக்குமிடத்து வியாபாரத் துறைகளுக்கிடையே மொத்த வருமானத்தினை ஒதுக்குவதற்கு வங்கிகள் உள்ளக விலையிடல் முறைகளைப் பயன்படுத்தலாம்.

v. நடவடிக்கை குறிப்பிட்ட வியாபாரத் துறைக்கு திட்டமிடப்பட்டதும் நடவடிக்கையானது தொடர்பான காலப்பகுதியில் அதே வியாபாரத் துறையுடன் இசைந்து செல்லும் விதத்தில் திட்டமிடப்படுதல் வேண்டும்.

vi. தொழிற்பாட்டு ரீதியான இடர்நேர்வு மூலதன நோக்கங்களுக்கான வியாபார துறைகளுக்குள் நடவடிக்கைகளைத் திட்டமிடுவது ஏனைய இடர்நேர்வு வகைகளுக்குள் அதாவது கொடுகடன் மற்றும் சந்தை இடர்நேர்வுகள் ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனக் கணிப்புக்களுக்காக பயன்படுத்தப்பட்ட வியாபாரத் துறைகளுடன் இசைந்து செல்வதாக இருத்தல் வேண்டும்.

vii. ஏதாவதொரு புதிய நடவடிக்கைகள் அல்லது சாதனங்களின் திட்டமிடலை வரைவிலக்கணப்படுத்துவதற்காகச் செயன்முறைகள் நடைமுறைக்கிடப்படுதல் வேண்டும்.

viii. திட்டமிடல் செயன்முறையானது வங்கியின் உள்ளக அல்லது வெளிவாரிக் கணக்காய்வாளர்களின் கிரமமான சுயாதீனமான ஆய்விற்குட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

இ) **துணை வியாபாரத் துறை வழிகாட்டல்களைத் தயாரித்தல்:** வங்கிகள் எட்டு வியாபாரத் துறைகளுக்கான அவற்றின் நடவடிக்கைகளுக்கு திட்டமிடுவதற்கு, அணுகுமுறைகள் வியாபாரத் துறையினைத் திட்டமிடுகின்ற கோட்பாடுகளை ஈடுசெய்யக் கூடியனவாக இருக்குமிடத்து அத்தகைய செல்லுபடியாகும் அணுகுமுறைகளைப் பயன்படுத்தமுடியும். வங்கி அதன் மொத்த வருமானத்தினைத் திட்டமிடுவதற்கு அது பின்வரும் சாத்தியமான அணுகுமுறைகளைப் பயன்படுத்தமுடியும்:

i. சில்லறை வங்கித்தொழிலுக்கான மொத்த வருமானம் சில்லறை வாடிக்கையாளர்கள் மற்றும் சில்லறை எனக் கருதப்படுகின்ற சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீதான வட்டி வருமானம், பாரம்பரிய சில்லறை நடவடிக்கைகளுடன் தொடர்பான கூடுதலான கட்டணம், சுவப் எனப்படும் பரஸ்பர பரிமாற்றல்களிலிருந்தான தேறிய வருமானம், சில்லறை வங்கித்தொழில் ஏடுகளின் கட்டுக்காப்பிற்காக வைத்திருக்கப்படும் பெறுதிகள் மற்றும் கொள்வனவு செய்யப்பட்ட பெறத்தக்க சில்லறைகள் மீதான வருமானம் என்பனவற்றை உள்ளடக்குகிறது. சில்லறை வங்கித்தொழிலுக்கான தேறிய வட்டி வருமானத்தினைக் கணிப்பதற்கு கடன்களின் நிதியிடலானது நிறையேற்றப்பட்ட சராசரி செலவினைக் கழித்து சில்லறை வாடிக்கையாளர்களுக்கான அதன் கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீது உழைக்கப்பட்ட வட்டியினைக் கருத்திற் கொள்கிறது (சில்லறை அல்லது ஏனைய வைப்புக்கள் ஆகிய எந்தவொரு மூலத்திலிருந்தும்)

ii. இதேபோன்று, வர்த்தக வங்கித்தொழிலிலிருந்தான மொத்த வருமானம், கம்பனி (சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் கம்பனிகளாகக் கருதப்படுகின்றன), வங்கிகளுக்கிடையிலான மற்றும் வல்லமை கொண்ட வாடிக்கையாளர் ஆகியோருக்கான கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீதான தேறிய வட்டி வருமானம், கொள்வனவு செய்யப்பட்ட கம்பனியின் பெறத்தக்கவைகளின் மீதான வருமானம், கடப்பாடுகள், உத்தரவாதங்கள், செலாவணி உண்டியல், வங்கித்தொழில் ஏடுகளில் வைத்திருக்கப்படும் பிணையங்கள் மீதான தேறிய வருமானம் மற்றும் (உ-ம்: நறுக்கு மற்றும் பங்கிலாபங்களிலிருந்து) வர்த்தக வங்கித்தொழில் ஏடுகளின் பாதுகாப்பிற்காக வைத்திருக்கப்படும் பரிமாற்றங்கள் மற்றும் பெறுதிகள் மீதான இலாபங்கள்/ நட்டங்கள் என்பனவற்றை உள்ளடக்குகிறது. மீண்டும், தேறிய வட்டி வருமானத்தின் மீதான கணிப்பானது இக்கடன்களுக்கான நிறையேற்றப்பட்ட சராசரி நிதியிடலைக் கழித்து கம்பனி, வங்கிகளுக்கிடையிலானவை மற்றும் வல்லமை கொண்ட வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீது உழைக்கப்பட்ட வட்டி வருமானத்தினை அடிப்படையாகக் கொண்டிருந்தது (எந்தவொரு மூலத்திலிருந்தும்).

iii. வர்த்தகம் மற்றும் விற்பனைக்காக, மொத்த வருமானமானது வர்த்தகப்படுத்தல் ஏட்டில் வைத்திருக்கப்படும் சாதனங்கள் மீதான இலாபம்/ இழப்புக்கள் தேறிய நிதியிடல் செலவு, மொத்த விற்பனை தரகுத் தொழிலிலிருந்தான சேர்ந்த கட்டணம் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது.

iv. மற்றைய ஐந்து வியாபாரத் துறைகளையும் பொறுத்த வரையில், மொத்த வருமானம் முக்கியமாக இவ்வியாபாரங்கள் ஒவ்வொன்றிலுமிருந்து உழைக்கப்பட்ட தேறிய கட்டணம்/ தரகுகளினை உள்ளடக்கியிருந்தது. கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு மொத்த விற்பனை இணைத்தரப்பினர்களுக்கான கொடுப்பனவு/ தீர்ப்பனவு வசதிகளை உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கான கட்டணத்தினை உள்ளடக்கியிருந்தது. சொத்துக்களின் முகாமைத்துவம் என்பது ஏனையவற்றின் சார்பிலான முகாமைத்துவச் சொத்துக்களாகும்.

**6.8.5. மாற்று நியமப்படுத்தப்பட்ட அணுகுமுறை**

6.8.5.1. வங்கியொன்று, வங்கி மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளரின் முன்அனுமதியுடன் அதன் தொழிற்பாட்டு இடர்நேர்வு மூலதனத் தேவைப்பாட்டினைக் கணிப்பதற்கு மாற்று நியமப்படுத்தப்பட்ட அணுகுமுறையினைப் பயன்படுத்த முடியும். வங்கியொன்று நியமப்படுத்தப்பட்ட அணுகுமுறையின் கீழ் விடயம் 6.8.4.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தகைமை பெறுகின்ற பிரமாணங்களுக்கும் இணங்கியொழுகினாலொழிய அதன் தொழிற்பாட்டு இடர்நேர்வு தேவைப்பாடுகளைக் கணிப்பதற்கு மாற்று நியமப்படுத்தப்பட்ட அணுகுமுறையினைப் பயன்படுத்த முடியாது.

6.8.5.2. மாற்று நியமப்படுத்தப்பட்ட அணுகுமுறையின் கீழ் இரண்டு வியாபாரத் துறைகளான சில்லறை வங்கித்தொழில் மற்றும் வர்த்தக வங்கித்தொழில் வியாபாரத் துறை ஆகிய இரண்டும் சிக்கலான மற்றையவற்றின் தொழிற்பாட்டு இடர்நேர்வு மூலதனத் தேவைப்பாடுகள்/ முறையியல்கள் நியமப்படுத்தப்பட்ட அணுகுமுறைகளைப் போன்றே காணப்பட்டன. இவ்வியாபாரத் துறைகளுக்காக கடன்கள் மற்றும் முற்பணங்களின் வெளிநின்ற தொகையானது, மொத்த வருமானத்திற்குப் பதிலாக வெளிப்படுத்துகைக் குறிகாட்டியான நிலையான காரணியொன்றான 'm' இனால் (0.035) பெருக்கியதாக பின்னரே பயன்படுத்துதல் வேண்டும்.

6.8.5.3. மாற்று நியமப்படுத்தப்பட்ட அணுகுமுறையினைப் பின்பற்றும் வங்கி, வங்கி மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளரின் முன்னொப்புதல் இல்லாமல் நியமப்படுத்தப்பட்ட அணுகுமுறையினையோ அடிப்படைக் குறிகாட்டி அணுகுமுறையினையோ பின்பற்றக்கூடாது.

6.8.5.4. வங்கியானது மாற்று நியமப்படுத்தப்பட்ட அணுகுமுறையின் கீழ் தொழிற்பாட்டு இடர்நேர்வு மூலதனத் தேவைப்பாட்டைப் பின்வருமாறு கணிக்கமுடியும்.

$K_{ASA} = \{\Sigma_{Years\ 1\text{-}3} \max[\Sigma(GI_{1\text{-}6} \times \beta_{1\text{-}6}),0]\} /3 + (B_7 \times m \times LA_r) + (\beta_8 \times m \times LA_c)$

இங்கு: $\Sigma_{Years} = \Sigma_{ஆண்டுகள்}$ , max= கூடிய

அ) $K_{ASA}$ = மாற்று நியமப்படுத்தப்பட்ட அணுகுமுறையின் கீழ் தொழிற்பாட்டு இடர்நேர்விலிருந்து மூலதன விதிப்பு

ஆ) $GI_{1\text{-}6}$ = குறிப்பிட்டதொரு ஆண்டின் சில்லறை வங்கித்தொழில் மற்றும் வர்த்தக வங்கித்தொழில் வியாபாரத் துறைகள் தவிர்ந்த அட்டவணை 21இல் எடுத்துக்காட்டப்பட்ட எட்டு வியாபாரத் துறைகள் ஒவ்வொன்றிற்குமான ஆண்டு மொத்த வருமானம் அடிப்படை குறிகாட்டி அணுகுமுறையின் கீழ் விடயம் 6.8.3.2. இற்கிணங்க கணிக்கப்படுகிறது.

இ) $\beta_{1\text{-}8}$ = அட்டவணை 22இல் எடுத்துக்காட்டப்பட்டவாறு நிலையான பீற்றாக் காரணி

ஈ) m = 0.035

உ) $LA_r$ = சில்லறை வங்கித்தொழில் வியாபாரத் துறையின் மொத்த வெளிநின்ற கடன்கள் மற்றும் முற்பணங்கள்

ஊ) $LA_c$ = வர்த்தக வங்கித்தொழில் வியாபாரத் துறையின் மொத்த வெளிநின்ற கடன்கள் மற்றும் முற்பணங்கள்

6.8.5.5. மாற்று நியமப்படுத்தப்பட்ட அணுகுமுறையின் நோக்கங்களுக்காக மொத்த வெளிநின்ற கடன்களும் முற்பணங்களும் பின்வருமாறு இருத்தல் வேண்டும்.

அ) சில்லறை வங்கித்தொழில் வியாபாரத் துறையானது, சில்லறையின் மொத்த ஐந்தொகையின் வெளிநின்ற தொகை, சில்லறையாகக் கருதப்பட்ட சிறிய நடுத்தர தொழில்முயற்சிகள், வதிவிட ரீதியான ஈடுகள் மற்றும் கொள்வனவு செய்யப்பட்ட பெறத்தக்க சில்லறைகள், கொடுகடன் சொத்துப்பட்டியல் என்பனவற்றை உள்ளடக்குகிறது.

ஆ) வர்த்தக வியாபாரத் துறையானது கம்பனியின் மொத்த ஐந்தொகையின் வெளிநின்ற தொகை, இறைமை, வங்கி, சிறப்பியல்பு வாய்ந்த கடன் வழங்கல், கம்பனியாகக் கருதப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள், கொள்வனவு செய்யப்பட்ட கம்பனியின் பெறத்தக்கவைகள், கொடுகடன் சொத்துப்பட்டியல், முதிர்ச்சிக்காக வைத்திருக்கப்பட்ட பிணையங்களின் ஏட்டுப் பெறுமதி மற்றும் விற்பனைக்காக கிடைக்கத்தக்கவைகள் என்பனவற்றை உள்ளடக்குகிறது.

6.8.5.6. $LA_r$ மற்றும் $LA_c$ என்பனவற்றைத் தீர்மானிக்கும் நோக்கத்திற்காக, ஏதேனும் ஒதுக்கங்கள்/ பெறுமதி இழப்புக் கட்டணங்களின் மொத்தம் இல்லாமல் 12 இற்கு மேற்பட்ட மிக அண்மைய வியாபாரத் துறைகள் தொடர்பிலான மொத்த வெளிநின்ற கடன்கள் மற்றும் முற்பணங்களின் ஒற்றைச் சராசரியினை வங்கிகள் கணிப்பில் எடுத்துக்கொள்ளலாம்.

**6.8.6. பகுதி V இன் நிறைவிற்காக குறித்துரைக்கப்பட்ட அறிவுறுத்தல்கள்**

**6.8.6.1. பகுதி V (அ) தொழிற்பாட்டு இழப்பிற்காக இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட தொகையினைக் கணித்தல்**

**6.8.6.1.1. மொத்த வருமானம்/ கடன்கள் மற்றும் முற்பணங்கள்**
**(WBRC 11.5.1.7.0.0)**

**மொத்த வருமானம்:** அடிப்படைக் குறிகாட்டி அணுகுமுறை (WBRC 11.5.1.1.0.0), நியமப்படுத்தப்பட்ட அணுகுமுறையின் வியாபாரத் துறைகள் (WBRC 11.5.1.2.1.0 இலிருந்து 11.5.1.2.8.0) மற்றும் மாற்று நியமப்படுத்தப்பட்ட அணுகுமுறையின் வியாபாரத் துறை (WBRC 11.5.1.3.1.1 இலிருந்து 11.5.1.3.1.6) தொடர்பில் ஒவ்வொரு ஆண்டிற்குமான மொத்த வருமானத்தின் பெறுமதி பகுதி V(ஆ) இல் வழங்கப்பட்டுள்ள தரவுகளின் அடிப்படையில் தன்னியக்கமாகவே பின்வருமாறு காட்டப்படுகிறது.

**மொத்த வருமானம்** = வட்டி வருமானம் (**WBRC 11.5.2.3.0.0**) - வட்டிச் செலவுகள் (**WBRC 11.5.2.4.0.0**) + வட்டியல்லா வருமானம் (**WBRC 11.5.2.5.0.0**) (+/-) வங்கித்தொழில் ஏட்டிலுள்ள பிணையங்களின் விற்பனையிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட இலாபம்/ இழப்புகள் (**WBRC 11.5.2.6.0.0**) (+/-) வருமானத்தில் விதிவிலக்கான/ ஒழுங்கற்ற விடயம் (**WBRC 11.5.2.7.0.0**).

கீழே தரப்பட்டுள்ள உதாரணங்கள் மூலம் இது மேலும் விளக்கப்படுகிறது (அட்டவணை 23)

| அட்டவணை 23 | | |
|---|---|---|
| ஆண்டு மொத்த வருமானத்தினைக் கணிப்பதற்கான விளக்கம் | | |
| விடயம் | தொகை - ரூ.'000 | தொகை - ரூ.'000 |
| வட்டி வருமானம் | 200,000 | 200,000 |
| கழிக்குக: வட்டிச் செலவு | (100,000) | (100,000) |
| **தேறிய வட்டி வருமானம்** | **100,000** | **100,000** |
| **வட்டியில்லா வருமானம்** | | |
| கட்டணம் மற்றும் தரகு வருமானம் | 50,000 | 50,000 |
| பங்கிலாப வருமானம் | 30,000 | 30,000 |
| நிலையான சொத்துக்களின் விற்பனை மீதான இலாபம் | 40,000 | |
| வர்த்தகப்படுத்தல்களிலிருந்தான இலாபம்/ இழப்பு | 20,000 | 20,000 |
| வங்கித்தொழில் ஏட்டுப் பிணையங்களின் விற்பனையிலிருந்து பெறப்பட்ட இலாபங்கள்/ இழப்புக்கள் | 50,000 | |
| ஏனையவை | 10,000 | 10,000 |
| **வட்டியில்லா வருமானம்** | **200,000** | **110,000** |
| **தொழிற்பாட்டு வருமானம்** | **300,000** | **210,000** |
| கழிக்குக: தொழிற்பாட்டுச் செலவு | (100,000) | |
| கழிக்குக: படிகள் | (50,000) | |
| கழிக்குக: வரிகள் | (30,000) | |
| **காலப்பகுதிக்கான இலாபம்/ இழப்பு** | **120,000** | |
| **தொழிற்பாட்டு ரீதியான இடர்நேர்வு மூலதனத் தேவைப்பாடுகளின் நோக்கத்திற்கான மொத்த வருமானம்** | | **210,000** |

**கடன்கள் மற்றும் முற்பணங்கள்:** சில்லறை வங்கித்தொழில் (WBRC 11.5.1.3.2.1) மற்றும் வர்த்தக வங்கித்தொழில் (WBRC 11.5.1.3.2.2) என்பன தொடர்பிலான கடன்கள் மற்றும் முற்பணங்களின் பெறுமதி விடயம் 6.8.5.6 இலுள்ளவாறு பூரணப்படுத்தப்படல் வேண்டும்.

6.8.6.1.2. **மூலதன விதிப்புக்கள்**
**(WBRC 11.5.1.8.0.0)**

அடிப்படைக் குறிகாட்டி அணுகுமுறை, நியமப்படுத்தப்பட்ட அணுகுமுறை மற்றும் மாற்று நியமப்படுத்தப்பட்ட அணுகுமுறை என்பன தொடர்பில் ஒவ்வொரு ஆண்டிற்குமான மூலதன விதிப்பின் பெறுமதி பின்வருமாறு கணிக்கப்படுகிறது:

i. அடிப்படைக் குறிகாட்டி அணுகுமுறை: ஒவ்வொரு ஆண்டிற்குமாக மொத்த வருமானத்தினை α (15%) இனால் பெருக்குவதன் மூலம்

ii. நியமப்படுத்தப்பட்ட அணுகுமுறை: ஒவ்வொரு ஆண்டிற்குமான தனிப்பட்ட வியாபாரத் துறையின் மொத்த வருமானத்தினை ஒவ்வொரு வியாபாரத் துறைக்குமென நிர்ணயிக்கப்பட்ட பீற்றாவினால் β பெருக்குவதன் மூலம்

iii. மாற்று நியமப்படுத்தப்பட்ட அணுகுமுறை: ஒவ்வொரு ஆண்டிற்குமான தனிப்பட்ட வியாபாரத் துறையின் மொத்த வருமானத்தினை ஒவ்வொரு வியாபாரத் துறைக்குமென நிர்ணயிக்கப்பட்ட பீற்றாவினால் (β) பெருக்குவதன் மூலம் சில்லறை வங்கித்தொழில் வியாபாரத் துறை மற்றும் வர்த்தக வங்கித்தொழில் வியாபாரத் துறை என்பனவற்றைப் பொறுத்தவரையில், மூலதன விதிப்பானது கடன்கள் மற்றும் முற்பணங்களின் ஆண்டுச் சராசரி வெளிநின்ற தொகையினை தொடர்பான பீற்றாவுடன் அதாவது முறையே 12 சதவீதம் மற்றும் 15 சதவீதத்துடன் நிலையான காரணியான 'm' அதாவது 0.035 இனால் பெருக்குவதன் மூலம் கணிக்கப்படுகிறது.

6.8.6.1.3. **தொழிற்பாட்டு இடர்நேர்வுகளுக்கான மூலதன விதிப்புக்கள்**
**(WBRC 11.5.1.9.0.0)**

அடிப்படைக் குறிகாட்டி அணுகுமுறை, நியமப்படுத்தப்பட்ட அணுகுமுறை மற்றும் மாற்று நியமப்படுத்தப்பட்ட அணுகுமுறை என்பன தொடர்பிலான தொழிற்பாட்டு இடர்நேர்விற்கான மூலதன விதிப்பின் பெறுமதி தன்னியக்கமாகவே பின்வருமாறு காட்டப்படுகிறது:

i. ஒவ்வொரு அணுகுமுறை தொடர்பிலான தொழிற்பாட்டு இடர்நேர்வுகளுக்கான மூலதன விதிப்புக்கள் WBRC 11.5.1.8.0.0 மற்றும் அடிப்படைக் குறிகாட்டி அணுகுமுறையின் 11.5.1.1.0.0, WBRC 11.5.1.8.0.0 மற்றும் நியமப்படுத்தப்பட்ட அணுகுமுறையின் WBRC 11.5.1.2.0.0 மற்றும் WBRC 11.5.1.8.0.0 மற்றும் மாற்று நியமப்படுத்தப்பட்ட அணுகுமுறையின் WBRC 11.5.1.3.0.0 என்பனவற்றின் கீழ் அறிவிக்கப்பட்டவாறு கூட்டுத்தொகையினை 3 இனால் (ஆண்டுகளின் எண்ணிக்கை) பிரிப்பதன் மூலம் 3 துண்டுகளுக்கான மூலதன விதிப்பின் கூட்டுத்தொகை கணிக்கப்படுகிறது.

ii. மூன்று ஆண்டுகளின் குறிப்பிட்ட ஆண்டில்/ ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட எதிர்க்கணியமான மூலதன விதிப்பு பூஜ்யப் பெறுமதியாகக் கருதப்பட வேண்டுமென்பதுடன் மற்றைய ஆண்டு/ ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட நேர்க்கணிய மூலதன விதிப்பினை எதிரீடு செய்யவும் பயன்படுத்தக்கூடாது.

iii. அடிப்படைக் குறியீட்டு அணுகுமுறையினைப் பொறுத்தவரையில் மேலே (i)இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆண்டுகளின் எண்ணிக்கை விடயம் 6.8.3.3 இற்கிணங்க மாற்றப்படலாம்.

6.8.6.1.4. **தொழிற்பாட்டு இடர்நேர்விற்கான இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட தொகை**

**(WBRC 11.5.1.10.0.0)**

அடிப்படைக் குறியீட்டு அணுகுமுறை (WBRC 11.5.1.10.0.0) நியமப்படுத்தப்பட்ட அணுகுமுறை (WBRC 11.5.1.10.2.0) மாற்று நியமப்படுத்தப்பட்ட அணுகுமுறை (WBRC 11.5.1.10.3.0) என்பன தொடர்பிலான தொழிற்பாட்டு இடர்நேர்விற்கான இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட தொகையின் பெறுமதி அடிப்படைக் குறிகாட்டி அணுகுமுறை (WBRC 11.5.1.9.1.0) நியமப்படுத்தப்பட்ட அணுகுமுறை (WBRC 11.5.1.9.2.0) மற்றும் மாற்று நியமப்படுத்தப்பட்ட அணுகுமுறை (WBRC 11.5.1.9.3.0) என்பனவற்றின் கீழ் தொழிற்பாட்டு இடர்நேர்விற்கான மூலதன விதிப்பினை 10 இனால் தனித்தனியாக பெருக்குவதன் மூலம் தன்னியக்கமாக காட்டப்படுகிறது.

6.8.6.2. **பகுதி V (ஆ): தொழிற்பாட்டு இடர்நேர்வுகளின் கீழ் மொத்த வருமானத்தினைக் கணித்தல்**

6.8.6.2.1. இப்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள வருமானம் மற்றும் செலவுகளின் அறிக்கையிடல் விடயம் 6.8.3.4 இற்கிணங்க மேற்கொள்ளப்படல் வேண்டும்.

6.8.6.2.2. WBRC 11.5.2.1.0.0 அடிப்படைக் குறியீட்டு அணுகுமுறைக்கு மாத்திரமே ஏற்புடைத்தாகும். WBRC 11.5.2.2.1.0 இலிருந்து WBRC 11.5.2.2.6.0 வரையான கீழேயுள்ள ஆறு வியாபாரத் துறைகள் நியமப்படுத்தப்பட்ட அணுகுமுறை மற்றும் மாற்று நியமப்படுத்தப்பட்ட அணுகுமுறை இரண்டிற்கும் ஏற்புடைத்தாகும் என்பதுடன் WBRC 11.5.2.2.7.0 மற்றும் WBRC 11.5.2.2.8.0 என்பனவற்றின் கீழ் இரண்டு வியாபாரத் துறைகள் நியமப்படுத்தப்பட்ட அணுகுமுறைக்கு மாத்திரமே ஏற்புடைத்தானதாகும்.

அட்டவணை II

**பகுதி V (அ): தொழிற்பாட்டு இடர்நேர்வுகளுக்கான இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட தொகையினைக் கணித்தல்**

| குறியீடு | வியாபாரத் தொடர்கள் (11.5.1.4.0.0) | மூலதன விதிப்புக் காரணி (α & β) 11.5.1.5.0.0 | நிலையான காரணி 'm' 11.5.1.6.0.0 | மொத்த வருமானம்/ கடன்கள் மற்றும் முற்பணங்கள் 11.5.1.7.0.0 | | | மூலதன விதிப்புக்கள் 11.5.1.8.0.0 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 1ஆம் ஆண்டு | 2ஆம் ஆண்டு | 3ஆம் ஆண்டு | 1ஆம் ஆண்டு | 2ஆம் ஆண்டு | 3ஆம் ஆண்டு |
| 11.5.1.1.0.0 | **அடிப்படை குறிகாட்டி அணுமுறை** | 15% | | | | | 0 | 0 | 0 |
| | | | | | | | | | |
| 11.5.1.2.0.0 | **நியமப்படுத்தப்பட்ட அணுகுமுறை** | | | **0** | **0** | **0** | **0** | **0** | **0** |
| 11.5.1.2.1.0 | கம்பனி நிதி ($\beta_1$) | 18% | | | | | 0 | 0 | 0 |
| 11.5.1.2.2.0 | வர்த்தகப்படுத்தல் மற்றும் விற்பனை ($\beta_2$) | 18% | | | | | 0 | 0 | 0 |
| 11.5.1.2.3.0 | கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு ($\beta_3$) | 18% | | | | | 0 | 0 | 0 |
| 11.5.1.2.4.0 | முகவர் பணிகள் ($\beta_4$) | 15% | | | | | 0 | 0 | 0 |
| 11.5.1.2.5.0 | சொத்து முகாமைத்துவம் ($\beta_5$) | 12% | | | | | 0 | 0 | 0 |
| 11.5.1.2.6.0 | சில்லறைத் தரகு ($\beta_6$) | 12% | | | | | 0 | 0 | 0 |
| 11.5.1.2.7.0 | சில்லறை வங்கித்தொழில் ($\beta_7$) | 12% | | | | | 0 | 0 | 0 |
| 11.5.1.2.8.0 | வர்த்தக வங்கித்தொழில் ($\beta_8$) | 15% | | | | | 0 | 0 | 0 |
| | | | | | | | | | |
| 11.5.1.3.0.0 | **மாற்று நியமப்படுத்தப்பட்ட அணுகுமுறை** | | | | | | **0** | **0** | **0** |
| 11.5.1.3.1.0 | **துணை மொத்தம்** | | | **0** | **0** | **0** | **0** | **0** | **0** |
| 11.5.1.3.1.1 | கம்பனி நிதி ($\beta_1$) | 18% | | | | | 0 | 0 | 0 |
| 11.5.1.3.1.2 | வர்த்தகப்படுத்தல் மற்றும் விற்பனை ($\beta_2$) | 18% | | | | | 0 | 0 | 0 |
| 11.5.1.3.1.3 | கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு ($\beta_3$) | 18% | | | | | 0 | 0 | 0 |
| 11.5.1.3.1.4 | முகவர் பணிகள் ($\beta_4$) | 15% | | | | | 0 | 0 | 0 |
| 11.5.1.3.1.5 | சொத்து முகாமைத்துவம் ($\beta_5$) | 12% | | | | | 0 | 0 | 0 |
| 11.5.1.3.1.6 | சில்லறைத் தரகு ($\beta_6$) | 12% | | | | | 0 | 0 | 0 |
| **11.5.1.3.2.0** | **துணை மொத்தம்** | | | **0** | **0** | **0** | **0** | **0** | **0** |
| 11.5.1.3.2.1 | சில்லறை வங்கித்தொழில் ($\beta_7$) | 12% | 0.035 | | | | 0 | 0 | 0 |
| 11.5.1.3.2.2 | வர்த்தக வங்கித்தொழில் ($\beta_8$) | 15% | 0.035 | | | | 0 | 0 | 0 |
| | | | | | | | | | |
| **11.5.1.9.0.0** | **தொழிற்பாட்டு இடர்நேர்வுகளுக்கான மூலதன விதிப்புக்கள்** | | | | | | | | |
| 11.5.1.9.1.0 | அடிப்படை குறிகாட்டி அணுகுமுறை | | | | | | | | 0 |
| 11.5.1.9.2.0 | நியமப்படுத்தப்பட்ட அணுகுமுறை | | | | | | | | 0 |
| 11.5.1.9.3.0 | மாற்று நியமப்படுத்தப்பட்ட அணுகுமுறை | | | | | | | | 0 |
| **11.5.1.10.0.0** | **தொழிற்பாட்டு இடர்நேர்வுகளுக்கான இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட தொகை** | | | | | | | | |
| 11.5.1.10.1.0 | அடிப்படை குறிகாட்டி அணுகுமுறை (11.5.1.9.1.0*10) | | | | | | | | 0 |
| 11.5.1.10.2.0 | நியமப்படுத்தப்பட்ட அணுகுமுறை (11.5.1.9.2.0*10) | | | | | | | | 0 |
| 11.5.1.10.3.0 | மாற்று நியமப்படுத்தப்பட்ட அணுகுமுறை (11.5.1.9.3.0*10) | | | | | | | | 0 |

அடிப்படை குறிகாட்டி அணுகுமுறையின் கீழ் தொழிற்பாட்டு இடர்நேர்வுகளுக்கான மூலதன விதிப்பு

$K_{BIA} = [\Sigma(GI_{1\ldots n} \, x\alpha )]/n$

நியமப்படுத்தப்பட்ட அணுகுமுறையின் கீழ் தொழிற்பாட்டு இடர்நேர்வுகளுக்கான மூலதன விதிப்பு

$K_{TSA} = \{\Sigma_{Years\ 1\text{-}3} \max[\Sigma(GI_{1\text{-}8} \ x\ \beta_{1\text{-}8}),0]\}/3$

மாற்று நியமப்படுத்தப்பட்ட அணுகுமுறையின் கீழ் தொழிற்பாட்டு இடர்நேர்வுகளுக்கான மூலதன விதிப்பு

$K_{ASA} = \{\Sigma_{Years\ 1\text{-}3} \max[\Sigma(GI_{1\text{-}6} \ x\ \beta_{1\text{-}6}),0]\} /3 + (\beta_7 \ x\ m\ x\ LA_r) + (\beta_8 \ x\ m\ x\ LA_c)$

இங்கு: $\Sigma_{Years} = \Sigma_{\text{ஆண்டுகள்}}$ , max= கூடிய

**பகுதி V (ஆ): தொழிற்பாட்டு இடர்நேர்வுகளின் கீழ் மொத்த வருமானத்தினைக் கணித்தல்**

| குறியீடு | வியாபாரத் தொடர்கள் (11.5.2.3.0.0) | வட்டி வருமானம் (11.5.2.4.0.0) | | | வட்டிச் செலவுகள் (11.5.2.5.0.0) | | | வட்டியல்லா வருமானம் (11.5.2.6.0.0) | | | வங்கித்தொழில் ஏட்டிலுள்ள பிணையங்களின் விற்பனையிலிருந்து கிடைத்த இலாபங்கள் (11.5.2.7.0.0) | | | வருமானத்தின் அசாதாரணமான/ கிரமமற்ற விடயங்கள் (11.5.2.8.0.0) | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1ஆம் ஆண்டு | 2ஆம் ஆண்டு | 3ஆம் ஆண்டு | 1ஆம் ஆண்டு | 2ஆம் ஆண்டு | 3ஆம் ஆண்டு | 1ஆம் ஆண்டு | 2ஆம் ஆண்டு | 3ஆம் ஆண்டு | 1ஆம் ஆண்டு | 2ஆம் ஆண்டு | 3ஆம் ஆண்டு | 1ஆம் ஆண்டு | 2ஆம் ஆண்டு | 3ஆம் ஆண்டு |
| 11.5.2.1.0.0 | அடிப்படை குறிகாட்டி அணுமுறை | | | | | | | | | | | | | | | |
| 11.5.2.2.0.0 | நியமப்படுத்தப்பட்ட அணுகுமுறை/ மாற்று நியமப்படுத்தப்பட்ட அணுகுமுறை | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 11.5.2.2.1.0 | கம்பனி நிதி | | | | | | | | | | | | | | | |
| 11.5.2.2.2.0 | வர்த்தகப்படுத்தல் மற்றும் விற்பனை | | | | | | | | | | | | | | | |
| 11.5.2.2.3.0 | கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு | | | | | | | | | | | | | | | |
| 11.5.2.2.4.0 | முகவர் பணிகள் | | | | | | | | | | | | | | | |
| 11.5.2.2.5.0 | சொத்து முகாமைத்துவம் | | | | | | | | | | | | | | | |
| 11.5.2.2.6.0 | சில்லறைத் தரகு | | | | | | | | | | | | | | | |
| 11.5.2.2.7.0 | சில்லறை வங்கித்தொழில் | | | | | | | | | | | | | | | |
| 11.5.2.2.8.0 | வர்த்தக வங்கித்தொழில் | | | | | | | | | | | | | | | |

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 46(1) மற்றும் 76(ஜே)(1) இன் பிரிவுகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் விடுக்கப்பட்ட பணிப்புரைகள்.

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
**தலைவர்**
**நாணயச் சபை**
**இலங்கை மத்திய வங்கி**

கொழும்பு
2014 யூன் 5

## 2014ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்

## உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் அசையாச் சொத்துக்களின் மதிப்பீடு மீதான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு

2006ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்தச்) சட்டத்தினால் இறுதியாக திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 46(1) மற்றும் 76(ஜே)(1) ஆகிய பிரிவுகளின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி நாணயச் சபையானது உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் அசையாச் சொத்துக்களின் மதிப்பீடு மீதான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பின் மீது 2014ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க பணிப்புரையினை இத்தால் விடுக்கிறது.

1. **வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் அதிகாரமளித்தல்**

   1.1 வங்கித்தொழில் முறைமையின் ஆற்றல்வாய்ந்த தன்மையினை உறுதிப்படுத்தும் பொருட்டு, வங்கித்தொழில் சட்டத்தின் 46(1) மற்றும் 76(ஜே)(1) ஆகிய பிரிவுகளின் நியதிகளில், உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் எந்தவொரு விடயத்திலும் எந்த விதத்தில் நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றி அனைத்து வங்கிகளுக்கும் அல்லது ஏதாவதொரு வங்கிக்கு பணிப்புரைகளை விடுப்பதற்கு நாணயச் சபைக்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறது.

2. **அசையாச் சொத்துக்களின் மதிப்பீடு தொடர்பில் கொள்கைகளை உருவாக்கி நடைமுறைக்கிடல்**

   2.1 அசையாச் சொத்துக்களின் மதிப்பீடு தொடர்பில் ஒவ்வொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கியும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியும் பொருத்தமான சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட முன்மதியுடைய கொள்கைகளையும் நடைமுறைகளையும் நடைமுறைக்கிடுவதை உறுதி செய்து கொள்ளுதல் வேண்டும். இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டுள்ள வங்கிகளைப் பொறுத்தவரையில் பணிப்பாளர் சபை என்பது தொடர்பான வங்கியின் தலைமை அலுவலகம் அல்லது இவ்வங்கியினை மேற்பார்வை செய்யும் பிராந்திய அலுவலகம் எனப் பொருள்படும்.

2.2 மேலே பணிப்புரை 2.1இல் குறிப்பிடப்பட்டவாறு அசையாச் சொத்துக்களின் மதிப்பீடு தொடர்பிலான கொள்கைகளையும் நடவடிக்கைகளையும் உருவாக்கும் பொழுது, ஒவ்வொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கியும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியும் குறைந்தபட்சம் பின்வரும் தேவைப்பாடுகளைக் கவனத்தில் கொள்ள வேண்டும் என்பதுடன் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு மற்றும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகம் உள்ளிட்ட வேறு எவரேனும் ஒழுங்குமுறைப்படுத்துநரால் உருவாக்கப்பட்ட அனைத்துத் தேவைப்பாடுகளுக்கும் இணங்கியொழுகுதலும் வேண்டும்.

அ) கொள்கை வடிவமைப்பு மற்றும் அவற்றைக் காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்தல் தொடர்பில் பணிப்பாளர் சபை, மூத்த முகாமைத்துவம் மற்றும் ஏனைய தொடர்பான குழுக்கள் உ-ம்: கொடுகடன் குழு என்பனவற்றின் பொறுப்புக்கள்

ஆ) உள்ளக மற்றும் வெளிவாரி ஆகிய இரண்டு முறைகளிலும் மதிப்பீட்டாளர் குழுவினை நியமித்தல்

இ) கீழேயுள்ள பணிப்புரை 5 இற்குட்பட்டு மதிப்பீட்டாளர் குழுவினை நியமிப்பதற்காக தகைமை பெற்ற மதிப்பீட்டாளர்களை அடையாளம் காணவும் தெரிவு செய்வதற்குமான நடைமுறைகள்

ஈ) மதிப்பீட்டு மாதிரி மற்றும் நம்பகத்தன்மை மற்றும் அத்தகைய மதிப்பீட்டிற்காகப் பயன்படுத்தப்பட்ட தரவுகளின் துல்லியத்தன்மை என்பனவற்றிலிருந்து பெறப்பட்ட அசையாச் சொத்தொன்றின் சந்தைப் பெறுமதியின் நியாயபூர்வத் தன்மையினை மதிப்பிடுவதற்கான நடைமுறைகள்

உ) கீழேயுள்ள பணிப்புரை 6 இற்கு உட்பட்டு, விடயம் எப்படியிருப்பினும், அனைத்துக் கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கெதிரான அசையாச் சொத்துக்கள் தொடர்பில் பெறப்பட்ட/ பெறப்படவுள்ள உள்ளக மற்றும் வெளிவாரி மதிப்பீட்டு அறிக்கைகளுக்கான குறைந்த அடிப்படை

ஊ) கீழேயுள்ள பணிப்புரை 7 இற்குட்பட்டு மதிப்பீட்டிற்கான கால இடைவெளி

எ) உள்ளக மதிப்பீடுகளுக்கான மதிப்பீட்டுப் பிரமாணம்

ஏ) கீழேயுள்ள பணிப்புரை 8 இற்குட்பட்டு சுயாதீனமான வெளிப்படுத்துகை

ஐ) கடன்படுநர்களுக்கான அறிவித்தல்: கடன் உடன்படிக்கையானது பிணையாகப் பெறப்பட்ட அசையாச் சொத்துக்களின் விபரமான விபரங்களுடன் சேர்த்து மீள்மதிப்பீட்டின் விபரமான மாதிரிகளின் தன்மையினையும் மீள்மதிப்பீட்டுக் கால இடைவெளியினையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

ஒ) வெளிவாரி மதிப்பீட்டாளர்களுக்கான கொடுப்பனவு மற்றும் கட்டண அமைப்பு நடைமுறைகள்

**3. அசையாச் சொத்துக்கள்**

3.1 இப்பணிப்புரைகளின் நோக்கத்திற்காக, அசையாச் சொத்துக்கள் என்பது ஏதேனும் காணி, காணி மற்றும் கட்டடம் அல்லது இவற்றிலிருந்தான ஏதேனும் உரித்துக்கள் எனப் பொருள்படும். அவை பின்வருவன உள்ளிட்ட நோக்கங்களுக்காக கையேற்கப்படும் அல்லது வைத்திருக்கப்படும்.

அ) மீட்புரிமைத் தடைவிதிக்கப்பட்ட சொத்துக்கள் உட்பட ஏதேனும் வங்கியினால் வழங்கப்பட்ட ஏதேனும் கடன் வசதிகளுக்கெதிராக பிணையாகப் பெறப்பட்ட காணி மற்றும் காணி மற்றும் கட்டடங்கள்.

ஆ) இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அதாவது, இலங்கை கணக்கீட்டு நியமம் 16: சொத்து, பொறி மற்றும் கருவிகள் என்பனவற்றிற்கிணங்க, அறவிடப்பட்டு வெளிப்படுத்தப்பட்ட ஏதேனும் வங்கியினால் வங்கித்தொழில் வியாபாரத்தினைக் கொண்டு நடத்தும் நோக்கத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட அல்லது கையேற்கப்பட்ட காணி, காணி மற்றும் கட்டடம்

இ) இலங்கை கணக்கீட்டு நியமம், உதாரணமாக அதாவது இலங்கை கணக்கீட்டு நியமம் 40: முதலீட்டுச் சொத்திற்கிணங்க அளவிடப்பட்டு வெளிப்படுத்தப்பட்ட வங்கியின் முதலீடுகளாகக் கொள்வனவு செய்யப்பட்ட அல்லது கையேற்கப்பட்ட காணி மற்றும் காணி மற்றும் கட்டடம்

**4. நோக்கங்கள்**

4.1 பின்வரும் நோக்கங்களுக்காக அசையாச் சொத்துக்களின் மதிப்பீடு மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

அ) வங்கித்தொழில் சட்டத்தின் நியதிகளில் விதிக்கப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு

ஆ) இலங்கை கணக்கீட்டு நியமத்தின் கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறு நிதியியல் அறிக்கையிடலுக்காக அசையாச் சொத்துக்களை மதிப்பிடுவதற்காக

இ) அசையாச் சொத்துக்களின் மதிப்பீட்டினைத் தேவைப்படுத்துகின்ற வங்கிகளில் தற்போது இடம்பெற்றுவரும் வங்கியின் ஏனைய வியாபாரத் தேவைப்பாடுகள்

**5. மதிப்பீட்டாளர்களுக்கான தகைமைப் பிரமாணங்கள்**

5.1 ஒவ்வொரு வங்கியும் பின்வருவனவற்றை உறுதிப்படுத்துதல் வேண்டும்:

அ) மதிப்பீட்டாளர்களுக்கான தகைமைப் பிரமாணங்கள் பின்வருமாறு குறிப்பிடப்படுகிறது.

அ) இலங்கை மதிப்பீட்டாளர் நிறுவகத்தின் கம்பனி உறுப்பினராக இருத்தல் வேண்டும் அவர்

(i) ஒரு ஆட்சியியல் உறுப்பினராக; அல்லது

(ii) உறுப்பினர் தரத்தில் 5 ஆண்டு அனுபவத்துடன் கூடியதொரு பட்டதாரி உறுப்பினராக; அல்லது

(iii) துணை உறுப்பினர் அங்கத்துவத்தினைப் பூர்த்தி செய்ய எடுக்கும் பத்தாண்டு காலத்திற்குச் சமனான கால அனுபவத்துடன் உறுப்பினராக அனுமதிக்கப்படும் நேரத்தில் துணை உறுப்பினராக இருந்த பட்டதாரி உறுப்பினரொருவர்; அல்லது

(iv) துணை உறுப்பினர் தரத்தில் 10 ஆண்டு அனுபவத்தைக் கொண்ட துணை உறுப்பினரொருவராக

இருத்தல் வேண்டும்.

ஆ) ஐக்கிய இராச்சியத்தின் பட்டய அளவீட்டாளர் றோயல் நிறுவகத்தின் ஆட்சியியல் உறுப்பினரொருவராக இருத்தல் வேண்டும்.

இ) ஐக்கிய இராச்சியத்தின் பட்டய அளவீட்டாளர் றோயல் நிறுவகத்தின் ஏதேனுமொரு உறுப்பினர் தரத்தில் 3 ஆண்டுகள் அனுபவத்தினைக் கொண்ட வேறு ஏதாவதொரு உறுப்பினர்.

ஆ) மேலே 5.1 (அ)ஆம் பணிப்புரையில் குறிப்பிடப்பட்ட தகைமையைக் கொண்ட தகுதியுடைய மதிப்பீட்டாளர் தொடர்பான தொழில்சார் நிறுவனத்தினால் ஒப்புதலளிக்கப்பட்ட/ விதந்துரைக்கப்பட்டவாறான தொடர்ச்சியான தொழில்சார் தகைமைகளை பெற்றுக் கொண்டவர்கள்; அத்துடன்

இ) 2015 சனவரி 1இலிருந்து மேலேயுள்ள பணிப்புரை 5.1 (அ) மற்றும் (ஆ) என்பனவற்றிலுள்ள பணிப்புரையின் தகைமைகளை பூர்த்தி செய்த மதிப்பீட்டாளர்களினால் அசையாச் சொத்துக்களின் உள்ளக மதிப்பீடு மேற்கொள்ளப்படும்.

**6. உள்ளக மற்றும் வெளிவாரி மதிப்பீட்டு அறிக்கைகளுக்கான குறைந்த அடிப்படை**

6.1 விடயம் எதுவாக இருப்பினும், செயற்படாக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் நீங்கலாக, அனைத்துக் கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கெதிரான பிணைகளாகப் பெறப்பட்ட/ பெறப்படவுள்ள அசையாச் சொத்துக்கள் தொடர்பில் வங்கிகள் வங்கியினது கொள்கைக்கேற்ப உள்ளக மற்றும் வெளிவாரி மதிப்பீடுகளுக்கான குறைந்தபட்ச பொருத்தமான அடிப்படையினை உருவாக்கிக் கொள்ளுதல் வேண்டும்.

6.2 செயற்படாக் கடன்கள் தொடர்பிலான உள்ளக மதிப்பீட்டிற்கான அடிப்படையானது கடன்கள் மற்றும் முற்பணங்களின் வகைப்படுத்தல் பற்றிய 2008ஆம் ஆண்டின் 3ஆம் மற்றும் 4ஆம் இலங்கை வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள், வருமானத்தினை அங்கீகரித்தல் மற்றும் ஒதுக்கங்களை மேற்கொள்ளுதல் அதாவது ரூ.5,000,000 இற்கு அல்லது வங்கியின் மூலதனத் தளத்தில் 0.1 சதவீதத்திற்கு இதில் எது குறைவானதோ அதனைவிட குறைந்த வெளிநின்ற மூலதனத்தைக் கொண்ட வசதி/ வசதிகள் போன்ற தேவைப்பாடுகளுக்கு இணங்கியதாக இருத்தல் வேண்டும்.

**7. மதிப்பீடுகளின் கால இடைவெளி**

7.1 மேலே பணிப்புரை 2.2 (ஊ)இல் குறிப்பிடப்பட்ட மதிப்பீடுகளின் கால இடைவெளி பின்வருமாறு இருத்தல் வேண்டும்.

அ) செயற்படாக் கடன்களாக விளங்கும் கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கெதிரான பிணைகளாகப் பெறப்பட்ட அசையாச் சொத்துக்களின் மதிப்பீடு, கடன்கள் மற்றும் முற்பணங்களின் வகைப்படுத்தல் தொடர்பிலான 2008ஆம் ஆண்டின் 3ஆம் மற்றும் 4ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் அதாவது கடன்பெறுநரினால் வதிவிட நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்ற வதிவிடச் சொத்திற்கெதிராக வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகள் தொடர்பில் வருமான அங்கீகரிப்பு மற்றும் ஒதுக்கங்கள்: நான்கு ஆண்டுகளுக்கும் குறைவான பழைமையைக் கொண்ட அறிக்கைகள் மற்றும் ஏனைய அனைத்துக் கொடுகடன் வசதிகள்: மூன்றாண்டுகளுக்கும் குறைவான பழைமையைக் கொண்ட அறிக்கைகள்.

ஆ) மேலே 3.1(ஆ) மற்றும் (இ) இலுள்ள பணிப்புரைகளில் குறிப்பிடப்பட்டவாறு அசையாச் சொத்துக்களின் மீள்மதிப்பீடு பின்வருமாறு மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

அ) அத்தகைய அசையாச் சொத்துக்கள் கொண்டிருக்கின்ற சந்தைப் பெறுமதியில் ஏற்படும் ஏதேனும் குறிப்பிடத்தக்க மற்றும் தளம்பல் மாற்றங்களினைப் பொறுத்து வருடாந்தம் அல்லது

ஆ) குறைந்தபட்சம் ஒவ்வொரு மூன்றாண்டுகளுக்கும் ஒரு முறை

**8. சுயாதீனம் மற்றும் வெளிப்படுத்துகை**

8.1 ஒவ்வொரு வங்கியும் வெளிவாரி மதிப்பீட்டாளர்களின் சுயாதீனமான தன்மையினையும் கீழே தரப்பட்டவாறான விதத்தில் வங்கியின் ஆண்டறிக்கையில் அல்லது கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களில் அவை வெளிப்படுத்தப்படுவதனையும் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

அ) அத்தகைய கொடுக்கல்வாங்கல்களிலிருந்து எழும் ஏதேனும் ஈடுபாடுகள் தொடர்பில் ஏற்படும் முரண்பாடுகளைத் தவிர்ப்பதற்காக இலங்கையிலுள்ள உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான கம்பனி ஆளுகை தொடர்பிலான 2007ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க மற்றும் 12ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரையின் இலக்கம் 3(7)(i)ஆம் இலக்கப் பணிப்புரையின் நியதிகளின்படி வெளிவாரி மதிப்பீட்டாளர் தொடர்பான தரப்பினராக இருத்தல்கூடாது.

ஆ) பணிப்பாளர் சபை/ மூத்த முகாமைத்துவம் மதிப்பீட்டுக் கொள்கை, அசையாச் சொத்துக்களின் அளவீடு மற்றும் அங்கீகரித்தல் என்பன தொடர்பிலான வெளிப்படுத்துகைகளை வங்கிகளின் ஆண்டறிக்கையில் அல்லது கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுவதனையும் சுற்றறிக்கை எண் 02/17/900/0001/004 இன் கீழ் 2013.02.11 திகதியிடப்பட்ட சுற்றறிக்கையுடன் சேர்த்து வெளியிடப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் என்பனவற்றின் வருடாந்த நிதியியல் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கான குறித்துரைக்கப்பட்ட படிவத்தின் பந்தி 1.3இன் நியதிகளில் செய்யப்படவுள்ள வெளிப்படுத்துகைகளையும் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

**தொடர்பு எண்: 02/17/600/0003/002** 2014 யூன் 06

சேரல்: உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

அன்புள்ள ஐயா/ அம்மணி

**அசையாச் சொத்துக்களின் மதிப்பீடு தொடர்பில் வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல்**

2014 யூன் 05ஆம் நாள் திகதியிடப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் அசையாச் சொத்துக்களின் மதிப்பீடு மீதான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு தொடர்பில் 2014ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரையின் தேவைப்பாடுகளுக்கிணங்க, கீழேயுள்ள (i)ஆம் மற்றும் (ii)ஆம் பந்திகளில் குறித்துரைக்கப்பட்டவாறு அசையாச் சொத்துக்களில் தற்போதைய சந்தைப் பெறுமதியினை மதிப்பிடுதல் மற்றும் மதிப்பீட்டாளர்களுக்கான தகைமைப் பிரமாணங்கள் மீதான தேவைப்பாடுகளை தங்களுக்கு அறியத் தருகின்றோம்.

(i) ஏற்புடைத்தான விதத்தில் மூலதனப் போதுமை விகிதத்தினை பேணுவது தொடர்பில் 2007ஆம் ஆண்டின் 9 மற்றும் 10ஆம் இலக்க வங்கித்தொழில் பணிப்புரையின் அட்டவணை 1இன் விடயம் 6.2.2.4.1 - "மீள்மதிப்பீட்டு ஒதுக்குகள்" மற்றும் விடயம் 6.4.3.1.9 - "வதிவிடச் சொத்தினால் பிணையிடப்பட்ட கோரல்கள்"

(ii) பணிப்புரைகள் 7(1)(I) (iii) - ஏற்புடைத்தான விதத்தில் கடன்கள் மற்றும் முற்பணங்களின் வகைப்படுத்தல், வருமான அங்கீகாரம் மற்றும் ஒதுக்கீடுகள் என்பன தொடர்பில் 2008ஆம் ஆண்டின் 3ஆம் மற்றும் 4ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரையின் "நடைமுறை வெளிவாரி தொழில்சார் மதிப்பீட்டு அறிக்கை"

2. "மூலதனப் போதுமை விகிதத்தினைக் கணிப்பதற்கான நிலையான சொத்துக்களின் மீள்மதிப்பீட்டினை மேற்கொள்கின்ற மதிப்பீட்டாளர்களைத் தெரிவு செய்வதற்கான பிரமாணங்கள்" மீதான தொடர்பு எண் பீஎஸ்/69/93 இன் கீழான 1999 ஏப்பிறல் 19ஆம் நாளிடப்பட்ட சுற்றறிக்கை இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது.

உங்கள் உண்மையுள்ள
திருமதி ரி எம் ஜே வை பி பர்னாந்து
**வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 46(1) இன் நியதிகளின் கீழ் நாணயச் சபையினால் விடுக்கப்பட்ட பணிப்புரைகள்.

பீ டி டபிள்யு ஏ சில்வா
**மூத்த துணை ஆளுநர்**
**இலங்கை மத்திய வங்கி**

கொழும்பு
2014 யூன் 26

**2014ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்**

**கடன் வசதிகளின் உயர்ந்தபட்சத் தொகை மீதான 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளுக்கான திருத்தம்**

2006ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தினால் இறுதியாகத் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 46(1) ஆம் பிரிவினால் உரித்தாக்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் விடுக்கப்பட்ட 2007ஆம் ஆண்டு நவெம்பர் 01ஆம் நாளிடப்பட்ட 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தினைத் திருத்துவதற்காக நாணயச் சபை பின்வரும் பணிப்புரைகளை இத்தால் விடுக்கிறது. இப்பணிப்புரைகள் 2014ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரை என எடுத்துக்காட்டப்படலாம்.

1. பின்வரும் புதிய பணிப்புரை 2007 நவெம்பர் 01ஆம் நாளிடப்பட்ட 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளின் 5ஆவது பணிப்புரைக்குப் பதிலானதாகும்.

5 (1) உரிமம் பெற்ற வர்த்தக வங்கியின் மூலதனத் தளத்தின் 15 சதவீதத்திற்கும் மிகையாக, மேற்குறிப்பிட்ட பந்திகள் 2(i) மற்றும் 2(ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள வாடிக்கையாளர்களின் எந்தவொரு வகையினருக்கும் குறிப்பிட்ட எந்தவொரு திகதியிலும் வழங்கப்பட்ட கடன் வசதிகளைப் பொறுத்தவரையில், அத்தகைய வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட கடன் வசதியின் வெளிநின்ற தொகையின் மொத்தத் தொகை, உடனடியாக முற்போந்த மாதத்தின் இறுதியிலுள்ளவாறான அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களின் மொத்த வெளிநின்ற தொகையில் 55 சதவீதத்தினை விஞ்சக்கூடாது.

(2) பின்வரும் கடன் வசதிகள் மேலேயுள்ள பணிப்புரை 5(1) இன் கணிப்பிலிருந்து நீக்கப்படுதல் வேண்டும்.

(i) இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட கடன் வசதிகள்

(ii) கீழேயுள்ள பணிப்புரை 6இன் நியதிகளுக்கிணங்க நாணயச் சபையின் ஒப்புதலுடன் மேலேயுள்ள பணிப்புரைகள் 3 மற்றும் 4இன் கீழ் குறித்துரைக்கப்பட்ட உயர்ந்தபட்ச வரையறைகளுக்கு மிகையாக வழங்கப்பட்ட கடன் வசதிகள்.

(iii) கீழே பணிப்புரை 7 (iii) இன் கீழ் வழங்கப்பட்ட கடன் வசதிகள்

2. 2007 நவெம்பர் 01ஆம் நாளிடப்பட்ட 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளின் 7(ii) பணிப்புரையினை உடனடுத்து பின்வரும் புதிய பணிப்புரை உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

(iii) இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட கடன் வசதிகளைப் பொறுத்தவரையில் அக்கடன் வசதிகள் அதன் தலைமை அலுவலகத்தினால் அத்துடன்/ அல்லது இலங்கைக்கு வெளியே தொழிற்படுகின்ற அத்தகைய வங்கியின் ஏதேனும் கிளையிலிருந்து திரட்டப்பட்ட நிதியினூடாக நேரடியாக நிதியிடப்பட்டிருக்குமிடத்து அத்தகைய கடன் வசதிகள்.

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 76(ஜே)(1) இன் நியதிகளின் கீழ் நாணயச் சபையினால் விடுக்கப்பட்ட பணிப்புரைகள்.

பீ டி டபிள்யு ஏ சில்வா
**மூத்த துணை ஆளுநர்**
**இலங்கை மத்திய வங்கி**

கொழும்பு
2014 யூன் 26

## 2014ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்

### கடன் வசதிகளின் உயர்ந்தபட்சத் தொகை மீதான 2007ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப்பணிப்புரைகளுக்கான திருத்தம்

2006ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தினால் இறுதியாகத் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 76(ஜே)(1) ஆம் பிரிவினால் உரித்தாக்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் விடுக்கப்பட்ட 2007ஆம் ஆண்டு நவெம்பர் 01ஆம் நாளிடப்பட்ட 2007ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தினைத் திருத்துவதற்காக நாணயச் சபை பின்வரும் பணிப்புரைகளை இத்தால் விடுக்கிறது. இப்பணிப்புரைகள் 2014ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

1. பின்வரும் புதிய பணிப்புரை 2007 நவெம்பர் 01ஆம் நாளிடப்பட்ட 2007ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளின் 5ஆவது பணிப்புரைக்குப் பதிலானதாகும்.

5 (1) உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியின் மூலதனத் தளத்தின் 15 சதவீதத்திற்கும் மிகையாக, மேற்குறிப்பிட்ட பந்திகள் 2(i) மற்றும் 2(ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள வாடிக்கையாளர்களின் எந்தவொரு வகையினருக்கும் குறிப்பிட்ட எந்தவொரு திகதியிலும் வழங்கப்பட்ட கடன் வசதிகளைப் பொறுத்தவரையில், அத்தகைய வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட கடன் வசதியின் வெளிநின்ற தொகையின் மொத்தத் தொகை, உடனடியாக முற்போந்த மாதத்தின் இறுதியிலுள்ளவாறான அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களின் மொத்த வெளிநின்ற தொகையில் 55 சதவீதத்தினை விஞ்சக்கூடாது.

(2) பின்வரும் கடன் வசதிகள் மேலேயுள்ள பணிப்புரை 5(1) இன் கணிப்பிலிருந்து நீக்கப்படுதல் வேண்டும்.

(i) இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட கடன் வசதிகள்

(ii) கீழேயுள்ள பணிப்புரை 6இன் நியதிகளுக்கிணங்க நாணயச் சபையின் ஒப்புதலுடன் மேலேயுள்ள பணிப்புரைகள் 3 மற்றும் 4இன் கீழ் குறித்துரைக்கப்பட்ட உயர்ந்தபட்ச வரையறைகளுக்கு மிகையாக வழங்கப்பட்ட கடன் வசதிகள்.

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவுகள் 46(1) மற்றும் 76(ஜே)(1) இன் பிரிவுகளின் கீழ் நாணயச் சபையினால் விடுக்கப்பட்ட பணிப்புரைகள்.

பீ டி டபிள்யு ஏ சில்வா
**மூத்த துணை ஆளுநர்**
**இலங்கை மத்திய வங்கி**

கொழும்பு
2014 யூன் 26

**2014ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்**
**உரிமம் பெற்ற வங்கிகளுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பு மீதான பணிப்புரைகளுக்கான திருத்தம்**

2006ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தினால் இறுதியாக திருத்தப்பட்டவாறான, 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 46(1) மற்றும் 76(ஜே)(1) ஆகிய பிரிவுகளினால் உரித்தாக்கப்பட்ட அதிகாரங்களை நடைமுறைக்கிடுகின்ற விதத்தில் நாணயச் சபையானது, தகவல் பாதுகாப்பு முகாமைத்துவத்திற்காக அடிப்படைப் பாதுகாப்பு நியமங்களை நடைமுறைப்படுத்துவதற்கு உரிமம் பெற்ற வங்கிகளுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்புத் தொடர்பில் 2011 ஒத்தோபர் 05ஆம் நாளிடப்பட்ட 2011ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளுடன் இணைக்கப்பட்டிருந்த வழிகாட்டல்களுக்குப் பின்வரும் திருத்தங்களை வெளியிட்டது.

1. உரிமம் பெற்ற வங்கிகளுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்புத் தொடர்பில் 2011 ஒத்தோபர் 05ஆம் நாளிடப்பட்ட 2011ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளுடன் இணைக்கப்பட்டிருந்த வழிகாட்டல்களின் பகுதி 'டி' இன் 2.8ஆம் பந்தியை உடனடுத்து பின்வரும் பந்தியை இடுதல் வேண்டும்.

"2.9 **தகவல் பாதுகாப்பு முகாமைத்துவம் -**

(அ) 2015 யூலை 01ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில், அனைத்து வங்கிகளும் இங்குள்ள இணைப்பு 4இன்படி தகவல் பாதுகாப்பு முகாமைத்துவத்திற்கான அடிப்படை பாதுகாப்பு நியமத்தினை நடைமுறைக்கிடுதல் வேண்டும்.

(ஆ) அடிப்படை பாதுகாப்பு நியமங்கள், வங்கிகளுக்கான ஏற்றுக்கொள்ளத்தக்க குறைந்தபட்ச பாதுகாப்பு நியமங்களை உருவாக்குவதுடன் அத்தகைய வங்கிகளின் தகவல் பாதுகாப்புக் கொள்கைகளையும் தரப்படுத்துகிறது. எனினும், ஒவ்வொரு வங்கியும் அளவு, வியாபார நடவடிக்கைகளின் தன்மை மற்றும் தொடர்பான வங்கியின் சிக்கலான தன்மையைப் பொறுத்து அத்தகைய நியமங்கள் பின்பற்றப்படுவதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

(இ) பணிப்பாளர் சபை தகவல் பாதுகாப்பு முகாமைத்துவத்திற்கான அடிப்படை பாதுகாப்பு நியமத்துடன் இணங்கிச் செல்வதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

**இணைப்பு 4**

**தகவல் பாதுகாப்பு முகாமைத்துவத்திற்கான அடிப்படை பாதுகாப்பு நியமம்**
**உத்தரவாத மட்டம் 1**
**வாசகம் 1.0**

## பகுதி I : அறிமுகம்

### முன்னுரை

வருமானத்தினையும் வாடிக்கையாளர் தளத்தினையும் அதிகரிக்கின்றமை போன்ற வியாபாரக் குறிக்கோள்களினால் தூண்டப்பட்ட பல அமைப்புக்கள் அவற்றின் வாடிக்கையாளர் தளத்திற்கு வசதி நிறைந்த கணனி வழி அதேநேர பணிகளை வழங்குவதற்காக தகவல் தொடர்பூட்டல் தொழில்நுட்ப இயலுமைப்படுத்தல் தீர்வுகளை வழங்க ஆர்வம் காட்டுகின்றன. இப்பணிகள் பொதுவான தொடர்பூட்டல்கள் மற்றும் தகவல் செயன்முறை உட்கட்டமைப்புக்களூடாக ஒன்றோடொன்று இணைப்புக்களை மேற்கொள்வதற்கு அநேக வங்கிகளையும் ஏனைய அமைப்புக்களையும் தூண்டுகின்றன.

பாதுகாப்பு நிலைமையின் நியதிகளில், இலங்கையிலுள்ள அமைப்புக்கள் பரந்தளவு இயலாற்றலைப் பிரதிபலிக்கின்றன. எனினும், சங்கிலி முறையிலான பலம் அதன் பலயீனமான இணைப்புடன் சேர்ந்திருப்பதைப் போன்று நிதியியல் பணிகள் துறையிலுள்ள தகவல் பாதுகாப்பின் பலம் பலயீனமான உறுப்பினர்களுடன் சேர்ந்ததாக காணப்படுகின்றது. இது மற்றைய அனைத்து உறுப்பினர்களுக்கும் அச்சுறுத்தலை தோற்றுவிப்பதுடன் நிதியியல் மோசடிகளுக்கு இட்டுச் செல்லக்கூடிய சாத்தியத்தினையும் கொண்டிருக்கிறது.

இலங்கை மத்திய வங்கி, இலங்கை கணனி அவசரகால ஆயத்தக்குழு இணைப்புநிலையம் மற்றும் இலங்கை வங்கியாளர் சங்கம் என்பன தகவல் பாதுகாப்பிற்கான பன்னாட்டு நியமங்களின் உலகளாவிய ரீதியில் ஒழுங்குசெய்யப்பட்ட நியமப்படுத்தலுக்கான பன்னாட்டு அமைப்பு (நி.ப.அ) 27000 தொடர்களினை அடிப்படையாகக் கொண்டு தகவல் பாதுகாப்பு முகாமைத்துவத்திற்கான அடிப்படைப் பாதுகாப்பு நியமமொன்றினை உருவாக்குவதனை நோக்கி செயற்பட்டன. நியமத்தின் செயன்முறைப்படுத்தல் மத்திய வங்கியினால் மேற்பார்வை செய்யப்படவுள்ளதுடன் அதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்படவுள்ள நியமங்களுக்கான திருத்தங்களை வங்கி கணனி பாதுகாப்பு நிகழ்வுகளுக்கு பதிலிறுத்தும் குழு இலங்கை மத்திய வங்கிக்கு பரிசீலனைக்காக முன்மொழியும்.

1. அடிப்படைகள்

1.1 தகவல் பாதுகாப்பு முகாமைத்துவம்

தகவல் சொத்துக்களில் காணப்படும் பாதிக்கப்படக்கூடிய தன்மைகளின் காரணமாகத் தோன்றுகின்ற அச்சுறுத்தலுக்கான வெளிப்படுத்துகை இடர்நேர்வுகளை முகாமைப்படுத்துவதற்காகப் பொருத்தமானதும் முறையியல் சார்ந்ததுமான பாதுகாப்புக் கட்டுப்பாடுகளை பிரயோகிப்பதன் மூலம் தகவல்கள் தொடர்பான இரகசியத்தன்மை, ஒருங்கிணைப்பு மற்றும் தகவல்களின் கிடைப்பனவு என்பன பேணிப் பாதுகாக்கப்படுகின்றன.

1.2 தகவல் பாதுகாப்பு இடர்நேர்வு முகாமைத்துவம்

தகவல் பாதுகாப்பு இடர்நேர்வு முகாமைத்துவம் என்பது அச்சுறுத்தலுக்குள்ளாகி வருகின்ற தகவல் சொத்தொன்றின் தாக்கம் மற்றும்

நேரிடக்கூடிய சாத்தியம் என்பனவற்றைக் கண்டறிவதற்கான ஒரு முறையியல் சார்ந்த அணுகுமுறையாகும்.

தொடர்பான நிறுவனத்தின் தகவல் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமையின் செயற்பரப்பிற்குள் வருகின்ற தகவல் சொத்துக்களுக்கான இடர்நேர்வு தரமிடலுக்கான ஒப்படைக்கு இந்நியமங்கள் நி.ப.அ 27005 இற்கான பிரயோகங்களை அனுமானிக்கிறது.

1.3 பாதுகாப்பு பரிசீலனைகள்

அனைத்து நிறுவனங்களும் தொடர்பான ஒழுங்குமுறைப்படுத்துநர்களினால் நிர்ணயிக்கப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள் மற்றும் உலகளாவிய ரீதியில் பின்பற்றப்படும் மிகச் சிறந்த பன்னாட்டு நடைமுறைகள் உட்பட இலங்கையிலுள்ள சட்டங்களை உறுதிப்படுத்துகின்ற விதத்தில் அவற்றின் பாதுகாப்புத் தேவைப்பாடுகளைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன. மேலும், பாதுகாப்புத் தேவைப்பாடுகள் பணிப்பாளர் சபையினாலும் நிறுவனத்தின் மூத்த முகாமைத்துவத்தினாலும் நிர்ணயிக்கப்பட்ட வியாபாரக் குறிக்கோள்களினாலும் ஆளப்படுகின்றன. இந்நியமங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளை பரிசீலனையில் கொண்டு அத்தகைய தேவைப்பாடுகளுடன் உயர்ந்தளவில் இணங்கிச் செல்லும் நோக்குடன் அடிப்படைப் பாதுகாப்பு நியமம் விருத்தி செய்யப்பட்டிருக்கிறது. இத்தேவைப்பாடுகளுக்கான குறிப்பிடத்தக்க மாற்றங்கள் அடிப்படைப் பாதுகாப்பு நியமங்களின் திருத்தப்பட்ட வாசகங்களில் பிரதிபலிக்கப்படும்.

1.3.1 சட்ட தேவைப்பாடுகள்

அனைத்து நிறுவனங்களும் 2007ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க கணனி குற்றச் சட்டம், 2006ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க இலத்திரனியல் கொடுக்கல்வாங்கல் சட்டம், 2006ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க கொடுப்பனவு உபாயங்கள் மோசடிச் சட்டம் மற்றும் 2003ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க புலமைச் சொத்துச் சட்டம் என்பன உட்பட இது தொடர்பாக பிரயோகிக்கத்தக்க சட்டங்களுக்கு இணங்கியொழுக கடப்பாடுடையனவாகும். இவற்றில் எவற்றையேனும் மீறுவது தண்டனைக்குரியதாகும்.

1.3.2 ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள்

இலங்கை மத்திய வங்கியினாலும் ஏனைய ஒழுங்குமுறைப்படுத்தல் சபைகளினாலும் உருவாக்கப்பட்ட உள்நாட்டு தொழில்துறை ஒழுங்குவிதிகளுக்கும் பணிப்புரைகளுக்கும் இணங்கியொழுகுதல் வேண்டும்.

1.3.3 பன்னாட்டு நியமங்கள்

நிறுவனங்கள் தகுதிவாய்ந்த கணனி வழி உடனடி/ இ-வங்கித்தொழில் பணிகளை வழங்குவோராக அங்கீகாரமளிக்கப்படுவதற்கு அவை கொடுப்பனவு அட்டை தொழில்துறை தரவு பாதுகாப்பு நியமம் (கொ.அ.தொ.த.ப.நி), குறித்துரைக்கப்பட்ட பாதுகாப்பு நியமங்களாக பன்னாட்டு ரீதியில் அங்கீகரிக்கப்பட்டவற்றிற்கு இணங்கியொழுகுவது அவசியமாகும்.

1.3.4 தகவல் பாதுகாப்பு குறிக்கோள்கள்

தகவல் பாதுகாப்புக் கொள்கைகள் தகவல் பாதுகாப்புக் கொள்கைகளின் கட்டமைப்பு நியதித் தேவைப்பாடுகள், மற்றைய தேவைப்பாடுகள் மற்றும் வியாபாரச் செயன்முறைகள் என்பனவற்றிற்குட்பட்டு, முக்கியமான வியாபாரக் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு ஆதாரவளிக்கின்றது என்பதனை அடையாளம் காணுதல் வேண்டும்.

**2. நியதிகள் மற்றும் வரைவிலக்கணங்கள்**

பின்வரும் நியதிகளும் வரைவிலக்கணங்களும் இவ்வாவணம் முழுவதற்கும் ஏற்புடைத்தனவாகும்.

2.1 சொத்துக்கள்

நிறுவனத்திற்கான பெறுமதியைக் கொண்டிருக்கும் எவையும்.
[நி.ப.அ/ பன்னாட்டு இலத்திரனியல் ஆணைக்குழு (ப.இ.ஆ) 13335-1:2004]

2.2 அடிப்படைப் பாதுகாப்பு நியமங்கள்

தகவல் பாதுகாப்பு முகாமைத்துவம் மீதான அடிப்படைப் பாதுகாப்பு நியமங்கள்

2.3 கட்டுப்பாடு

கொள்கைகள், நடவடிக்கை முறைகள், வழிகாட்டல்கள், நடைமுறைகள் அல்லது நிறுவன ரீதியான கட்டமைப்புக்கள் என்பனவற்றினூடாக இடர்நேர்வுகளை முகாமைப்படுத்துவது எனக் கருதப்படுகிறது. இவை நிருவாக ரீதியான, தொழில்நுட்ப, முகாமைத்துவ அல்லது சட்ட ரீதியான தன்மையொன்றைக் கொண்டனவாகும்.

2.4 மோசடி

நிதியியல் அல்லது தனிப்பட்ட நன்மைகளைப் பெறும் நோக்குடனான பிழையான அல்லது குற்றவியல் ரீதியாக ஏமாற்றல்.

2.5 வழிகாட்டல்

எவற்றை மேற்கொள்ளலாம் மற்றும் கொள்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள்களை எவ்வாறு எய்தலாம் என்பனவற்றைத் தெளிவுபடுத்தும் விபரணம்.
[நி.ப.அ/ ப.இ.ஆ 13335-1:2004]

2.6 ப.இ. ஆணைக்குழு

பன்னாட்டு இலத்திரனியல் தொழில்நுட்பவியல் ஆணைக்குழு

2.7 நி.ப. அமைப்பு

நியமப்படுத்தலுக்கான பன்னாட்டு அமைப்பு

2.8 தகவல் முறைமை

ஏதேனும் தகவல் செயன்முறைப்படுத்தல் முறைமை, பணிகள் அல்லது உட்கட்டமைப்பு அல்லது அவற்றை அமைப்பதற்கான பௌதீக அமைவிடங்கள்

2.9 தகவல் பாதுகாப்பு

இரகசியத்தன்மை, ஒருங்கிணைந்ததன்மை மற்றும் தகவல்களின் கிடைப்பனவினைப் பேணுதல், உறுதிப்படுத்தல், பொறுப்புக்கூறல், மறுப்புக்கூறாமை மற்றும் நம்பகத்தன்மை போன்ற மற்றைய காரணிகளையும் உள்ளடக்க முடியும்.

2.10 தகவல் பாதுகாப்பு நிகழ்வு

முறைமை, பணிகள் அல்லது வலையமைப்பு நிலையொன்றின் அடையாளம் காணப்பட்ட நிகழ்வொன்று தகவல் பாதுகாப்புக் கொள்கை மீறப்படுவதற்கான அல்லது பாதுகாப்பு முறிவடைவதற்கான அல்லது பாதுகாப்புடன் தொடர்புபடக் கூடிய முன்னைய அறியப்படாத நிலமையொன்று ஏற்படுவதற்கான சாத்தியத் தன்மையினை எடுத்துக்காட்டுகின்றது.
[நி.ப.அ/ ப.இ.ஆ தொழில்நுட்ப அறிக்கை 18044:2004]

2.11 தகவல் பாதுகாப்புச் சம்பவம்

தனியாக அல்லது தொடர்ச்சியான வேண்டத்தகாத அல்லது எதிர்பார்க்கப்படாத தகவல் பாதுகாப்பு நிகழ்வுகள் விட்டுக்கொடுக்கின்ற வியாபாரத் தொழிற்பாடுகளின் குறிப்பிடத்தக்க சாத்தியங்களைக் கொண்டிருப்பதுடன் தகவல் பாதுகாப்பினையும் அச்சுறுத்துகின்றது.
[நி.ப.அ/ ப.இ.ஆ தொழில்நுட்ப அறிக்கை 18044:2004]

2.12 வெறுப்பூட்டுகின்ற குறியீடுகள்

தகவல் முறைமைகளுக்கு விரும்பத்தகாத தாக்கங்களை ஏற்படுத்துகின்ற நிகழ்ச்சிகள். வெறுப்பூட்டத்தக்க குறியீடுகளுக்கான உதாரணங்கள் கணனி வைரஸ், வலையமைப்பு புழுக்கள், ரஜன் குதிரை எனப்படும் கணனி வைரஸ், தருக்க குண்டு என அழைக்கப்படும் ஆவணங்களை அழித்துவிடுமொன்று, உளவு மென்பொருள் போன்றவற்றை உள்ளடக்குகிறது.

2.13 நிறுவனங்கள்

வங்கி கணனிப் பாதுகாப்பு நிகழ்வு பதிலிறுப்புக் குழுவின் உறுப்பினர்களாகவுள்ள நிதியியல் நிறுவனங்கள்

2.14 வெளியிலிருந்து பணிகளைப் பெற்றுக்கொள்ளுதல்

உரிமம் பெற்ற வங்கியொன்றிற்கும் “பணிகள் வழங்குகின்றவர்” என்ற மூன்றாம் தரப்பினருக்குமிடையிலான உடன்படிக்கையொன்று. இதன் மூலம் பணி வழங்குபவர் உரிமம் பெற்ற வங்கியின் தொழிற்பாடுகளுடன் இணைந்த நடவடிக்கை, தொழிற்பாடு அல்லது செயன்முறையொன்றை மேற்கொள்கிறார்.
[2012ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரை]

2.15 கொள்கை

சபை/ மூத்த முகாமைத்துவத்தினால் முறைப்படி வெளிப்படுத்தப்பட்ட பொதுவான எண்ணங்கள் மற்றும் பணிப்புக்கள்

2.16 கொ.அ. தொழில் - தரவுப் பாதுகாப்பு நியமம்

கொடுப்பனவு அட்டைத் தொழில் துறை - தரவுப் பாதுகாப்பு நியமம்.

2.17 இடர்நேர்வு

சாத்தியமானதொரு நிகழ்வு மற்றும் அதன் தாக்கத்தின் இணைந்த தன்மை.
[ப.த.அ/ ப.இ.ஆ வழிகாட்டல் 73:2002]

2.18 இடர்நேர்வுப் பகுப்பாய்வு

இடர்நேர்வுகளின் மூலங்களை அடையாளம் காணவும் இடர்நேர்வின் மட்டத்தினை மதிப்பிடுவதற்கும் தகவல்களை முறையியல் ரீதியாக பயன்படுத்தல்.
[ப.த.அ/ ப.இ.ஆ வழிகாட்டல் 73:2002]

2.19 இடர்நேர்வு கணிப்பீடு

இடர்நேர்வுப் பகுப்பாய்வு மற்றும் இடர்நேர்வு மதிப்பீட்டின் பொதுவான செயன்முறை.
[ப.த.அ/ ப.இ.ஆ வழிகாட்டல் 73:2002]

2.20 இடர்நேர்வு மதிப்பீடு

இடர்நேர்வின் முக்கியத்துவத்தினைத் தீர்மானிப்பதற்காக தரப்பட்ட இடர்நேர்வுப் பிரமாணத்திற்கெதிராக மதிப்பிடப்பட்ட இடர்நேர்வினை ஒப்பிடுகின்ற செயன்முறை.
[ப.த.அ/ ப.இ.ஆ வழிகாட்டல் 73:2002]

2.21 இடர்நேர்வு முகாமைத்துவம்

இடர்நேர்வு தொடர்பாக நிறுவனமொன்றினை நெறிப்படுத்திக் கட்டுப்படுத்துவதற்காக இணைக்கப்பட்ட நடவடிக்கைகள்.
[ப.த.அ/ ப.இ.ஆ வழிகாட்டல் 73:2002] 2.22 இடர்நேர்வினைக் கையாளுதல்

இடர்நேர்வினை திருத்தியமைப்பதற்கான வழிமுறைகளை தெரிவுசெய்து நடைமுறைப்படுத்தும் செயன்முறை.
[ப.த.அ/ ப.இ.ஆ வழிகாட்டல் 73:2002]

2.23 பணி வழங்குநர்

இலங்கையிலோ அல்லது வேறெங்கேனுமோ அமைந்துள்ள உரிமம் பெற்ற வர்த்த வங்கி அல்லது உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கி அல்லது தொடர்புபடாத நிறுவனமொன்றின் தலைமை அலுவலகம், தாய் நிறுவனம், இன்னொரு கிளை அல்லது தொடர்புபட்ட கம்பனியினை உள்ளடக்குகிறது.
[2012ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரை]

2.24 மூன்றாந்தரப்பு

பிரச்சனைக்குரிய விடயமொன்றைக் கருத்திற் கொள்கையில், தொடர்புபட்ட தரப்பினரிலிருந்து சுயாதீனமானதாக விளங்குகின்றது என அங்கீகரிக்கப்பட்ட ஆளொருவர் அல்லது கம்பனியொன்று.
[ப.த.அ/ ப.இ.ஆ வழிகாட்டல் 2:1996]

2.25 அச்சுறுத்தல்

வேண்டப்படாத நிகழ்வொன்றின் சாத்தியமான காரணம். இது முறைமையொன்றிற்கு அல்லது நிறுவனமொன்றிற்கு தீங்கினை, சேதத்தினை விளைவிக்கவல்லது.
[ப.த.அ/ ப.இ.ஆ 13335-1:2004]

2.26 பாதிக்கப்படக்கூடிய தன்மை

ஒன்று அல்லது பல அச்சுறுத்தல்களினால் சுரண்டப்படக்கூடிய சொத்தொன்றின் அல்லது சொத்துத் தொகுதியொன்றின் பலயீனம். [ப.த.அ/ ப.இ.ஆ 13335-1:2004]

**3. அடிப்படைப் பாதுகாப்பு நியமத்தின் பிரயோகத்தன்மை**

இப்பிரிவானது இவ்வாவணத்தின் பிரயோகத்தன்மை மற்றும் அதனைப் பேணிக்காக்கும் தன்மை பற்றி வரைவிலக்கணம் செய்கிறது.

3.1 செயற்பரப்பு

இந்நியமமானது வங்கி கணனிப் பாதுகாப்பு நிகழ்வு பதிலிறுப்புக் குழுமத்தின் உறுப்பினர்களாகவுள்ள நிறுவனங்களுக்குள்ளே பயன்படுத்தப்படுகின்ற அனைத்துத் தகவல் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமைக்கும் அதேபோன்று உள்ளக மற்றும் மூன்றாந்தரப்பு இரண்டினதும் தகவல் மற்றும் தகவல் முறைமைகள் போன்ற தனிப்பட்ட கையாளல்களுக்கும் ஏற்புடைத்தாகும்.

3.2 அமைப்பு

நியமத்தின் பகுதி I, இவ்வாவணத்தின் உடமை மற்றும் முகாமைத்துவம், இதன் கட்டமைப்பு, பிரயோகத்தன்மையின் செயற்பரப்பு மற்றும் விதந்துரைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவ முறையியல்களை வலியுறுத்துகிறது.

நியமத்தின் பகுதி II, இந்நியமத்தின் தற்போதைய வாசகத்திற்குள் பரிசீலிக்கப்படுவதற்கான பதினான்கு (14) முக்கிய பாதுகாப்பு புலம்பெயர் பிரிவுகளை அறிமுகப்படுத்துகிறது.

3.3 பேணல்

இவ்வாவணமானது அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து ஆறு (6) மாதங்களுக்குள் மீளாய்வு செய்யப்பட வேண்டியதுடன், திருத்தங்கள் ஏதும் மேற்கொள்ளப்பட்டிருப்பின் அதன் பெறுபேறுகள் பதிப்பு 2 என வெளியிடப்படுதல் வேண்டும் இல்லையெனில் மீளாய்வு செய்யப்பட்ட திகதியுடன் திருத்த நிலைமை மாற்றமின்றியிருக்கும். வங்கி கணனி பாதுகாப்பு நிகழ்வு பதிலிறுப்புக் குழு, இலங்கை மத்திய வங்கியின் ஆலோசனையுடன் இப்பணியினை மேற்கொள்வதற்குப் பொறுப்பாகும். ஒவ்வொரு பதிப்பிற்கும் பின்னர் அவற்றைப் பின்பற்றுவது தகவல் பாதுகாப்பு முகாமைத்துவத்திற்கு மேம்பாட்டினை வழங்கும்.

3.4 நடைமுறைப்படுத்தல்

பதிப்பு 1 இற்காக எதிர்பார்க்கப்படும் நடைமுறைப்படுத்தல் காலமானது நியமம் அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து 12 மாதங்களாக இருக்கும்.

**4. இடர்நேர்வு முகாமைத்துவம்**

எந்தவொரு செலவுச் சிக்கனமான தகவல் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமையினதும் அடிப்படைக்கூறாக இடர்நேர்வு முகாமைத்துவம் விளங்குகின்றது.

4.1 தகவல் பாதுகாப்பு முகாமைத்துவத்திற்கான அடிப்படையாக இடர்நேர்வு

பலயீனமான வடிவமைப்பு, உற்பத்தி, நடைமுறைப்படுத்தல், கையாளல், முகாமைத்துவம் மற்றும் மற்றைய நடவடிக்கைகளுக்கு அதரவளித்தல் என்பனவற்றின் காரணமாக சொத்துக்கள் பாதிக்கப்படும் தன்மையைக் கொண்டிருக்கின்றன. இப்பாதிக்கப்படக்கூடிய தன்மைகள் அச்சுறுத்தல்கள் அதிகரிக்கப்படக்கூடிய தன்மையை ஏற்படுத்துகின்றன. அச்சுறுத்தல் ஏற்படக்கூடிய சாத்தியங்களின் இணைந்த தன்மையும் அதன் வெளிப்படுத்துகையின் தாக்கமும் இடர்நேர்விற்கு அழைப்புவிடுப்பதுடன் இது தொடர்பான அவசரத்தன்மைகளின் முக்கியமான அளவீடாகவும் விளங்குவதுடன் இடர்நேர்வுகளைத் தணிப்பதற்கான கட்டுப்பாட்டு வழிமுறைகளை விதிப்பதும் அவசியமாகும்.

4.2 இடர்நேர்வுகளைக் கையாளல் மற்றும் பாதுகாப்புக் கட்டுப்பாடுகள்

அடிப்படைப் பாதுகாப்பு நியமங்களையும் பின்னர் செய்யப்படுகின்ற திருத்தங்களையும் பின்பற்றுவது பாதுகாப்புக் கட்டுப்பாடுகளை அறிமுகப்படுத்தும் என்பதுடன் இது அடையாளம் காணப்பட்ட இடர்நேர்வுகளையும் தணிக்கும்.

4.3 இடர்நேர்வு முகாமைத்துவத்திற்கான வழிகாட்டல்கள்

இடர்நேர்வு முகாமைத்துவம் ப.த.அ 27005:2011 இற்கிணங்க மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

4.4 தொடர்பான ஆவணங்களும் நடவடிக்கைகளும்

தொடர்பான நிறுவனங்களினால் வழிகாட்டல்கள், கொள்கைகள், நடைமுறைக் கைநூல், திட்டங்கள் மற்றும் வரைபு அளவுச்சட்டம் என்பன உருவாக்கப்படுவது அடிப்படைப் பாதுகாப்பு நியமத்தினை நடைமுறைப்படுத்த உதவும்.

## பகுதி II : பாதுகாப்பு வரம்பு

**1. தகவல் பாதுகாப்பு முகாமைத்துவ அமைப்பு**

**குறிக்கோள்:** பாதுகாப்பின் வகிபாகத்தினை வரைவிலக்கணம் செய்வதன் மூலம் தகவல் பாதுகாப்பினை முகாமைப்படுத்துவதற்காக அமைப்பியல் வாய்ந்த அணுகுமுறையொன்றினை அறிமுகப்படுத்துவதும் பொறுப்புக்களை ஒப்படைப்பதும் அத்தியாவசிய மூலவளங்களைக் கிடைக்கச் செய்வதும் நிறுவனத்தின் தகவல் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமையினை உயர்த்தும் விதத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்ள அதிகாரமளிப்பதுமாகும்.

**செயற்பரப்பு:** நிறுவனத்தின் தகவல் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமைக்குள் தகவல் மற்றும் தகவல் சொத்துக்களைக் கையாளுகின்ற அனைத்து ஆட்களுக்கும் ஏற்புடைத்தாகும்.

1.1 தகவல் பாதுகாப்பிற்கான முகாமைத்துவக்குழு

1.2 முகாமைத்துவம் அதன் வியாபார உபாயங்கள் மற்றும் குறிக்கோள்களுக்கிணையாக நிறுவனம் முழுவதிலும் தெளிவான தகவல் பாதுகாப்புக் கொள்கை பணிப்புரைகளை உருவாக்குதல் வேண்டும். அத்தகைய கொள்கைகள் விடயத்தினைப் பொறுத்து பணிப்பாளர் சபையினால் அல்லது மூத்த முகாமைத்துவத்தினால் அல்லது தலைமை/ பிராந்திய அலுவலகத்தினால் ஒப்புதலளிக்கப்பட்டிருத்தல் வேண்டும். இம்முகாமைத்துவ நடவடிக்கைகள் தோற்றம் பெற்றுவரும் தகவல் தொடர்பூட்டல் தொழில்நுட்பம், பாதுகாப்பு, சட்டம், ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் கணக்காய்வுச் சூழல் ஆகியவற்றில் ஈடுபாடு கொண்டிருக்கும் தன்மையைப் பொறுத்து மேற்கொள்ளப்படும் கிரமமான மீளாய்வு மற்றும் திருத்தங்களை உள்ளடக்கியிருக்கிறது. மேற்குறிப்பிட்டவற்றினை அடைவதற்கு முகாமைத்துவம் போதுமான மூலவளங்களை வழங்குவதுடன் பாதுகாப்பு வகிபாகத்தினையும் பொறுப்புக்களையும் ஒப்படைத்தல் வேண்டும்.

1.3 தகவல் பாதுகாப்பு இடர்நேர்வு மதிப்பீடு

இடர்நேர்வு மதிப்பீடானது நிறுவனம் தொடர்பான இடர்நேர்வு ஏற்றுக்கொள்ளுகை மற்றும் குறிக்கோள்களுக்கான பிரமாணங்களுக்கெதிராக இடர்நேர்வுகளை அடையாளம் கண்டு, அவற்றினைக் கணிப்பீடு செய்து முக்கியத்துவத்திற்கேற்ப வரிசைப்படுத்த வேண்டும். இடர்நேர்வு மதிப்பீட்டின் பெறுபேறுகள் வழிகாட்டப்படுதல் வேண்டுமென்பதுடன் தகவல் பாதுகாப்பு இடர்நேர்வினை முகாமைப்படுத்துவதற்கும் இவ்விடநேர்வுகளுக்கெதிரான பாதுகாப்பின் பொருட்டு தெரிந்தெடுக்கப்பட்ட கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்குமான பொருத்தமான முகாமைத்துவ நடவடிக்கைகளையும் முன்னுரிமைகளையும் தீர்மானித்தல் வேண்டும். தகவல் பாதுகாப்பு இடர்நேர்வு மதிப்பீடுகள் செயற்பரப்பினை தெளிவான முறையில் வரைவிலக்கணம் செய்ய வேண்டியதுடன் பாதுகாப்புத் தேவைப்பாடுகளில் ஏற்படும் மாற்றங்களை வலியுறுத்தும் விதத்தில் காலத்திற்குக் காலம் செயற்படுதலும் வேண்டும்.

1.4 தகவல் பாதுகாப்பு இடர்நேர்வுகளைக் கையாளுதல்

இடர்நேர்வினைக் கையாளும் தீர்மானம் இடர்நேர்வு மதிப்பீட்டினைத் தொடர்ந்து மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 தகவல் பாதுகாப்பினை இணைத்தல்

தகவல் பாதுகாப்பானது நிறுவனத்தின் பல்வேறுபட்ட பகுதிகளிலுமிருந்தும் அவர்களுக்கென ஒப்படைக்கப்பட்ட தொடர்பான வகிபாகம் மற்றும் பொறுப்புக்களிலும் தேவைப்படுத்தப்பட்ட தொழில்நுட்பத் தேர்ச்சிகளைக் கொண்ட அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளினால் இணைக்கப்படுதல் வேண்டும். இத்தொழிற்பாடானது நிறுவனத்தின் தகவல் பாதுகாப்புக் கொள்கைகளுடன் இணங்கியொழுகும் விதத்தில் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

1.6 தகவல் பாதுகாப்பு பொறுப்புக்களின் ஒதுக்கு

தகவல் பாதுகாப்பு பொறுப்புக்களின் ஒதுக்கானது, தகவல் பாதுகாப்புக் கொள்கைக்கிணங்கத் தெளிவாக வரைவிலக்கணம் செய்யப்படல் வேண்டும். இப்பொறுப்புக்கள் தகவல் பாதுகாப்புச் சொத்துக்களை அடையாளம் காண்பதற்கான வழிவகைகளையும் பொறுப்புக்களின் கையளிப்பையும் தேவையான பாதுகாப்பு மட்டத்தினையும் தேவையான ஆவணப்படுத்தல்களையும் வலியுறுத்துதல் வேண்டும்.

இரகசியமான அல்லது வெளிப்படுத்தப்படாத உடன்படிக்கைகள் தகவல் பாதுகாப்பிற்கான நிறுவன ரீதியான தேவையையும் சட்ட ரீதியாக நடைமுறைப்படுத்தக்கூடிய நியதிகளைப் பயன்படுத்தி அங்கீகாரமின்றி அணுகின்ற தன்மையிலிருந்தான பாதுகாப்பையும் பிரதிபலித்தல் வேண்டும். அத்தகைய உடன்படிக்கைகள் தொழில் வாய்ப்புக்கள் மற்றும் வெளியிலிருந்து பணிகளைப் பெற்றுக்கொள்ளும் ஒழுங்குகளில் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

1.7 அதிகாரிகளுடனான தொடர்பூட்டல்

நிறுவனங்கள் தகவல் பாதுகாப்புச் சம்பவங்கள் மற்றும் அதனுடன் தொடர்பான நிகழ்வுகளை அறிக்கையிடுகையில் யார், எவ்வாறு வெளியக அதிகாரிகளைத் தொடர்பு கொள்வது என்பதைக் குறித்துரைக்கும் நடைமுறைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

1.8 சிறப்பு ஈடுபாடு கொண்ட குழுவினருடனான தொடர்பூட்டல்

சிறப்பு ஈடுபாடு கொண்ட குழுக்கள், தகவல் பாதுகாப்பு அரங்கங்கள் மற்றும் தொழில்சார் சபைகளுடன் பொருத்தமான தொடர்புகளைப் பேணுதல் வேண்டும்.

1.9 தகவல் பாதுகாப்பின் சுயாதீனமான மீளாய்வு

நிறுவனத்தின் தகவல் தொடர்பூட்டல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்படும் வேளையில் தகவல் பாதுகாப்புக் கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறிக்கோள்கள் தொடர்பான விடயங்கள் திட்டமிடப்பட்ட இடைவெளியில் மீளாய்வு செய்யப்பட வேண்டும்.

2. **தகவல் பாதுகாப்புக் கொள்கை**

**குறிக்கோள்:** வியாபார, சட்ட மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கிணங்க தகவல் பாதுகாப்பிற்கு முகாமைத்துவ வழிகாட்டலையும் ஆதரவினையும் வழங்குதல். தகவல் பாதுகாப்புக் கொள்கை ஆவணம்.

தகவல் பாதுகாப்புக் கொள்கை ஆவணம் முகாமைத்துவத்தின் கடப்பாடுகளைக் குறிப்பிடுதல் வேண்டுமென்பதுடன் பொதுவான குறிக்கோள்கள், செயற்பரப்பு மற்றும் பாதுகாப்பின் முக்கியத்துவம் என்பனவற்றை வரைவிலக்கணம் செய்கின்ற தகவல் பாதுகாப்பின் முகாமைத்துவத்திற்கான அணுகுமுறை மற்றும் சட்ட மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்கான கடப்பாடுகள் என்பன பற்றி குறிப்பிட வேண்டும்.

2.2 தகவல் பாதுகாப்பு கொள்கை ஆவணத்தின் மீளாய்வு

தகவல் பாதுகாப்பு கொள்கை ஆவணம் திட்டமிடப்பட்ட கிரமமான இடைவேளையிலும் நிறுவனத்தில் தகவல் தொடர்பூட்டல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் நிகழும் பொழுதும் மீளாய்வு செய்யப்பட வேண்டும். அனைத்து மீளாய்வுகளும் சரியான முறையில் ஆவணப்படுத்தப்பட்டு வைத்திருக்கப்பட வேண்டும்.

2.3 தகவல் பாதுகாப்புக் கொள்கை ஆவணத்தின் நிருவாகம் மற்றும் நடைமுறைப்படுத்தல்

நடைமுறைப்படுத்தல்களையும் முறையியல்களையும் அடையாளம் கண்டு நடைமுறைப்படுத்துவதற்கு பொறுப்பாக இருக்கக்கூடிய தகவல் பாதுகாப்பு அலுவலரொருவரை நியமிப்பதன் மூலம் கொள்கை நிருவாகம் சரியான பொருத்தமான பிரிவிடம் அல்லது நிறுவனத்தின் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.

3. **மூன்றாந்தரப்பினர்கள்**

**குறிக்கோள்:** மூன்றாந்தரப்பினர்களால் அடையப்பட்டு, செய்முறைப்படுத்தப்பட்டு தொடர்பூட்டப்பட்ட அல்லது முகாமைப்படுத்தப்பட்ட நிறுவனத்தின் தகவல், தகவல் செய்முறைப்படுத்தல் வசதி மற்றும் தகவல் சொத்துக்கள் என்பனவற்றைப் பேணுதல்.

3.1 மூன்றாந்தரப்பினருடன் தொடர்புபட்ட இடர்நேர்வினை அடையாளம் காணுதல்

நிறுவனத்தின் தகவல்கள், தகவல் முறைமைகள் மற்றும் மூன்றாந்தரப்பினர் ஈடுபாடு கொண்டுள்ள வியாபாரச் செயன்முறைகளிலிருந்தான சொத்துக்கள் என்பனவற்றிற்கான இடர்நேர்வுகள் அடையாளம் காணப்பட்டு அத்தகைய மூன்றாம் தரப்பினர் அவற்றை அணுகுவதற்கான அனுமதியை வழங்குவதற்கு முன்னர் பொருத்தமான கட்டுப்பாடுகள் நடைமுறைக்கிடப்பட வேண்டும்.

3.2 வாடிக்கையாளர்களுடனான கொடுக்கல்வாங்கல்களின் போது பாதுகாப்பினை வலியுறுத்துதல்

அடையாளம் காணப்பட்ட அனைத்துப் பாதுகாப்புத் தேவைப்பாடுகளும் நிறுவனத்தின் தகவல் மற்றும் தகவல் சொத்துக்களை

அணுகுவதற்கு அனுமதி வழங்கப்படுவதற்கு முன்னதாக நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

3.3 மூன்றாந்தரப்பு உடன்படிக்கையில் பாதுகாப்பை வலியுறுத்தல்

மூன்றாந்தரப்புடன் தொடர்பான உடன்படிக்கைகள் அனைத்துத் தகவல் பாதுகாப்புத் தேவைப்பாடுகளையும் உள்ளடக்கியிருக்க தொடர்பான மூன்றாந்தரப்பினருக்கும் நிறுவனத்திற்குமிடையே தவறாக விளங்கிக் கொள்ளல் ஏற்படாமலிருப்பதனையும் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

3.4 பணி வழங்கல்

மூன்றாந்தரப்பினரின் உத்தேசப் பணி வழங்கலானது தகவல் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட வழிமுறைகள், வழங்கப்படவிருக்கும் பணிகள், பணிகளின் எதிர்பார்க்கப்பட்ட மட்டம், செயலாற்றப் பிரமாணம் பிரச்சனைகளின் தீர்விற்கான அதிகரித்த நடைமுறைகள், மூன்றாந்தரப்பினர் மற்றும் மூன்றாந்தரப்பினரின் துணை ஒப்பந்தக்காரர்களின் தொடர்பான பொறுப்புக்கள் மற்றும் முடிவுறுத்துவதற்கான நிபந்தனைகள் என்பனவற்றை உள்ளடக்கிய பணிகள் மட்ட உடன்படிக்கையினைக் கொண்டிருக்க வேண்டும்.

3.5 மூன்றாந்தரப்புப் பணிகளை கண்காணித்து மீளாய்வு செய்தல்

பணிகள் மட்ட உடன்படிக்கைக்கிணங்க, மூன்றாந்தரப்பினரால் வழங்கப்படும் பணிகள் மிக நெருக்கமாக கண்காணிக்கப்பட வேண்டியதுடன் திட்டமிடப்பட்ட இடைவெளியில் பொருத்தமான உள்ளகப் பிரிவினால் அல்லது நிறுவனத்தின் திணைக்களத்தினால் மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும். மூன்றாந்தரப்பினர்கள் ஒப்பந்தங்கள் காலாவதியான பின்னரும் கூட அவர்கள் நிறுவனத்தின் தகவல் பாதுகாப்புத் தேவைப்பாடுகளைப் பின்பற்றுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

**4. தகவல் சொத்து முகாமைத்துவம்**

**குறிக்கோள்:** நிறுவனத்தின் தகவல் சொத்துக்களின் பாதுகாப்புத் தொடர்பில் பொருத்தமான மட்டத்தினை அடைவதும் அதனைப் பேணுவதும்

4.1 தகவல் சொத்துக்களின் பொருட்பட்டியல்

அனைத்துத் தகவல் சொத்துக்களும் தெளிவாக அடையாளம் காணப்பட்டு அத்தகைய அனைத்துத் தகவல் சொத்துக்களினதும் பொருட்பட்டியல் பதிவு செய்யப்பட்டு பேணப்பட வேண்டும். இச்சொத்துப்பட்டியலானது அனர்த்தத்திலிருந்து மீட்பதற்குத் தேவையான அனைத்துத் தகவல்களையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

4.2 தகவல் சொத்துக்களின் பகுப்பாய்வு

நிறுவனத்தின் தகவல் பகுப்பாய்வு வழிகாட்டல் தகவல்களைக் கையாளும் பொழுது தேவை, முன்னுரிமைகள் மற்றும் பாதுகாப்பின் எதிர்பார்க்கப்பட்ட மட்டம் என்பனவற்றை எடுத்துக்காட்டுவதற்காக தகவல்களைப் பகுப்பாய்வு செய்த சொத்துக்களின் உரிமையாளர்களுக்கு ஆதரவளிப்பதற்காக தகவல் பாதுகாப்புக் கொள்கை ஆவணத்தில் வெளியிடப்படுதல் வேண்டும். சுட்டுத் துண்டிடும் தகவல்களுக்காகப் பொருத்தமான நடைமுறைத் தொகுதியொன்று விருத்தி செய்யப்பட்டு நிறுவனத்தின் பகுப்பாய்வு வழிகாட்டலுக்கிணங்க நடைமுறைப்படுத்தல் வேண்டும் (திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டில் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 77ஆம் பிரிவினைப் பார்க்கவும்).

4.3 தகவல் சொத்துக்களின் ஏற்றுக்கொள்ளத்தக்க பயன்பாடு

தகவல் மற்றும் சொத்துக்களின் ஏற்றுக்கொள்ளத்தக்க பயன்பாட்டிற்கான விதிகள் அடையாளம் காணப்பட்டு, ஆவணப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டியதுடன் காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்யப்படவும் வேண்டும். ஏற்றுக்கொள்ளத்தக்க பயன்பாட்டிற்காக இவ்விதிகளை ஊழியர்கள், ஒப்பந்தக்காரர்கள் மற்றும் மூன்றாந்தரப்பினர் பின்பற்றுதல் வேண்டும்.

**5. மனித வளப் பாதுகாப்பு**

**குறிக்கோள்:** களவு, மோசடி மற்றும் வசதிகளை அங்கீகாரமின்றிப் பயன்படுத்தல் என்பனவற்றின் இடர்நேர்வைக் குறைப்பதற்காக ஊழியர்கள், ஒப்பந்தக்காரர்கள், பணி வழங்குவோர் மற்றும் மூன்றாந்தரப்பு பயன்படுத்துநர்கள் அவர்களது வகிபாகத்தினையும் பொறுப்புக்களையும் விளங்கிக் கொள்வதனை உறுதிப்படுத்துதல்.

5.1 வகிபாகத்தினையும் பொறுப்புக்களையும் வரைவிலக்கணம் செய்தல்

நிறுவனத்தின் தகவல் பாதுகாப்புக் கொள்கையானது ஒவ்வொரு பயன்படுத்துநரினதும் அல்லது பயன்படுத்துநர் குழுவினதும் வகிபாகத்தினையும் பொறுப்புக்களையும் தெளிவாக வரைவிலக்கணம் செய்தல் வேண்டும்.

5.2 பாதுகாப்பினை மிக நுணுக்கமாக ஆய்வுசெய்தல்

தொழில் வாய்ப்பிற்கு விண்ணப்பிப்பவர்களை குறிப்பாக, கூருணர்திறன் வாய்ந்த வேலைக்கு விண்ணப்பிக்கும் அனைத்து தேர்வு நாடிகள், ஒப்பந்தக்காரர்கள், பணி வழங்குவோர் மற்றும் மூன்றாந்தர பயன்படுத்துநர் ஆகியோரின் பின்னணியினை நுணுக்கமாக ஆய்வுசெய்தல்.

5.3 தொழிலின் நியதிகள் மற்றும் நிபந்தனைகள்

தொழில்நிலை அல்லது பணிகள் ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக அனைத்து ஊழியர்கள், ஒப்பந்தக்காரர்கள், பணி வழங்குவோர் மற்றும் மூன்றாந்தரப்பினர்கள் (பயன்படுத்துவோர்) ஆகியோர் தொழில்நிலை ஒப்பந்தத்தின் நியதிகளையும் நிபந்தனைகளையும் ஏற்றுக்கொண்டு கையொப்பமிடல் வேண்டும். அனைத்து ஒப்பந்த ரீதியான ஆவணங்களும் தகவல் பாதுகாப்புக் கொள்கை தொடர்பான தன்மைகளையும் ஏற்றுக்கொள்ளல்களையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

5.4 முகாமைத்துவப் பொறுப்புக்கள்

முகாமைத்துவமானது நிறுவனத்தின் நிறுவப்பட்ட கொள்கைகள் மற்றும் நடைமுறைகளுக்கிணங்க அனைத்துப் பயன்படுத்துநர்களும் பாதுகாப்பினைப் பிரயோகிக்குமாறு கேட்டுக் கொள்ளுதல் வேண்டும். தகவல் முறைமைகளை அணுகுவதற்கு அவர்கள் அனுமதிக்கப்படுவதற்கு முன்னர் அவர்களது வகிபாகம் மற்றும் பொறுப்புக்கள் பற்றி சுருக்கமாகப் பொருத்தமான முறையில் அவர்களுக்கு விளக்குதல் வேண்டும்.

5.5 தகவல் பாதுகாப்பு விழிப்புணர்வு, கல்வி மற்றும் பயிற்சி

இக்கொள்கைக்குச் செய்யப்படும் கிரமமான இற்றைப்படுத்தல்களும் தகவல் தொடர்பூட்டல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பிலான மாற்றங்களும் அனைத்துப் பயன்படுத்துநர்களுக்கும் தொடர்பூட்டப்படல் வேண்டும். தொடர்பான அலுவலர்களுக்கு அவர்களது கடமைகளை மேற்கொள்ளும் விதத்தில் பொருத்தமான தொழில்நுட்ப மற்றும் பயன்படுத்துநர் பயிற்சி கிரமமான அடிப்படையில் வழங்கப்படல் வேண்டும்.

5.6 பாதுகாப்பினை மீறல் மற்றும் தண்டம்

தகவல் பாதுகாப்பு சம்பவங்கள் அல்லது மீறல்கள் தொடர்பான விசாரணைகளுக்காக முறைசார்ந்த மற்றும் குறித்துரைக்கப்பட்ட ஒழுக்காற்று நடைமுறை/ நடைமுறைகள் இருத்தல் வேண்டும்.

5.7 முடிவுறுத்தல் தொடர்பான வழமையான நடைமுறைகள்

தொழில்நிலையினை முடிவுறுத்தும் செயற்பாடுகள் அல்லது பயன்படுத்துநரின் அணுகும் உரிமைகள் உட்பட தொழில்நிலை மாற்றம் போன்றவற்றிற்கான பொறுப்புக்கள் மிகத் தெளிவாக வரையறுக்கப்பட்டு ஒப்படைக்கப்படல் வேண்டும். தொழில்நிலை முடிவுறுத்தலின் பின்னரும் செல்லுபடியானதாகவிருக்கும் அத்தகைய பொறுப்புக்களும் கடமைகளும் தொடர்பான ஒப்பந்தங்களில் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

5.8 தகவல் சொத்துக்களை திரும்ப அளித்தல்

அனைத்துப் பயன்படுத்துநர்களும் அவர்களது தொழில்நிலை, ஒப்பந்தம் அல்லது உடன்படிக்கை முடிவுறுத்தப்படும் பொழுது அவர்கள் வசமிருந்த தர்க்க ரீதியான அணுகும் தகவல் உட்பட நிறுவனத்தின் தகவல் சொத்துக்களை திருப்புதல்/ பிரகடனம் செய்தல் வேண்டும்.

5.9 அணுகும் உரிமைகளை மாற்றுதல்

தொழில்நிலை அந்தஸ்தினை அல்லது மூன்றாந்தரப்பினர் ஒப்பந்தத்தை முடிவுறுத்துகையில் அல்லது மாற்றுகையில் தகவல்களை அணுகும் தன்மை, தகவல் முறைமைகள் மற்றும் தகவல் செயன்முறைப்படுத்தல் வசதிகள் என்பன உடனடியாக நீக்கப்பட அல்லது மாற்றப்பட வேண்டும்.

## 6. தொழிற்பாட்டுப் பாதுகாப்பு

**குறிக்கோள்:** நிறுவனத்தின் பணிமனை, தகவல் மற்றும் தொழிற்பாடுகளுக்கான அதிகாரமளிக்கப்படாத அணுகுதல்கள், சேதங்கள் மற்றும் தலையீடுகளிலிருந்து பாதுகாத்தல்.

6.1 தகவல் செயன்முறைப்படுத்தல் தலங்கள்

இயற்றை மற்றும் மனிதனாலான அனர்த்தங்களிலிருந்து பிரதேசங்கள், சாதனங்கள், தலம் மற்றும் தலத்திற்கு வெளியேயான அமைவிடங்கள் மற்றும் தகவல்களையும் தகவல் செயல்முறைகளையும் கொண்டிருக்கும் வலையமைப்பு கம்பி வடங்களைப் பாதுகாப்பதற்காகப் பொருத்தமான பாதுகாப்பு எல்லைகளை நல்ல நிலையில் நடைமுறைப்படுத்தப்பட்டு பேணப்பட வேண்டும்.

6.2 சாதனங்களைப் பேணுதல்

தொடர்ச்சியாக கிடைக்கச் செய்வதனையும் ஒருங்கிணைந்த தன்மையும் உறுதிப்படுத்துவதற்காக சாதனங்கள் சிறந்த தொழிற்படும் நிலையில் பேணப்படுதல் வேண்டும். இன்றியமையாத தொழிற்பாடுகளுக்காக பணியிலிடப்பட்டுள்ளவை வருடாந்தப் பேணல் மற்றும் வர்த்தகருடனான ஆதரவு உடன்படிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கியிருக்க வேண்டும்.

6.3 ஆவணமாக்கப்பட்டுள்ள தொழிற்பாட்டு நடைமுறைகள்

தொழிற்பாட்டு நடைமுறைகள் ஆவணப்படுத்தப்பட்டு பேணப்பட்டு தெரிந்து கொள்வதற்கான தேவையின் அடிப்படையில் அனைத்துப் பயன்படுத்துநர்களுக்கும் கிடைக்கச் செய்தல் வேண்டும். தகவல் தொடர்பூட்டல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பிலும் முறைமையிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் இடம்பெற்றிருக்குமாயின் அத்தகைய மாற்றங்களை/ திருத்தியமைத்தல்களை பிரதிபலிக்கும் விதத்தில் தொடர்பான ஆவணங்கள் இற்றைப்படுத்தப்படல் வேண்டும்.

6.4 கடமைகளை வெவ்வேறாகப் பிரித்தல்

அங்கீகாரமற்ற அணுகல், திரிபுபடுத்தல்கள் மற்றும் நிறுவனத்தின் தகவல் மற்றும் முறைமையின் தவறான பயன்படுத்தல் என்பவற்றைக் குறைப்பதற்காக குறிப்பிட்ட வேலைத் தொழிற்பாடுகளை பரிசீலனையிற் கொண்டு கடமைகளும் பொறுப்புக்களும் வெவ்வேறாகப் பிரிக்கப்படல் வேண்டும்.

6.5 மாற்ற முகாமைத்துவம்

தகவல் முறைமைகளுக்கும் தகவல் செயன்முறைப்படுத்தல் வசதிகளுக்குமான மாற்றங்கள் தொழில் துறையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சிறந்த நடைமுறைகளைப் பின்பற்றி கட்டுப்படுத்தப்பட்ட விதத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும். கடமைகளும் பொறுப்புக்களின் துறைகளும் அங்கீகாரமளிக்கப்படாத அணுகுதல்கள் நிகழ்வுகளை திரிவுபடுத்தல்கள் மற்றும் நிறுவனத்தின் தகவல் முறைமைச் சொத்துக்களின் தவறான பயன்பாடு என்பவற்றின் குறைப்பதற்காக வெவ்வேறாகப் பிரிக்கப்பட வேண்டியிருக்கும்.

6.6 அபிவிருத்தி, பரீட்சிப்பு மற்றும் தொழிற்பாட்டு ரீதியான வசதிகளைப் வெவ்வோறகப் பிரித்தல்

அங்கீகாரமளிக்கப்படாத அணுகுதல்கள், தவறான பயன்பாடு மற்றும் தொழிற்பாட்டு முறைமைகளுக்கான மாற்றங்கள் என்பனவற்றைக் குறைப்பதற்காக, அபிவிருத்தி, பரீட்சிப்பு மற்றும் உற்பத்தித் தொழிற்பாடுகள் என்பன தனித்தனியாகப் பிரிக்கப்படல் வேண்டும்.

6.7 இயலளவு முகாமைத்துவம்

தொடர்ச்சியான தொழிற்பாடுகளுக்காக செயலாற்றத்தின் தேவையான மட்டம் பேணப்படுவதனை உறுதிப்படுத்தும் விதத்தில் எதிர்கால வளர்ச்சி மற்றும் இயலளவுத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்காக மூலவளங்களின் பயன்பாடானது கண்காணிக்கப்பட்டு, ஒத்திசைக்கப்பட்டு, எறிவு செய்யப்பட வேண்டும்.

6.8 முறைமை ஏற்பு

உள்ளகத்தில் அபிவிருத்தி செய்யப்பட்ட பிரயோகங்கள், பிரயோக மென்பொருளின் கையேற்பு அல்லது முக்கிய தரமுயர்த்தல் என்பனவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்றுக்கொள்ளல் பிரமாணம் காணப்பட வேண்டுமென்பதுடன் நேரடியாக தொழிற்படுத்தப்படுவதற்கு முன்னர் பொருத்தமான முறைமைப் பரீட்சிப்புக்களும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

6.9 தீய குறியீடுகளுக்கெதிரான கட்டுப்பாடுகள்

தீய குறியீடுகளுக்கெதிரான பாதுகாப்பிற்காகக் கண்டறிதல், தடுப்பு மற்றும் மீட்புக் கட்டுப்பாடு என்பன பொருத்தமான பயன்படுத்துநர் நிகழ்ச்சித்திட்டங்களுடன் சேர்த்து நடைமுறைக்கிடப்படல் வேண்டும்.

6.10 தகவல்களைப் பேணுவதற்கான மாற்று ஏற்பாடுகள்

எதிர்பாராத நிலைமையொன்றில் பயன்படுத்தப்படுவதற்காக இன்றியமையாத, கூருணர்திறன் வாய்ந்த மற்றும் ஏனைய தேவையான தகவல்களின் கிடைப்பனவினை உறுதிப்படுத்துவதற்காகப் பொருத்தமான மாற்று ஏற்பாடுகள் நடைமுறைக்கிடப்படுதல் வேண்டும். தகவல் முறைமைகளினதும் நடவடிக்கை முறைகளினதும் இம்மாற்று ஏற்பாடுகளின் பிரதிகள் கிரமமான முறையில் பரீட்சிக்கப்படுதல் வேண்டும்.

6.11 தகவல்களைக் கையாளும் நடவடிக்கை முறை

அதிகாரமளிக்கப்படாத வெளிப்படுத்துகை, திருத்தியமைத்தல் மற்றும் நிறுவனத்தின் தகவல்களைச் சேமிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட ஊடக விடயங்களை அகற்றுதல் அல்லது நீக்குதல் என்பனவற்றிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு பொருத்தமான நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

6.12 முறைமை ஆவணப்படுத்தலின் பாதுகாப்பு

அதிகாரமளிக்கப்படாத அணுகுதல்களிலிருந்து தடுப்பதற்காக முறைமை ஆவணப்படுத்தலை பாதுகாப்பாக களஞ்சியப்படுத்தல் வேண்டும்.

6.13 தகவல் பரிவர்த்தனைக் கொள்கைகளும் நடவடிக்கை முறைகளும்

இடைமறித்தல், பிரதிபண்ணுதல், திருத்தியமைத்தல், தவறாகப் பயன்படுத்தல் மற்றும் சேதப்படுத்தல் என்பனவற்றிலிருந்து தகவல்களைப் பாதுகாப்பதற்காகப் பொருத்தமான நடவடிக்கை முறைகள் வடிவமைக்கப்பட்டு நடைமுறைக்கிடப்படல் வேண்டும். தகவல்களைப் பகிர்ந்து கொள்வதனை முகாமைப்படுத்துவதில் காணப்படும் பாதிக்கப்படக்கூடிய தன்மையினைப் பரிசீலனையில் கொண்டு வியாபார தகவல் முறைமைகளின் உள்ளகத் தொடர்புகளுடன் இணைந்து காணப்படும் தகவல்களைப் பாதுகாப்பதற்காக கொள்கைகளையும் நடைமுறைகளையும் வடிவமைத்து நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

6.14 கணக்காய்வுப் பதிவு

பயன்படுத்துநரின் நடவடிக்கைகள், விதிவிலக்குகள் மற்றும் தகவல் பாதுகாப்பு நிகழ்வுகளைப் பதிகின்ற கணக்காய்வுப் பதிவுகள் கணக்காய்வு மற்றும் சட்ட ரீதியான தேவைப்பாடுகளின்படி குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்காக சரியான கவனிப்புடன் பேணப்படுதல் வேண்டும்.

6.15 கண்காணிப்பு முறைமை பயன்பாடும் பதிவுத் தகவல்களைப் பாதுகாத்தலும்

நிருவாகத்தவர், தொழிற்பாட்டாளர் மற்றும் தவறான பதிவுகளை மீளாய்வு செய்வதற்காக முறைமைகள் கண்காணிக்கப்பட வேண்டுமென்பதுடன் தகவல் பாதுகாப்பு நிகழ்வுகள் (ஏதுமிருப்பின்) பதிவு செய்யப்படல் வேண்டும். இப்பதிவுகள் தகவல் முறைமைப் பிரச்சனைகள் அடையாளம் காணப்பட்டு கட்டுப்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படல் வேண்டும்.

6.16 கடிகார ஒத்தியக்கம்

அனைத்துத் தகவல் முறைமைகளினதும் முறைமை நேரப் பதிவு உடன்பாடு காணப்பட்ட நியம நேர மூலத்துடன் ஒரே தரத்தில் பதிவு செய்யப்பட வேண்டும்.

**7. தொடர்பூட்டல் பாதுகாப்பு**

**குறிக்கோள்:** புரியக்கூடிய வடிவமொன்றில் தொலைத் தொடர்பூட்டல் வலையமைப்பிலிருந்தான அதிகாரமளிக்கப்படாத தலையீடுகள் தடை செய்யப்படுகின்ற வேளையில் உத்தேச பெறுநர்களுக்கு திருப்தியொன்று கிடைக்கிறது. இது, தகவலின் சங்கேத பாதுகாப்பு, பரிமாற்றல் பாதுகாப்பு, வெளியேற்றப் பாதுகாப்பு மற்றும் பௌதீகப் பாதுகாப்பு, அத்துடன் இதன் விடயத்தை உத்தேச பெறுநர்களுக்கு வழங்குகின்ற அதேவேளை, அறிவுத்திறன் வாய்ந்த விதத்தில் அதிகாரமளிக்கப்படாத தலையீடுகள் தொலைத்தொடர்பூட்டல் வலையமைப்புக்களை அணுகுவதிலிருந்து பாதுகாத்தல் செயன்முறை வசதிகள் மற்றும் நிறுவனத்தில் நடைமுறைப்படுத்தப்படும் பரிமாற்றல் பொறிமுறை என்பவற்றை உள்ளடக்கியிருக்க வேண்டும்.

7.1 மிக முக்கியமான உட்கட்டமைப்பினை சபை அல்லது பிரத்தியேகமான அதிகாரசபை மேற்பார்வை செய்தல்

அபிவிருத்திகள் கிரமமான முறையில் மீளாய்வு செய்யப்பட வேண்டியதுடன் இலத்திரனியல் வங்கித்தொழில் முறைமையின் பாதுகாப்பிற்காக, பாதுகாப்புக் கட்டுப்பாட்டு உட்கட்டமைப்பின் தொடர்ச்சியான பேணலும் மேற்கொள்ளப்படல் வேண்டும். இது, அதிகாரமளித்தல் சிறப்புரிமைகளின் உருவாக்கம், உள்ளக மற்றும் வெளியக பயன்படுத்துநர் நடவடிக்கைகள் மீது பொருத்தமான எல்லைகள் மற்றும் கட்டுப்பாடுகளைப் பேணுவதற்கான தர்க்க ரீதியான மற்றும் பௌதீக ரீதியான அணுகல் கட்டுப்பாடுகளை உள்ளடக்கியிருக்க வேண்டும்.

7.2 வலையமைப்பு பாதுகாப்பு முகாமைத்துவம்

வலையமைப்பிலுள்ள தகவல்களின் பாதுகாப்பினையும் ஆதரவளிக்கும் உட்கட்டமைப்பின் பாதுகாப்பினையும் உறுதிப்படுத்துதல்.

7.3 வலையமைப்புக் கட்டுப்பாடுகள்

நிறுவனத்தின் குறும் பரப்பு அல்லது விரிந்த பரப்பு வலையமைப்புடன் பயன்படுத்துநர்கள் இணைகின்ற இயலாற்றல், நிறுவனத்தில் அணுகும் கட்டுப்பாட்டுக் கொள்கைக்கிணங்க கட்டுப்படுத்தப்படல் வேண்டும். வலையமைப்புப் பணிகளின் குழுமங்கள், பயன்படுத்துநர் மற்றும் தகவல் முறைமைகள் என்பன நிறுவனத்தின் தகவல் பாதுகாப்புக் கொள்கைக்கிணங்க அவற்றின் மூலவளங்களை அணுகுவதற்காக வலையமைப்பில் தனித்தனியாக பேணப்பட வேண்டும்.

7.4 நகர்வுக் கணனிப்படுத்தல் மற்றும் தொடர்பூட்டல்கள்

தகவல் பாதுகாப்புக் கொள்கையானது நகர்வுக் கணனிப்படுத்தல் மற்றும் தொடர்பூட்டல் வசதிகளைப் பயன்படுத்துவதனால் ஏற்படும் இடர்நேர்வுகளிலிருந்து பாதுகாப்பதற்காகப் பொருத்தமான பாதுகாப்பு வழிமுறைகளை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

7.5 வெளிப்புற இணைப்புக்களுக்கான பயன்படுத்துநரின் உறுதிப்படுத்தல்

தூர இருந்து பயன்படுத்துபவர்கள் அணுகுவதனைக் கட்டுப்படுத்துவதற்காகப் பொருத்தமான உறுதிப்படுத்தல் முறைகள் பயன்படுத்தப்படல் வேண்டும். அடையாளம் கண்டுகொள்வதற்காகவும் பல இணைப்புத் துறைகளைக் கட்டுப்படுத்துவதற்காகவும் பௌதீக ரீதியாக மற்றும் தர்க்க ரீதியாக அணுகுவது கட்டுப்படுத்தப்படல் வேண்டும்.

7.6 வலையமைப்பில் கருவிகளை அடையாளம் காணுதல்

தன்னியக்கக் கருவிகளை உருவாக்குதல் மற்றும் அடையாளம் காணுதல் குறித்துரைக்கப்பட்ட அமைவிடங்கள் மற்றும் கருவிகளிலிருந்தான இணைப்புக்களை உறுதிப்படுத்துமொரு விடயமாகக் கருதப்படல் வேண்டும்.

7.7 வலையமைப்பு இணைப்புக் கட்டுப்பாடு

நிறுவனத்தின் எல்லைகளை விரிவாக்கியுள்ள பகிரப்பட்ட வலையமைப்பிற்காக, வலையமைப்பினை இணைப்பதற்கான பயன்படுத்துநர்களின் இயலாற்றல் நிறுவனத்தின் அணுகுதலைக் கட்டுப்படுத்தும் கொள்கைக்கிணங்க கட்டுப்படுத்தப்படல் வேண்டும்.

7.8 வலையமைப்பினை வழிப்படுத்துகின்ற விதிமுறைத் தொகுப்பு

வலையமைப்பு இணைப்புக்களும் தகவல் பணிகளும் நிறுவனத்தின் அணுகும் கட்டுப்பாட்டுக் கொள்கையினை மீளாதிருப்பதனை உறுதிப்படுத்துவதற்காக வழிப்படுத்துகின்ற கட்டுப்பாடுகள் வலையமைப்பிற்காக நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

**8. பௌதீக ரீதியான மற்றும் சூழல் பாதுகாப்பு**

**குறிக்கோள்:** நிறுவனத்தின் பணிமனை, தகவல் மற்றும் தகவல் முறைமைச் சொத்துக்கள் என்பனவற்றிற்கு அதிகாரமளிக்கப்படாதவர்கள் நுழைவது, சேதம் மற்றும் தலையீடு என்பனவற்றைத் தடுப்பதற்கு

8.1 பௌதீக பாதுகாப்பு சுற்றுப்புற எல்லை

தகவல் முறைமை மற்றும் தகவல் செயன்முறைப்படுத்தல் வசதிகள் என்பனவற்றை உள்ளடக்கியுள்ள பகுதிகளைப் பாதுகாப்பதற்காகப் பொருத்தமான பாதுகாப்பு புற எல்லைகள் (சுவர்கள், அட்டைக் கட்டுப்பாட்டு நுழைவு மையம், மனிதர்கள் மூலமான தகவல் செய்முறைப்படுத்தல் வசதிகள்) என்பன நடைமுறைக்கிடப்படல் வேண்டும்.

8.2 பௌதீக ரீதியாக நுழைவதற்கான கட்டுப்பாடுகள்

சரியான அணுகுமுறைக் கட்டுப்பாட்டுப் பொறிமுறைகளுடன் கூடிய தகவல் செய்முறைப்படுத்தல் வசதிகளுக்குள் நுழைவதற்கு அதிகாரம்பெற்ற ஆளணியினர் மட்டுமே அனுமதிக்கப்படுகின்றனர். அத்தகைய பகுதிகளுக்குள் நுழையும் விருந்தினர் பற்றிய விபரங்களைப் பதிய பதிவேடானது பேணப்பட வேண்டியதுடன் அவர்கள் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவருடன் சேர்ந்தே எப்பொழுதும் செல்ல வேண்டும்.

8.3 பாதுகாப்பு அலுவலகங்கள், அறைகள் மற்றும் வசதிகள்

அலுவலகங்கள், தலங்கள், அறைகள் மற்றும் வசதிகள் என்பனவற்றிற்கான பௌதீக ரீதியான பாதுகாப்பு சரியான முறையில் வடிவமைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

8.4 வெளிப்புற மற்றும் சுற்றாடல் அச்சுறுத்தல்களிலிருந்தான பாதுகாப்பு

இயற்கையான அல்லது மனிதனால் மேற்கொள்ளப்படும் அனர்த்தங்களிலிருந்து எழும் சேதங்களுக்கெதிரான பௌதீகப் பாதுகாப்பொன்று வடிவமைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

8.5 பாதுகாக்கப்பட்ட இடங்களில் பணியாற்றுதல்

பாதுகாக்கப்பட்ட இடங்களில் பணியாற்றுவதற்கான பௌதீக பாதுகாப்பும் வழிகாட்டல்களும் வடிவமைக்கப்பட்டு நடைமுறைக்கிடப்பட வேண்டுமென்பதுடன் தொடர்பான அலுவலர்களுக்குக் கிரமமான அடிப்படையில் கிடைக்கத்தக்கதாகவும் இருத்தல் வேண்டும்.

8.6 பொதுமக்கள் அணுகும், பொருட்களை விநியோகம் செய்யும் மற்றும் ஏற்றும் இடங்கள்

அதிகாரமளிக்கப்படாத ஆட்கள் நுழையக்கூடிய வசதிகளைக் கொண்ட விநியோகம் மற்றும் பொருட்களை ஏற்றும் அணுகக்கூடிய மையங்கள் கட்டுப்பாட்டுக்குட்படுத்தப்பட வேண்டியதுடன் சாத்தியமானவிடத்து தகவல் செயன்முறைப்படுத்தும் வசதிகளிலிருந்து தனியாக்கப்படுதலும் வேண்டும்.

8.7 பொது வசதிகள்

உதவி வசதிகள் பழுதடைந்து போவதன் காரணமாக வலு மற்றும் குளிரூட்டி, நெருப்பு மற்றும் ஏனைய தடங்கல்கள் என்பனவற்றிலிருந்து அனைத்துக் கருவிகளையும் பாதுகாத்தல் வேண்டும்.

8.8 கம்பிமுறைப் பாதுகாப்பு

தரவுகளையும் தகவல் பணிகளையும் கொண்டுவரும் வலு மற்றும் தொலைத்தொடர்பூட்டல் கம்பிகள் இடையூறுகளிலிருந்து அல்லது சேதமடைவதிலிருந்து பாதுகாக்கப்படல் வேண்டும்.

**9. அணுகுவதற்கான கட்டுப்பாடுகள்**

**குறிக்கோள்:** தகவல்கள், தகவல் முறைமைகள், வசதிகள் மற்றும் வியாபார செய்முறைகள் என்பனவற்றை அணுகுவது நிறுவனத்தின் வியாபாரம் மற்றும் பாதுகாப்புத் தேவைப்பாடுகளின் அடிப்படையில் இருத்தல் வேண்டும்.

9.1 அணுகுவதனைக் கட்டுப்படுத்துவதற்கான கொள்கை

அணுகுவதனைக் கட்டுப்படுத்துவதற்கான கொள்கையொன்று வியாபார மற்றும் பாதுகாப்புத் தேவைப்பாடுகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டு, ஆவணப்படுத்தப்பட்டு மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும்.

9.2 பயன்படுத்துநர் அணுகுவதனை முகாமைப்படுத்தல்

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்கள் அணுகுவதற்கான அனுமதியினை வழங்குவதற்கு வழமையான நடைமுறைகள் காணப்படுகின்ற வேளையில் அதிகாரமளிக்கப்படாத அலுவலர்களுக்கு அணுகும் வசதிகள் மறுக்கப்படல் வேண்டும். முகாமைத்துவம், முறைசார்ந்த நடைமுறைகளைப் பயன்படுத்தி கிரமமான இடைவெளியில் பயன்படுத்துநரின் அணுகும் உரிமைகளை மீளாய்வு செய்தல் வேண்டும்.

9.3 பயன்படுத்துநரை அடையாளம் கண்டு உறுதிப்படுத்துதல்

தகவல் முறைமைகளுக்கு அணுகும் வசதிகளை வழங்கும்போதும் அவற்றைப் பின்னர் மீளப்பெறும்போதும் முறைசார்ந்த பயன்படுத்துநர் உருவாக்க மற்றும் நீக்க நடைமுறைகள் காணப்பட வேண்டும்.

9.4 கடவுச்சொல் முகாமைத்துவ முறைமைகள்

நிறுவனத்தின் பாதுகாப்புக் கொள்கையில் கடவுச் சொற்களை ஒதுக்குவதும் கடவுச் சொற்களை நிருவகிக்கின்ற விதிகளும் உருவாக்கப்படுதல் வேண்டும். பயன்படுத்துநர்கள் கடவுச் சொற்களைத் தெரிவு செய்வதிலும் அவற்றைப் பயன்படுத்துவதிலும் சிறந்த பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

9.5 காலம் கடந்த தொடர்/ இணைப்புக் காலத்தினை மட்டுப்படுத்துதல்

தொடர்பான வேலை நிறைவடையும் பொழுது செயற்படும் தொடரை முடிவுறுத்துவது தேவையானதாகும். கவனிக்கப்படாத கருவிகள் அதிகாரமற்ற ஆட்கள் அணுகுவதிலிருந்தும் பொருத்தமான விதத்தில் பாதுகாக்கப்பட்டிருக்கிறது என்பதனை பயன்படுத்துநர் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்

**10. இணையத் தளம் மற்றும் மின்னஞ்சல் பாதுகாப்பு**

**குறிக்கோள்:** மின்னஞ்சல் மற்றும் இணையத்தள வசதிகளின் காத்திரமான பயன்பாட்டினை உறுதிப்படுத்துவதற்கு பாதுகாப்பானதும் நன்கு அமைப்புச் செய்யப்பட்டதுமான கட்டமைப்பொன்று உருவாக்கப்படல் வேண்டும்.

10.1 இலத்திரனியல் முறையில் செய்தி அனுப்பலும் இணையத்தளமும்

கம்பனி மின்னஞ்சலும் இணைத்தள இணைப்புக்களும் முக்கியமாக அலுவலகப் பாவனைக்கு மாத்திரமேயாகும். அடையாளத்தினை உறுதிப்படுத்தும் விதத்திலும் இணையத்தள வங்கித்தொழிலை வழங்குகின்ற வாடிக்கையாளர்களை அங்கீகரிப்பதற்காகவும் நடைமுறைகள் நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

10.2 கணனி வழி அதேநேரக் கொடுக்கல்வாங்கல்கள்

முறைமைகள் மற்றும் தரவுத் தளங்களுக்காக நிறுவனத்திற்குள்ளேயான கடமைகளைப் போதுமானளவிற்குப் பிரித்து நடைமுறைப்படுத்துவதனை உறுதிப்படுத்துவதற்கு நடைமுறைகள் நடைமுறைக்கிடப்பட வேண்டும் என்பதுடன் அது மறுதலிக்காமையினை உறுதிப்படுத்துவதற்காக கொடுக்கல்வாங்கல் உறுதிப்பாட்டு முறைகளைப் பயன்படுத்த வேண்டுமென்பதுடன் இணையத்தள வங்கித்தொழில் கொடுக்கல்வாங்கல்களுக்காக பொறுப்புக்கூறும் தன்மையினையும் உருவாக்குதல் வேண்டும். நிறுவனங்கள் அனைத்தையுமுள்ளடக்கிய பரந்தளவு கணக்காய்வுப் பரீட்சிப்புக்களையும் பதிவுகளையும் பேணவேண்டுமென்பதுடன் வாடிக்கையாளர் இணையத்தள வங்கித்தொழில் தரவுகளின் இரகசியத்தன்மையினை உறுதிப்படுத்துவதற்காகப் பொருத்தமான சங்கேத மொழி நுணுக்கங்கள், குறித்துரைக்கப்பட்ட குறிப்பு ஆவணங்கள் அல்லது மற்றைய பாதுகாப்புக் கட்டுப்பாடுகள் என்பனவற்றையும் கொண்டிருத்தல் வேண்டும்.

10.3 பகிரங்கமாகக் கிடைக்கத்தக்க தகவல்கள்

நிறுவனமானது அதன் வாடிக்கையாளர்களுக்குச் சரியானதும் பொருத்தமானதுமான தகவல்களை வேறுபட்ட ஊடகங்கள், இலத்திரனியல் அது போன்று அச்சு வடிவங்களினூடாக வழங்குவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

**11. தகவல் முறைமைகளின் ஏற்றுக்கொள்ளத்தக்க பயன்பாடு**

**குறிக்கோள்:** அதிகாரமளிக்கப்படாத பயன்படுத்துநர் அணுகுதல் மற்றும் விட்டுக்கொடுத்தலை அல்லது தகவல்கள் களவு போவதனைத் தடுப்பதற்கும் தகவல் செய்முறைப்படுத்தல் வசதிகளுக்காகவும் முறைசார்ந்த நடைமுறைகளை உருவாக்குதல் வேண்டும்.

11.1 தகவல் முறைமைகளுக்கான உறுதிப்படுத்தும் செய்முறைகள்

தகவல் முறைமைகள் மற்றும் தகவல் பணிகளுக்கான அணுகும் உரிமைகளை ஒதுக்குவது மற்றும் மாற்றுவது கட்டுப்படுத்தப்பட்டதும் பாதுகாப்பானதுமான பொறிமுறைகளைப் பயன்படுத்தி கையாளல் வேண்டும். முகாமைத்துவம் வழமையான நடைமுறையினைப் பயன்படுத்திக் கிரமமான இடைவெளிகளில் பயன்படுத்துநர் உரிமைகளை மீளாய்வு செய்தல் வேண்டும்.

11.2 ஊடகக் கையாளல்

நிறுவனத்தின் இணங்கிக் கொள்ளப்பட்ட கொள்கைகளுக்கிணங்க, இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களினால் பயன்படுத்தப்பட்டு முகாமைப்படுத்தப்பட்டு மற்றும் அகற்றப்படுகின்றமையை உறுதிப்படுத்தும் விதத்தில் பாதுகாப்பானதொரு கட்டமைப்பினை முகாமைத்துவம் உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

11.3 முறைமை வசதிகளின் பயன்பாடு

முறைமை வசதிகளின் பயன்பாடு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட வேண்டுமென்பதுடன் கருதப்பட்ட பணிகள் வழங்கப்படுவதனை உறுதிப்படுத்தும் விதத்தில் கட்டுப்படுத்தப்படவும் வேண்டும்.

11.4 தூய்மையான மேசை மற்றும் தூய்மையான திரைக் கொள்கை

நிறுவனத்தின் தகவல் பகுப்பாய்வு வழிகாட்டல்களுக்கிணங்க அச்சு மற்றும் அகற்றத்தக்க களஞ்சிய ஊடகத்திற்கான தெளிவான மேசைக் கொள்கை மற்றும் தகவல் செயன்முறை தூய்மையான திரைக் கொள்கை என்பனவற்றிற்கான தெளிவான மேசைக் கொள்கையொன்று பின்பற்றப்படல் வேண்டும்.

**12. தகவல் பாதுகாப்பு நிகழ்வின் முகாமைத்துவம்**

**குறிக்கோள்:** முறைசார்ந்த நிகழ்வுகளை அறிக்கையிடல் மற்றும் விரிவாக்க நடைமுறைகளும் நடைமுறைப்படுத்தல் வேண்டும். இந்நடைமுறைகள் அனைத்துத் தொடர்பான ஆர்வலர்களுக்கும் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

12.1 தகவல் பாதுகாப்பு நிகழ்வுகளை அறிக்கையிடல்

தகவல் பாதுகாப்பு நிகழ்வுகளைப் பொருத்தமான முகாமைத்துவ வழிமுறைகளினூடாக எவ்வளவிற்கு சாத்தியமோ அந்தளவிற்கு விரைவாக அறிக்கையிடல் வேண்டும். முறைசார்ந்த அறிக்கையிடல் நடைமுறையானது நிகழ்வொன்றிற்கான பதிலிறுப்பு மற்றும் விஸ்தரிப்பு நடைமுறை எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை என்பவற்றுடன் சேர்த்து நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

12.2 பாதுகாப்புப் பலயீனங்களை அறிக்கையிடுதல்

அனைத்து ஊழியர்கள், ஒப்பந்தக்காரர்கள் அல்லது தகவல் முறைமையை மற்றும் பணிகளின் மூன்றாந்தரப்பு பயன்படுத்துநர்கள் ஆகியோர் முறைமைகள் அல்லது பணி வழங்கலில் காணப்படும் அல்லது ஐயத்திற்கிடமான பாதுகாப்புப் பலயீனங்களைக் கவனித்து அறிக்கையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

12.3 பொறுப்புக்களும் நடைமுறைகளும்

தகவல் பாதுகாப்பு நிகழ்வுகளுக்கு விரைவாகவும் காத்திரமாகவும் ஒழுங்கான முறையிலும் பதிலிறுத்துவதனை உறுதிப்படுத்துவதற்காக முகாமைத்துவப் பொறுப்புக்களும் நடைமுறைகளும் உருவாக்கப்படுதல் வேண்டும். எதிர்காலத்தில் இவை மீண்டும் ஏற்படுவதனைத் தவிர்க்கும் பொருட்டு இந்நடைமுறைகள் நிகழ்வுகள், அவற்றின் உள்ளடக்கம், திட்டமிடல் மற்றும் சரியான வழிமுறைகளின் நடைமுறைப்படுத்தல்களின் பகுப்பாய்வுகளையும் அடையாளப்படுத்தல்களையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

12.4 தகவல் பாதுகாப்பு நிகழ்வுகளிலிருந்து கற்றுக் கொள்ளல்

தகவல் பாதுகாப்பு நிகழ்வுகளின் இயலுமை வகைகள், அளவுகள் மற்றும் செலவுகளின் அளவுகளைக் கணித்து கண்காணிப்பதற்கான பொறிமுறைகள் காணப்படல் வேண்டும்.

12.5 சான்றுகளைத் திரட்டல்

தகவல் பாதுகாப்பு நிகழ்வுகள் சட்ட நடவடிக்கைகளுடன் (சிவில் அல்லது குற்றவியல்) தொடர்புபடுகின்றமையினைத் தொடர்ந்து ஆளொருவர் அல்லது நிறுவனமொன்றிற்கெதிராக பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்படுமிடத்து சான்றுகள் சேகரிக்கப்பட்டு, வைத்திருக்கப்பட்டு, தொடர்பான நியாயாதிக்கத்தில் குறிப்பிடப்பட்டவாறு சான்றுகள் மீதான தேவைப்பாடுகளை உறுதிப்படுத்துவதற்காக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

**13. தகவல் முறைமைகளை கையேற்றல், அபிவிருத்தி செய்தல் மற்றும் பேணுதல்**

**குறிக்கோள்:** தகவல் பாதுகாப்பு முகாமைத்துவம் தகவல் முறைமையின் மிக இன்றியமையாத பகுதி என்பதனை உறுதிப்படுத்துவது.

13.1 மென்பொருள் மற்றும் வன்பொருளுக்கான தகவல் பாதுகாப்புத் தேவைப்பாட்டுப் பகுப்பாய்வு மற்றும் பரிந்துரை

தகவல் முறைமைக்கான நடைமுறைப்படுத்தலின் ஒரு பகுதியாகவும் ஒட்டுமொத்த வியாபார விடயமாகவும் தகவல் பாதுகாப்பு தேவைப்பாடுகள் அடையாளம் காணப்பட்டு, நியாயப்படுத்தப்பட்டு, இணங்கப்பட்டு ஆவணப்படுத்தப்பட வேண்டும்.

13.2 பிரயோகங்களில் சரியான செய்முறைப்படுத்தல்களை மேற்கொள்ளல்

தவறுகள், இழப்புக்கள் அங்கீகாரமளிக்கப்படாத திருத்த வேலைகள் அல்லது தகவல்களைத் தவறாகப் பயன்படுத்துதல் என்பனவற்றைத் தவிர்ப்பதற்காக தரவு உள்ளீடு, செய்முறைப்படுத்தல் மற்றும் வெளியீட்டுக் கட்டங்களில் பொருத்தமான கட்டுப்பாடுகள் நடைமுறைக்கிடப்படல் வேண்டும்.

13.3 செய்தி ஒருங்கிணைப்பு

உறுதிப்படுத்தலை உறுதிப்படுத்தும் தேவைப்பாடுகளும் பிரயோகங்களில் செய்தி ஒருங்கிணைப்பினை பாதுகாப்பதும் அடையாளம் காணப்பட்டு நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

13.4 தொழிற்பாட்டு ரீதியான மென்பொருள்களின் கட்டுப்பாடுகள்

ஊழல் இடர்நேர்வுகளைக் குறைப்பதற்கு உற்பத்திச் சூழலில் தொழிற்பாட்டு ரீதியான மென்பொருட்களைக் கட்டுப்படுத்துவதற்கான முறைசார்ந்த நடைமுறைகள் நடைமுறைக்கிடப்படல் வேண்டும். உரிமை பெறாத மென்பொருட்களைப் பயன்படுத்துவது தடை செய்யப்பட வேண்டியதுடன் இலங்கையிலுள்ள புலமைச் சொத்து தொடர்பான சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்கியொழுகுவதும் பேணப்பட வேண்டும்.

13.5 முறைமை பரீட்சிப்புத் தரவுகளைப் பாதுகாத்தல்

உற்பத்தித் தரவுத் தளத்தினை அங்கீகாரம் பெறாதவர்கள் அணுகுவதனைத் தடுப்பதற்காக தனிப்பட்ட பரீட்சிப்புச் சூழலொன்றில் முறைமை பரீட்சிப்பினை மேற்கொள்ளல் வேண்டுமென்பதுடன் இப்பரீட்சிப்பின் பெறுபேறுகளும் எழுத்துப் பிரதிகளும் கட்டுப்பாட்டு/ கணக்காய்வு நோக்கங்களுக்காக வைத்திருக்கப்படல் வேண்டும்.

13.6 கணனி நிகழ்ச்சி நிரல் மூலக் குறியீடுகளை அணுகுவதற்கான கட்டுப்பாடு

மூலக் குறியீடுகளை அணுகுவது கட்டுப்படுத்தப்படல் வேண்டும். மிக முக்கியமான தொழிற்பாடுகளுக்காக பயன்படுத்துகின்ற கொள்வனவு செய்யப்பட்ட மென்பொருள் தொகுதிகள், தொடர்பான நிறுவனத்தினால் பின்பற்றப்படுகின்ற கொள்கைகளின் அடிப்படையில் எஸ்கிறோ முகவர் வசமிருத்தல் வேண்டும்.

13.7 கட்டுப்பாடுகளை மாற்றும் நடைமுறைகள்

தகவல் முறைமைகளுக்கு மாற்றங்களை நடைமுறைப்படுத்துவதனைக் கட்டுப்படுத்துவதற்காக முறைசார்ந்த மாற்றக் கட்டுப்பாட்டு வழிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

13.8 தொழிற்பாட்டு முறைமைகளை மாற்றிய பின்னர் பிரயோகங்களின் தொழில்நுட்ப மீளாய்வு

மாற்றமடைந்த கணனிப்படுத்தல் சூழலானது உள்ளகக் கட்டுப்பாடுகளுடன் எவ்வித சமரசங்களையும் கொண்டிருக்காது என்பதனை உறுதிப்படுத்துவதற்காக பிரயோகக் கட்டுப்பாடுகளின் மீளாய்வும் ஒருங்கிணைப்பின் பரிசோதனையும் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

13.9 மென்பொருள் பொதிகளுக்கான மாற்றங்கள் மீதான கட்டுப்பாடுகள்

மென்பொருள் பொதிகளில் மாற்றியமைத்தல்களை மேற்கொள்வது ஊக்குவிக்கப்படக்கூடாது என்பதுடன் மாற்றியமைத்தல்கள் இல்லாமலேயே அவை பயன்படுத்தப்பட வேண்டும். மாற்றியமைத்தல்கள் தேவையாயின், உள்ளே பொருத்தப்பட்டுள்ள கட்டுப்பாடுகளின் இடர்நேர்வும் ஒருங்கிணைப்புச் செயன்முறையும் விற்பனையாளரின் தொழில்நுட்ப ஆதரவுடன் மதிப்பிடப்பட வேண்டும்.

13.10 தகவல்கள் கசிதல்

தகவல்கள் கசிவதற்கான சாத்தியங்கள் எல்லா நேரங்களிலும் தடை செய்யப்படுதல் வேண்டும்.

13.11 வெளியிலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் மென்பொருளை அபிவிருத்தி செய்தல்

மென்பொருள் அபிவிருத்திகள் வெளியிலிருந்து பெற்றுக் கொள்ளப்படும் பொழுது புலமைச் சொத்து உரிமை தொடர்பில் உரிமம் வழங்குகின்ற ஒழுங்குகள் நிறுவப்படுதல் வேண்டும். வெளியிலிருந்து பெற்றுக் கொள்ளப்படும் மென்பொருள் அபிவிருத்தியானது நிறுவனத்தால் கண்காணிக்கப்பட்டு மேற்பார்வை செய்யப்படுதல் வேண்டும்.

13.12 தொழில்நுட்ப ரீதியில் பாதிக்கப்படும் தன்மையினை முகாமைப்படுத்தல்

பயன்படுத்தப்படும் தகவல் முறைமைகள் தொழில்நுட்ப ரீதியில் பாதிக்கப்படும் தன்மையினை பற்றி உரிய நேரத்தில் தகவல்கள் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும். அத்தகைய பாதிக்கப்படும் தன்மைக்கு நிறுவனம் உள்ளாகும் தன்மை மதிப்பீடு செய்யப்படுவதுடன் இணைந்த இடர்நேர்வுகளைக் கட்டுப்படுத்துவதற்குப் பொருத்தமான வழிமுறைகளும் மேற்கொள்ளப்படுகிறது.

13.13 தொழில்நுட்ப ரீதியாக பாதிக்கப்படும் தன்மைகளைக் கட்டுப்படுத்தல்

வன்பொருட்கள் மற்றும் மென்பொருட்கள் என்பன எதிர்பார்க்கப்பட்டவாறு தொழிற்படுகின்றன என்பதனை உறுதிப்படுத்துவதற்காக காத்திரமான மற்றும் முறையியல் சார்ந்த வழிமுறைகளினூடாக தொழில்நுட்ப ரீதியாக பாதிக்கப்படும் தன்மையைக் கட்டுப்படுத்தப்படல் வேண்டும்.

**14. தடங்கலற்ற வியாபார முகாமைத்துவம்**

**குறிக்கோள்:** தாங்கக்கூடிய கால வரையறைக்குள் அவை மீண்டும் பழைய நிலைக்குத் திரும்புவதனை உறுதிப்படுத்துவதற்காக வியாபாரத்திற்கு ஏற்படும் தடங்கலை எதிர்த்து நடவடிக்கைகளை மேற்கொள்வதும் தகவல் முறைமைகள் மற்றும் வசதிகளில் ஏற்படும் முக்கிய பழுதுகளின் அல்லது அனர்த்தங்களின் தாக்கங்களிலிருந்து முக்கிய வியாபாரச் செயன்முறைகளை பாதுகாப்பதுமாகும்.

14.1 தடங்கலற்ற வியாபாரத் திட்டங்களைத் தயாரிப்பதும் ஒப்புதலளிப்பதும்

அனைத்துத் திட்டங்களும் ஒன்றுடன் ஒன்று இசைந்து செல்வதனை உறுதிப்படுத்துவதற்கும் தகவல் பாதுகாப்புத் தேவைப்பாடுகளை வலியுறுத்துவதற்கும் பரீட்சிப்பு மற்றும் பேணலுக்காக முன்னுரிமைகளை அடையாளம் காண்பதற்கும் தொழில்முயற்சியின் பரந்த வியாபார தடங்கலற்ற திட்டத்தின் தனிக் கட்டமைப்பொன்று பேணப்படல் வேண்டும். தடங்கலற்ற வியாபாரத் திட்டமானது நிறுவனத்தின் வியாபாரத்

தொழிற்பாடுகளினைப் பரிசீலனையில் கொண்டு மேற்கொள்ளப்படுகின்ற வியாபாரத் தாக்கப் பகுப்பாய்வின் அடிப்படையில் தயாரிக்கப்படுதல் வேண்டும். தடங்கலற்ற வியாபாரத் திட்டமிடலானது விடயத்தினைப் பொறுத்து நிறுவனத்தின் பணிப்பாளர் சபையினால் அல்லது மூத்த முகாமைத்துவத்தினால் அல்லது பிராந்திய அலுவலகத்தின் தலைமையினால் ஒப்புதலளிக்கப்பட வேண்டும்.

14.2 தடங்கலற்ற வியாபாரமும் இடர்நேர்வு மதிப்பீடும்

வியாபாரச் செயன்முறைகளுக்கும் வசதிகளுக்கும் தடங்கல்களை விளைவிக்கக்கூடிய நிகழ்வுகளை அடையாளம் காண வேண்டியதுடன் அத்தகைய தடங்கல்களின் நிகழ்தகவு மற்றும் தாக்கத்தையும் அவற்றின் காரணமாக தகவல் பாதுகாப்பிற்கு ஏற்படக்கூடிய விளைவுகளையும் அடையாளம் காணுதல் வேண்டும்.

14.3 தடங்கலற்ற வியாபார முகாமைத்துவச் செயன்முறையில் தகவல் பாதுகாப்பினை உள்ளடக்குதல்

முழு நிறுவனத்தினதும் தடங்கலற்ற வியாபாரத்திற்குத் தேவையான தகவல் பாதுகாப்புத் தேவைப்பாடுகளை வலியுறுத்துகின்ற விதத்தில் நிறுவனம் முழுவதும் தடங்கலற்ற வியாபாரத்திற்கு முகாமைப்படுத்தப்பட்ட செயன்முறையொன்று காணப்படல் வேண்டும்.

14.4 தகவல் பாதுகாப்பு உட்பட தடங்கலற்ற வியாபாரத் திட்டமிடலை அபிவிருத்தி செய்து நடைமுறைப்படுத்தல்

வியாபாரத் தொழிற்பாடுகள் பழைய நிலைக்குத் திரும்புவதை உறுதிப்படுத்துவதற்கான திட்டங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு, ஆவணப்படுத்தப்பட்டு பேணப்பட வேண்டியதுடன் கிரமமாக மீளாய்வு செய்யப்படலும் வேண்டும்.

14.5 தடங்கலற்ற வியாபாரத் திட்டமிடலைப் பரீட்சித்தல், பேணுதல் மற்றும் திருத்துதல்

தடங்கலற்ற வியாபாரத் திட்டங்கள் அவை நாளது வரை இற்றைப்படுத்தப்பட்டு காத்திரமான முறையில் இருப்பதனை உறுதிப்படுத்துவதற்காக கிரமமான முறையில் பரீட்சிக்கப்பட்டு இற்றைப்படுத்தப்படல் வேண்டும். இப்பரீட்சிப்புக்கள் மீட்பு, தொழிற்பாட்டு மற்றும் ஏனைய தொடர்பான குழுக்களின் அனைத்து உறுப்பினர்களும் திட்டம், தடங்கலற்ற வியாபாரத் திட்டத்திற்கான அவர்களின் பங்களிப்பு மற்றும் தகவல் பாதுகாப்பு என்பன பற்றி அறிந்திருப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

அடிப்படை பாதுகாப்பு நியமத்தின் வாசகம் 1 முடிந்தது

**தொடர்பு எண்: 02/17/800/0014/02** 2014 யூலை 31

சேரல்: அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு
வாய்ந்த வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

## முதலீட்டு நிதியக் கணக்கு

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பில் 2011 ஏப்பிறல் 29 மற்றும் 2013 ஏப்பிறல் 24 ஆகிய திகதிகளில் விடுக்கப்பட்ட வழிகாட்டல்கள் பற்றி நாம் குறிப்பிடுவதுடன் முதலீட்டு நிதியக் கணக்குகளின் தொழிற்பாடுகள் 2014 ஒத்தோபர் 01ஆம் நாளிலிருந்து நிறுத்தப்படுவது பற்றியும் தங்களுக்கு அறியத் தருகின்றோம்.

2. **இதற்கமைய, முதலீட்டு நிதியக் கணக்குகளின் மீதான வழிகாட்டல்கள் தொடர்பாக பின்வரும் தெளிவுபடுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.**

(i) **வழிகாட்டல் 2 - முதலீட்டு நிதியக் கணக்கிற்கான வரவுகள்**

(அ) முதலீட்டு நிதியக் கணக்கிற்கான நிதியியல் பணிகள் மீதான பெறுமதிசேர் வரியின் கொடுப்பனவிற்காக கணிக்கப்பட்ட இலாபத்தில் 8 சதவீதத்திற்குச் சமமான தொகையொன்றினை மாற்றல் செய்வதற்கான தேவைப்பாடு 2013 திசெம்பர் 31இல் காலாவதியானது. இதற்கமைய பெறுமதிசேர் வரியின் இறுதிக் கொடுப்பனவு 2014 சனவரி 20ஆம் திகதியாக இருந்தது.

(ஆ) 2013/2014 மதிப்பீட்டு ஆண்டில் முதலீட்டு நிதியக் கணக்கிற்கான உள்நாட்டரசிறைச் சட்டத்தின் 113ஆவது பிரிவில் குறித்துரைக்கப்பட்ட திகதிகளில் வருமான வரி நோக்கங்களுக்கான கணிக்கப்பட்ட வரிக்கு முன்னரான இலாபத்தில் 5 சதவீதத்திற்குச் சமமான தொகையினை மாற்றல் செய்ய வேண்டும் என்ற தேவைப்பாடு 2014 மாச்சு 31இல் காலாவதியானது. 2013/ 2014 மதிப்பீட்டு ஆண்டிற்கான வருமான வரியின் மீதான இறுதி வரிக் கொடுப்பனவுகள் 2014 செத்தெம்பர் 30ஆம் நாளாக இருக்கும்.

**(ii) வழிகாட்டல் 4.3 - இலங்கை மத்திய வங்கிக்கு வெளிப்படுத்தலும் அறிக்கையிடலும்**

(அ) நிதியியல் கூற்றுக்களின் வெளிப்படுத்துகைத் தேவைப்பாடுகளும் முதலீட்டு நிதியக் கணக்குகளின் பயன்பாடு மீதான கூற்றொன்றினை சமர்ப்பிக்கும் தேவைப்பாடும் 2014 செத்தெம்பர் 30ஆம் நாள் வரை ஏற்புடைத்தானவையாக இருத்தல் வேண்டும்.

**(iii) வழிகாட்டல் 4.4 - வரி விதிப்பு நடவடிக்கை**

(அ) முன்னைய காலப்பகுதிகளின் வரிக் கொடுப்பனவுகளை இறுதிப்படுத்துவதன் காரணமாக 2014 யூலை 1ஆம் நாளுக்குப் பின்னர் எழுகின்ற ஏதேனும் சீராக்கத்தினை 2014 செத்தெம்பர் 30ஆம் நாள் வரை முதலீட்டு நிதியக் கணக்குகளுக்கு சீராக்கிக் கொள்ளமுடியும்.

(ஆ) முதலீட்டு நிதியக் கணக்கிலிருந்து வழங்கப்பட்ட ஏதேனும் கடன்கள் மற்றும் முற்பணங்களிலிருந்து உழைக்கப்பட்ட வட்டி வருமானத்திற்கு 2014 யூலை 1ஆம் நாளுக்குப் பின்னர் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படமாட்டாது.

3. **ஏனையவை**

**(i) கடன் மீள்கொடுப்பனவுகள் மற்றும் நீண்ட கால அரச பிணையங்களின் முதிர்ச்சிப் பெறுகைகள் என்பனவற்றின் மூலமாக அறவிடப்பட்ட மூலதன நிதியம்**

(அ) 2014 யூலை 1ஆம் நாளிலிருந்து முதலீட்டு நிதியக் கணக்குகளில் தொழிற்பாடுகள் மீதான வழிகாட்டல்கள் கடன் மீள்கொடுப்பனவுகள் மற்றும் நீண்ட கால அரச பிணையங்களின் முதிர்ச்சிப் பெறுகைகள் என்பனவற்றின் மூலமாக அறவிடப்பட்ட மூலதன நிதியத்தின் பயன்பாடு தொடர்பில் ஏற்புடைத்தாகமாட்டாது.

(ஆ) இதற்கமைய, வங்கிகள் மேலே 3(i)(அ) பந்தியில் குறிப்பிடப்பட்ட மூலங்களிலிருந்து அறவிடப்பட்ட மூலதன நிதியத்திற்குச் சமமான தொகையொன்றினை முதலீட்டு நிதியக் கணக்கிலிருந்து குறைத்துக் கொள்ளமுடியும்.

**(ii) முதலீட்டு நிதியக் கணக்கின் தொழிற்பாடுகளை நிறுத்துதல்**

(அ) முதலீட்டு நிதியக் கணக்குகளின் தொழிற்பாடுகள் 2014 ஒத்தோபர் 1ஆம் நாளிலிருந்து நிறுத்தப்படும். வங்கிகள் முதலீட்டு நிதியக் கணக்குகளிலுள்ள எஞ்சிய நிலுவையினை பங்குரிமை மூலதனத்திலுள்ள மாற்றங்களின் கூற்றினூடாக பிடித்துவைக்கப்பட்ட வருவாய்களுக்கு மாற்றல் செய்தல் வேண்டும்.

உங்கள் உண்மையுள்ள
திருமதி ரி எம் ஜே வை பி பர்னாந்து
**வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

**தொடர்பு எண்: 02/17/800/0014/02** 2014 செத்தெம்பர் 26

சேரல்: அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

**முதலீட்டு நிதியக் கணக்குகள்**

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக விடுக்கப்பட்ட 2014 யூலை 31ஆம் திகதியிடப்பட்ட சுற்றறிக்கை பற்றி குறிப்பிடுவதுடன் மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையின் பந்தி 2(iii)(ஆ) இத்தால் இரத்துச் செய்யப்படுவது பற்றியும் இதன் மூலம் அறியத் தருகின்றோம்.

உங்கள் உண்மையுள்ள
திருமதி ரி எம் ஜே வை பி பர்னாந்து
**வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

**தொடர்பு எண்: 02/17/600/002/001** 2014 ஒத்தோபர் 16

சேரல்: உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

அன்புள்ள ஐயா/ அம்மணி

**ஏற்றுமதியாளர்களுக்கான கடன் வசதிகளை அறவிடல்**

ஏற்றுமதிகளிலிருந்தான அதிகரித்த வருவாய்களின் காரணமாக நாட்டின் வெளிநாட்டுத் துறை உறுதிப்பாடு மற்றும் சென்மதி நிலுவையில் ஏற்பட்ட முன்னேற்றங்களின் காரணமாக உறுதியடைந்த வெளிநாட்டு ஒதுக்குகள் என்பனவற்றை பரிசீலனையில் கொண்டு இலங்கை மத்திய வங்கி ஏற்றுமதியாளர்களுக்கான கடன் வசதிகளை அறவிடல் தொடர்பில் விடுக்கப்பட்ட 2001 சனவரி 22, 2001 சனவரி 29, 2001 பெப்புருவரி 16 மற்றும் 2001 மாச்சு 30 சுற்றறிக்கைகளை 2014 ஒத்தோபர் 03ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் புறக்கீடு செய்யத் தீர்மானித்திருக்கிறது.

இதற்கமைய, மேற்குறிப்பிட்டவற்றுடன் இணங்கியொழுகும் விதத்தில் தேவையான வழிமுறைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

உங்கள் உண்மையுள்ள
திருமதி ரி எம் ஜே வை பி பர்னாந்து
**வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை**
**அதிவிசேடமானது**
1891/11 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 02 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை
**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**
**பகுதி I : தொகுதி (I) - பொது**
**இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்**
**நாணய விதிச் சட்டம்**

நாணய விதிச் சட்டம், (அத்தியாயம் 422) பிரிவு 32உ இன் கீழ் நாணயச் சபையால் மேற்கொள்ளப்பட்ட ஒழுங்குவிதிகள்.

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
**தலைவர்**
**நாணயச் சபை**

கொழும்பு
2014 நவெம்பர் 28

**இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்ட ஒழுங்குவிதிகள் 2010ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்ட ஒழுங்குவிதிகளுக்கான திருத்தம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | **எடுத்துக்காட்டல்** | 1.1 | இந்த ஒழுங்குவிதிகள் 2014ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்ட ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்பட வேண்டும். |
| 2. | **மூல ஒழுங்குவிதியில் திருத்தங்கள்** | 2.1 | 2010ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 28ஆந் திகதியிடப்பட்ட 1673/11ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட 2010ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்ட ஒழுங்குவிதிகள் பின்வருமாறு திருத்தப்படுகின்றது: |
| | | 2.2 | ஒழுங்குவிதி 9இல் பந்தி 9.6 நீக்கப்பட்டு, அந்த ஒழுங்குவிதி பின்வரும் பந்தி மூலம் மாற்றீடு செய்யப்படுகின்றது: |

"9.6 வைப்பாளர் ஒருவருக்குச் செலுத்தப்படும் நட்ட ஈட்டுத் தொகை 300,000 ரூபாவுக்கு மேற்படும் பட்சத்தில், ஆகக்கூடிய மொத்தக் காப்புறுதி செய்யப்பட்ட தொகை 300,000 ரூபா அல்லது அந்நிய நாட்டு பண வைப்பாக இருப்பின் அதற்குச் சமனான தொகை என்ற அடிப்படையில் வரையறுக்கப்பட்டு மேற்குறிப்பிட்ட விதத்தில் கணிக்கப்படும்."

**3. நடைமுறைக்கு வரும் திகதி** 3.1 இந்தத் திருத்தங்கள் 2015, சனவரி 1ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதலாதல் வேண்டும்.

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவுகள் 8 மற்றும் 76டி(6) இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்.

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
**நாணயச் சபையின் தலைவர் மற்றும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்**

கொழும்பு
2014 திசெம்பர் 18

## 2014ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத் தீர்மானம்
## உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் ஆண்டு உரிமக் கட்டணம்

**2015 மற்றும் 2016ஆம் ஆண்டுகளுக்கான ஆண்டு உரிமக் கட்டணம்**

1. வங்கித்தொழில் சட்டத்தின் 8(1) மற்றும் 76டி(6) ஆகிய பிரிவுகளின் நியதிகளின் கீழ், நாணயச் சபை 2015 மற்றும் 2016ஆம் ஆண்டுகளுக்காக உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினாலும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளினாலும் செலுத்தப்பட வேண்டிய உரிமக் கட்டணம் மொத்தச் சொத்துக்களின் அடிப்படையில் பின்வருமாறு இருக்க வேண்டும் எனத் தீர்மானித்திருக்கிறது

| முன்னைய ஆண்டின் இறுதியிலுள்ளவாறு மொத்தச் சொத்துக்கள் | உரிமக் கட்டணம் |
|---|---|
| ரூ.750 பில்லியனுக்கு மேல் | ரூ.30.0 மில்லியன் |
| ரூ.500 பில்லியனிலிருந்து ரூ.750 பில்லியன் வரை | ரூ.25.0 மில்லியன் |
| ரூ.200 பில்லியனிலிருந்து ரூ.500 பில்லியன் வரை | ரூ.22.0 மில்லியன் |
| ரூ.125 பில்லியனிலிருந்து ரூ.200 பில்லியன் வரை | ரூ.16.5 மில்லியன் |
| ரூ.75 பில்லியனிலிருந்து ரூ.125 பில்லியன் வரை | ரூ.11.0 மில்லியன் |
| ரூ.25 பில்லியனிலிருந்து ரூ.75 பில்லியன் வரை | ரூ.5.5 மில்லியன் |
| ரூ.25 பில்லியனுக்கும் குறைவாக | ரூ.2.2 மில்லியன் |

**உரிமக் கட்டணக் கொடுப்பனவு**

2. ஒவ்வொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கியும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியும் தொடர்பான ஆண்டின் சனவரி 31ஆம் நாளன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ இலங்கை மத்திய வங்கிக்கு உரிமக் கட்டணங்களைச் செலுத்துதல் வேண்டும்.

3. உரிமக் கட்டணம் கலண்டர் ஆண்டு அடிப்படையில் செலுத்தப்படல் வேண்டும்.

**தொடர்பு எண்: 02/17/402/0073/002** 2014 திசெம்பர் 23

சேரல்: உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

அன்புள்ள ஐயா/ அம்மணி,

## வங்கிகளின் குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாட்டினை அதிகரித்தல்

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பில் 2010 யூலை 29ஆம் திகதியிடப்பட்ட சுற்றறிக்கை எண் 02/17/402/0073/002 கொண்ட எமது சுற்றறிக்கை தொடர்பாக நாம் குறிப்பிடுவதுடன், 2014 சனவரி 17ஆம் திகதியிடப்பட்ட நிதியியல் துறையின் ஒருங்கிணைப்பு மீதான முதன்மைத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டவாறும், வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 19(3) இன் நியதிகளின்படியும் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை வலுவானதும் இயக்கவாற்றல் கொண்டதுமான வங்கித்தொழில் துறையினைக் கருத்திற் கொண்டு, இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட அல்லது நிறுவப்பட்ட அனைத்து உரிமம் பெற்ற வர்த்த வங்கிகளும் அவற்றின் மூலதனத்தினை 2016 சனவரி 01ஆம் நாளிலிருந்து ரூ.10 பில்லியனுக்கு அதிகரிக்குமாறு கேட்டுக் கொள்ளத் தீர்மானித்திருக்கிறது என்பதனையும் அறியத் தருகின்றோம்.

2. இந்நோக்கத்திற்காக, மூலதனம் என்பது 2007 திசெம்பர் 26ஆம் திகதியிடப்பட்ட 2007ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பணிப்புரைக்கான அட்டவணை I ஆக இணைக்கப்பட்டிருந்த வழிகாட்டலிலுள்ள 6.2.2.2 ஆம் இலக்க விடயத்தின் நியதிகளில் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு மைய மூலதனம் எனப் பொருள்படும்.

3. அனைத்து வங்கிகளும் உரிய நேர அடிப்படையில் மேற்குறிப்பிட்டவற்றிற்கு இணங்கியொழுகும் விதத்தில் பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

உங்கள் உண்மையுள்ள
திருமதி ரி எம் ஜே வை பி பர்னாந்து
**வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

**தொடர்பு எண்: 02/17/402/0073/002** 2014 திசெம்பர் 23

சேரல்: உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

அன்புள்ள ஐயா/ அம்மணி,

**வங்கிகளின் குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாட்டினை அதிகரித்தல்**

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பில் 2010 யூலை 29ஆம் திகதியிடப்பட்ட சுற்றறிக்கை எண் 02/17/402/0073/002 கொண்ட எமது சுற்றறிக்கை தொடர்பாக நாம் குறிப்பிடுவதுடன், 2014 சனவரி 17ஆம் திகதியிடப்பட்ட நிதியியல் துறையின் ஒருங்கிணைப்பு மீதான முதன்மைத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டவாறும், வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 76ஜி இன் நியதிகளின்படியும் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை வலுவானதும் இயக்கவாற்றல் கொண்டதுமான வங்கித்தொழில் துறையினைக் கருத்திற் கொண்டு, அனைத்து உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளும் அவற்றின் மூலதனத்தின் 2016 சனவரி 01ஆம் நாளிலிருந்து ரூ.5 பில்லியனுக்கு அதிகரிக்குமாறு கேட்டுக் கொள்ளத் தீர்மானித்திருக்கிறது என்பதனையும் அறியத் தருகின்றோம்.

2. இந்நோக்கத்திற்காக, மூலதனம் என்பது 2007 திசெம்பர் 26ஆம் திகதியிடப்பட்ட 2007ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பணிப்புரைக்கான அட்டவணை I ஆக இணைக்கப்பட்டிருந்த வழிகாட்டலிலுள்ள 6.2.2.2 ஆம் இலக்க விடயத்தின் நியதிகளில் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு மைய மூலதனம் எனப் பொருள்படும்.

3. அனைத்து வங்கிகளும் உரிய நேர அடிப்படையில் மேற்குறிப்பிட்டவற்றிற்கு இணங்கியொழுகும் விதத்தில் பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

உங்கள் உண்மையுள்ள
திருமதி ரி எம் ஜே வை பி பர்னாந்து
**வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

சி.ஜே.பி. சிறிவர்த்தன
உதவி ஆளுநர்
2014 ஒத்தோபர் 10

சேரல்: உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்
உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்
உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும்
சிறப்பியல்வு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளின்
தலைவர்கள் மற்றும் முதன்மை நிறைவேற்று அலுவலர்கள்

அன்புள்ள ஐயா/ அம்மணி,

**நிதியியல் துறை ஒருங்கிணைப்பினை வசதிப்படுத்துவதற்காக 2006ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க உள்நாட்டரசிறைச் சட்டம் மற்றும் 2002ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க பெறுமதிசேர் வரிச் சட்டம் என்பனவற்றின் ஏற்பாடுகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட திருத்தங்களைத் தொடர்வதற்கான வழிகாட்டல்கள்**

நாம் மேற்குறிப்பிட்ட வழிகாட்டல்களை தங்களின் தகவல்களுக்காகவும் தேவையான நடவடிக்கைகளுக்காகவும் இணைத்துள்ளோம். இது தொடர்பில், நிதி திட்டமிடல் அமைச்சு 2014 ஒத்தோபர் 9ஆம் திகதியிடப்பட்ட அவர்களது கடிதத்தில் இலங்கை மத்திய வங்கிக்கு பின்வரும் விடயங்களை அறிவித்திருக்கின்றது என்பதனை அறியத்தர விரும்புகின்றோம்.

1. நிதியியல் நிறுவனங்களின் ஒருங்கிணைப்புத் தொடர்பாக உள்நாட்டரசிறைச் சட்டத்திற்கும் பெறுமதிசேர் வரிச் சட்டத்திற்கும் செய்யப்பட்ட தொடர்பான திருத்தங்கள் நிதிக் குத்தகைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட குத்தகைக்குவிடும் கம்பனிகளின் வரி ஊக்குவிப்புக்களுக்கும் 2014 ஏப்பிறல் 01 ஆம் நாளிலிருந்து விரிவாக்கப்படவுள்ளது.
2. கையேற்பு/ இணைப்புக் காரணமாக ஏற்படும் பங்குகளின் மாற்றல்களுக்கு, அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையொன்றின் மூலம் முத்திரைத் தீர்வையிலிருந்தும் விலக்களிக்கப்படும்.
3. மத்திய வங்கியினால் விடுக்கப்பட்ட வழிகாட்டல்களின்படி, கண்டறியப்பட்ட கையேற்பு/ இணைப்பின் முழுச் செலவும் தகுதிவாய்ந்த கொடுப்பனவாக கருதப்படவுள்ளதுடன் மதிப்பிடத்தக்க வருமானத்தில் உயர்ந்தபட்சம் 1/3 என்ற வரையறைக்குட்பட்டு கையேற்பு/ இணைப்பின் ஆண்டு மதிப்பீட்டிலிருந்து கழிக்கப்பட முடியும் என்பதுடன் எஞ்சிய தொகை ஏதுமிருப்பின் அது முன்கொண்டு செல்லப்பட்டு இதே வரையறைகளுக்குட்பட்டு மதிப்பீடுகளின் அடுத்துவரும் ஆண்டுகளின் மதிப்பிடத்தக்க வருமானத்திற்கெதிராக எதிரீடு செய்யப்படும். எனினும், கையேற்கும் நிதியியல் நிறுவனத்தின் மதிப்பிடத்தக்க வருமானம் ரூ.300 மில்லியனாக இருக்குமிடத்து தகைமைக் கொடுப்பனவு மதிப்பிடத்தக்க வருமானத்தின் மட்டம் வரை கழிக்கப்பட முடியும் என்பதுடன் எஞ்சியுள்ள ஏதேனும் தொகை முன்கொண்டு செல்லப்பட்டு எதிர்காலத்தில் மதிப்பிடத்தக்க வருமானத்திற்கெதிராக எதிரீடு செய்யப்படும்

உங்கள் உண்மையுள்ள
**நிதித் துறை ஒருங்கிணைப்புப் பிரிவின் தலைவர்**

2014ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க உள்நாட்டரசிறை (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 2006ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க உள்நாட்டரசிறைச் சட்டத்தின் 34ஆம் பிரிவு மற்றும் 2014ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க பெறுமதிசேர் வரிகள் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 2002ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க பெறுமதிசேர் வரிச் சட்டத்தின் 22ஆம் பிரிவு என்பனவற்றின் நியதிகளுக்கிணங்க நாணயச் சபையினால் விடுக்கப்பட்ட வழிகாட்டல்கள்.

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
**தலைவர்**
**நாணயச் சபை**
**இலங்கை மத்திய வங்கி**

கொழும்பு
2014 ஒத்தோபர் 10

**நிதியியல் நிறுவனங்களை கையேற்றல்/ இணைத்தல் செலவினைக் கண்டறிதல் மீதான வழிகாட்டல் மற்றும் ஈர்த்துக் கொள்ளப்படாத உள்ளீட்டு பெறுமதிசேர் வரியின் உரிமைக் கோரல் தன்மை மற்றும் அவற்றுடன் தொடர்பான விடயங்கள்**

1. **முன்னுரை**

1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் 5ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் உள்ளடக்கத்திற்கு ஏற்றவாறு இலங்கை மத்திய வங்கி நிதியியல் முறை உறுதிப்பாட்டினைப் பேணுகின்ற அதன் கடப்பாட்டின் கீழ், நிதியியல் நிறுவனங்களை வலுவானதாகவும் இயக்கவாற்றல் கொண்டனவாகவும் உருவாக்குகின்ற அதேவேளையில் இந்நிறுவனங்களின் தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மையினையும் பலப்படுத்தி வருகின்றது. இந்நோக்கத்திற்காக, உரிமம் பெற்ற வங்கிகள், உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் என்பனவற்றை இணைத்தல் மூலமாக அல்லது கையேற்றல் மூலமாக அல்லது வியாபாரத்தினை ஈர்த்துக் கொள்ளல் மூலமாக ஒருங்கிணைத்துக் கொள்வதற்கான முதன்மைத் திட்டமொன்றினை மத்திய வங்கி அறிவித்திருக்கின்றது.

2. முறையே 2006ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க உள்நாட்டரசிறைச் சட்டம் மற்றும் 2002ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க பெறுமதிசேர் வரிச் சட்டம் என்பனவற்றின் ஏற்பாடுகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட திருத்தங்களைப் பின்பற்றுவதற்கான பின்வரும் வழிகாட்டல்களை மத்திய வங்கிக்கு இத்தால் விடுக்கின்றது.

**பகுதி I** : 2014ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க உள்நாட்டரசிறைச் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 2006ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க உள்நாட்டரசிறைச் சட்டத்தின் 34ஆம் பிரிவின் நியதிகளில் **கையேற்றல்/ இணைத்தல் செலவினைக்** கண்டறிதல்.

**பகுதி II** : 2014ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க பெறுமதிசேர் வரிச் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 2002ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க பெறுமதிசேர் வரிச் சட்டத்தின் 22ஆம் பிரிவின் நியதிகளுக்கிணங்க கழிக்கப்படவுள்ள ஏதேனும் வங்கி அல்லது நிதி நிறுவனத்தின் ஏதேனும் **ஈர்க்கப்படாத உள்ளீட்டுக் கொடுகடனின்** உரிமைக் கோரல் தன்மை.

3. இவ்வழிகாட்டல்கள் இதனகத்துப் பின்னர் நிதியியல் நிறுவனங்கள் என அழைக்கப்படும் 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் கீழ் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள், 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதி குத்தகைக்குவிடுதல் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட குத்தகைக்குவிடும் கம்பனிகள் என்பனவற்றிற்கு ஏற்புடைத்தனவாகும்.

4. "கையேற்றல் அல்லது இணைத்தல் செலவு" இனைக் கண்டறிதல் தொடர்பிலான வழிகாட்டல்களில் நிதியியல் நிறுவனங்களின் கையேற்பு/ இணைப்பினைப் பொறுத்தவரையிலான ஏற்பாடுகள் 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 245ஆம் பிரிவின் (ஈ), (உ), (ஊ) மற்றும் (எ) ஆகிய பந்திகளின் ஏற்பாடுகளுக்கு உட்பட்டனவாகும்.

5. உள்நாட்டரசிறைச் சட்டம், பெறுமதிசேர் வரிச் சட்டம் மற்றும் பொருளாதாரப் பணிகள் விதிப்புச் சட்டம் என்பன தொடர்பான திருத்தங்களுக்குட்பட்டு தகைமைக் கொடுப்பனவொன்றாக கையேற்பு/ இணைப்புச் செலவினை மேற்கொள்வதற்குப் புறம்பாக, கையேற்றல்/ இணைத்தல் தொடர்பில் ஏற்படுகின்ற வரிச் சீராக்கங்கள் தொடர்பில் உள்ளடக்கப்படவுள்ள ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு அல்லது அதற்கு காத்திரமான தன்மையொன்றினை வழங்கும் நோக்கத்திற்காக உள்நாட்டரசிறைச் சட்டத்தின் 212ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் ஒழுங்குவிதிகள் விபரிக்கப்பட்டுள்ளன.

6. இவ்வழிகாட்டல்களின் நியதிகளில் கண்டறியப்படும் கையேற்புச் செலவு அல்லது இணைத்தல் செலவு முழுவதும் தகைமைக் கொடுப்பனவொன்றாக வரி நோக்கங்களுக்கான கழிப்பு நோக்கங்களுக்காக கையேற்பு அல்லது இணைத்தல் செலவாக கருதப்படும் என்பதுடன் முற்போந்த உள்நாட்டரசிறைச் சட்டத்தின் 212ஆம் பிரிவின் கீழ் விபரிக்கப்பட்டுள்ள ஏனைய வரி நடைமுறைகள் (மற்றும் அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளவை) மேலே விடயம் 5இல் குறிப்பிடப்பட்டுள்ள தொடர்பான திருத்தங்களுடன் சேர்ந்து ஏற்புடைத்தனவாக இருக்கும்.

7. இவ்வழிகாட்டல்கள் 2014 ஏப்பிறல் 01 ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும்.

## பகுதி I

8. தொடர்பான விருப்பத்தேர்வுகள் தொடர்பில் உள்நாட்டரசிறைச் சட்டத்தின் பிரிவு 34(2)(x) இன் நியதிகள் மற்றும் அதன் நோக்கத்திற்காகவும் கையேற்பு அல்லது இணைப்புச் செலவினைக் கண்டறிவதற்கான வழிகாட்டல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(i) தற்பொழுது நடைபெற்று வருவதன் அடிப்படையில் வியாபாரத்தினைக் கையேற்கும் செலவு/ பங்குகளை கையேற்கும் செலவு

(ii) இணைப்புச் செலவு

8.1 இச்செலவுகள் உள்நாட்டரசிறைச் சட்டத்தின் 25ஆம் பிரிவின் கீழ் அல்லது உள்நாட்டரசிறைச் சட்டத்தின் வேறு ஏதேனும் ஏற்பாடுகளின் கீழ் அல்லது கருத்தியல் ரீதியான வரிக் கொடுகடன், பிடித்துவைத்தல் வரி, மீளளிப்புக்கள் அல்லது பெறுமதிசேர் வரியின் ஈர்க்கப்படாத மீதிகள், முன்கொண்டு செல்லப்பட்ட பொருளாதாரப் பணிக் கட்டணங்கள், கையேற்கப்பட்ட கம்பனியில் தொடர்ந்தும் அனுமதிக்கப்படவுள்ள முன்னோக்கிக் கொண்டு செல்லப்படும் இழப்பு போன்ற கிடைக்கத்தக்க வேறு ஏதேனும் கிடைக்கத்தக்க கொடுகடன்கள் என்பனவற்றின் கீழ் கழிக்கத்தக்க ஏதேனும் செலவினத்தினை உள்ளடக்கமாட்டாது.

8.2 கையேற்பு/ இணைப்பு அல்லது ஒன்றுசேர்த்தலுக்கு முன்னதாக உள்நாட்டரசிறைத் திணைக்களத்துடன் வரி நிலைமை இறுதிப்படுத்தப்பட்டிருக்குமாயின் செலுத்தப்பட்ட வரி (கையேற்கப்பட்ட கம்பனியினால்) கையேற்புச் செலவின் ஒரு பகுதியாகக் கருதப்படும். வரி செலுத்தப்பட்டிருக்காவிடின் கையேற்புச் செலவு அதற்கேற்ப சீராக்கப்படுதல் வேண்டும்.

9. **தற்பொழுது நடைபெற்று வருவதன் அடிப்படையில் வியாபாரத்தின் கையேற்புச் செலவு அல்லது பங்குகளின் கையேற்புச் செலவு**

பின்வரும் செலவுகள் கையேற்புச் செலவுகளாகக் கருதப்படும்:

(i) செலுத்தப்பட்ட கொள்வனவுத் தொகையானது, கையேற்புத் திகதியிலுள்ளவாறான நிதியியல் நிலைமைக் கூற்றுக்களின் பெறத்தக்க/ செலுத்தப்படத்தக்க அனைத்து தொடர்பான தொகைகளும் உள்ளடக்கப்பட்டதன் பின்னர் பெறப்பட்ட மற்றும் கையேற்பு வரை செலுத்தப்பட்ட தொடர்பான வரிகள் உட்பட உறப்பட்ட செலவினமாக இருக்கும்;

(ii) சட்ட மற்றும் மதிப்பீட்டுக் கட்டணங்கள் உட்பட செலுத்தப்பட்ட அனைத்துத் தொழில்சார் நிபுணத்துவ மற்றும் ஆலோசனைக் கட்டணங்கள்;

(iii) செலுத்தப்பட்ட ஆவணப்படுத்தல் கட்டணம்;

(iv) உந்து ஊர்திகளின் மாற்றல் மற்றும் உந்து ஊர்திகளின் முழுமையான சொத்துரிமையின் மீள்மதிப்பீடு என்பனவற்றிற்காக தொடர்பான அதிகாரிகளுக்குச் செலுத்தப்பட்ட கட்டணம்;

(v) 2006ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க முத்திரைத் தீர்வை (சிறப்பு ஏற்பாடுகள்) சட்ட நியதிகளுக்கிணங்க சொத்துக்களின் மாற்றல் அல்லது ஒப்படை மற்றும் தொடர்பான நிதியியல் சட்டங்களின் கீழ் மாகாண சபைகள் தொடர்பில் செலுத்தப்பட்ட முத்திரைத் தீர்வை கையேற்பு முதலீட்டுச் சொத்துப்பட்டியலின் பங்குகள், குத்தகை நில உரிமைகள் போன்றவற்றின் கையேற்பு அல்லது ஒப்படைகளை வலிதாக்குவதற்கு மேற்கொள்ளப்படவுள்ள வேறு ஏதேனும் சாதனங்கள்;

(vi) தகவல் தொழில்நுட்ப முறைமைகளின் மீது உறப்பட்ட செலவினம்;

(vii) கையேற்கப்பட்ட நிறுவனத்தின் அலுவலர்களுக்குப் பயிற்சியளிப்பதற்கான பயிற்சியளித்தல் மற்றும் அபிவிருத்திச் செலவுகள் உட்பட மனித வளத்துடன் தொடர்பான செலவுகள்;

(viii) வர்த்தக நாம அடையாளம்/ சந்தைப்படுத்தல்/ விளம்பரப்படுத்தல் தொடர்பான செலவுகள்;

(ix) கையேற்புச் செய்யும் நேரத்தில் கையேற்கும் நிறுவனத்தின் மூலதனத்தினை அதிகரிப்பதற்கு மத்திய வங்கி அளித்த ஒப்புதலின் காரணமாக உறப்பட்ட ஏதேனும் தொகை மற்றும் நிதியியல் நிறுவனத்தில் கையேற்புக் காரணமாக விசேடமாக உறப்படவிருக்கும் மூலதனம் மற்றும் வருமானம் ஆகிய இரண்டினதும் தொடர்பான ஏனைய செலவுகள்;

(x) பெறுமதிசேர் வரிச் சட்டத்தின் பிரிவு 16(5) இன் கருத்தின்படி (கையேற்கப்பட்ட நிறுவனத்தின் பதிவினை இல்லாததாக்கல், கையேற்பின் பின்னர் கையேற்றவரினால் அதே வரி விதிக்கத்தக்கதான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமாயின்) பெறுமதிசேர் வரியைச் செலுத்துவதற்கான பொறுப்பின்றி கையேற்பினை மேற்கொள்ள முடியும் எனினும், ஏதேனும் பெறுமதிசேர் வரி செலுத்தப்படத்தக்கதாக இருக்குமிடத்து இது பெறுமதிசேர் வரி போன்ற வெளியீட்டு வரிக்கெதிராக உரிமைக் கோரல்களைக் கோரமுடியாது.

**10. இணைப்புச் செலவு**

பின்வரும் செலவுகளை இணைப்புச் செலவுகளாகக் கருதுதல் வேண்டும்:

(i) செலுத்தப்பட்ட தொடர்பான வரிகள் ஏதேனுமிருக்குமிடத்து அவை உட்பட உறப்பட்ட செலவினம்.

(ii) சட்ட மற்றும் மதிப்பீட்டுக் கட்டணங்கள் உட்பட செலுத்தப்பட்ட அனைத்துத் தொழில்சார் நிபுணத்துவ மற்றும் ஆலோசனைக் கட்டணங்கள்;

(iii) செலுத்தப்பட்ட ஆவணப்படுத்தல் கட்டணம்;

(iv) உந்து ஊர்திகளின் மாற்றல் மற்றும் உந்து ஊர்திகளின் முழுமையான சொத்துரிமையின் மீள்மதிப்பீடு என்பனவற்றிற்காக தொடர்பான அதிகாரிகளுக்குச் செலுத்தப்பட்ட கட்டணம்;

(v) 2006ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க முத்திரைத் தீர்வை (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் நியதிகளில் செலுத்தப்பட்ட ஏதேனும் முத்திரைத் தீர்வையும் இணைப்பிற்குக் காத்திரமான தன்மையினை வழங்கும் பொருட்டு தொடர்பான நிதியியல் சட்டங்களின் கீழ் மாகாண சபைகளுக்கு செலுத்தப்பட்டவையும்;

(vi) பெறுமதிசேர் வரிச் சட்டத்தின் 16(5)ஆம் பிரிவின் கருத்துப்படி (இணைப்பிற்கு முன்னர் பெறுமதிசேர் வரி பதிவு இல்லாததாக்கப்பட்ட இணைகின்ற நிறுவனங்கள்), பெறுமதிசேர் வரியினைச் செலுத்துவதற்கான பொறுப்பின்றி இணைப்பினை மேற்கொள்ள முடியும். எனினும், செலுத்தப்படத்தக்க பெறுமதிசேர் வரி ஏதுமிருப்பின், அத்தகைய பெறுமதிசேர் வரியின் வெளியீட்டு வரிக்கெதிராக கோரல் உரிமை எதனையும் கோரமுடியாது;

(vii) தகவல் தொழில்நுட்ப முறைமைகளின் மீது உறப்பட்ட செலவினம்;

(viii) கையேற்கப்பட்ட நிறுவனத்தின் அலுவலர்களுக்குப் பயிற்சியளிப்பதற்கான பயிற்சியளித்தல் மற்றும் அபிவிருத்திச் செலவுகள் உட்பட மனித வளத்துடன் தொடர்பான செலவுகள்;

(ix) வர்த்தக அடையாளம்/ சந்தைப்படுத்தல்/ விளம்பரப்படுத்தல் தொடர்பான செலவுகள்;

(x) இணையும் நேரத்தில் இணைக்கப்பட்ட நிறுவனத்தின் மூலதனத்தினை அதிகரிப்பதற்கான மத்திய வங்கியின் ஒப்புதல் காரணமாக உறப்பட்ட ஏதேனும் தொகை.

## பகுதி II

**11. வியாபாரம் நடைபெற்றுவரும் அதே அடிப்படையில் அதனைக் கையேற்றல் அல்லது பங்குகளைக் கையேற்றல்**

11.1 ஈர்த்துக் கொள்ளப்படாத உள்ளீட்டு வரவுகள் பின்வரும் ஏதேனும் உள்ளீட்டு பெறுமதிசேர் வரியினை உள்ளடக்குகின்றன (ஐந்தொகையில் பிரதிபலிக்கப்பட்டவை)

(i) வரிப்பட்டியல்களும் சுங்க வெளிப்படுத்துகைகளும் பெறுமதிசேர் வரிக் கூற்றுக்களில் உரிமை கோரப்படாதிருப்பினும் உரிமை கோரப்படுவதற்கு சட்ட ரீதியாகக் கிடைக்கத்தக்கவைகளின் கையேற்பு இடம்பெறவில்லை. அதாவது நேரத்தின் அடிப்படையிலன்றி பெறுமதிசேர் வரிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்குட்பட்டதாக இருந்தவை.

(ii) கையேற்புத் திகதிக்குப் பின்னர் கையேற்கப்பட்ட கம்பனியின் பெயரில் நிரம்பலர்களினால் அல்லது சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட வரிப்பட்டியல் அல்லது சுங்க வெளிப்படுத்துகைகள் ஈர்த்துக் கொள்ளப்படாத உள்ளீட்டு வரவுகளின் ஒரு பகுதியாகக் கருதப்பட்டவை.

11.2 பொருட்பட்டியலும் சுங்க வெளிப்படுத்துகைகளும் கையேற்கப்பட்ட நிறுவனத்தின் பெயரையும் பெறுமதிசேர் வரிப் பதிவின் இலக்கத்தையும் கொண்டிருக்கின்ற போதிலும் கூட 11.1இல் குறிப்பிடப்பட்ட வரிப்பட்டியல்கள் மற்றும் சுங்க வெளிப்படுத்துகைகள் கையேற்கப்பட்ட நிறுவனத்தின் பெயரில் வழங்கப்பட்டிருப்பதாக கருதப்பட முடியும்.

11.3 பெறுமதிசேர் வரிச் சட்டத்தின் 22ஆம் பிரிவின் நோக்கங்களுக்காக கையேற்கப்பட்ட நிறுவனங்களின் முன்சொல்லப்பட்ட ஈர்க்கப்படாத உள்ளீட்டு பெறுமதிசேர் வரி கையேற்கப்பட்ட நிறுவனத்தின் ஈர்த்துக் கொள்ளப்படாத உள்ளீட்டு பெறுமதிசேர் வரியாகக் கருதப்படும்.

**12. இணைத்தல்**

12.1 ஈர்த்துக் கொள்ளப்படாத உள்ளீட்டு வரவுகள் ஏதேனும் பின்வரும் உள்ளீட்டு பெறுமதிசேர் வரியினை உள்ளடக்குகின்றன (ஐந்தொகையில் பிரதிபலிக்கப்பட்டவை)

(i) வரிப்பட்டியல்களும் சுங்க வெளிப்படுத்துகைகளும் பெறுமதிசேர் வரிக் கூற்றுக்களில் பதிவு செய்யப்படாத போதும் சட்ட ரீதியில் கோரப்படுவதற்கு கிடைக்கத்தக்கவைகளாகவுள்ளதுடன் இணைப்பு இடம்பெறவில்லை (அதாவது நேரத்தின் அடிப்படையிலல்ல)

(ii) கையேற்புத் திகதிக்குப் பின்னர் கையேற்கப்பட்ட கம்பனியின் பெயரில் நிரம்பலர்களினால் அல்லது சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட வரிப்பட்டியல் அல்லது சுங்க வெளிப்படுத்துகைகள் ஈர்த்துக் கொள்ளப்படாத உள்ளீட்டு வரவுகளின் ஒரு பகுதியாகக் கருதப்படும்.

12.2 12.1இல் குறிப்பிடப்பட்ட வரிப்பட்டியல்கள் மற்றும் சுங்க வெளிப்படுத்துகைகள் கையேற்கப்பட்ட நிறுவனத்தின் பெயரில் வழங்கப்பட்டிருப்பதாக கருதப்படக்கூடியதாக இருக்கின்ற போதிலும் முன்கூறப்பட்ட பொருட்பட்டியலும் சுங்க வெளிப்படுத்துகைகளும் கையேற்கப்பட்ட நிறுவனத்தின் பெயரையும் பெறுமதிசேர் வரிப் பதிவின் இலக்கத்தையும் கொண்டிருக்கின்றன.

12.3 பெறுமதிசேர் வரிச் சட்டத்தின் 22ஆம் பிரிவின் நோக்கங்களுக்காக கையேற்கப்பட்ட நிறுவனங்களின் முன்சொல்லப்பட்ட ஈர்க்கப்படாத உள்ளீட்டு பெறுமதிசேர் வரி கையேற்கப்பட்ட நிறுவனத்தின் ஈர்த்துக் கொள்ளப்படாத உள்ளீட்டு பெறுமதிசேர் வரியாகக் கருதப்படும்.

**தொடர்பு எண்: 12/02/0001/0036/002** 2014 மே 12

சேரல்: அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினதும் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

அன்புள்ள ஐயா/ அம்மணி,

**தன்னியக்கக் கூற்றுப் பொறியிலிருந்து காசினை மீளப்பெறல்**

“இலங்கை மத்திய வங்கியுடனான காசுக் கொடுக்கல்வாங்கல்கள் மீதான வழிகாட்டல்கள்” தொடர்பில் 2007 மாச்சு 12ஆம் நாளிடப்பட்ட சுற்றறிக்கை எண் 2007-1 தொடர்பாகவும் “காசுப் பணிகள் மற்றும் தொழிற்பாடுகளின் முறைமையினை மேம்படுத்தல்” தொடர்பில் 2012.06.11 இல் விடுக்கப்பட்ட சுற்றறிக்கை பற்றியும் குறிப்பிடுகிறோம்.

குறிப்பிட்ட சில வங்கிக் கிளைகளிலுள்ள தன்னியக்கக் கூற்றுப் பொறி ரூ.5,000 நாணயத் தாள்களை மட்டுமே வழங்குவதனால் பொதுமக்கள் தன்னியக்கக் கூற்றுப் பொறிகளிலிருந்து காசினை மீளப் பெற்றுக் கொள்ளும் பொழுது பெருமளவு வசதியீனங்களுக்குட்படுவது தொடர்பாக பொதுமக்களிடமிருந்து அநேக முறைப்பாடுகளை இலங்கை மத்திய வங்கி பெற்றிருக்கிறது. இது பொதுமக்கள் அவர்களது நாளாந்த காசுக் கொடுக்கல்வாங்கல்களுக்கான குறைந்த இன நாணயத் தாள்களை வைத்திருப்பதனை தடை செய்கிறது.

பொதுமக்களுக்கு ஏற்படும் அத்தகைய வசதியீனங்களைத் தவிர்க்கும் பொருட்டு ரூ.5,000 இன நாணயத் தாள்களுக்குப் பதிலாக ரூ.100, ரூ.500 மற்றும் ரூ.1,000 கொண்ட பல்வேறு இன நாணயத் தாள்களை வழங்குவதன் மூலம் பொதுமக்களுக்கு வசதிகளை வழங்குமாறு வங்கிகள் அறிவுறுத்தப்படுகின்றன. மேலும், தன்னியக்கக் கூற்றுப் பொறிகளுக்கு காசினை ஏற்றுவதற்கு இடைப்போக்கிலுள்ள காசுக் கம்பனிகளைப் பயன்படுத்தும் வங்கிகள் மத்திய வங்கியின் மேற்குறிப்பிட்ட அறிவுறுத்தல்களுக்கு இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

உங்கள் உண்மையுள்ள,
**நாணயக் கண்காணிப்பாளர்**

**தொடர்பு எண்: 12/02/008/0007/001** 2014 யூலை 21

**சுற்றறிக்கை எண்: 2014 -2**

அன்புள்ள ஐயா/ அம்மணி,

**மத்திய வங்கியுடனான காசுக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான வழிகாட்டல்கள்**

இது மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பில் 2007 மாச்சு 15ஆம் நாளிடப்பட்ட இல. 2007-1 கொண்ட சுற்றறிக்கை பற்றி குறிப்பாக மத்திய வங்கியினால் காசு வைப்புக்கள் ஏற்றுக்கொள்வது பற்றிய பிரிவு 1.5 பற்றி விசேஷித்துக் குறிப்பிடுகின்றது. இதன் பிரதியொன்று இலகுவான உசாவுதலுக்காக இத்துடன் இணைக்கப்பட்டிருக்கிறது.

1. இலங்கை மத்திய வங்கியின் நாணயத் திணைக்களப் பணிமனையில் வங்கி அலுவலர்களினால்/ பிரதிநிதிகளினால் (CIT கம்பனிகள்) காசுக் கட்டுக்கள் மீள ஒழுங்குபடுத்தப்படுவதும் கொடுப்பனவு பற்றுத் துண்டுகள் மற்றும் வங்கியினால் வழங்கப்பட்ட உத்தரவாதக் கடிதங்கள் மொத்தக் காசுடன் சரிபார்க்கப்படுவதும் வழமையான நடைமுறைகளாகும். உத்தரவாதக் கடிதம் மற்றும் உண்மையான காசு வைப்புக்களில் ஏதாவது குறைபாடுகள் காணப்படும் சந்தர்ப்பத்தில், நாணயத் திணைக்களம் தொடர்பான வங்கியினை நாணயத் திணைக்களத்தில் வைப்புக்களை மேற்கொள்ளும் நேரத்தில் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு அனுமதிக்கும்.

   எனினும், இந்நடைமுறையானது இலங்கை மத்திய வங்கியின் காசுத் தொழிற்பாடுகளில் தேவையற்ற தாமதங்களுக்குக் காரணமாவதுடன் இடைப்போக்கிலுள்ள காசுடன் தொடர்புபட்ட இடர்நேர்வுகளிலும் அதிகரிப்பினை ஏற்படுத்தும். ஆகவே, இந்நடைமுறையினை நிறுத்துவதென இலங்கை மத்திய வங்கி தீர்மானித்துள்ளது.

2. இதற்கமைய அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் உத்தரவாத காசுப்பெட்டிகளை மத்திய வங்கியில் வைப்புச் செய்வது தொடர்பில் 2014 ஓகத்து 1ஆம் நாளிலிருந்து பின்வரும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றனர்.

   **2.1 இலங்கை மத்திய வங்கியினால் காசு வைப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படுதல்**

   2.1.1 உரிமம் பெற்ற வர்த்தக வங்கியினால் வழங்கப்படும் உத்தரவாதக் கடிதம் ஏதேனும் குறிப்பிட்டதொரு நாளன்று தொடர்பான உரிமம் பெற்ற வர்த்தக வங்கியின் காசு வைப்புக்கள் தொடர்பிலான முழுமையானதொரு ஆவணமாகக் கருதப்படுவதனால் நாணயத் திணைக்களத்திலுள்ள பெட்டிகளில் வைத்திருக்கப்படும் காசுக் கட்டுக்களை மாற்றுவதோ அல்லது மீள்ஒழுங்குபடுத்துவதோ அனுமதிக்கப்படமாட்டாது.

2.1.2 அனைத்து வர்த்தக வங்கிகளும் காசுப் பெட்டிக்குள் இருக்கும் காசுக் கட்டுக்களின் மொத்தப் பெறுமதியினையும் விபரங்களையும் துல்லியமாக எடுத்துக்காட்டும் சுட்டுத் துண்டொன்றினை பெட்டியின் மேலே ஒட்ட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றன. அதே ஆவணத்தின் பிரதியொன்று பெட்டிக்குள்ளே காசுக் கட்டுக்களுக்கு மேலே வைத்திருக்கப்படல் வேண்டும். மாதிரி சுட்டுத் துண்டு இணைப்பு 1இல் தரப்பட்டுள்ளது.

2.1.3 வைப்புக்களை ஏற்றுக்கொள்ளும் வேளையில் நாணயத் திணைக்களத்திலுள்ள உயர் பதவி அலுவலர், வங்கி அலுவலர்கள்/ பிரதிநிதிகளின் முன்னிலையில் காசுப் பெட்டியைத் திறந்து, உத்தரவாதக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நாணயத் தாள்களின் மொத்தப் பெறுமதியினையும் நாணய இனங்களையும் சரிபார்ப்பதுடன் பெட்டியின் மேலே ஒட்டப்பட்டுள்ள சுட்டுத்துண்டும் பெட்டியின் உள்ளே வைக்கப்பட்டுள்ள சுட்டுத் துண்டும் ஒன்றுடன் ஒன்று ஒத்திருக்கின்றதா என்பதனையும் பார்வையிடுவார்.

2.1.4 சுட்டுத் துண்டுகளுக்கும் (பெட்டிக்குள்ளேயும் வெளியுமுள்ளவை) உத்தரவாதக் கடிதத்திற்குமிடையில் ஏதேனும் இணக்கப்பாடின்மை காணப்படுமிடத்து உத்தரவாதக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொத்தப் பெறுமதியும் நாணய இனத் தாள்களுமே முழுமையான பெறுமதியாகக் கருதப்படும். ஆகவே, நாணயத் திணைக்களம் பெட்டியின் மேலே ஒட்டுவதற்கும் பெட்டியின் உள்ளே வைப்பதற்காகவும் உத்தரவாதக் கடிதத்துடன் ஒத்திருக்கும் விதத்தில் இரண்டு சுட்டுத் துண்டுகளை வங்கி அலுவலர்கள்/ பிரதிநிதிகளின் அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பத்துடன் தயாரிப்பதற்கு ஒப்புதலளிக்கும்.

2.1.5 உரிமம் பெற்ற வர்த்தக வங்கியின் உத்தரவாதக் கடிதத்திற்கிணங்க வைப்புச் செய்யப்பட்ட நாணயக் கட்டுக்களின் பெறுமதி மற்றும் கட்டுக்களின் எண்ணிக்கை தொடர்பிலான பற்றுச்சீட்டினை வைப்புச் செய்கின்ற வங்கி பெற்றுக்கொள்ளும்.

**2.2 காசு வைப்புக்களைச் சரிபார்த்தல்**

2.2.1 பெட்டிகளிலுள்ள நாணயத்தினை சரிபார்க்கும் வேளையில் (அதே நாள் அல்லது பின்னர்) நாணயத் திணைக்கள அலுவலர்களின் முன்னிலையில் தொடர்பான உரிமம் பெற்ற வங்கியின் அலுவலர்கள்/ பிரதிநிதிகள் பெட்டியைத் திறக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுவர்.

2.2.2 “இலங்கை மத்திய வங்கியிலுள்ள நாணய வைப்புக்களில் காணப்படும் இணக்கப்பாடின்மைகள் தொடர்பிலான” 2007 பெப்புருவரி 21ஆம் திகதியிடப்பட்ட சுற்றறிக்கை 2012-1 இன்படி உத்தரவாதப் பெட்டிகளிலுள்ள நாணயத் தாள்களில் காணப்படும் நாணயத் தாள்களின் எண்ணிக்கையில் குறைந்தமைக்கான தண்டப் பணம் தொடர்ந்துமிருப்பதுடன் நாணயத் தாள்களின் எண்ணிக்கையில் மிகை காணப்படுமாயின் அவை திருப்பித்தரப்படமாட்டாது.

2.2.3 மேலே 2.1 இலுள்ளவாறு உத்தரவாதப் பெட்டிகளை ஏற்றுக்கொள்கின்ற நேரத்தில் பயன்படுத்தக்கூடிய நாணயத் தாள்களை (பொருத்தமானவை) செயன்முறைப்படுத்துவதற்கான பணிக் கட்டணம் தொடர்ந்துமிருக்கும். எனினும், நாணயக் கட்டுக்களின் வகையில் ஏதேனும் மாற்றம் இடம்பெறும் சந்தர்ப்பத்தில் ஏற்புடைத்தாக இருக்கும் பணிக் கட்டணங்கள் வைப்புக்களை சரிபார்க்கும் நேரத்தில் விதிக்கப்படும்.

ஏதேனும் தெளிவுபடுத்தல்களுக்கு நாணயத் திணைக்களத்தின் பின்வரும் அலுவலர்களை நீங்கள் தொடர்பு கொள்ளமுடியும்.

துணைக் கண்காணிப்பாளர் 0112477028 அல்லது 0112477362

மூத்த உதவிக் கண்காணிப்பாளர் 0112477372

உங்கள் உண்மையுள்ள,
**நாணயக் கண்காணிப்பாளர்**

**இணைப்பு I**

**உத்தரவாத வைப்பு**

**பெட்டியின் எண்:** **திகதி:**

**வங்கி:**

| நாணயத் தாளின் இனம் | பயன்படுத்தத்தக்கவை (கட்டுக்கள்) | பயன்படுத்த முடியாதவை (கட்டுக்கள்) | சேதமடைந்தவை (கட்டுக்கள்) | தரம்பிரிக்கப்படாதவை (கட்டுக்கள்) | மொத்தம் (பெறுமதி) |
|---|---|---|---|---|---|
| 5000/- | | | | | |
| 2000/- | | | | | |
| 1000/- | | | | | |
| 500/- | | | | | |
| 200/- | | | | | |
| 100/- | | | | | |
| 50/- | | | | | |
| 20/- | | | | | |
| 10/- | | | | | |
| மொத்தம் | | | | | |

.................................................................................. ..................................................................................

அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பம் 1 அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பம் 2

**சுற்றறிக்கை எண்: 35/01/005/0010/18** 2014 சனவரி 02

அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்

**உந்து ஊர்திகளின் இறக்குமதிக்கான நாணயக் கடிதத்திற்கெதிரான அளவுத் தேவைப்பாடுகள்**

இது, மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பான 2013 ஓகத்து 30ஆம் நாளிடப்பட்ட இல. 35/01/005/0010/15 கொண்ட சுற்றறிக்கை மற்றும் அதனைத் தொடர்ந்து வந்த முறையே 2013 செத்தெம்பர் 24ஆம் நாள் மற்றும் 2013 ஒத்தோபர் 21ஆம் நாளிடப்பட்ட முறையே 35/01/005/0010/16 மற்றும் இல. 35/01/005/0010/17 கொண்ட சுற்றறிக்கைகள் தொடர்பானது.

இல. 35/01/005/0010/15 கொண்ட எமது சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட அட்டவணை அ இல் குறித்துரைக்கப்பட்ட விடயங்களின் இறக்குமதிக்காக நாணயக் கடிதத்தினைத் திறக்கும் நேரத்தில் 100 சதவீத காசு அளவுத் தேவைப்பாடு பேணப்பட வேண்டும் என்பது இன்றிலிருந்து (02.01.2014) நடைமுறைக்குவரும் விதத்தில் புறக்கீடு செய்யப்படுவது பற்றி அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

ஒப்பம்/ ஆர் ஏ ஏ ஜயலத்
**பணிப்பாளர்/ உள்நாட்டுத் தொழிற்பாடுகள்**
**இலங்கை மத்திய வங்கியின் நாணயச்**
**சபைக்காகவும் அதன் சார்பாகவும்**

**சுற்றறிக்கை எண்: 35/01/005/0006/33** 2014 சனவரி 02

அனைத்து உரிமம் பெற்ற வர்த்த வங்கிகளுக்கும் முதனிலை வணிகர்களுக்கும்

**இலங்கை மத்திய வங்கியின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் மீதான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்**

i. இது, "பத்திரங்களற்ற அரச பிணையங்களில் இலங்கை மத்திய வங்கியின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் மீதான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்" என்ற விடயம் தொடர்பில் 2004 மே 3ஆம் நாளிடப்பட்ட இல.35/01/005/0006/08 கொண்ட சுற்றறிக்கையினால் திருத்தப்பட்டவாறான 2004 சனவரி 27ஆம் நாளிடப்பட்ட இல. 35/01/005/0006/04 கொண்ட எமது சுற்றறிக்கை தொடர்பானது.

ii. மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கைகளின் பிரிவு இ இல் குறிப்பிடப்பட்டுள்ள துணைநில் மீள்கொள்வனவு வசதி மற்றும் துணைநில் நேர்மாற்று மீள்கொள்வனவு வசதி என்பன முறையே துணைநில் வைப்பு வசதி மற்றும் துணைநில் கடன் வழங்கல் வசதி என்பனவற்றின் மூலம் நீக்கப்படுகிறது என்பது பற்றிய பங்கேற்கும் நிறுவனங்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது. ஏற்புடைத்தான வீதங்கள் துணைநில் வைப்பு வசதி வீதம் (முன்னாள் மீள்கொள்வனவு வீதத்திற்கு இணையானது) மற்றும் துணைநில் கடன் வழங்கல் வசதி வீதம் (முன்னாள் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதத்திற்கு இணையானது) என மீளப் பெயரிடப்பட்டுள்ளன. துணைநில் வைப்பு வசதி பிணைய ஒதுக்குகளேதுமற்ற தூ ய ஒதுக்காக இருத்தல் வேண்டும். துணைநில் கடன் வழங்கல் வசதியின் நடைமுறைகளைப் பொறுத்தவரையில் துணைநில் நேர்மாற்று மீள்கொள்வனவு வசதியிலிருந்தும் எவ்வித வேறுபாடுகளையும் கொண்டிராது.

iii. இதன்படி, (திருத்தப்பட்டவாறான) குறிப்பிட்ட சுற்றறிக்கையின் பிரிவு இ (அ) (துணைநில் மீள்கொள்வனவு வசதி) நீக்கப்பட்டு 2014 பெப்புருவரி 01ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் அதற்குப் பதிலாக பின்வரும் விடயங்கள் இடப்படுகின்றன.

**"(இ) துணைநில் வசதி**

**(அ) துணைநில் வைப்பு வசதி**

1) துணைநில் வைப்பு வசதி ஓரிரவு அடிப்படையில் கிடைக்கத்தக்கதாக இருத்தல் வேண்டும்.

2) துணைநில் வைப்பு வசதியைப் பயன்படுத்த விரும்பும் பங்கேற்கும் நிறுவனங்கள் தொலைபேசி மூலம் அல்லது தொலைநகல் மூலம் வைப்புச் செய்ய தாம் விரும்பும் தொகையினை உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் பிரிவிற்கு அறிவிக்குமாறும் இதே விடயங்களை உடனடி கணனி வழி விலைக்குறிப்பீட்டு முறைமைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள வசதியினூடாக அதேநாளன்று 1500 மணிக்குப் பிந்தாமல் இலத்திரனியல் ரீதியாக சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

3) இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் துணைநில் வைப்பு வசதியை வைப்புச் செய்ய விரும்பும் பெறுமதிக்கான தொகையினை அவற்றின் தீர்ப்பனவுக் கணக்கில் (அ.நே.மொ.தீ. கணக்கு) அதே நாளன்று 1600 மணிக்கு முன்னதாக நேரடியாகப் பற்று வைக்கும். பங்கேற்கும் நிறுவனங்கள் இது தொடர்பாக முறைமைக்கு எந்தவொரு தீர்ப்பனவு அறிவுறுத்தலையும் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படவில்லை.

4) கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் முழுத் தொகையினையும் பற்று வைப்பதனை இயலச்செய்யும் விதத்தில் பங்கேற்கும் நிறுவனங்கள் அவற்றின் தீர்ப்பனவுக் கணக்கில் போதுமான நிதி கிடைக்கத்தக்கதாக இருப்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும். கொடுக்கல்வாங்கல்களை முழுமையாகத் தீர்ப்பனவு செய்யும் விதத்தில் போதுமான நிதியினைப் பேணப் பங்கேற்கும் நிறுவனங்கள் தவறுமாயின் அத்தகைய பங்கேற்கும் நிறுவனங்கள் தொடர்பான கொடுக்கல்வாங்கல்களின் வட்டிக் கூறுகளுக்குச் சமமான தொகையினை இலங்கை மத்திய வங்கிக்கு ஏற்பட்ட சேதங்களின் பொருட்டு செலுத்துவதற்கு பொறுப்புடையனவாகும். அத்தகைய சேதங்கள் மத்திய வங்கியில் பங்கேற்கும் நிறுவனங்களினால் பேணப்படும் தீர்ப்பனவுக் கணக்குகளில் அடுத்த வேலை நாளன்று பற்று வைக்கப்படுதல் வேண்டும்.

5) துணைநில் வைப்பு வசதி தொடர்பான கொடுக்கல்வாங்கல்களின் உறுதிப்படுத்தல் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களத்தினால் உடனடி கணனி வழி விலைக்குறிப்பீட்டு முறைமையினூடாக இலத்திரனியலூடாக அதே நாளன்று 1600 மணிக்குப் பிந்தாமல் வழங்கப்படுதல் வேண்டும். அத்தகைய உறுதிப்படுத்தல்களை பங்கேற்கும் நிறுவனங்கள் சரியான விதத்தில் பார்த்தல் வேண்டுமெனவும் அவற்றின் பதிவுகளுக்காக இவ்வாவணங்களை பத்திரங்கள் வடிவில் பேணிக்கொள்ள வேண்டுமெனவும் ஆலோசனை வழங்கப்படுகின்றது. பங்கேற்கும் நிறுவனங்கள் விலைக்குறிப்பீட்டு முறைமைகளை அணுகுவதில் தொழில்நுட்பத் தவறுகள் ஏதும் ஏற்பட்டு அதன் காரணமாக அவற்றைப் பார்க்கவோ அச்சுப்பிரதியை எடுக்கவோ பங்கேற்கும் நிறுவனங்கள் இயலாமல் போகும் சந்தர்ப்பத்தில் கோரிக்கை விடுக்கப்படுமிடத்து கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் பங்கேற்கும் நிறுவனங்களுக்கு உறுதிப்படுத்தலின் பிரதியொன்றினை தொலைநகல் மூலம் அனுப்பி வைக்கும்.

6) முதிர்ச்சி நாளன்று கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் ஆரம்ப வைப்புப் பெறுமதியினையும் அதனுடன் வட்டிக் கொடுப்பனவுகளையும் சேர்த்து 0830 மணிக்குப் பிந்தாமல் பங்கேற்கும் நிறுவனங்களின் தீர்ப்பனவுக் கணக்கில் வரவு வைக்கும்.

வைப்புக்களின் வட்டிக் கூறுகள் தொடர்பான வைப்புக்களின் காலப்பகுதியினைப் பொறுத்து இலங்கை மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதத்தில் கணக்கிடப்படுதல் வேண்டும்."

iv. திருத்தப்பட்டவாறான) குறிப்பிட்ட சுற்றறிக்கையின் பிரிவு இ (ஆ) (துணைநில் நேர்மாற்று மீள்கொள்வனவு வசதி) "துணைநில் கடன் வழங்கல் வசதி" என்ற பதத்தினை "நேர்மாற்று மீள்கொள்வனவு வசதி" என்ற பதத்திற்காக பதிலீடு செய்வதன் மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

ஒப்பம். ஆர் ஏ ஏ ஜெயலத்
**பணிப்பாளர்/ உள்நாட்டுத் தொழிற்பாடுகள்**

**தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல: 35/01/005/0006/34** 2014 செத்தெம்பர் 23

அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் முதனிலை வணிகர்களுக்கும்

**இலங்கை மத்திய வங்கியின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் மீதான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்**

மேலதிக திரவத்தன்மையினை உள்ளீர்த்துக் கொள்வதற்கு அடிப்படையில் ஒரு சீரற்ற கால இடைவெளியில் பயன்படுத்தப்பட வேண்டிய தற்காலிக அடிப்படையிலான இலங்கை மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதிகள் பீடத்தினைக் குறித்த சில வர்த்தக வங்கிகள் நிரந்தர வசதிகளாக அணுகுவதனை அண்மைக் காலங்களில் நாணயச் சபையானது அவதானித்துள்ளது. அத்தகைய போக்கானது வளர்ச்சி வாய்ப்புக்கள் மற்றும் நிதியியல் முறைமையின் உறுதிப்பாடு ஆகிய இரண்டிற்கும் தூண்டுதலளிப்பதாக அமையாது எனும் கருத்தினை அது கொண்டுள்ளது. இதன்படி, நாணயச் சபை 2014 செத்தெம்பர் 22ஆம் நாளன்று நடைபெற்ற அதன் கூட்டத்தில் பின்வருவனவற்றை தீர்மானித்துள்ளது.

அ. ஒரு குறிப்பிட்ட பங்கேற்கும் நிறுவனத்திற்கான துணைநில் வைப்பு வசதிகளின் கிடைப்பனவு தற்போதுள்ள இலங்கை மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதிகள் வீதத்தில் ஒரு கலண்டர் மாதத்திற்கு ஆகக்கூடியது மூன்று (3) தடவைகள் என வரையறுக்கப்படும். ஒரு கலண்டர் மாதக் காலப்பகுதியில் ஒரு குறிப்பிட்ட பங்கேற்கும் நிறுவனத்தினால் மூன்று (3) தடவைகளுக்கும் (2014 செத்தெம்பரின் எஞ்சிய காலப்பகுதியில் இரண்டு (2) தடவைகளுக்கும்) மேலான ஏதாவது வைப்புக்கள் ஆண்டுக்கு 5 சதவீத வீதத்தில் ஏற்றுக்கொள்ளப்படும்.

ஆ. மேற்படி திருத்தங்கள் 2014 செத்தெம்பர் 23 திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படுவதுடன் மேலதிக அறிவுறுத்தல்கள் கிடைக்கப்பெறும் வரை தொடரும்.

மேற்படி திருத்தங்கள் பத்திரங்களற்ற அரச பிணையங்களில் இலங்கை மத்திய வங்கியின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் மீதான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் தொடர்பானவை எனப் பங்கேற்கும் நிறுவனங்களிற்கு அறியத் தரப்படுகின்றது. (2004 சனவரி 27ஆம் நாளிடப்பட்ட 35/01/005/0006/04 இலக்க சுற்றறிக்கை 20014 சனவரி 02 ஆம் திகதியிடப்பட்ட 35/01/005/0006/33 இலக்க சுற்றறிக்கையால் திருத்தப்பட்டது)

ஒப்பம். ஆர் ஏ ஏ ஜெயலத்
**பணிப்பாளர்/ உள்நாட்டுத் தொழிற்பாடுகள்**

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை**
**அதிவிசேடமானது**
1854/3 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 17 ஆந் திகதி திங்கட்கிழமை
**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**

**பகுதி I : தொகுதி (I) - பொது**
**அரசாங்க அறிவித்தல்கள்**
**செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் (அத்தியாயம் 423)**
**17ஆம் பிரிவின் கீழான கட்டளை**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசினது யாப்பின் உறுப்புரை 44இன் பந்தி (2) உடன் சேர்த்து வாசிக்கப்படுவதான செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (அத்தியாயம் 423) 17ஆம் பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்ட அதிகாரங்களினைப் பயன்படுத்தி, சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆகிய நான், காலத்திற்குக்காலம் என்னால் விடுக்கப்பட்ட கட்டளைகளுக்குட்பட்டு, 2010, 2011 மற்றும் 2012ஆம் ஆண்டுகளில் இலங்கை அரசாங்கத்தினால் இலங்கைக்கு வெளியே வழங்கப்பட்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகளை, இரண்டாந்தரச் சந்தையிலிருந்து கொள்வனவு செய்யவும், வைத்திருக்கவும் மாற்றல் செய்வதற்குமென உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களாக நியமிப்பதற்கு இக்கட்டளையின் மூலம் அனுமதியளிக்கின்றேன்.

மகிந்த ராஜபக்ஷ,
**சனாதிபதி**

நிதி, திட்டமிடல் அமைச்சு
கொழும்பு
2014 மாச்சு 17

**தொடர்பு எண்: 06/04/01/2014** 2014 மே 28

அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரைகள்

அன்புள்ள ஐயா,

**வெளிநாட்டுப் பயண அட்டைகள்**

அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு கீழ்காணும் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு, நுணுக்கமாகக் கவனித்தல் மற்றும் தீர்மானத்திற்குட்பட்டு, பயணப் படிகளைப் பெறுவதற்குத் தகுதியுடைய நபருக்கு இலங்கையினை விட்டு வெளியேறுகின்ற போது, வெளிநாட்டு நாணயங்களை வழங்குவதன் நோக்கத்திற்காக வெளிநாட்டுப் பயண அட்டைகளினை வழங்குவதற்கு இத்தால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

1. வெளிநாட்டிற்குப் பயணிக்கும் நபருக்கு வழங்கக்கூடிய பயணப் படிகளாவன,

 (i) இலங்கையில் வதியும் நபருக்கு பயண நோக்கத்திற்காக வெளிநாட்டுச் செலாவணியினை வழங்குவது தொடர்பான செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் மற்றும் பணிப்புரைகளுக்குட்பட்டு இருத்தல் வேண்டுமென்பதுடன் தேவையானவிடத்து வரையறைகளையும் கொண்டிருக்கலாம்; அத்துடன்

(ii) வெளிநாட்டு நாணயத் தாள்கள், பயணிகள் காசோலைகள் அத்துடன் அல்லது வெளிநாட்டுப் பயண அட்டைகள் மூலமாக வழங்கப்படலாம்.

2. அட்டை வைத்திருப்பவர் (இதனகத்துப் பின்னர் "வைத்திருப்பவர்" என்று குறிக்கப்படும்), இலங்கை குடிவரவு மற்றும் குடியகல்வு பொதுக் கட்டுப்பாட்டாளரினால் வழங்கப்பட்ட கடவுச்சீட்டை வைத்திருக்கும் இலங்கைப் பிரசையாயின், மேலே தரப்பட்ட பந்தி 1 இன் நியதிகளுக்கிணங்கி பயணப் படியானது வழங்கப்பட்டமை தொடர்பில் வைத்திருப்பவரின் கடவுச்சீட்டில் பொருத்தமான புறக்குறிப்பீட்டினை இடுதல் வேண்டும்.

3. வைத்திருப்பவர் வெளிநாட்டிலிருக்குமிடத்து வெளிநாட்டு பயண அட்டைகள் மீள்நிரப்பப்படக்கூடாது.

4. வெளிநாட்டுப் பயண அட்டைகளினை வழங்கும் நேரத்தில் இணைப்பு I இல் உள்ளவாறான மாதிரி வெளிப்படுத்துகை ஒன்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

5. பயண நோக்கத்திற்காக வெளிநாட்டு நாணயங்களினை வழங்க அனுமதிக்கப்பட்ட எந்த கணக்குகளிலும் பற்று வைப்பதன் மூலம் வெளிநாட்டுப் பயண அட்டையினை வழங்கமுடியும்.

6. வைத்திருப்பவரின் வேண்டுகோளின்படி அல்லது வைத்திருப்பவர் இலங்கைக்கு வரும் திகதியிலிருந்து 90 நாட்கள் கழியும் வேளையில், இதில் எது முதலில் வருகிறதோ அந்நாளிலிருந்து வெளிநாட்டுப் பயண அட்டையில் எஞ்சியுள்ள பாவிக்கப்படாத பெறுமானமானது.

(i) வைத்திருப்பவரினால் பேணப்படும் வெளிநாட்டு நாணயக் கணக்கிலிருந்து பற்று வைப்பதன் மூலம் வெளிநாட்டுப் பயண அட்டையானது நிரப்பப்பட்டதெனின் அக்கணக்கிற்கு பற்று வைத்த அளவிலான தொகைக்கு வரவு வைக்கப்படலாம்; அல்லது

(ii) வைத்திருப்பவரினால் ரூபாயில் மீள்எடுப்பனவு செய்யப்படலாம் அல்லது வைத்திருப்பவரினால் இலங்கை ரூபாவில் பேணப்படும் கணக்கிற்கு வரவு வைக்கப்படலாம்.

7. செலாவணிக் கட்டுப்பாட்டாளரினால் வழங்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் குறித்துரைக்கப்பட்டவாறு, அதிகாரமளிக்கப்பட்ட வணிகரானவர் இப்பணிப்புரைகளின் நியதிகளுக்கிணங்க மேற்கொண்ட வெளிநாட்டுச் செலாவணி விற்பனைகள் மற்றும் கொள்வனவுகள் முறையே படிவம் 1 மற்றும் படிவம் 2 இல், செலாவணிக் கட்டுப்பாட்டாளருக்கு அறிக்கையிடல் வேண்டும்.

8. இணைப்பு II இன்படி அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் வெளிநாட்டுப் பயண அட்டைகளின் விபரங்களை காலாண்டு அடிப்படையில் அடுத்துவரும் காலாண்டின் 15ஆம் நாளுக்கு முன்னதாக செலாவணிக் கட்டுப்பாட்டாளருக்கு சமர்ப்பிக்க வேண்டுமென தேவைப்படுத்தப்படுகின்றனர்.

உங்கள் உண்மையுள்ள
பி. எச். ஓ சந்திரவன்ச
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

**இணைப்பு I**

## இலங்கை மத்திய வங்கி
## வெளிநாட்டுப் பயண அட்டைக்கான விண்ணப்பதாரியின் பிரகடனம்

சேரல் : 〈 அதிகாரமளிக்கப்பட்ட வணிகரின் பெயர் 〉

கடவுச்சீட்டு இல. ............................................ இனைக் கொண்டுள்ள நான் ..................................................... (வெளிநாட்டுப் பயண அட்டைக்கு விண்ணப்பிப்பவரின் பெயர்) நான் திரும்பி வந்த 90 நாட்களுக்குள், எனது வெளிநாட்டுப் பயண அட்டையில் பாவிக்காமல் எஞ்சியுள்ள வெளிநாட்டு நாணயத்தினை எனது வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு ......................... (கணக்கு இல.)/ இலங்கை ரூபாயாக மாற்றி அதனை எனது ரூபாக் கணக்கிற்கு .............................. (கணக்கு இல.) வரவு வைக்க இத்தால் ........................................................................................ (அதிகாரம் அளிக்கப்பட்ட வணிகரின் பெயர்) அதிகாரமளிக்கின்றேன் (ஏற்புடைத்தல்லாதனவற்றை நீக்கிவிடவும்).

மேலே தரப்பட்ட விபரங்கள் உண்மையானதும் சரியானதுமென நான் ..................................................................... (வெளிநாட்டு பயண அட்டை விண்ணப்பதாரியின் பெயர்) உறுதியளிக்கின்றேன்.

............................................... ...............................................

திதி/மாமா/ஆஆ

வெளிநாட்டுப் பயண அட்டை
விண்ணப்பதாரியின் கையொப்பம்

**இணைப்பு II**

## வெளிநாட்டுப் பயண அட்டைகள்

அதிகாரமளிக்கப்பட்ட வணிகரின் பெயர்: .......................................................................

காலாண்டுக் கூற்று: .......................................................................

| வழங்கப்பட்ட வெளிநாட்டுப் பயண அட்டைகளின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியின் தொகை (ஐ.அ.டொலரில்) | இணைப்பு I இன்படி மீளமாற்றப்பட்ட தொகை |
|---|---|---|
| | | |

மேலே தரப்பட்ட விபரங்கள் உண்மையானதும் சரியானதுமென இத்தால் உறுதி செய்கின்றேன்.

............................................... ...............................................

திகதி

அலுவலக முத்திரை மீது அதிகாரமளிக்கப்பட்ட
அலுவலகரின் பெயர், பதவி மற்றும் கையொப்பம்

**தொடர்பு எண்: 06/04/02/2014** 2014 மே 28

அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரைகள்

அன்புள்ள ஐயா,

**சிறப்பு வெளிநாட்டு முதலீட்டு வைப்புக் கணக்குகள்**

சிறப்பு வெளிநாட்டு முதலீட்டு வைப்புக் கணக்குகள் பற்றிய 2008 யூன் 02ஆம் திகதியிடப்பட்ட தொடர்பு எண் 06/04/05/2008 இனைக் கொண்ட பணிப்புரைகள் இத்தால், பின்வருமாறு திருத்தப்படுகின்றன.

1. நிபந்தனை v இனை நீக்குவதன் மூலம்
2. அதிலுள்ள நிபந்தனைகள் vi, vii மற்றும் viii இனை v, vi மற்றும் vii என மீள் இலக்கமிடுவதன் மூலம்.

உங்கள் உண்மையுள்ள,
பி. எச். ஓ சந்திரவன்ச
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

**தொடர்பு எண்: 06/04/03/2014** 2014 மே 28

அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரைகள்

அன்புள்ள ஐயா,

**மாணவர் விசாவினைப் பெறுவதற்கு முன்கூட்டியே நிதிகளை அனுப்புதல்**

1. மாணவர் விசாவினைப் பெறுவதற்கு விண்ணப்பிக்கும் இலங்கையில் வதியும் மாணவர்கள் மீது சில வெளிநாட்டு அரசுகள் அம்மாணவர்களது வாழ்க்கைச் செலவினங்களைப் பூர்த்தி செய்வதற்கான நிதியினை முன்கூட்டியே மாற்றல் செய்ய வேண்டுமென்ற தேவைப்பாட்டினை விதித்திருப்பது அவதானிக்கப்பட்டிருக்கிறது. இதனை வசதிப்படுத்தும் பொருட்டு கீழ்காணும் ஆவணச்சான்றுகளை பெற்றுக்கொள்வதற்குட்பட்டு மேற்குறிப்பிட்ட மாற்றல்கள் தொடர்பாக வெளிமுகப் பணவனுப்பல்களை மேற்கொள்ள அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
   (i) வெளிநாட்டு பல்கலைக்கழகம்/ கல்விசார் நிறுவனங்களினால் வழங்கப்பட்ட சம்மத/ அனுமதிக் கடிதம்
   (ii) கொள்கை அடிப்படையில் மாணவர் விசாவானது அனுமதிக்கப்பட்டது என்றும் மற்றும் மாற்றல் செய்யப்பட வேண்டிய வாழ்க்கைச் செலவினங்களின் தொகையைக் குறிப்பிடும் தொடர்பான நாட்டின் குடிவரவு அதிகாரசபையினால் வழங்கப்பட்ட கடிதம்.
   (iii) மாணவரின் கடவுச்சீட்டுப் பிரதி.
   (iv) 2014 மே 28ஆம் திகதியிடப்பட்ட இல. 1864/38 அரச வர்த்தமானியில் (அதி விசேடமானது) பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின்படி வழங்கப்பட்ட அனுமதியின் நியதிகளுக்கிணங்க வெளிநாட்டில் மாணவரின் பெயரில் திறக்கப்பட்ட கணக்கின் விபரங்களை குறித்துரைக்கும் வெளிநாட்டு வங்கியினால் வழங்கப்பட்ட கடிதம்.
2. நிதிகளை மாற்றல் செய்த பின்பு, அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் தொகை மற்றும் பணவனுப்பல்கள் மேற்கொள்ளப்பட்டதன் நோக்கம் என்பன உட்பட பணவனுப்பல்களின் விபரங்களைக் குறிப்பிடும் புறக்குறிப்பீட்டினை மாணவரின் கடவுச்சீட்டில் மேற்கொள்ளுதல் வேண்டும்.
3. இலங்கை ரூபாயினை மாற்றுவதன் மூலமோ அல்லது வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்கில் பற்று வைப்பதன் மூலமோ நிதியினை மாற்றல் செய்யமுடியும்.
4. மேலும், மாணவரினால் அத்துடன் அல்லது பெற்றோரினால்/ பாதுகாவலரினால்/ வாழ்க்கைத் துணையால்/ அனுசரணை வழங்குநரினால் பேணப்படும் கீழ் காணும் வெளிநாட்டு நாணயக் கணக்குகளிலிருந்தும் பற்றுச் செய்யமுடியும்.
   (i) வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள்;
   (ii) வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்குகள்; அத்துடன்
   (iii) பன்னாட்டுப் பணி வழங்குவோர் மற்றும் அவர்களது ஊழியருக்குமான வெளிநாட்டு நாணயக் கணக்குகள்.
5. இப்பணிப்புரைகளின் நிபந்தனைகளுக்கிணங்க மாற்றல்களை மேற்கொள்ள வதியும் இலங்கையரல்லாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கினையும் பற்று வைக்கமுடியும். வெளிநாட்டு மாணவனின் சார்பில் இம்மாற்றல் மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில், பந்தி 2இல் குறிப்பிட்டவாறு அம்மாணவனின் பணவனுப்பல்கள் பற்றிய விபரங்களை கடவுச்சீட்டில் புறக்குறிப்பீடு செய்யத் தேவையில்லை.

உங்கள் உண்மையுள்ள,
பி. எச். ஓ சந்திரவன்ச
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

**தொடர்பு எண்: 06/04/04/2014** 2014 மே 28

அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரைகள்

அன்புள்ள ஐயா,

**வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள்**

திருத்தப்பட்டவாறான 1991 ஒகத்து 01ஆம் திகதியிடப்பட்ட தொடர்பு இல. இசி/52/91(டி) இனைக் கொண்ட தொழிற்பாட்டு அறிவித்தல்களுக்கு மேலதிகமாக 2014 மே 28ஆம் திகதியிடப்பட்ட தொடர்பு இல. 06/04/03/2014 கொண்ட பணிப்புரைகளின் நியதிகளின்படி மாணவர் விசாவினை விண்ணப்பிப்பது தொடர்பாக ஏற்படும் வாழ்க்கைச் செலவினங்களை பூர்த்தி செய்வதற்கு வதியும் வெளிநாட்டு நாணயக் கணக்கிலுள்ள நிதிகளை மாற்றல் செய்வதற்கு இத்தால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

உங்கள் உண்மையுள்ள,
பி. எச். ஓ சந்திரவன்ச
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

**தொடர்பு எண்: 06/04/05/2014** 2014 மே 28

அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரைகள்

அன்புள்ள ஐயா,

### வதியும் இலங்கையரல்லாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள்

திருத்தப்பட்டவாறான 1980 மே 14ஆம் திகதியிடப்பட்ட தொடர்பு இல. இசி/19/80(டி) இனைக் கொண்ட தொழிற்பாட்டு அறிவித்தல்களுக்கு மேலதிகமாக அதன் 5ஆம் பந்தியில் பட்டியலிடப்பட்ட பற்றுக்களுக்கான விடயம் (இ) ஆக பின்வரும் விடயம் உள்ளடக்கப்படுகிறது.

"(இ) 2014 மே 28ஆம் திகதியிடப்பட்ட தொடர்பு இல. 06/04/03/2014 இனைக் கொண்ட பணிப்புரைகளின் நிபந்தனைகளின்படி, மாணவர் விசாவிற்கு விண்ணப்பிப்பது தொடர்பான வாழ்க்கைச் செலவினங்களைப் பூர்த்தி செய்வதற்கான நிதிகளின் மாற்றல்".

உங்கள் உண்மையுள்ளஈ
பி. எச். ஓ சந்திரவன்ச
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

**தொடர்பு எண்: 06/04/06/2014** 2014 மே 28

அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரைகள்

அன்புள்ள ஐயா,

### பன்னாட்டு பணி வழங்குவோர் மற்றும் அவர்களது ஊழியர்களுக்கான வெளிநாட்டு நாணயக் கணக்குகள்

1. 2010 மே 07ஆம் திகதியிடப்பட்ட தொடர்பு எண் 06/04/05/2010 இனைக் கொண்ட பணிப்புரைகளுக்கு மேலதிகமாக, பந்தி 4இல் விடயம் iv ஆக கீழ்காணும் வரவு உள்ளடக்கப்படுகிறது.

   "iv. 2014 மே 28ஆம் திகதியிடப்பட்ட இல. 1864/38 இனைக் கொண்ட அரச வர்த்தமானியில் (அதிவிசேடமானது)பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல்கள் மற்றும் 2014 மே 28ஆம் திகதியிடப்பட்ட தொடர்பு எண் 06/04/03/2014இனைக் கொண்ட பணிப்புரைகளின்படி அனுமதிக்கப்பட்ட இலங்கைக்கு வெளியில் திறந்து, பேணப்பட்டு வருகின்ற கணக்குகளிலிருந்து பற்று வைக்கப்பட்டுள்ள உயர்ந்தபட்ச தொகைக்கு உட்பட்டு தாய் நாட்டிற்கு நிதிகளை அனுப்புதல்".

2. அதிலுள்ள பந்தி 5இன் விடயம் iv ஆக கீழ்காணும் பற்று உள்ளடக்கப்படுகிறது.

   "iv. 2014 மே 28ஆம் திகதியிடப்பட்ட இல. 1864/38 இனைக் கொண்ட அரச வர்த்தமானியில் (அதிவிசேடமானது)பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல்கள் மற்றும் 2014 மே 28ஆம் திகதியிடப்பட்ட தொடர்பு எண் 06/04/03/2014இனைக் கொண்ட பணிப்புரைகளின்படி அனுமதிக்கப்பட்ட மாணவர் விசாவினை விண்ணப்பிப்பது தொடர்பிலான வாழ்க்கைச் செலவினங்களை பூர்த்தி செய்வதற்கான நிதிய மாற்றல்கள்".

உங்கள் உண்மையுள்ள,
பி. எச். ஓ சந்திரவன்ச
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

**தொடர்பு எண்: 06/04/07/2014** 2014 மே 28

அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரைகள்

அன்புள்ள ஐயா,

### வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்கு

இலங்கையில் வதியும் வெளிநாட்டு செலாவணிகளை உழைக்கும் நபரின் வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல்வாங்கல்களை மேலும் வசதிப்படுத்துமொரு வழிமுறையாக வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்கின் மீதான பணிப்புரைகளை மீளாய்வு செய்து மீளவழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

**2. தகுதியானவர்கள்**

(i) இலங்கையில் வதியும் வெளிநாட்டுச் செலாவணிகளினை உழைக்கும் கீழ்காணும் நபர்கள்:

(அ) தனிப்பட்ட நபர்;

(ஆ) இலங்கையில் பதிவு செய்யப்பட்ட ஏக உரிமையைக் கொண்ட மற்றும் பங்குடமை வியாபாரம்;

(இ) இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனி;

(ஈ) 2007ஆம் ஆண்டு 7ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் கீழ் வெளிநாட்டுக் கம்பனியாக இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனி.

(ii) 2013 சனவரி 01ஆம் திகதியிடப்பட்ட இல. 1791/15 கொண்ட அதிவிசேட வர்த்தமானியின் அறிவித்தலின் நிபந்தனைகளின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட வெளிநாட்டு வர்த்தக கடன்பாட்டு திட்டத்தின் கீழ் கடன்பெற்ற தகுதியுடைய கடன்பெறுநர்.

(iii) செலாவணிக் கட்டுப்பாட்டாளரினால் வழங்கப்பட்ட அனுமதியின் கீழ், இலங்கையில் வதியும் அல்லது இலங்கைக்கு வெளியில் வதியும் நபரிடமிருந்து வெளிநாட்டு நாணயத்தில் கடன்பெறத் தகுதியுடைய எவரேனும் நபர்.

**3. கணக்குகளின் வகைகள்**

வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்கானது நடைமுறை, சேமிப்பு அல்லது தவணை வைப்பு முறையில் ஏதேனும் வெளிநாட்டு நாணயங்களில் திறக்கமுடியும். எனினும், நடைமுறை கணக்கிற்கு எதிராக காசோலை புத்தகம் வழங்கப்படமாட்டாது.

4. அனுமதிக்கப்பட்ட வரவுகள்

(i) வங்கித்தொழில் முறையினூடாக வெளிநாடுகளிலிருந்து பெறப்பட்ட உள்முகப் பணவனுப்பல்கள் மற்றும் பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிகள், சுங்கம் செலுத்தாத துறைமுகத்திலான வர்த்தகம், கணக்கு வைத்திருப்பவரினால் மேற்கொள்ளப்படும் வெளிநாட்டுச் செயற்றிட்டங்கள் மற்றும் இலங்கைக்கு வெளியில் வதிபவருக்கு உள்நாட்டில் வழங்கப்பட்ட பொருட்கள் என்பனவற்றிற்காக வெளிநாட்டு வங்கிகளினால் வழங்கப்பட்ட வெளிநாட்டு நாணய வரைவுகள்.

(ii) ஏற்புடைத்தான விதத்தில் கணக்கு வைத்திருப்பவரினால் நாட்டிற்குள் கொண்டு வரப்பட்டு இலங்கை சுங்கத்திடம் வெளிப்படுத்தப்பட்ட வெளிநாட்டு நாணயத் தாள்கள்.

(iii) அத்தகைய ஏற்றுக்கொள்ளல்களுக்காக செலாவணிக் கட்டுப்பாட்டாளரினால் வழங்கப்பட்ட அனுமதியின் நியதிகளின்படி கணக்கு வைப்பாளரினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பயணிகள் காசோலைகள், வங்கி வரைவுகள் அல்லது நாணயத் தாள்கள் வடிவிலான வெளிநாட்டு நாணயங்கள்.

(iv) கணக்கு வைத்திருப்பவரினால் இலங்கைக்கு வெளியே வதியும் ஆளொருவருக்கு, விற்கப்பட்ட பொருட்கள் மற்றும் வழங்கப்பட்ட பணிகள் தொடர்பில் அத்தகைய பொருட்கள் மற்றும் பணிகளுக்கான கொடுப்பனவுகளை, இலங்கைக்கு வெளியில் வழங்கப்பட்ட இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டையொன்றினைப் பயன்படுத்தி, இலத்திரனியல் தரவுகளை கையகப்படுத்தும் முனைக்கோடி அல்லது இணையத்தள கொடுப்பனவு நுழைவாயில் என்பனவற்றினூடாக மேற்கொள்ளப்படுமிடத்து, எது எவ்வாறிருப்பினும், அதிகாரமளிக்கப்பட்ட வணிகர், அத்தகைய கொடுப்பனவுகள் இலங்கைக்கு வெளியில் வழங்கப்பட்ட இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டையினைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டது என்பதனை தெரிவிக்கின்ற இலத்திரனியல் தரவு கையகப்படுத்தல் முனைக்கோடி அல்லது இணையத்தள கொடுப்பனவு நுழைவாயில் வழங்குநரினால் எழுத்து மூலமாக உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் மட்டுமே அத்தகைய கொடுப்பனவுகளை வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்கில் வரவு வைக்கமுடியும்.

(v) பொருட்கள் மற்றும் பணிகள் தொடர்பில் செலாவணி உழைப்போர் கணக்கு மற்றும் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகளில் பேணப்படும் கணக்கிலிருந்தான மாற்றல்கள்.

(vi) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களிடமிருந்து பெறப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன்களின் பெறுகைகள்.

(vii) செலாவணிக் கட்டுப்பாட்டாளரின் முன்கூட்டிய அனுமதியுடன் வெளிநாட்டுக் கடன் வழங்குநர்களிடமிருந்து பெறப்படும் வெளிநாட்டு நாணயப் பெறுகைகள்.

(viii) வெளிநாட்டு முதலீடுகளின் நன்மைகளைக் கொண்டுள்ள கணக்கு வைப்பாளரின் வெளிமுக முதலீட்டுக் கணக்கிலிருந்தான நிதிய மாற்றல்கள்.

(ix) பெற்றோலிய கைத்தொழிலுக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சினால் உரிமம் வழங்கப்பட்ட நீர்க்கல தொழிற்பாட்டாளர்களின் எரிபொருள் வழங்கல் தொடர்பாக வெளிநாட்டுக் கப்பல் போக்குவரத்து நிறுவனங்கள்/ விமானப் பணிகள் முகவர்களின் வெளிநாட்டு நாணயக் கணக்கிலிருந்தான மாற்றல்கள்.

(x) 2013 ஒத்தோபர் 21 திகதியிடப்பட்ட தொடர்பு இல.06/04/25/01/2013 இனைக் கொண்ட பணிப்புரைகளின் அட்டவணை 1 இன்படி, துறைமுக முனைக்கூடி தொழிற்பாட்டாளர்களினால் அறவிடப்படும் முனைக்கூடி கட்டணங்கள் தொடர்பாக வெளிநாட்டுக் கப்பல் போக்குவரத்து/ விமானப் பணிகள் முகவர்களின் வெளிநாட்டுக் கணக்கிலிருந்தான மாற்றல்கள்.

(xi) தாய்க் கம்பனிகளுக்கு நேரடியாக வழங்கப்படும் பொருட்கள் மற்றும் பணிகள் தொடர்பாக தாய் கம்பனிகளிடமிருந்து பெறப்படும் உள்முகப் பணவனுப்பல்களுகெதிரான வெளிநாட்டுக் கப்பல் போக்குவரத்து, விமானப் பணி முகவர்களின் வெளிநாட்டு நாணயக் கணக்கிலிருந்தான மாற்றல்கள்.

(xii) கணக்கு வைப்பாளரின் உள்முகப் பணவனுப்பல்கள் விநியோகக் கணக்கிலிருந்தான நிதிய மாற்றல்கள்.

(xiii) தகைமையுடைய வாடிக்கையாளர் மற்றும் துணைக் காப்புறுதியாளர்களுக்கு வழங்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட பூட்கைகளின் மீது பெறப்பட்ட காப்புறுதிக் கட்டணம், மீள்காப்புறுதியாளர்களிடமிருந்து பெறப்பட்ட கோரல்கள் மற்றும் இலங்கை காப்புறுதி சபையில் பதிவு செய்யப்பட்ட காப்புறுதிக் கம்பனிகளின் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம்.

(xiv) இங்கேயுள்ள 5ஆம் பந்தியின் விடயம் (viii) இன் நியதிகளில் பயண நோக்கங்களுக்காகவும் இங்கேயுள்ள 5ஆம் பந்தியின் விடயம் (xiii) இன் கீழ் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காகவும் வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்குகளிலிருந்து பற்று வைத்ததன் மூலம் கணக்கு உடமையாளரினால் பெறப்பட்டு பயன்படுத்தப்படாத வெளிநாட்டு நாணயம்.

(xv) 2014 மே 28ஆம் திகதியிடப்பட்ட இல. 1864/38 இனைக் கொண்ட அரச வர்த்தமானி அறிவித்தல்களில் (அதிவிசேடமானது) பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல்கள் மற்றும் 2014 மே 28ஆம் திகதியிடப்பட்ட தொடர்பு எண் 06/04/03/2014 இனைக் கொண்ட பணிப்புரைகள் என்பனவற்றின் நிபந்தனைகளுக்கிணங்க வெளிநாட்டில் பேணப்படும் கணக்குகளிலிருந்தான நிதிய மாற்றல்களைப் பொறுத்தவரை இங்கேயுள்ள 5ஆம் பந்தியின் விடயம் (xiv) இன் கீழ் மூலம் வெளிமுகப் பணவனுப்பல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்குமிடத்து அவ்வாறு பற்று வைக்கப்பட்ட உச்சத்தொகை

5. அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள்

(i) கணக்கு வைத்திருப்பவரின் தற்போதைய பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் தொடர்பான வெளிமுகப் பணவனுப்பல்கள்.

(ii) 2013 ஏப்பிறல் 29ஆம் திகதியிடப்பட்ட தொடர்பு இல. 06/04/14/2013 இனைக் கொண்ட பணிப்புரைகளின் நியதிகளின்படியான சுங்கம் செலுத்தாத துறைமுகத்திலான வர்த்தகம் தொடர்பான கொடுப்பனவுகளின் வெளிமுகப் பணவனுப்பல்கள்.

(iii) கணக்கு வைத்திருப்பாளரினால் பெற்றுக்கொள்ளப்பட்ட பணிகள் மற்றும் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் தொடர்பான வெளிநாட்டு வங்கித்தொழில் பிரிவுகளில் பேணப்படும் கணக்குகள் மற்றும் வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்கிலிருந்தான மாற்றல்கள்.

(iv) கணக்கு வைத்திருப்பவரினால் மேற்கொள்ளப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகள் தொடர்பான கோரல்கள், மீளளிப்புக்கள் மற்றும் தரகுகள் தொடர்பான வெளிமுகப் பணவனுப்பல்கள்.

(v) கணக்கு வைத்திருப்பவரினால் வெளிமுக முதலீட்டுக் கணக்குகளுக்கான மாற்றல்கள்.

(vi) வெளிநாட்டுக் கப்பல் போக்குவரத்து, விமானப் பணிகள் முகவர்களின் வெளிநாட்டு நாணயக் கணக்குகளின் வரவிற்கான சரக்குக் கட்டணங்களின் கொடுப்பனவுகள்.

(vii) வெளிநாட்டுப் பயண முகவர்களிடமிருந்து பெறப்படும் நிதிகளுக்கெதிராக வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்கப்படும் பயணப் பொதி தொடர்பாக பயண முகவர்களினால் பேணப்படும் வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்கிலிருந்தான வெளிமுகப் பணவனுப்பல்கள்.

(viii) செலாவணி கட்டுப்பாட்டாளரினால் கணக்கிற்கு வழங்கப்படும் பணிப்புரைகளுக்கு உட்பட்டு பயணத்தின் பொருட்டு மீளப்பெறப்படும் வெளிநாட்டு நாணயங்கள்.

(ix) கணக்கு வைத்திருப்பவரினால் மேற்கொள்ளப்படும் வெளிநாட்டுச் செயற்றிட்டங்கள் தொடர்பான பொருட்கள் மற்றும் பணிகளின் கொள்வனவிற்கான வெளிமுகப் பணவனுப்பல்கள்.

(x) செலாவணிக் கட்டுப்பாட்டாளரின் முன்னொப்புதலுடன் வெளிநாட்டுக் கடன் வழங்குநரிடமிருந்து பெறப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன்களின் மீள்கொடுப்பனவுகள் தொடர்பான வெளிமுகப் பணவனுப்பல்கள்.

(xi) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களிடமிருந்து கணக்கு வைத்திருப்பவரினால் பெறப்படும் வெளிநாட்டு நாணயக் கடன்களின் மீள்கொடுப்பனவுகள்.

(xii) வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட பூட்கைகள் தொடர்பாக தகைமையுடைய வாடிக்கையாளர்களுக்கும் இணைக் காப்புறுதியாளர்களுக்குமான கோரல்களின் கொடுப்பனவு, உள்நாட்டு/ வெளிநாட்டு மீள்காப்புறுதியாளர்களுக்கான காப்புறுதிக் கட்டணம் மற்றும் இலங்கை காப்புறுதிச் சபையில் பதிவு செய்யப்பட்ட காப்புறுதிக் கம்பனிகளின் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் மற்றும் தரகுகள்.

(xiii) தேசிய இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரண அதிகாரசபையிலிருந்து பெறப்பட்ட உறுதிப்பத்திரத்தினை சமர்ப்பிப்பதன் மீது வெட்டப்பட்டு பட்டை தீட்டப்பட்ட அல்லது செப்பமற்ற இரத்தினக்கற்களையும் ஏனைய மூலப் பொருட்களையும் வெளிநாட்டிலிருந்து கொள்வனவு செய்யும் நோக்கத்திற்காக இரத்தினக்கல் மற்றும் ஆபரண வணிகர்களினால் மேற்கொள்ளப்படும் ஒரே தடவையில் ஐ.அ.டொலர் 50,000 இனை விஞ்சாத வெளிநாட்டு நாணயத் தாள்களின் எடுப்பனவு.

(xiv) வாழ்க்கைச் செலவினங்களுக்கான முன்கூட்டிய அனுப்பல்களாக, 2014 மே 28ஆம் திகதியிடப்பட்ட தொடர்பு எண் 06/04/03/2014 இனைக் கொண்ட பணிப்புரைகள் மற்றும் 2014 மே 28ஆம் திகதியிடப்பட்ட இல. 1864/38 இனைக் கொண்ட அரச வர்த்தமானியில் (அதிவிசேடமானது) பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் நியதிகளின்படி வெளிநாட்டில் பேணப்படும் ஏதேனும் வங்கிக் கணக்கில் வரவு வைப்பதற்கான நிதிய மாற்றல்கள்.

(xv) எச்சந்தர்ப்பத்திலும் வெளிநாட்டு நாணயத்திற்கு மீளமாற்றி வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்கிற்கு மீண்டும் வரவு வைக்கப்படாது என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு மேற்கொள்ளப்பட்ட இலங்கை ரூபாவிலான எடுப்பனவுகள்.

**6. நிபந்தனைகள்**

(i) வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்கினைத் திறப்பது மற்றும் பேணுவதற்கு விண்ணப்பதாரிக்குள்ள தகுதியினைத் தீர்மானிப்பதற்கு அக்கணக்கினைத் திறக்கும் போது ஆவணச்சான்றுகளும் அவ்விண்ணப்பதாரியின் வியாபாரத்தினைக் கொண்டு நடத்துவதற்கான (ஏற்புடையதெனில்), அது தொடர்பான அதிகாரசபையிடமிருந்தான அத்தாட்சிப்படுத்தலும் பெறப்படல் வேண்டும் (ஏதேனும் இருப்பின்).

(ii) திருத்தப்பட்டவாறான 2013 யூன் 12ஆம் திகதியிடப்பட்ட தொடர்பு எண் 06/04/21/2013 இனைக் கொண்ட பணிப்புரைகளின் நியதிகளின்படி வழங்கப்பட்ட மேலதிக எடுப்பனவு வசதிகளைத் தவிர எச்சந்தர்ப்பத்திலும் வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்கில் மேலதிக எடுப்பனவுகளைச் செய்யக்கூடாது.

(iii) அதே கணக்கு வைத்திருப்பவரின் வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்குகளுக்கிடையில் மாற்றல்களைச் செய்ய அனுமதிக்கப்படும்.

(iv) வெளிநாட்டுச் செலாவணிக் கணக்கினைத் திறந்து பேண அரச சார்பற்ற நிறுவனங்கள் அனுமதிக்கப்படவில்லை.

**7. அறிக்கையிடும் தேவைப்பாடுகள்**

அதிகாரம் பெற்ற வணிகர்கள், இணைக்கப்பட்ட படிவத்திலுள்ளவாறு மாதாந்த அடிப்படையில் அறிக்கையொன்றினை செலாவணி கட்டுப்பாட்டாளருக்கு அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் நாளிலோ அல்லது அதற்கு முன்போ சமர்ப்பிக்க வேண்டுமென தேவைப்படுத்தப்படுகிறது.

8. 2012 யூலை 11ஆம் திகதியிடப்பட்ட தொடர்பு எண் 06/04/05/2012, 2012 திசெம்பர் 31ஆம் திகதியிடப்பட்ட தொடர்பு எண் 06/04/13/2012, 2013 சனவரி 1ஆம் திகியிடப்பட்ட தொடர்பு எண் 06/04/03/2013, 2013 சனவரி 24ஆம் திகதியிடப்பட்ட தொடர்பு எண் 06/04/10/2013 மற்றும் 2013 பெப்புருவரி 21ஆம் திகதியிடப்பட்ட தொடர்பு எண் 06/04/13/2013 இனைக் கொண்ட பணிப்புரைகள் இத்தால் நீக்கப்படுகின்றன.

உங்கள் உண்மையுள்ள
பி. எச். ஓ சந்திரவன்ச
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

இனைப்பு

செலாவணிக் கட்டுப்பாட்டாளர்
செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
இல. 30 சனாதிபதி மாவத்தை
கொழும்பு 1

**வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்கின் மாதாந்தக் கூற்று**

வங்கியின் பெயர்: ............................................................................ அறிக்கையிடும் மாதம்: ............................................................................

| கணக்கின் வகை | நாணயம் | மாதத் தொடக்கத்தில் உள்ள வாறான ஆரம்ப நிலுவை | வரவுகள் | | | பற்றுக்கள் | | மாத இறுதியில் உள்ள வாறான இறுதி நிலுவை | மாத முடிவில் கணக்குகளின் மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | உள்முகப் பணவனுப்பல்கள் | வரவு வைக்கப் பட்ட மொத்த வட்டி | ஏனைய வரவுகள் | வெளிமுகப் பணவனுப் பல்கள் | ஏனைய செலவுகள் | | |
| ஏற்றுமதியாளர் | | | | | | | | | |
| மறைமுக ஏற்றுமதியாளர் | | | | | | | | | |
| தொழில்சார் நிபுணத்துவப் பணி வழங்குநர் | | | | | | | | | |
| பயண முகவர்கள் | | | | | | | | | |
| உள்ளீட்டுப் பொருட்களின் வழங்குநர் | | | | | | | | | |
| இரத்தினக்கல், ஆபரண வணிகர் | | | | | | | | | |
| காப்புறுதியாளர்கள் | | | | | | | | | |
| வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர்கள் | | | | | | | | | |
| 01.01.2013 திகதியிடப்பட்ட இல. 1791/16 இனைக் கொண்ட வர்த்தமானியில் பொதுவான அனுமதியளிக்கப்பட்ட கணக்கு வைத்திருப்பவர்கள் | | | | | | | | | |
| சிறப்பு/ தற்காலிகமான வெளிநாட்டு நாணயக் கணக்குகள் | | | | | | | | | |
| 01.01.2013 திகதியிடப்பட்ட இல.1791/15 இனைக் கொண்ட வர்த்தமானி நியதிகளின்படி வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாட்டு திட்டத்தின் கீழ்வரும் கடன்பெறுநர்கள் | | | | | | | | | |
| ஏனையோர் (தயவுசெய்து வகையைக் குறிப்பிடவும்) | | | | | | | | | |

**குறிப்பு: அனைத்துக் கணக்குகளிலுமுள்ள வேறுபட்ட நாணய வகைகளின் விபரங்களை தயவுசெய்து வழங்குக. (யூரோ, ஐ.அ.டொலர், ஸ்ரேலிங் பவுண், ஏனையவை (தயவுசெய்து குறிப்பிடவும்))**

நான் தொடர்பான ஆவணங்களைப் பரீட்சித்தேனென்றும் மேற்குறிப்பிட்ட தகவல்கள் உண்மையானவையெனவும் சரியானவையெனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி: ................................................. ..................................................................................................
(தி/மா/ஆ) அதிகாரம்பெற்ற வணிகரின் கையொப்பமும் முத்திரையும்

**தொடர்பு எண்: 06/04/09/2014** 2014 மே 28

அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரைகள்

அன்புள்ள ஐயா,

**இலங்கைக்கு வெளியே வதியும் வழங்குநர்களினால் இலங்கையில் வதியும் இறக்குமதியாளர்களுக்கான கடன் வசதிகள்**

பன்னாட்டு வர்த்தகத்தினை மேலும் வசதிப்படுத்தும் பொருட்டு பொருட்களின் வழங்குநரினால் (இதனகத்துப் பின்னர் “வழங்குநர்” எனக் குறிப்பிடப்படும்) அத்தகைய பொருட்கள் தொடர்பாக இலங்கையில் வதியும் இறக்குமதியாளர்களுக்கு (இதனகத்துப் பின்னர் “இறக்குமதியாளர்” எனக் குறிப்பிடப்படும்) வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்கான வட்டி தொடர்பான கொடுப்பனவுகளை மேற்கொள்ள அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு இத்தால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கீழ்காணும் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு, 1969 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்கம் கொண்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் ஏற்பாட்டு நியதிகள் அல்லது அதன் கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதிகளின்படி இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட பத்திரப்படுத்தப்பட்ட பொருட்களுக்கே இவ்வனுமதியானது ஏற்புடைத்தாகும்.

(i) இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்பட்ட பத்திரப்படுத்தப்பட்ட பொருட்கள் தொடர்பில் இறக்குமதியாளர்களுக்கு வழங்கப்பட்ட கடன் வசதிகளுடன் உள்ளடங்கியுள்ள கொடுப்பனவு நியதிகளுக்கு மட்டுமே இது ஏற்புடைத்தாகும்

(ii) வட்டியானது வழங்கப்பட்ட கடன் காலத்திற்குப் பின்னர் அல்லது உண்மையாகத் தீர்ப்பனவு செய்ய வேண்டிய திகதிக்குப் பின்னர், இதில் எது முதல் வருகிறதோ அதற்குப் பின்னர் செலுத்தப்படக்கூடாது. எது எவ்வாறிருப்பினும் அத்தகைய திகதி அல்லது காலம் ஏதாவது சட்டம் மற்றும் ஒழுங்குகளில் குறித்துரைக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் எதையேனும் விஞ்சக்கூடாது.

(iii) மூல கப்பற்படுத்தல் ஆவணங்கள் இலங்கையிலுள்ள வங்கிகளினூடாக அனுப்பப்பட வேண்டும் என தேவைப்படுத்தப்படாத கொடுப்பனவு நியதிகளின் கீழ் இறக்குமதிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில், வாடிக்கையாளர் வெளிப்படுத்துகை, விலைப்பட்டியல் உள்ளடங்கலாக இலங்கைச் சுங்கத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் மற்றும் இலங்கைச் சுங்கத்தினால் அதன் இணையத்தளத்தில் தரவேற்றப்பட்ட விபரங்களிலுள்ளவாறு கப்பற் சரக்கின் விபரங்களை வங்கியானது சரிபார்த்துக் கொள்ளலாம்.

(iv) கடன் வழங்கப்பட்ட நாணயத்திற்கான அப்பொழுதுள்ள பன்னாட்டு வட்டி வீதத்திற்கு மேலதிகமான வீதத்தில் வழங்கப்பட்ட கடன்களின் மீது வழங்குநருக்கு வட்டி செலுத்தப்படக்கூடாது.

1992 பெப்புருவரி 24ஆம் திகதியிடப்பட்ட தொடர்பு எண் இசி/18/92 (பீ) மற்றும் 2003 சனவரி 21ஆம் திகதியிடப்பட்ட தொடர்பு எண் 06/05/02/2003 இனைக் கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இத்தால் நீக்கப்படுகின்றன.

உங்கள் உண்மையுள்ள
பி. எச். ஓ சந்திரவன்ச
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

**தொடர்பு எண்: 06/04/10/2014** 2014 மே 28

அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரைகள்

அன்புள்ள ஐயா,

**நாணயக் கடிதங்கள்**

பன்னாட்டு வர்த்தகக் கொடுக்கல்வாங்கல்களை மேலும் வசதிப்படுத்தும் பொருட்டு, பன்னாட்டு வர்த்தக சம்மேளனத்தின் ஆவணப்படுத்தப்பட்ட ஒருமுகப்படுத்தப்பட்ட சுங்க நடைமுறைகளின் ஏற்பாடுகளின் கீழ் நாணயக் கடிதங்கள் நிறுவப்பட்டிருக்கும் பொழுது அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் செலாவணிக் கட்டுப்பாட்டாளரைத் தொடர்பு கொள்ளாமலேயே அத்தகைய நாணயக் கடிதங்களை வழங்கவும் செல்லுபடியாகும் காலத்தினை நீடிக்கவும் நாணயக் கடிதத்தின் கிளை வாசகங்களைத் திருத்தவும் இத்தால் அனுமதிக்கப்படுகிறார்கள். இது, பின்வரும் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு நாணயக் கடிதத்தின் உரையில் தெளிவாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(அ) பன்னாட்டு வர்த்தக சம்மேளனத்தின் ஆவணப்படுத்தப்பட்ட கொடுகடன்களுக்கான ஒருமுகப்படுத்தப்பட்ட சுங்க நடைமுறைகளின் ஏதேனும் உறுப்புரை அல்லது அதன் ஒரு பகுதி அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு ஏற்புடைத்தான மற்றும் அவர்களைக் கட்டுப்படுத்தும் இலங்கையில் நடைமுறையிலுள்ள சட்டங்கள், ஒழுங்குவிதிகள், அறிவுறுத்தல்கள், பணிப்புரைகள் அல்லது தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுடன் முரண்படுமாயின் அவ்வாறான முரண்பாடுகளின் காலம் வரை அவ்வாறான சட்டங்கள், ஒழுங்குகள், அறிவுறுத்தல்கள், பணிப்புரைகள் அல்லது தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களே மேலோங்கியிருத்தல் வேண்டும்.

(ஆ) பன்னாட்டு வர்த்தக சம்மேளனத்தின் ஆவணப்படுத்தப்பட்ட கொடுகடன்களுக்கான ஒருமுகப்படுத்தப்பட்ட சுங்க நடைமுறைகளுடன் இணங்கிச் செல்லும் தேவைப்பாடு இருப்பினும் கூட, விண்ணப்பதாரியின் நலவுரித்துக்களைப் பாதுகாக்கும் விதத்தில் அல்லது இடர்நேர்வுகளைக் குறைக்கும் விதத்தில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகரானவர் மேலும் நிபந்தனைகளை விதிக்கவோ அல்லது ஏதாவது உறுப்புரையை அல்லது அதன் பகுதியை நீக்கவோ முடியும்.

(இ) மேலே விடயம் (அ) மற்றும் (ஆ) வில் குறிப்பிட்டவாறான சந்தர்ப்பங்களில், அதிகாரமளிக்கப்பட்ட வணிகரானவர் நாணயக் கடிதத்துடன் தொடர்பான இருதரப்பினருக்கும் ஏற்புடைத்தானவிடத்து அத்தகைய விலகல்களின் விபரங்களை அறிவித்தல் வேண்டும்.

2. இணைப்பு 1இல் தரப்பட்டுள்ள நாணயக் கடிதத்தின் தேவைப்பாடுகள் தொடர்பாக குறிப்பிட்டுள்ள செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தினால் வழங்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இத்தால் நீக்கப்படுகின்றன.

உங்கள் உண்மையுள்ள,
பி. எச். ஓ சந்திரவன்ச
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

**இணைப்பு 1**

**நாணயக் கடிதம் தொடர்பில் 2014 மே 28ஆம் திகதியிடப்பட்ட தொடர்பு எண் 06/04/10/2014 இனைக் கொண்ட பணிப்புரையின் பந்தி 2இன் நியதிகளின்படி, நாணயக் கடிதம் தொடர்பாக நீக்கப்படுகின்ற தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் பட்டியல் பின்வருமாறு:**

1) 1977.05.25 திகதியிடப்பட்ட தொடர்பு எண் ஈசி/17/77 (ஜீ)
2) 1977.12.07 திகதியிடப்பட்ட தொடர்பு எண் ஈசி/53/77 (பீ)
3) 1978.05.17 திகதியிடப்பட்ட தொடர்பு எண் ஈசி/11/78 (பீ)
4) 1978.07.14 திகதியிடப்பட்ட தொடர்பு எண் ஈசி/17/78 (ஜீ)
5) 1979.02.15 திகதியிடப்பட்ட தொடர்பு எண் ஈசி/08/79 (பீ)
6) 1979.11.30 திகதியிடப்பட்ட தொடர்பு எண் ஈசி/58/79 (பீ)
7) 1981.12.09 திகதியிடப்பட்ட தொடர்பு எண் ஈசி/49/81 (பீ)
16) 1991.05.23 திகதியிடப்பட்ட தொடர்பு எண் ஈசி/33/91 (பீ)
17) 1991.12.11 திகதியிடப்பட்ட தொடர்பு எண் ஈசி/112/91 (பீ)
18) 1991.12.17 திகதியிடப்பட்ட தொடர்பு எண் ஈசி/116/91 (பீ)
19) 1992.01.09 திகதியிடப்பட்ட தொடர்பு எண் ஈசி/05/92 (பீ)
20) 1992.02.24 திகதியிடப்பட்ட தொடர்பு எண் ஈசி/18/92 (பீ)
21) 1992.03.06 திகதியிடப்பட்ட தொடர்பு எண் ஈசி/25/92 (பீ)
22) 1992.05.14 திகதியிடப்பட்ட தொடர்பு எண் ஈசி/39/92 (எச்)

8) 1982.02.23 திகதியிடப்பட்ட தொடர்பு எண் ஈசி/12/82 (பீ)
9) 1984.11.21 திகதியிடப்பட்ட தொடர்பு எண் ஈசி/51/84 (பீ)
10) 1985.01.22 திகதியிடப்பட்ட தொடர்பு எண் ஈசி/04/85 (பீ)
11) 1987.02.23 திகதியிடப்பட்ட தொடர்பு எண் ஈசி/09/87 (பீ)
12) 1990.03.13 திகதியிடப்பட்ட தொடர்பு எண் ஈசி/19/90 (பீ)
13) 1990.04.17 திகதியிடப்பட்ட தொடர்பு எண் ஈசி/25/90 (பீபிசி)
14) 1990.11.01 திகதியிடப்பட்ட தொடர்பு எண் ஈசி/68/90 (பீ)
15) 1990.12.27 திகதியிடப்பட்ட தொடர்பு எண் ஈசி/79/90 (பீ)
23) 1992.08.13 திகதியிடப்பட்ட தொடர்பு எண் ஈசி/83/92 (பீ)
24) 1992.09.01 திகதியிடப்பட்ட தொடர்பு எண் ஈசி/90/92 (எச்)
25) 1992.09.01 திகதியிடப்பட்ட தொடர்பு எண் ஈசி/எஸ்ஏஏ/01/92 (எச்)
26) 1993.03.17 திகதியிடப்பட்ட தொடர்பு எண் ஈசி/40/93 (பீ)
27) 1993.08.10 திகதியிடப்பட்ட தொடர்பு எண் ஈசி/62/93 (பீ)
28) 1993.02.26 திகதியிடப்பட்ட தொடர்பு எண் ஈசி/25/93 (பீ)
29) 1994.11.18 திகதியிடப்பட்ட தொடர்பு எண் ஈசி/18/94 (பீ)
30) 1999.02.24 திகதியிடப்பட்ட தொடர்பு எண் ஈசி/02/99 (பீ)

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை**
**அதிவிசேடமானது**
1864/38 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு மே மாதம் 28 ஆந் திகதி புதன்கிழமை
**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**

**பகுதி I : தொகுதி (I) - பொது**
**இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்**
**செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (இ. ச. வா. 423ஆம் அத்தியாயம்) கீழான அறிவித்தல்**
**இலங்கைக்கு வெளியேயுள்ள வங்கிகளில் கணக்குகளைத் திறப்பதற்கும் பேணுவதற்குமான அனுமதி**

செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 48ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய பிரிவு 6அஅ மற்றும் பிரிவு 8இன் (1)ஆம் துணைப் பிரிவுகளினால் அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் இலங்கையிலுள்ள அல்லது வதியும் ஆள் மற்றும் இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள கம்பனிகள் அல்லது நிறுவனங்கள் இலங்கைக்கு வெளியேயுள்ள எந்தவொரு வங்கியிலும் வெளிநாட்டு நாணயக் கணக்குகளைத் திறப்பதற்கும் பேணுவதற்கும் தொழிற்படுத்துவதற்கும் அல்லது எந்தவொரு வெளிநாட்டு வங்கியிலுமுள்ள அத்தகைய கணக்குகளை மூடுவதற்கும் கீழே குறித்துரைக்கப்பட்டவாறு இத்தால் பொதுவான அனுமதி வழங்கப்படுகிறது.

2. இத்தால் வழங்கப்பட்டுள்ள அனுமதி கீழ்க்காணும் நபர்களுக்கு ஏற்புடையதாகும்:
   (i) வியாபாரம், கல்வி அல்லது மருத்துவ நோக்கங்களுக்காக இலங்கைக்கு வெளியே தற்காலிகமாகச் சென்றிருக்கும் இலங்கையில் வதியும் ஆளொருவர்
   (ii) இலங்கைக்கு வெளியே தொழில்சார் நிபுணத்துவம் அல்லது தொழில் பயிற்சிப் பணிகளை வழங்குகின்ற தனிப்பட்ட ஒருவர் அல்லது இலங்கையில் பதிவு செய்யப்பட்டிருக்கும் கம்பனியொன்று அல்லது நிறுவனம்;
   (iii) இலங்கைக்கு வெளியே முதலீடு செய்வதற்கு நிதி அமைச்சரினால் அனுமதிக்கப்பட்டுள்ள தனிப்பட்ட ஒருவர் அல்லது இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள கம்பனியொன்று அல்லது நிறுவனமொன்று;
   (iv) வணிகப் பொருட்களை ஏற்றுமதி செய்யுமொருவர்;
   (v) வேறொரு நாட்டினது செல்லுபடியாகும் நிரந்தர வதிவிட அனுமதிபெற்ற ஒருவர்;
   (vi) இரட்டைக் குடியுரிமையுடையவர் மற்றும்;
   (vii) விசா வழங்கும் அதிகாரசபையானது மாணவர் விசாவினை வழங்குவதற்கு தங்கள் நாட்டின் வங்கியில் கணக்கொன்றினைத் திறந்து பேண வேண்டுமென்ற நிபந்தனையை விடுவிக்குமிடத்து, அத்தகைய நாட்டிற்கு கல்வி நோக்கத்திற்காக இலங்கையிலிருந்து செல்ல உத்தேசித்துள்ள இலங்கையில் வதியும் நபர் ஒருவர்.

3. செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாட்டு நியதிகளின்படி, இலங்கைக்கு வெளியே சட்ட ரீதியாகக் கிடைக்கப்பெற்ற அல்லது ஈட்டிய அல்லது கணக்கு வைத்திருப்பவரின் அனுமதிக்கத்தக்க வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களுக்காக இலங்கையிலுள்ள அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் அல்லது அனுமதியளிக்கப்பட்ட ஆளிடமிருந்து பெற்ற வெளிநாட்டு நாணயத்தினை இக்கணக்குகளில் வரவு வைக்கலாம்.

4. செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாட்டு நியதிகளின்படி இலங்கையில் வதியும் ஆளொருவருக்காக கணக்கு வைத்திருப்பவரின் ஏதேனும் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களுக்காக இக்கணக்கிலுள்ள நிதியங்களைப் பயன்படுத்த முடியும்.

5. கீழேயுள்ள பந்தி 6இன் ஏற்பாடுகளுக்குட்பட்டு, இத்தால் வழங்கப்பட்ட அனுமதிக்கிணங்க வெளிநாட்டு வங்கிகளில் திறக்கப்பட்டு பேணப்பட்டு வரும் கணக்கொன்று மூடப்படுமிடத்து கணக்கிலுள்ள மீதி அத்தகைய கணக்கு மூடப்பட்டதிலிருந்து ஒரு மாதத்திற்கிடையில் வங்கித்தொழில் வழிப்படுத்தல்களினூடாக இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படுதல் வேண்டும்.

6. பந்தி 2இன் vii ஆவது விடயத்திலுள்ள நிபந்தனைகளுக்கிணங்க, இலங்கைக்கு வெளியில் கணக்கினைத் திறப்பதற்கும் பேணுவதற்கும் அனுமதிக்குமிடத்து அத்தகைய நாட்டினால் மாணவர் விசா நிராகரிக்கப்பட்டு அல்லது மாணவர் விசாவினைப் பெற்ற பின்பு கல்வியை மேற்கொள்ளாது விடத் தீர்மானிக்குமிடத்து, இந்த அனுமதியின் கீழ் இலங்கைக்கு வெளியில் திறக்கப்பட்ட கணக்கின் வரவுகளிலிருக்கும் அனைத்து நிதிகளும் அத்தகைய தீர்மானம் எடுத்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் சொந்த நாட்டிற்குத் திருப்பி அனுப்புதல் வேண்டும்.

7. சந்தர்ப்பம் வேறு விதத்தில் தேவைப்படுத்தினாலன்றி, இவ்வறிவித்தலில் -
   (i) “அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்” என்பது செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதே கருத்தினைக் கொண்டிருக்கும்;
   (ii) “அனுமதியளிக்கப்பட்ட ஆளொருவர்” என்பது செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 5ஆம் பிரிவின் கீழ் மத்திய வங்கியினால் தற்போதைக்கு அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள் எனப் பொருள்படும்;
   (iii) “வெளிநாட்டு நாணயம்” என்பது செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அதே கருத்தினைக் கொண்டிருக்கும்;
   (iv) “இலங்கையில் வதியும் ஆளொருவர்” அல்லது “இலங்கைக்க வெளியே வதியும் ஆளொருவர்” என்பது செலாவணிக் கட்டுபாட்டுச்

சட்டத்தின் 37(i) ஆம் பிரிவின் கீழ் நிதியமைச்சரினால் விடுக்கப்பட்ட பணிப்பிலும், 1972, ஏப்பிறல் 21ஆந் திகதியிடப்பட்ட இல. 15007 கொண்ட அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பணிப்புரையிலும் வழங்கப்பட்டுள்ள அதே கருத்தினைக் கொண்டிருக்கும்.

8. 2010 மாச்சு 11 ஆந் திகதியிடப்பட்ட இல. 1644/26 மற்றும் 2013 யூன் 12 ஆந் திகதியிடப்பட்ட இல.1814/40 இனைக் கொண்ட அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட சட்டத்தின் பிரிவு 48 உடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 6அஅ மற்றும் பிரிவு 8இன் (1)ஆம் துணைப் பிரிவுகளில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல்கள் இத்தால் நீக்கப்படுகின்றன.

பி. எச். ஓ சந்திரவன்ச
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

கொழும்பு
2014 மே 28

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை**
**அதிவிசேடமானது**
1864/39 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு மே மாதம் 28 ஆந் திகதி புதன்கிழமை
**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**

பகுதி I : தொகுதி (I) - பொது
## இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

## செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (இ. ச. வா. 423ஆம் அத்தியாயம்) கீழான அறிவித்தல்
**இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளின் தொகுதிக் கடன்களை இலங்கைக்கு வெளியில் வதிவோருக்கு வழங்குவதற்கும் மாற்றல் செய்வதற்குமான அனுமதி**

செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்திற்கு ஏற்புடைத்தான விதத்தில் 10, 11, 15 மற்றும் 30இன் உப பிரிவு 05ஆம் பிரிவுகளின் நியதிகளின் அடிப்படையில் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளின் ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட தொகுதிக் கடன்களை நாட்டு நிதிகள், பிராந்திய நிதிகள் அல்லது சமவாய நிதிகள் உள்ளடங்கலாக வெளிநாட்டு நிறுவன முதலீட்டாளர்கள், இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்டுள்ள கம்பனிச் சபைகள், இலங்கையில் வதியும் அல்லது இலங்கைக்கு வெளியே வதியும் வெளிநாட்டு பிரசாவுரிமை பெற்றவர்கள் மற்றும் இலங்கைக்கு வெளியே வதியும் இலங்கையர்கள் ஆகியோருக்கு (இதனகத்துப் பின்னர், "தகுதியான முதலீட்டாளர்கள்" என்று குறிப்பீடு செய்யப்படும்), பின்வரும் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்குவதற்கும் மாற்றல் செய்வதற்கும் இத்தால் அனுமதி வழங்கப்படுகிறது:

1. **தொகுதிக் கடன்களுக்கு ஏற்புடைத்தான நியதிகளும் நிபந்தனைகளும்:**

1.1 இவ்வனுமதியின் கீழ் வழங்கப்பட்ட அனைத்துத் தொகுதிக் கடன்களும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடாமலோ அல்லது பட்டியலிட்டோ இருக்கலாம்;

1.2 தொகுதிக் கடன்கள் வழங்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு ஆண்டு முடிவுற்ற பின்பே மூலதனத்தினை மீக்கத் தொடங்கலாம் என்பதுடன் தொகுதிக் கடன் மீதான மூலதனச் செலுத்தல்கள் தொகுதிக் கடன் காலத்தின் விகிதாசார அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படுதலும் வேண்டும்;

1.3 மாற்றத்தக்க தொகுதிக் கடன்களைப் பொறுத்தவரை, சாதாரண பங்குகளுக்கு மாற்றுதல், திருத்தப்பட்டவாறான 2002 ஏப்பிறல் 19 ஆந் திகதியிடப்பட்ட இல. 1232/14 அரச வர்த்தமானி அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட விலக்கல்களுக்கும் வரையறைகளுக்கும் உட்பட்டதாக இருத்தல் வேண்டும்;

2. **தொகுதிக் கடன்களை வழங்குகின்ற கம்பனிகளுக்கு ஏற்புடைத்தான நியதிகளும் நிபந்தனைகளும்**

2.1 தகுதியான முதலீட்டாளர்களினால் தொகுதிக் கடன்களில் முதலீடு செய்வதற்கான நிதிகளும் தொகுதிக் கடன்களுக்கான கொடுப்பனவுகளும் செலாவணிக் கட்டுப்பாட்டாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு வழங்கப்பட்ட பணிப்புரைகளுக்கிணங்க இலங்கையிலுள்ள உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றில் திறக்கப்பட்டு பேணப்பட்டு வரும் அத்தகைய முதலீட்டாளரின் பிணைய முதலீட்டுக் கணக்கில் வரவுகளிலிருந்து செலுத்தப்படல் வேண்டும்

2.2 இதன் கீழ் அனுமதிக்கப்பட்ட எந்தவொரு கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாகவும் மூலதனத்தொகை, வட்டி மற்றும் தரகுகளின் கொடுப்பனவுகள் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் அல்லது எவரேனும் ஆள் மேலேயுள்ள பந்தி 2.1 இல் குறிப்பிடப்பட்ட பிணையங்களின் முதலீட்டுக் கணக்கிற்கோ அல்லது அதிலிருந்து மட்டுமே அத்தகைய கொடுப்பனவுகளைச் செய்தல் வேண்டும்;

2.3 தொகுதிக் கடன்களில் முதலீடு செய்வதற்கான பணவனுப்பல்கள் பெறப்பட்ட 30 நாட்களுக்கிடையில் தொகுதிக் கடன்கள் வழங்கும் கம்பனி பின்வரும் விபரங்களைக் கொண்ட அறிக்கையொன்றினைச் செலாவணிக் கட்டுப்பாட்டாளருக்கு வழங்குதல் வேண்டும்:-

(அ) பிணையங்கள் முதலீட்டுக் கணக்கினூடாகப் பெறப்பட்ட மொத்தத் தொகை;

(ஆ) பணவனுப்பல் எந்த அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களூடாக பெறப்பட்டதோ அவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள்;

(இ) தொடர்பான தொகுதிக் கடன்களின் முதிர்ச்சிக் கட்டமைப்பு.

3. தொகுதிக் கடன்கள் வழங்குவதற்கு அனுமதிக்கப்பட்ட கம்பனிகளுக்குச் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 7இன் கீழ் இங்கே அனுமதிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக தகுதியான முதலீட்டாளரினால் திறக்கப்பட்டு பேணப்படும் பிணையங்கள் முதலீட்டுக் கணக்கின் வரவுகளில் ஏதேனும் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு இத்தால் அனுமதி வழங்கப்படுகிறது.

4. செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 22இன் கீழே அனுமதிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக இலங்கைக்கு வெளியில் வதியும் நபர் ஒருவருக்கு தொகுதிக் கடன் சான்றிதழ்களை (ஏதேனும் இருப்பின்) ஏற்றுமதி செய்வதற்கு தொகுதிக் கடன்களை வழங்கும் கம்பனிகளுக்கு இத்தால் அனுமதி வழங்கப்படுகிறது.

5. இவ்வறிவித்தலிலுள்ளவை எவையும் பின்வருவனவற்றிற்கு முரணானதாக அல்லது அதனைப் பாதிக்கின்ற விதத்திலான உள்ளடக்கம் எதனையும் கொண்டிருக்கக்கூடாது:-

(அ) 1978ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபையின் விதிகளின் கீழ், தொழில்முயற்சியொன்றிற்கும் முதலீட்டுச்

சபைக்குமிடையில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் உடன்படிக்கைகளின் நியதிகளின்படி, செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்திலிருந்து விலக்களிப்பு வழங்கப்பட்டுள்ள அத்தகைய தொழில்முயற்சிகளிலொன்று;

(ஆ) வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகள்.

6. அதிகாரமளிக்கப்பட்ட வர்த்தகர்கள் என்பது செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அதே கருத்தினைக் கொண்டிருக்கும்.

7. 2010.11.22 ஆந் திகதியிடப்பட்ட 1681/11ஆம் இலக்க (அதிவிசேட) வர்த்தமானி மற்றும் 2011.11.22 ஆந் திகதியிடப்பட்ட 1733/19ஆம் இலக்க (அதிவிசேட) வர்த்தமானி ஆகியவற்றில் பிரசுரிக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 30இன் உப பிரிவு 5 மற்றும் பிரிவு 10, 11, 15இன் பிரிவின் நோக்கங்களுக்காகவும் வழங்கப்பட்ட அனுமதி இத்தால் நீக்கப்படுகிறது.

பி. எச். ஓ சந்திரவன்ச
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

கொழும்பு
2014 மே 28

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை**

**அதிவிசேடமானது**

1864/40 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு மே மாதம் 28 ஆந் திகதி புதன்கிழமை

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**

**பகுதி I : தொகுதி (I) - பொது**

**இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்**

## செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (இலங்கை சட்டவாக்கத்தின் அத்தியாயம் 423) கீழான அறிவித்தல்கள்

**இலங்கை செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (இலங்கை சட்டவாக்கத்தின் அத்தியாயம் 423) 7 மற்றும் 8ஆம் பிரிவுகளின் நியதிகளின் கீழ் அனுமதி வழங்கப்படுகிறது**

2012 திசெம்பர் 20 ஆந் திகதி வெளியிடப்பட்ட இல.1789/34 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் (அதிவிசேடமானது) பிரசுரிக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் அறிவித்தல் திருத்தப்பட்டுள்ளது;

1. **பந்தி 2இனை உடனடுத்து பின்வருவனவற்றினைச் சேர்ப்பதன் மூலம்:**

"2அ. தகுதியான நபர்கள் தனிநபர்களாக இருக்குமிடத்து கீழ்காணும் நபர்கள் அதிகாரமளிக்கப்பட்ட வணிகரிடம் பற்று அட்டையினை விண்ணப்பித்துப் பெறுவதற்குத் தகுதியானவர்களாவர்.

(அ) வேலைக்காக அல்லது வியாபாரம் அல்லது தொழில்சார் நிபுணத்துவத்தை உருவாக்கிக் கொள்வதற்காக இலங்கைக்கு வெளியே சென்றுள்ள நபரினால், அவ்வகையான வேலை, வியாபாரம் அல்லது தொழிலினைப் பெறும்வரையான காலத்தில்;

(ஆ) இலங்கைக்கு வெளியில் தமது நிரந்தர வதிவிடத்தினை ஏற்படுத்திக் கொண்டுள்ள வதிவற்றோர் தடுத்து வைக்கப்பட்ட கணக்கு அல்லது புலம்பெயர்ந்தோர் தடுத்து வைக்கப்பட்ட கணக்கினை ஆரம்பித்த இலங்கை குடியுரிமையுடைய நபர்;

(இ) இராஜதந்திர வெளிநாட்டு நாணயக் கணக்கு அல்லது இராஜதந்திர ரூபாக் கணக்கினைக் கொண்டிருப்பவர்;

(ஈ) வதிவற்ற இலங்கையரல்லாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கினைக் கொண்டிருப்பவர்;

(உ) வதியும் விருந்தினர் ரூபா நடைமுறைக் கணக்கினைக் கொண்டிருப்பவர்;

(ஊ) மூத்த வெளிநாட்டுப் பிரசைகள் ரூபாக் கணக்கினைக் கொண்டிருப்பவர்;

(எ) பிணையங்கள் முதலீட்டுக் கணக்கினைக் கொண்டிருப்பவர்;

(ஏ) சிறப்பு முதலீட்டு வெளிநாட்டு வைப்புக் கணக்கினைக் கொண்டிருப்பவர்;

(ஐ) பன்னாட்டுப் பணிகள் வழங்குவோருக்கும் அவர்களது ஊழியர்களுக்குமான வெளிநாட்டு நாணயக் கணக்கினைக் கொண்டிருக்கும் ஊழியர்".

(ஒ) வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்கினைக் கொண்டிருப்பவர்;

2. **பந்தி 2அ இனை உடனடுத்து பின்வருவனவற்றைச் சேர்ப்பதன் மூலம்:**

"2அஅ. பந்தி 2(அ) இல், (ஆ) தொடக்கம் (ஒ) வரையான விடயங்களின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள தனிநபருக்கு பற்று அட்டை வழங்கும் பொழுது, பற்று அட்டைகளை அத்தகைய கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ள நிதிக்கு எதிராகவே வழங்குதல் வேண்டும்."

3. **பந்தி 2அஅ இனை உடனடுத்து பின்வருவனவற்றைச் சேர்ப்பதன் மூலம்:**

"2அஆ. பந்தி 2அ இன் கீழ் பட்டியலிடப்பட்ட நபர்களுக்கு வழங்கப்பட்ட பற்று அட்டையின் பயன்பாடு கீழ்வரும் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

(அ) இலங்கையில் வாழும் நபருக்கான கொடுப்பனவுகள் கட்டுப்பாடுகளின்றி அனுமதிக்கப்பட்டுள்ளது;

(ஆ) பற்று அட்டைகள் பின்வருவோருக்கு வழங்கப்பட்டிருக்குமிடத்து மாத்திரம் கீழ்க்காணும் விடயங்களுக்கு இலங்கைக்கு வெளியிலுள்ள நபருக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது:

(i) இராஜதந்திர வெளிநாட்டு நாணயக் கணக்கினைக் கொண்டிருப்பவர்;

(ii) வதிவற்ற இலங்கையரல்லாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கினைக் கொண்டிருப்பவர்;

(iii) பிணையங்கள் முதலீட்டுக் கணக்கினைக் கொண்டிருப்பவர்;

(iv) சிறப்பு வெளிநாட்டு முதலீட்டு வைப்புக் கணக்கினைக் கொண்டிருப்பவர்.

(இ) பற்று அட்டை பின்வருவோருக்கு வழங்கப்பட்டிருக்குமிடத்து மாத்திரம் பற்று அட்டை மூலம் இலங்கைக்கு வெளியிலுள்ள நபருக்கு நடைமுறை பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல்களுக்குக் கொடுப்பனவுகளை மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

(i) பன்னாட்டுப் பணிகள் வழங்குவோருக்கும் அவர்களது ஊழியர்களுக்குமான வெளிநாட்டு நாணயக் கணக்குகளைக் கொண்டிருக்கும் ஊழியர்

(ii) வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்கினைக் கொண்டிருப்பவர்

(iii) வேலைக்காக அல்லது வியாபாரம் அல்லது தொழில்சார் நிபுணத்துவத்தை உருவாக்கிக் கொள்வதற்காக இலங்கைக்கு வெளியில் சென்றுள்ள நபரினால், அவ்வகையான வேலை, வியாபாரம் அல்லது தொழிலினைப் பெறும் வரையிலான காலத்தில்."

4. **பந்தி 3இனை நீக்கி அதற்குப் பதிலாக கீழ்வரும் பந்தியினை இடுவதன் மூலம்:**

"3. பந்தி 2அ இன் விடயம் (அ) இன் கீழ் வழங்கப்பட்ட அட்டை நீங்கலாக, இலங்கையில் வதியும் ஒருவருக்கு வழங்கப்பட்ட இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டையினை வைத்திருப்பவர் தொழிலின் பொருட்டு புலம்பெயரும் அல்லது இலங்கையை விட்டுச் செல்வதாக இருப்பின் அந்த அட்டையை வழங்கிய வங்கியிடம் கையளித்தல் வேண்டும்."

5. **பந்தி 3 இனை நீக்கி அதற்குப் பதிலாக கீழ்வரும் பந்தியினை இடுவதன் மூலம்:**

"3அ. அட்டை வைத்திருப்பவர் கொடுகடன் அட்டை அல்லது பற்று அட்டை மூலம் வெளிநாட்டு நாணயங்களை மீளப்பெறும் வேளையில், மீளப்பெறும் தொகையானது இவ்வனுமதியின் பகுதி 2 மற்றும் 2அஆ இன் விடயம் (இ) இல் அனுமதிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்களுக்கே பயன்படுத்தப்படும் என்பதற்கான சான்றினை வைத்திருத்தல் வேண்டும்."

6. **பந்தி 5 இனை நீக்கி அதற்குப் பதிலாக கீழ்வரும் பந்தியினை இடுவதன் மூலம்:**

"5. சந்தர்ப்பம் வேறு விதத்தில் தேவைப்படுத்தினாலன்றி, இவ்வறிவித்தலின் நோக்கத்திற்காக;

(i) **"அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்"** என்பது, செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தில் தரப்பட்டுள்ள அதே கருத்தைக் கொண்டிருக்கும்;

(ii) **"இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டை"** என்பது, பயன்படுத்துநர் கொடுகடன், பற்று அல்லது ஏதேனும் வடிவத்தில் பெறுமதிகளை மாற்றல் செய்வதினை இயலுமைப்படுத்தும் அட்டை அல்லது சாதனம் எனப் பொருள்படுவதுடன் கொடுகடன் அட்டை, பற்று அட்டை மற்றும் பெறுமதிசேர்க்கப்பட்ட அட்டை என்பவற்றையும் உள்ளடக்குகின்றவிடத்து செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கிச் செல்லும் நோக்கங்களுக்காக கொடுக்கல்வாங்கல் விபரங்களினை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அடையாளங்கண்டு கொள்ளமுடியும்;

(iii) **"பற்று அட்டை"** என்பது, அட்டை வைத்திருப்பவரின் கணக்கின் வரவு மீதியிலிருந்து நேரடியாகப் பற்று வைக்கப்படுவதன் மூலம் காசு மீளப்பெறல் அத்துடன்/ அல்லது பொருட்கள் மற்றும் பணிகளின் கொள்வனவுக்காக ஒழுங்குபடுத்தப்பட்ட மூன்றாம் தரப்பினருக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காகப் பயன்படுத்தப்படக்கூடிய கொடுப்பனவு அட்டை என்று பொருளாகும்;

(iv) **"கடன் அட்டை"** என்பது, அட்டை வைத்திருப்பதற்கு வழங்குநரால் அளிக்கப்படும் தொடர் கொடுகடனுடன் தொடர்புபட்ட கொடுப்பனவு அட்டையொன்று என்பதுடன் அட்டை வைத்திருப்பவர் பயன்படுத்தப்பட்ட கடனை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் கொடுத்துத் தீர்க்கலாம். வழங்குநர் கடனின் ஏதேனும் தொகை குறித்துரைக்கப்பட்ட திகதியன்று அல்லது அதற்கு முன்னர் முழுமையாகக் கொடுத்துத் தீர்க்கப்பட்டிருக்காவிடத்து அத்தொகையின் மீது வட்டி, அல்லது வேறு விதிப்பனவுகளை விதிக்கலாம்;

(v) **"தனிப்பட்டது"** என்பது அட்டை வைத்திருப்பவர் அவரது வாழ்க்கைத்துணை, பிள்ளைகள் மற்றும் அவரின் பெற்றோர் ஆகியோரின் பயன்பாட்டைக் குறிக்கும் என்பதுடன், எந்தவொரு வர்த்தக நோக்கங்களின் பயன்பாட்டையும் உள்ளடக்கமாட்டாது.

பி. எச். ஓ சந்திரவன்ச
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

கொழும்பு
2014 மே 28

**தொடர்பு எண்: 06/04/11/2014** 2014 யூலை 01

அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரைகள்

அன்புள்ள ஐயா,

## வெளிமுக முதலீட்டுக் கணக்கிற்கான திருத்தம்

வெளிமுக முதலீட்டுக் கணக்கு தொடர்பாக 2011 சனவரி 21ஆம் நாளிடப்பட்ட தொடர்பு இல. 06/04/02/2011 கொண்ட பணிப்புரைக்கான இணைப்பு I நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக இங்கே தரப்பட்டுள்ள இணைப்பு I சேர்க்கப்படுகிறது.

உங்கள் உண்மையுள்ள,
டி.எம். ருபசிங்க
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

**இணைப்பு I**

1. அனைத்து வதியும் முதலீட்டாளர்களிடமிருந்தும் பெறப்பட வேண்டிய ஆவணங்கள்:

(i) இணைப்பு III இலுள்ள விண்ணப்பப் படிவத்துடன் சேர்ந்த கோரிக்கை

(ii) இணைப்பு IV இலுள்ள படிவத்தில் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்புரிமை பெற்ற அங்கத்துவரொருவரின் விதந்துரைப்பு.

(iii) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் புலனாய்வுகள் எதுவும் நிலுவையில்லை என்பதற்குச் சான்றாக செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்திலிருந்து இசைவுக் கடிதம்.

(iv) இணைப்பு V இலுள்ள சத்தியக்கடதாசி

2. மேலும், பின்வரும் வகைகளைக் குறித்துரைக்கும் ஆவணங்களும் பெறப்படல் வேண்டும்.

**வகை 1: 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள்**

(i) கூட்டிணைக்கப்பட்ட சான்றிதழ் மற்றும் அமைப்பு அகவிதி

(ii) உத்தேச முதலீடுகள் தொடர்பாக சபையின் தீர்மானம்.

**வகை 2: இலங்கையில் பதிவு செய்யப்பட்ட பங்குடமைகள்**

(i) பங்குடமை உடன்படிக்கையின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி

(ii) உள்நாட்டரசிறை ஆணையாளர் நாயகத்தினால் விடுக்கப்பட்ட சுற்றறிக்கையின் கீழ் தேவைப்படுத்தப்படுமிடத்து, ஒவ்வொரு பங்காளரினதும் முதலிடப்பட்ட தொகையினை உள்ளடக்குவதற்காக வரி இசைவுச் சான்றிதழ்.

**வகை 3: இலங்கையில் வதியும் தனிப்பட்டவர்கள்**

உள்நாட்டரசிறை ஆணையாளர் நாயகத்தினால் விடுக்கப்பட்ட சுற்றறிக்கையின் கீழ் தேவைப்படுமிடத்து, முதலிடப்பட்ட தொகையினை உள்ளடக்குவதற்காக வரி இசைவுச் சான்றிதழ்.

**தொடர்பு எண்: 06/04/12/2014** 2014 செத்தெம்பர் 29

அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரைகள்

அன்புள்ள ஐயா,

**வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்குகளின் உடமையாளர்களுக்கான கடன் வசதிகள்**

அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அவர்களது வழமையான வங்கித்தொழில் வியாபாரத்தின் போது அவர்களினால் எடுக்கப்பட்ட வியாபாரத் தீர்மானங்களின் ஒரு பகுதியாக ஏதேனும் நோக்கத்திற்காக பின்வரும் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு அவர்களது உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவுகளிலிருந்து வெளிநாட்டு நாணயங்களில் வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்கின் உடமையாளர்களுக்கு, கடன்களை வழங்குவதற்கு இத்தால் அனுமதி வழங்கப்படுகின்றனர்.

(1) வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்கின் உடமையாளர்கள் அவர்களது வெளிநாட்டுச் செலாவணி காசுப்பாய்ச்சலிலிருந்து கடன்களைத் தீர்ப்பனவு செய்யக்கூடிய இயலுமையைக் கொண்டிருப்பது பற்றி அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களினால் கடந்த மற்றும் திட்டமிடப்பட்ட எதிர்காலத்தினைக் கொண்ட நியாயமான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட குறிப்பிட்ட மதிப்பீடுகளின் அடிப்படையிலேயே கடன்கள் வழங்கப்பட வேண்டும்.

(2) 2008ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க (திருத்தப்பட்டது) வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளின் நியதிகளில் கடன்கள் தரம் குறைந்தவை, ஐயத்திற்குரியவை அல்லது இழப்பிற்குரியது என வகைப்படுத்தப்பட்ட செயற்படாக் கடனாகவுள்ள கட்டத்தில் மாத்திரமே கடன்களின் அறவிடல்களை இலங்கை ரூபாவில் மேற்கொள்ள முடியும்.

(3) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் இப்பணிப்புரையின் கீழ் வழங்கப்பட்ட கடன்கள் தொடர்பான காலாண்டுக் கூற்றுக்களை இணைப்பு 1இல் உள்ளவாறு ஒவ்வொரு காலாண்டும் முடிவடைந்து அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் நாளன்றோ அல்லது அதற்கு முன்போ செலாவணிக் கட்டுப்பாட்டாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(4) 2013 யூன் 12ஆம் நாளிடப்பட்ட இல.06/04/21/2013 மற்றும் 2014 மே 28ஆம் நாளிடப்பட்ட இல. 06/04/08/2014 கொண்ட பணிப்புரைகள் இத்தால் இரத்துச் செய்யப்படுவதுடன் அதன் காரணமாக நியதிகள், நிபந்தனைகள் மற்றும் அத்தகைய பணிப்புரைகளின் கீழ் வழங்கப்பட்ட கடன்களின் அறவிடல் என்பன இப்பணிப்புரையின் நியதிகளுக்கிணங்க நடைமுறைப்படுத்தப்படும்.

உங்கள் உண்மையுள்ள,
டி.எம். ருபசிங்க
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

**இணைப்பு I**

சேரல்: செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

**வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்கு உடமையாளர்களுக்கான கடன் வசதிகள் மீதான காலாண்டு அறிக்கை**

அதிகாரமளிக்கப்பட்ட வணிகரின் பெயர்: ........................................................................................................................

அறிக்கையிடும் காலம்: முடிவடைந்த காலாண்டு ........................................................................................................

| விடயம் | கடன்களின் எண்ணிக்கை | பெறுமதி (ஐ.அ.டொலர் நியதிகளில்) |
|---|---|---|
| இக்காலாண்டுப் பகுதியில் வழங்கப்பட்ட கடன் வசதிகள் | | |
| காலாண்டு இறுதியிலுள்ளவாறு வழங்கப்பட்ட மொத்தக் கடன் வசதிகள் | | |
| காலாண்டு முடிவில் செயற்படா வகையிலுள்ள கடன்கள் | | |
| காலாண்டுப் பகுதியில் ரூபாவில் அறவிடப்பட்ட செயற்படாக் கடன்கள் | | |

மேற்குறிப்பிட்ட விபரங்கள் உண்மையானவையெனவும் துல்லியமானவையெனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி: .................................

.......................................................................
அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பம்

.......................................................................
அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பதவி

சமா்ப்பிக்கும் தேவைப்பாடு:

1. ஒவ்வொரு காலாண்டும் முடிவடைந்ததிலிருந்து 15 நாட்களுக்குள்
2. சேரல்: செலாவணிக் கட்டுப்பாட்டாளா்
   செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
   இலங்கை மத்திய வங்கி
   கொழும்பு 1
   தொலைநகல்: 011 2477716

**தொடர்பு எண்: 06/04/13/2014** 2014 ஒத்தோபா் 27

அதிகாரமளிக்கப்பட்ட வணிகா்களுக்கான பணிப்புரைகள்

அன்புள்ள ஐயா,

**சீன றென்மின்பி இல் கணக்குகளைத் திறந்து பேணுதல்**

2011 யூலை 05ஆம் நாளிடப்பட்ட தொடர்பு இல. 06/04/04/2011 இன் கீழ் விடுக்கப்பட்ட பணிப்புரைக்கு மேலதிகமாக, அதிகாரமளிக்கப்பட்ட வணிகா்கள் வெளிநாட்டு நாணயக் கணக்குகளைத் திறப்பதற்கும் பேணுவதற்கும் சீன றென்மின்பி இனைப் பயன்படுத்த முடியும் என்பது பற்றி இத்தால் அறிவிக்கப்படுகின்றனா்.

உங்கள் உண்மையுள்ள
டி.எம். ருபசிங்க
**செலாவணிக் கட்டுப்பாட்டாளா்**

**தொடர்பு எண்: 06/04/15/2014** 2014 திசெம்பா் 31

அதிகாரமளிக்கப்பட்ட வணிகா்களுக்கான பணிப்புரைகள்

அன்புள்ள ஐயா,

**பயண நோக்கங்களுக்காக வெளிநாட்டு நாணயத் தாள்களை வழங்குதல்**

1. வெளிநாட்டிற்குப் பயணம் செய்கின்ற இலங்கையில் வதியும் நபா்களுக்கான பயணப் படியின் ஒரு பகுதியாக ஐ.அ.டொலா் 10,000 வரையிலான அல்லது அதற்குச் சமமான வேறு ஏதேனும் மாற்றத்தக்க வெளிநாட்டு நாணயத் தாள்களை வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகா்கள் இத்தால் அனுமதிக்கப்படுகின்றனா். நாணயத் தாள்களை வழங்கும் பொழுது நெருக்கமான கண்காணிப்பினை மேற்கொள்ளுமாறும் தனிப்பட்டவா்களின் கோரிக்கை தொடர்பான நம்பகத்தன்மையினை மதிப்பிடுமாறும் வணிகா்கள் அறிவுறுத்தப்படுகின்றனா்.
2. மேலே குறிப்பிடப்பட்ட இலங்கையில் வதியும் ஆள் இலங்கைப் பிரசையாக இருந்து குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளரினால் வழங்கப்பட்ட கடவுச்சீட்டினையும் கொண்டிருக்குமிடத்து, அத்தகைய ஆளுக்கு வழங்கப்பட்ட பயணப் படிகள் தொடர்பில் உடமையாளரின் கடவுச்சீட்டின் மீது பொருத்தமான புறக்குறிப்பீடு செய்தல் வேண்டும்.
3. மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பில் 2013 யூன் 12ஆம் நாளிடப்பட்ட தொடர்பு இல. 06/04/19/2013 கொண்ட பணிப்புரை இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது.

உங்கள் உண்மையுள்ள
ஆர். ஆர். ஜயரத்ன
**மேலதிக செலாவணிக் கட்டுப்பாட்டாளா்**

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை**

**அதிவிசேடமானது**

1895/15 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு திசெம்பா் மாதம் 31 ஆந் திகதி புதன்கிழமை

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**

**பகுதி I : தொகுதி (I) - பொது**

**இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்**

**செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (இ.ச.வா. 423ஆம் அத்தியாயம்) கீழான அறிவித்தல்கள்**

சரக்கு அனுப்புதல் பணிகளை மேற்கொள்கின்ற இலங்கையிலுள்ள அல்லது வசிக்கின்ற நபா்கள் மீதான நிபந்தனைகள் மற்றும் தேவைப்பாடுகளை விதிக்கின்ற விதத்தில், செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (அத்தியாயம் 423) பிரிவு 3 உடன் சேர்த்து வாசிக்கப்படுகின்ற பிரிவு 29ஆ இன் கீழ், 1990ஆம் ஆண்டு திசெம்பா் மாதம் 20ஆம் திகதியிடப்பட்ட 641/15 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல், இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

ஆர். ஆர். ஜயரத்ன
**மேலதிக செலாவணிக் கட்டுப்பாட்டாளா்**

கொழும்பு
2014 திசெம்பா் 31

சுற்றறிக்கை - 01/14 2014 சனவரி 30

சேரல்: அனைத்து அதிகாரமளிக்கப்பட்ட நாணய மாற்றுநர்களுக்கும்

அன்புள்ள ஐயா/ அம்மணி,

**பயங்கரவாதத்திற்கும் பயங்கரவாதிகளுக்கும் நிதியிடுவதனை தடை செய்தல் மற்றும் ஒடுக்குதல் அறிக்கையிடுகின்ற நிறுவனங்களின் கடப்பாடு**

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரினால் விடுக்கப்பட்ட 2012 மே 31ஆம் நாளிடப்பட்ட இல.1760/40 கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின்பால் அனைத்து அதிகாரமளிக்கப்பட்ட நாணய மாற்றுநர்களின் கவனமும் ஈர்க்கப்படுகின்றது.

இதன்படி, அனைத்து அதிகாரமளிக்கப்பட்ட நாணய மாற்றுநர்களும் அவர்களது வாடிக்கையாளர்களுடனான வணிகம் தொடர்பில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரமாணங்களை பின்பற்றுமாறு ஆலோசனை வழங்கப்படுகின்றனர்.

1. குறித்துரைக்கப்பட்ட தனிப்பட்ட ஆட்கள் மற்றும் நிறுவனங்களைக் கொண்ட பட்டியலுக்கான திருத்தங்கள் எப்பொழுது ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையினால் (குறிப்பிட்ட அரச வர்த்தமானியிலுள்ள ஒன்று திரட்டிய பட்டியலைக் குறிக்கிறது) பிரசுரிக்கப்படுகின்றதோ அப்பொழுது இலங்கை நிதியியல் உளவறிதல் பிரிவும் அத்தகைய திருத்தங்களை அனைத்து அதிகாரமளிக்கப்பட்ட நாணய மாற்றுநர்களுக்கும் மின்னஞ்சலூடாக அறிவிக்கும். மேலும், அதிகாரமளிக்கப்பட்ட நாணய மாற்றுநர்கள் அத்தகைய தனிப்பட்டவர்கள்/ நிறுவனங்களின் இற்றைப்படுத்தப்பட்ட பட்டியல்களை ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் வெப்தளமான http://www.un.org/sc/committees/1267/consolist.shtml மற்றும் http://www.un.org/sc/committees/1988/list.shtml இலும் உசாவுமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்.
2. குறித்துரைக்கப்பட்ட பட்டியலிலுள்ள தனிப்பட்டவர்கள்/ நிறுவனங்களின் பெயர்களையும் விபரங்களையும் கொண்ட தரவுத் தளத்தினைப் பேணுதல்.
3. தரவுத் தளத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்கள் இற்றைப்படுத்தப்பட்டுள்ளன என்பதனையும் தொடர்பானவை என்பதனையும் அவற்றை அதன் ஊழியர்கள் இலகுவாக அணுககமுடிவதனையும் உறுதிப்படுத்துதல்.
4. வாடிக்கையாளர்களுடன் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்வதற்கு முன்னர் வாடிக்கையாளர் தொடர்பான விபரங்கள் குறித்துரைக்கப்பட்ட தனிப்பட்டவர்கள் மற்றும் நிறுவனங்களின் மேற்குறிப்பிட்ட பட்டியலிலுள்ள விபரங்களுடன் பொருந்துகின்றன என்பதனை சரிபார்த்துக் கொள்ளுதல் வேண்டும்.
5. எவரேனும் வாடிக்கையாளரின் விபரங்கள் குறித்துரைக்கப்பட்ட தனிப்பட்டவர்கள்/ நிறுவனங்களின் விபரங்களுடன் பொருந்திவரும் சந்தர்ப்பங்களில்,
   (அ) 2012ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் ஒழுங்குவிதிகளின் 5ஆம் மற்றும் 6ஆம் பந்திகளுக்கிணங்க எந்தவொரு கொடுக்கல்வாங்கலையும் மேற்கொள்ளவோ அல்லது அத்தகைய குறித்துரைக்கப்பட்ட ஆட்களின் நன்மைகளுக்கான கொடுக்கல்வாங்கல்களையோ மேற்கொள்ளக்கூடாது.

   (ஆ) அத்தகைய வாடிக்கையாளரொருவரைக் கண்டறிந்த நேரத்திலிருந்து 24 மணித்தியாலத்திற்குப் பிந்தாமல் முழுமையான விபரங்களுடன் தொலைநகல்: 011-2477692 அல்லது 011-2477722 இன் மூலம் நிதியியல் உளவறில் பிரிவிற்கு அறிவிக்கலாம். அத்துடன் 011-2477125 என்ற தொலைபேசி இலக்கத்தின் மூலம் தகவல்களை அளிக்கலாம். அஞ்சல்/ தொலைநகல் மூலம் விபரங்களை அறிவிப்பதற்குப் புறம்பாக fiu@cbsl.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைப்பதும் அவசியமானதாகும்.

   (இ) பந்தி (5.ஆ) இல் குறிப்பிடப்பட்ட தொடர்பூட்டலின் பிரதியொன்றினை தகுதிவாய்ந்த அதிகாரிக்கு (தேசிய உளவுப் பிரிவின் தலைவர், தகுதிவாய்ந்த அதிகாரி அலுவலகம், பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு, இல.15/5 பாலடக்ஷ மாவத்தை, கொழும்பு 03) அனுப்பி வைத்தற்குப் புறம்பாக இதனை cniofficemod@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் அனுப்பி வைத்தல் அவசியமானதாகும்.

அதிகாரமளிக்கப்பட்ட நாணய மாற்றுநர்கள் இச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகளையும் 2012ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க ஐக்கிய நாடுகளின் ஒழுங்குவிதிகளையும் உரிய அலுவலர்களுக்கு அறியத்தருமாறும் அவற்றிற்கு கடுமையான முறையில் இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துமாறும் ஆலோசனை வழங்கப்படுகின்றனர்.

உங்கள் உண்மையுள்ள,
**பணிப்பாளர்**
**நிதியியல் உளவறிதல் பிரிவு**

படி: செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

சுற்றறிக்கை - 02/14 2014 யூன் 25

சேரல்: அனைத்து உரிமம் பெற்ற வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

அன்புள்ள ஐயா/ அம்மணி

**பயங்கரவாதம் மற்றும் பயங்கரவாதிக்கு நிதியிடுவதனைத் தடை செய்கின்ற மற்றும் ஒடுக்குகின்றமை தொடர்பாக அறிக்கையிடும் நிறுவனங்களின் கடப்பாடு**

அனைத்து உரிமம் பெற்ற வங்கிகள்/ உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளின் கவனம் திருத்தப்பட்ட 6ஆம் இலக்க நிதியியல் நடவடிக்கை செயலணிக் குழுவின் விதந்துரைப்புக்கள், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் விடுக்கப்பட்ட 2012 மே 15ஆம் நாளிடப்பட்ட இல.1758/19 கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மற்றும் பாதுகாப்பு நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளரினால் (ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் தீர்மானம் 1373 இற்கான தகுதிவாய்ந்த அதிகாரி) விடுக்கப்பட்ட 2014 மாச்சு 21 ஆம் நாளிடப்பட்ட இல.1854/41 கொண்ட அதிவிசேட வர்த்தமானி மற்றும் 2014 மே 22 நாளிடப்பட்ட இல. 1863/25 கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்கள் என்பனவற்றின்பால் ஈர்க்கப்படுகிறது.

1. இதற்கமைய, ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையின் தீர்மானம் 1373 (2001) மற்றும் அதனைத் தொடர்ந்து கொண்டு வரப்பட்ட, குறித்துரைக்கப்பட்ட தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களின் நிதிகள், நிதியியல் சொத்துக்கள் அல்லது பொருளாதார மூலவளங்களை உடனடியாக முடக்குதல் மற்றும் அத்தகைய நிதிகளை, நிதியியல் சொத்துக்களை அல்லது பொருளாதார மூலவளங்களை அத்தகைய குறித்துரைக்கப்பட்ட ஆட்களுக்கோ அல்லது நிறுவனங்களுக்கோ அல்லது நன்மைபெறுநர்களுக்கோ அவர்கள் நன்மையடையும் விதத்தில் கிடைக்கச் செய்யப்படக்கூடாது என நாடுகளைத் தேவைப்படுத்தும் தீர்மானங்களுக்கு இணங்கியொழுகுவதற்காக, இல.1758/19 கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் விபரிக்கப்பட்ட இலக்கிடப்பட்ட நிதியியல் தடைகளை நடைமுறைப்படுத்துமாறு இலங்கை கேட்டுக்

கொள்ளப்பட்டது. இதற்கமைய, ஒவ்வொரு உரிமம் பெற்ற வங்கியும் உரிமம் பெற்ற நிதிக் கம்பனியும் இல.1854/41 கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் ஆரம்பத்தில் பட்டியலிடப்பட்டுள்ளவர்களும் எதிர்காலத்தில் தகுதிவாய்ந்த அதிகாரிகளால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் வர்த்தமானி அறிவித்தல் மூலம் திருத்தப்படுகின்ற பட்டியலில் இடம்பெறுபவர்களுமான அத்தகைய குறித்துரைக்கப்பட்ட ஆட்கள் மற்றும் நிறுவனங்களின் நிதிகள், நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொருளாதார மூலவளங்களை முடக்குவதற்கான வழிமுறைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய கடப்பாட்டினைக் கொண்டிருக்கின்றன.

2. 2014 மே 22ஆம் திகதியிடப்பட்ட இல.1863/25 கொண்ட அதிவிசேட அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையொன்றினை நடைமுறைப்படுத்தும் விதத்தில் தகுதிவாய்ந்த அதிகாரியானவர் 2014 மாச்சு 21ஆம் திகதியிடப்பட்ட இல.1854/41 கொண்ட அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்ட குறித்துரைக்கப்பட்ட எவரேனும் இயற்கையான அல்லது சட்ட ரீதியான ஆட்கள், குழுக்கள் அல்லது நிறுவனத்திற்குரிய அல்லது சொந்தமான அல்லது அவர்களினால் வைத்திருக்கப்பட்ட அனைத்து நிதியங்கள், ஏனைய நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொருளாதார மூலவளங்கள் என்பனவற்றை முடக்கி வைத்துள்ளார். நிதிகள் ஏனைய நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொருளாதார மூலவளங்கள் என்பன அத்தகைய ஆட்கள், குழுக்கள் அல்லது நிறுவனம் பட்டியலில் குறித்துரைக்கப்பட்டிருக்கும் காலம் வரை முடக்கி வைத்திருக்கப்படும்.

3. பயங்கரவாதம் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடுவதுடன் தொடர்பான இலக்கிடப்பட்ட நிதியியல் தடைகளுடன் இணங்கியொழுகுகின்ற விதத்தில் உரிமம் பெற்ற வங்கி அல்லது உரிமம் பெற்ற நிதிக் கம்பனியின் கடப்பாடுகள் மீதான விபரங்களுக்கு தயவுசெய்து இணைக்கப்பட்டுள்ள எவ்ஜயு/ யுஎன்எஸ்சிஆர்1373/ பணிப்புக்கள் இல.01 இனைப் பார்க்கவும். இப்பணிப்புரைகள் தற்போதுள்ள பணம் தூயதாக்கலைத் தடைசெய்கின்ற மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடுவதற்கு எதிரானவை தொடர்பான உரிமம் பெற்ற வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளின் இணங்குவிப்பு கட்டமைப்பின் ஒரு பகுதியாக கருதப்படல் வேண்டும்.

உங்கள் உண்மையுள்ள,
**பணிப்பாளர்**
**நிதியியல் உளவறிதல் பிரிவு**

படி: அனைத்து உரிமம் பெற்ற வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் ஆகியவற்றின் இணங்குவிப்பு அலுவலர்கள்
பணிப்பாளர், வங்கி மேற்பார்வை
பணிப்பாளர், வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வை

**எவ்ஜயு/ யுஎன்எஸ்சிஆர்-1373/ பணிப்புரை இல. 01**

## பயங்கரவாதம் மற்றும் பயங்கரவாத நிதியிடலை தடை செய்தல் மற்றும் ஒடுக்குதல் தொடர்பாக அறிக்கையிடும் நிறுவனங்களின் கடப்பாடுகள்

2012 மே 15ஆம் திகதியிடப்பட்ட இல. 1758/19 கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட 2012ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் ஒழுங்குவிதிக்கு மேலதிகமாக, ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் தீர்மானம் 1373 (2001)இன் உறுப்புரை (இ) மற்றும் (ஈ) பந்திகளின் கடப்பாடுகளைச் சிறப்பாக நடைமுறைப்படுத்தும் பொருட்டு நிதிகள் அல்லது சொத்துக்களினை முடக்குவது தொடர்பான கடப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு வசதியளிக்கும் பொருட்டு இலங்கைக்குள் மேற்குறிப்பிட்ட கடப்பாடுகளுக்கு இணங்கியொழுகுவது பற்றி இத்தால் குறித்துரைக்கப்படுகின்றது.

1. உரிமம் பெற்ற வங்கிகள்/ உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் 2012ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க ஐக்கிய நாடுகளின் ஒழுங்குவிதியில் குறிப்பிடப்பட்ட நடைமுறைகள் கடுமையான முறையில் பின்பற்றப்படுவதனையும் (படி இணைக்கப்பட்டுள்ளது) அவற்றிற்கு கடுமையான முறையில் இணங்கியொழுகுவதனையும் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

2. குறித்துரைக்கப்பட்ட தனிப்பட்டவர்கள் மற்றும் நிறுவனங்களின் பட்டியல் (கூறப்பட்ட ஒழுங்குவிதியின் பிரிவு 4(2) இல் உள்ள பட்டியலாகக் குறிப்பிடப்பட்டது) 2014 மாச்சு 21ஆம் நாளிடப்பட்ட இல.1854/41 கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது. உரிமம் பெற்ற வங்கிகள்/ உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் என்பன சந்தேகத்திற்குரிய பயங்கரவாத நிதியிடலை வினைத்திறனுடன் கண்டறிவதனை உறுதிப்படுத்துவதற்காக பட்டியலிலுள்ள தனிப்பட்டவர்கள்/ நிறுவனங்களின் பெயர்களையும் விபரங்களையும் கொண்ட தரவுத் தளமொன்றினைப் பேணுதல் வேண்டும்.

3. உரிமம் பெற்ற வங்கிகள்/ உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் தரவுத் தளத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்கள் இற்றைப்படுத்தப்பட்டு பிரத்தியேகத்தன்மை கொண்டனவாக விளங்குவதனை உறுதிப்படுத்த வேண்டியதுடன் குறித்துரைக்கப்பட்ட தனிப்பட்ட ஆட்கள் மற்றும் நிறுவனங்களுக்குச் சொந்தமான அனைத்து நிதியங்கள், ஏனைய நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொருளாதார மூலவளங்களை அடையாளம் கண்டு கொள்ளும் நோக்கத்திற்காக தலைமை அலுவலகம், கிளைகள் அல்லது துணைக் கம்பனிகளிலுள்ள ஊழியர்கள் இவ்விபரங்களை இலகுவாக அணுகுவதனையும் இயலச் செய்தல் வேண்டும்.

4. தகுதிவாய்ந்த அதிகாரிகளினால் பட்டியலுக்கான திருத்தங்கள் எப்பொழுது வர்த்தமானியில் வெளியிடப்படுகின்றதோ அதன்படி நிதியியல் உளவறிதல் பிரிவு அவற்றை உரிமம் பெற்ற வங்கிகள்/ உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் என்பனவற்றின் இணங்குவிப்பு அலுவலர்களுக்கு மின்னஞ்சலூடாக அறிவிக்கும்.

5. உரிமம் பெற்ற வங்கிகள்/ உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள், நிதியியல் உளவறிதல் பிரிவிடமிருந்தான தகவல்களைப் பெற்றதும் மேலேயுள்ள பந்தி 2இன் நியதிகளுக்கிணங்க அவற்றினால் பேணப்படுகின்ற குறித்துரைக்கப்பட்ட தனிப்பட்டவர்கள்/ நிறுவனங்களின் தரவுத் தளத்தினை இற்றைப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

6. உரிமம் பெற்ற வங்கிகள்/ உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் உத்தேச வாடிக்கையாளர்களுடன் ஏதேனும் புதிய வியாபாரத் தொடர்புகளை மேற்கொள்வதற்கு முன்னதாக அவர்களது பெயர்கள் பட்டியலில் இடம்பெறவில்லை என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். மேலும், வங்கிகள்/ நிதிக் கம்பனிகள் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ள நிறுவனங்கள் அல்லது தனிப்பட்டவர்களுடன் ஏதேனும் வியாபார தொடர்புகளையோ அல்லது இணைப்புக்களையோ கொண்டிருக்கவில்லை என்பதனை உறுதிப்படுத்தும் விதத்தில் ஏற்கனவேயுள்ள வியாபாரத் தொடர்புகளை நுணுக்கமாக ஆராய்தல் வேண்டும்.

7. குறித்துரைக்கப்பட்ட தனிப்பட்ட ஆட்கள்/ நிறுவனங்களின் விபரங்கள் எவரேனும் வாடிக்கையாளர்களுடன் பொருந்துவதாகக் காணப்படும் சந்தர்ப்பத்தில், உரிமம் பெற்ற வங்கிகள்/ உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் 2012ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் ஒழுங்குவிதியின் 5ஆம் பந்தி மற்றும் தகுதிவாய்ந்த அதிகாரியினால் 2014 மே 22ஆம் திகதியிடப்பட்ட இல. 1863/25 கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை என்பனவற்றில் குறித்துரைக்கப்பட்ட ஆட்களை ஏதேனும் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்வதிலிருந்தும் தடை செய்ய வேண்டியதுடன் அனைத்து நிதிகள், ஏனைய நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொருளாதார மூலவளங்களையும் தாமதமின்றி முடக்குதல் வேண்டும்.

8. ஆளொருவரின் அல்லது நிறுவனமொன்றின் பெயர் பட்டியலிலிருந்து நீக்கப்படும் பொழுது, உரிமம் பெற்ற வங்கிகள்/ உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் 7ஆம் பந்தியின் நியதிகளுக்கிணங்க நடைமுறைப்படுத்தப்பட்ட நிதி முடக்கங்களை நீக்கி பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட ஆள் வழமையான கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ள அனுமதித்தல் வேண்டும்.

9. குறித்துரைக்கப்பட்ட தனிப்பட்ட ஆட்கள் மற்றும் நிறுவனங்களின் நிதிகள், ஏனைய நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொருளாதார மூலவளங்கள் என்பனவற்றை முடக்கும் பொழுது அல்லது அத்தகைய முடக்குதல்களை நீக்குகின்ற பொழுது அல்லது குறித்துரைக்கப்பட்ட ஆட்கள் அல்லது நிறுவனங்களினால் கொடுக்கல்வாங்கல்களுக்கான எத்தனிப்புக்கள் நிகழுமிடத்து உரிமம் பெற்ற வங்கிகள்/ உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் அத்தகைய வாடிக்கையாளரைக் கண்டறிந்த நேரத்திலிருந்து 24 மணித்தியாலங்களுக்குள் அத்தகைய வாடிக்கையாளர்களினால் அவர்களின் கணக்குகளில் வைத்திருக்கப்படும் நிதியம், ஏனைய நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொருளாதார மூலவளங்கள் என்பன தொடர்பான விபரங்களை நிதியியல் உளவறிதல் பிரிவு தொலைநகல் இல.011-2477692 அல்லது 011-2477722 இற்கு அறிவிக்க வேண்டுமென்பதுடன் 011-2477125 என்ற தொலைபேசி இலக்கம் மூலமும் அறியத்தருதல் வேண்டும். அஞ்சல்/ தொலைநகல் மூலம் அனுப்பப்படுகின்ற விபரங்களுக்குப் புறம்பாக fiu@cbsl.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் அனுப்புதல் வேண்டும்.

10. உரிமம் பெற்ற வங்கிகள்/ உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மேலேயுள்ள பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தொடர்பூட்டல்களின் பிரதியொன்றினை தகுதிவாய்ந்த அதிகாரிக்கும் (தகுதிவாய்ந்த அதிகாரியின் அலுவலகம், பாதுகாப்பு நகர அபிவிருத்தி அமைச்சு, இல.15/5 பாலடக்ஷ மாவத்தை கொழும்பு 03) அனுப்பி வைத்தல் வேண்டும். விபரங்களை அஞ்சல் மூலம் அனுப்புவதற்குப் புறம்பாக camod@defence.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் அனுப்புதல் வேண்டும்.

11. உரிமம் பெற்ற வங்கிகள்/ உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் 2012ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை தொடர்பான அலுவலர்களின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டியதுடன் அவற்றிற்கு கடுமையான முறையில் இணங்கி நடப்பதனையும் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். இணங்குவிப்பு அலுவலர்கள் யுஎன்எஸ்சிஆர் 1373 (2001) இனை நடைமுறைப்படுத்துவதற்காக எழுதப்பட்ட நடைமுறைகளையும் முறைமைகளையும் உருவாக்குவதற்கும் பேணுவதற்கும் யுஎன்எஸ்சிஆர் 1373 (2001) இற்கான அனைத்து தற்போதைய மற்றும் எதிர்காலத்தில் தொடர்ந்து வரும் தீர்மானங்களை உருவாக்குவதற்கும் பேணுவதற்கும் பொறுப்பாக இருப்பர்.

**சுற்றறிக்கை - 03/14** 2014 யூலை 7

சேரல்: காப்புறுதிக் கம்பனிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

அன்புள்ள ஐயா/ அம்மணி,

**பயங்கரவாதம் மற்றும் பயங்கரவாதிக்கு நிதியிடுவதனைத் தடை செய்கின்ற மற்றும் ஒடுக்குகின்றமை தொடர்பாக காப்புறுதிக் கம்பனிகளின் கடப்பாடுகள்**

அனைத்து காப்புறுதிக் கம்பனிகளின் கவனம் திருத்தப்பட்ட 6ஆம் இலக்க நிதியியல் நடவடிக்கை செயலணிக் குழுவின் விதந்துரைப்புக்கள், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் விடுக்கப்பட்ட 2012 மே 15ஆம் நாளிடப்பட்ட இல.1758/19 கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மற்றும் பாதுகாப்பு நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளரினால் (ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் தீர்மானம் 1373 இற்கான தகுதிவாய்ந்த அதிகாரி) விடுக்கப்பட்ட 2014 மார்சு 21 ஆம் நாளிடப்பட்ட இல.1854/41 கொண்ட அதிவிசேட வர்த்தமானி மற்றும் 2014 மே 22 நாளிடப்பட்ட இல. 1863/25 கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்கள் என்பனவற்றின்பால் ஈர்க்கப்படுகிறது.

1. இதற்கமைய, ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையின் தீர்மானம் 1373 (2001) மற்றும் அதனைத் தொடர்ந்து கொண்டு வரப்பட்ட, குறித்துரைக்கப்பட்ட தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களின் நிதிகள், நிதியியல் சொத்துக்கள் அல்லது பொருளாதார மூலவளங்களை உடனடியாக முடக்குதல் மற்றும் அத்தகைய நிதிகளை, நிதியியல் சொத்துக்களை அல்லது பொருளாதார மூலவளங்களை அத்தகைய குறித்துரைக்கப்பட்ட ஆட்களுக்கோ அல்லது நிறுவனங்களுக்கோ அல்லது நன்மைபெறுநர்களுக்கோ அவர்கள் நன்மையடையும் விதத்தில் கிடைக்கச் செய்யப்படக்கூடாது என நாடுகளைத் தேவைப்படுத்தும் தீர்மானங்களுக்கு இணங்கியொழுகுவதற்காக, இல.1758/19 கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் விபரிக்கப்பட்ட இலக்கிடப்பட்ட நிதியியல் தடைகளை நடைமுறைப்படுத்துமாறு இலங்கை கேட்டுக் கொள்ளப்பட்டது. இதற்கமைய, ஒவ்வொரு காப்புறுதிக் கம்பனியும் இல.1854/41 கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் ஆரம்பத்தில் பட்டியலிடப்பட்டுள்ளவர்களும் எதிர்காலத்தில் தகுதிவாய்ந்த அதிகாரிகளால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் வர்த்தமானி அறிவித்தல் மூலம் திருத்தப்படுகின்ற பட்டியலில் இடம்பெறுபவர்களுமான அத்தகைய குறித்துரைக்கப்பட்ட ஆட்கள் மற்றும் நிறுவனங்களின் நிதிகள், நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொருளாதார மூலவளங்களை முடக்குவதற்கான வழிமுறைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய கடப்பாட்டினைக் கொண்டிருக்கின்றன.

2. 2014 மே 22ஆம் திகதியிடப்பட்ட இல.1863/25 கொண்ட அதிவிசேட அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையொன்றினை நடைமுறைப்படுத்தும் விதத்தில் தகுதிவாய்ந்த அதிகாரியானவர் 2014 மார்சு 21ஆம் திகதியிடப்பட்ட இல.1854/41 கொண்ட அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்ட குறித்துரைக்கப்பட்ட எவரேனும் இயற்கையான அல்லது சட்ட ரீதியான ஆட்கள், குழுக்கள் அல்லது நிறுவனத்திற்குரிய அல்லது சொந்தமான அல்லது அவர்களினால் வைத்திருக்கப்பட்ட அனைத்து நிதியங்கள், ஏனைய நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொருளாதார மூலவளங்கள் என்பனவற்றை முடக்கி வைத்துள்ளார். நிதிகள் ஏனைய நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொருளாதார மூலவளங்கள் என்பன அத்தகைய ஆட்கள், குழுக்கள் அல்லது நிறுவனம் பட்டியலில் குறித்துரைக்கப்பட்டிருக்கும் காலம் வரை முடக்கி வைத்திருக்கப்படும்.

3. பயங்கரவாதம் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடுவதுடன் தொடர்பான இலக்கிடப்பட்ட நிதியியல் தடைகளுடன் இணங்கியொழுகுகின்ற விதத்தில் காப்புறுதிக் கம்பனியின் கடப்பாடுகள் மீதான விபரங்களுக்கு தயவுசெய்து இணைக்கப்பட்டுள்ள எவ்ஐயு/ யுஎன்எஸ்சிஆர்1373/ பணிப்புக்கள் இல.02 இனைப் பார்க்கவும். இப்பணிப்புரைகள் தற்போதுள்ள பணம் தூயதாக்கலைத் தடைசெய்கின்ற மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடுவதற்கு எதிரானவை தொடர்பான காப்புறுதிக் கம்பனிகளின் இணங்குவிப்பு கட்டமைப்பின் ஒரு பகுதியாக கருதப்படல் வேண்டும்.

உங்கள் உண்மையுள்ள
**பணிப்பாளர்**
**நிதியியல் உளவறிதல் பிரிவு**

படி: அனைத்து காப்புறுதிக் கம்பனிகளினதும் இணங்குவிப்பு அலுவலர்கள்
பணிப்பாளர் நாயகம்/ இலங்கை காப்புறுதிச் சபை

எவ்ஐயு/ யுஎன்எஸ்சிஆர்-1373/ பணிப்புரை இல. 02

## பயங்கரவாதம் மற்றும் பயங்கரவாத நிதியிடலை தடை செய்தல் மற்றும் ஒடுக்குதல் தொடர்பாக காப்புறுதிக் கம்பனிகளின் கடப்பாடுகள்

2012 மே 15ஆம் திகதியிடப்பட்ட இல. 1758/19 கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட 2012ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் ஒழுங்குவிதிக்கு மேலதிகமாக, ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் தீர்மானம் 1373 (2001)இன் உறுப்புரை (இ) மற்றும் (ஈ) பந்திகளின் கடப்பாடுகளைச் சிறப்பாக நடைமுறைப்படுத்தும் பொருட்டு நிதிகள் அல்லது சொத்துக்களினை முடக்குவது தொடர்பான கடப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு வசதியளிக்கும் பொருட்டு இலங்கைக்குள் மேற்குறிப்பிட்ட கடப்பாடுகளுக்கு இணங்கியொழுகுவது பற்றி இத்தால் குறித்துரைக்கப்படுகின்றது.

1. காப்புறுதிக் கம்பனிகள் 2012ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க ஐக்கிய நாடுகளின் ஒழுங்குவிதியில் குறிப்பிடப்பட்ட நடைமுறைகள் கடுமையான முறையில் பின்பற்றப்படுவதனையும் (படி இணைக்கப்பட்டுள்ளது) அவற்றிற்கு கடுமையான முறையில் இணங்கியொழுகுவதனையும் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.
2. குறித்துரைக்கப்பட்ட தனிப்பட்டவர்கள் மற்றும் நிறுவனங்களின் பட்டியல் (கூறப்பட்ட ஒழுங்குவிதியின் பிரிவு 4(2) இல் உள்ள பட்டியலாகக் குறிப்பிடப்பட்டது) 2014 மாச்சு 21ஆம் நாளிடப்பட்ட இல.1854/41 கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது. காப்புறுதிக் கம்பனிகள் சந்தேகத்திற்குரிய பயங்கரவாத நிதியிடலை வினைத்திறனுடன் கண்டறிவதனை உறுதிப்படுத்துவதற்காக பட்டியலிலுள்ள தனிப்பட்டவர்கள்/ நிறுவனங்களின் பெயர்களையும் விபரங்களையும் கொண்ட தரவுத் தளமொன்றினைப் பேணுதல் வேண்டும்.
3. காப்புறுதிக் கம்பனிகள் தரவுத் தளத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்கள் இற்றைப்படுத்தப்பட்டு பிரத்தியேகத்தன்மை கொண்டனவாக விளங்குவதனை உறுதிப்படுத்த வேண்டியதுடன் குறித்துரைக்கப்பட்ட தனிப்பட்ட ஆட்கள் மற்றும் நிறுவனங்களுக்குச் சொந்தமான அனைத்து நிதியங்கள், ஏனைய நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொருளாதார மூலவளங்களை அடையாளம் கண்டு கொள்ளும் நோக்கத்திற்காக தலைமை அலுவலகம், கிளைகள் அல்லது துணைக் கம்பனிகளிலுள்ள ஊழியர்கள் இவ்விபரங்களை இலகுவாக அணுகுவதனையும் இயலச் செய்தல் வேண்டும்.
4. தகுதிவாய்ந்த அதிகாரிகளினால் பட்டியலுக்கான திருத்தங்கள் எப்பொழுது வர்த்தமானியில் வெளியிடப்படுகின்றதோ அதன்படி நிதியியல் உளவறிதல் பிரிவு அவற்றை காப்புறுதிக் கம்பனிகளின் இணங்குவிப்பு அலுவலர்களுக்கு மின்னஞ்சலூடாக அறிவிக்கும்.
5. காப்புறுதிக் கம்பனிகள், நிதியியல் உளவறிதல் பிரிவிடமிருந்தான தகவல்களைப் பெற்றதும் மேலேயுள்ள பந்தி 2இன் நியதிகளுக்கிணங்க அவற்றினால் பேணப்படுகின்ற குறித்துரைக்கப்பட்ட தனிப்பட்டவர்கள்/ நிறுவனங்களின் தரவுத் தளத்தினை இற்றைப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
6. காப்புறுதிக் கம்பனிகள் உத்தேச வாடிக்கையாளர்களுடன் ஏதேனும் புதிய வியாபாரத் தொடர்புகளை மேற்கொள்வதற்கு முன்னதாக அவர்களது பெயர்கள் பட்டியலில் இடம்பெறவில்லை என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். மேலும், வங்கிகள்/ நிதிக் கம்பனிகள் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ள நிறுவனங்கள் அல்லது தனிப்பட்டவர்களுடன் ஏதேனும் வியாபார தொடர்புகளையோ அல்லது இணைப்புக்களையோ கொண்டிருக்கவில்லை என்பதனை உறுதிப்படுத்தும் விதத்தில் ஏற்கனவேயுள்ள வியாபாரத் தொடர்புகளை நுணுக்கமாக ஆராய்தல் வேண்டும்.
7. குறித்துரைக்கப்பட்ட தனிப்பட்ட ஆட்கள்/ நிறுவனங்களின் விபரங்கள் எவரேனும் வாடிக்கையாளர்களுடன் பொருந்துவதாகக் காணப்படும் சந்தர்ப்பத்தில், காப்புறுதிக் கம்பனிகள் 2012ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் ஒழுங்குவிதியின் 5ஆம் பந்தி மற்றும் தகுதிவாய்ந்த அதிகாரியினால் 2014 மே 22ஆம் திகதியிடப்பட்ட இல. 1863/25 கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை என்பனவற்றில் குறித்துரைக்கப்பட்ட ஆட்களை ஏதேனும் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்வதிலிருந்தும் தடை செய்ய வேண்டியதுடன் அனைத்து நிதிகள், ஏனைய நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொருளாதார மூலவளங்களையும் தாமதமின்றி முடக்குதல் வேண்டும்.
8. ஆளொருவரின் அல்லது நிறுவனமொன்றின் பெயர், பட்டியலிலிருந்து நீக்கப்படும் பொழுது காப்புறுதிக் கம்பனிகள் 7ஆம் பந்தியின் நியதிகளுக்கிணங்க நடைமுறைப்படுத்தப்பட்ட நிதி முடக்கங்களை நீக்கி பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட ஆள் வழமையான கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ள அனுமதித்தல் வேண்டும்.
9. குறித்துரைக்கப்பட்ட தனிப்பட்ட ஆட்கள் மற்றும் நிறுவனங்களின் நிதிகள், ஏனைய நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொருளாதார மூலவளங்கள் என்பனவற்றை முடக்கும் பொழுது அல்லது அத்தகைய முடக்குதல்களை நீக்குகின்ற பொழுது அல்லது குறித்துரைக்கப்பட்ட ஆட்கள் அல்லது நிறுவனங்களினால் கொடுக்கல்வாங்கல்களுக்கான எத்தனிப்புக்கள் நிகழுமிடத்து காப்புறுதிக் கம்பனிகள் அத்தகைய வாடிக்கையாளரைக் கண்டறிந்த நேரத்திலிருந்து 24 மணித்தியாலங்களுக்குள் அத்தகைய வாடிக்கையாளர்களினால் அவர்களின் கணக்குகளில் வைத்திருக்கப்படும் நிதியம், ஏனைய நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொருளாதார மூலவளங்கள் என்பன தொடர்பான விபரங்களை நிதியியல் உளவறிதல் பிரிவு தொலைநகல் இல.011-2477692 அல்லது 011-2477722 இற்கு அறிவிக்க வேண்டுமென்பதுடன் 011-2477125 என்ற தொலைபேசி இலக்கம் மூலமும் அறியத்தருதல் வேண்டும். அஞ்சல்/ தொலைநகல் மூலம் அனுப்பப்படுகின்ற விபரங்களுக்குப் புறம்பாக fiu@cbsl.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் அனுப்புதல் வேண்டும்.
10. காப்புறுதிக் கம்பனிகள் மேலேயுள்ள பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தொடர்பூட்டல்களின் பிரதியொன்றினை தகுதிவாய்ந்த அதிகாரிக்கும் (தகுதிவாய்ந்த அதிகாரியின் அலுவலகம், பாதுகாப்பு நகர அபிவிருத்தி அமைச்சு, இல.15/5 பாலடக்ஷ மாவத்தை கொழும்பு 03) அனுப்பி வைத்தல் வேண்டும். விபரங்களை அஞ்சல் மூலம் அனுப்புவதற்குப் புறம்பாக camod@defence.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் அனுப்புதல் வேண்டும்.
11. காப்புறுதிக் கம்பனிகள் 2012ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை தொடர்பான அலுவலர்களின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டியதுடன் அவற்றிற்கு கடுமையான முறையில் இணங்கி நடப்பதனையும் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். இணங்குவிப்பு அலுவலர்கள் யுஎன்எஸ்சிஆர் 1373 (2001) இனை நடைமுறைப்படுத்துவதற்காக எழுதப்பட்ட நடைமுறைகளையும் முறைமைகளையும் உருவாக்குவதற்கும் பேணுவதற்கும் யுஎன்எஸ்சிஆர் 1373 (2001) இற்கான அனைத்து தற்போதைய மற்றும் எதிர்காலத்தில் தொடர்ந்து வரும் தீர்மானங்களை உருவாக்குவதற்கும் பேணுவதற்கும் பொறுப்பாக இருப்பர்.

**சுற்றறிக்கை - 04/14** 2014 யூலை 07

சேரல்: பங்குத் தரகர்களின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

அன்புள்ள ஐயா/ அம்மணி

## பயங்கரவாதம் மற்றும் பயங்கரவாதிக்கு நிதியிடுவதனைத் தடை செய்கின்ற மற்றும் ஒடுக்குகின்றமை தொடர்பாக பங்குத் தரகர்களின் கடப்பாடுகள்

பங்குத் தரகர்களின் கவனம் திருத்தப்பட்ட 6ஆம் இலக்க நிதியியல் நடவடிக்கை செயலணிக் குழுவின் விதந்துரைப்புக்கள், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் விடுக்கப்பட்ட 2012 மே 15ஆம் நாளிடப்பட்ட இல.1758/19 கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மற்றும் பாதுகாப்பு நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளரினால் (ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் தீர்மானம் 1373 இற்கான தகுதிவாய்ந்த அதிகாரி) விடுக்கப்பட்ட 2014 மாச்சு 21 ஆம் நாளிடப்பட்ட இல.1854/41 கொண்ட அதிவிசேட வர்த்தமானி மற்றும் 2014 மே 22 நாளிடப்பட்ட இல. 1863/25 கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்கள் என்பனவற்றின்பால் ஈர்க்கப்படுகிறது.

1. இதற்கமைய, ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையின் தீர்மானம் 1373 (2001) மற்றும் அதனைத் தொடர்ந்து கொண்டு வரப்பட்ட, குறித்துரைக்கப்பட்ட தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களின் நிதிகள், நிதியியல் சொத்துக்கள் அல்லது பொருளாதார மூலவளங்களை உடனடியாக முடக்குதல் மற்றும் அத்தகைய நிதிகளை, நிதியியல் சொத்துக்களை அல்லது பொருளாதார மூலவளங்களை அத்தகைய குறித்துரைக்கப்பட்ட ஆட்களுக்கோ அல்லது நிறுவனங்களுக்கோ அல்லது நன்மைபெறுநர்களுக்கோ அவர்கள் நன்மையடையும் விதத்தில் கிடைக்கச் செய்யப்படக்கூடாது என நாடுகளைத் தேவைப்படுத்தும் தீர்மானங்களுக்கு இணங்கியொழுகுவதற்காக, இல.1758/19 கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் விபரிக்கப்பட்ட இலக்கிடப்பட்ட நிதியியல் தடைகளை நடைமுறைப்படுத்துமாறு இலங்கை கேட்டுக் கொள்ளப்பட்டது. இதற்கமைய, ஒவ்வொரு பங்குத் தரகர்களும் இல.1854/41 கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் ஆரம்பத்தில் பட்டியலிடப்பட்டுள்ளவர்களும் எதிர்காலத்தில் தகுதிவாய்ந்த அதிகாரிகளால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் வர்த்தமானி அறிவித்தல் மூலம் திருத்தப்படுகின்ற பட்டியலில் இடம்பெறுபவர்களுமான அத்தகைய குறித்துரைக்கப்பட்ட ஆட்கள் மற்றும் நிறுவனங்களின் நிதிகள், நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொருளாதார மூலவளங்களை முடக்குவதற்கான வழிமுறைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய கடப்பாட்டினைக் கொண்டிருக்கின்றன.
2. 2014 மே 22ஆம் திகதியிடப்பட்ட இல.1863/25 கொண்ட அதிவிசேட அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையொன்றினை நடைமுறைப்படுத்தும் விதத்தில் தகுதிவாய்ந்த அதிகாரியானவர் 2014 மாச்சு 21ஆம் திகதியிடப்பட்ட இல.1854/41 கொண்ட அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்ட குறித்துரைக்கப்பட்ட எவரேனும் இயற்கையான அல்லது சட்ட ரீதியான ஆட்கள், குழுக்கள் அல்லது நிறுவனத்திற்குரிய அல்லது சொந்தமான அல்லது அவர்களினால் வைத்திருக்கப்பட்ட அனைத்து நிதியங்கள், ஏனைய நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொருளாதார மூலவளங்கள் என்பனவற்றை முடக்கி வைத்துள்ளார். நிதிகள் ஏனைய நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொருளாதார மூலவளங்கள் என்பன அத்தகைய ஆட்கள், குழுக்கள் அல்லது நிறுவனம் பட்டியலில் குறித்துரைக்கப்பட்டிருக்கும் காலம் வரை முடக்கி வைத்திருக்கப்படும்.
3. பயங்கரவாதம் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடுவதுடன் தொடர்பான இலக்கிடப்பட்ட நிதியியல் தடைகளுடன் இணங்கியொழுகுகின்ற விதத்தில் பங்குத் தரகர்களின் கடப்பாடுகள் மீதான விபரங்களுக்கு தயவுசெய்து இணைக்கப்பட்டுள்ள எவ்ஐயு/ யுஎன்எஸ்சிஆர்1373/ பணிப்புக்கள் இல.03 இனைப் பார்க்கவும். இப்பணிப்புரைகள் தற்போதுள்ள பணம் தூயதாக்கலைத் தடைசெய்கின்ற மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடுவதற்கு எதிரானவை தொடர்பான உரிமம் பெற்ற வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளின் இணங்குவிப்புக் கட்டமைப்பின் ஒரு பகுதியாகக் கருதப்படல் வேண்டும்.

உங்கள் உண்மையுள்ள,
**பணிப்பாளர்**
**நிதியியல் உளவறிதல் பிரிவு**

படி: அனைத்துப் பங்குத் தரகர்களினதும் இணங்குவிப்பு அலுவலர்கள்
பணிப்பாளர் நாயகம்/ இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு
பணிப்பாளர் நாயகம்/ கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை

**எவ்ஐயு/ யுஎன்எஸ்சிஆர்-1373/ பணிப்புரை இல. 03**

## பயங்கரவாதம் மற்றும் பயங்கரவாத நிதியிடலை தடை செய்தல் மற்றும் ஒடுக்குதல் தொடர்பாக பங்குத் தரகர்களின் கடப்பாடுகள்

2012 மே 15ஆம் திகதியிடப்பட்ட இல. 1758/19 கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட 2012ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் ஒழுங்குவிதிக்கு மேலதிகமாக, ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் தீர்மானம் 1373 (2001)இன் உறுப்புரை (இ) மற்றும் (ஈ) பந்திகளின் கடப்பாடுகளைச் சிறப்பாக நடைமுறைப்படுத்தும் பொருட்டு நிதிகள் அல்லது சொத்துக்களினை முடக்குவது தொடர்பான கடப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு வசதியளிக்கும் பொருட்டு இலங்கைக்குள் மேற்குறிப்பிட்ட கடப்பாடுகளுக்கு இணங்கியொழுகுவது பற்றி இத்தால் குறித்துரைக்கப்படுகின்றது.

1. பங்குத் தரகர்கள் 2012ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க ஐக்கிய நாடுகளின் ஒழுங்குவிதியில் குறிப்பிடப்பட்ட நடைமுறைகள் கடுமையான முறையில் பின்பற்றப்படுவதனையும் (படி இணைக்கப்பட்டுள்ளது) அவற்றிற்கு கடுமையான முறையில் இணங்கியொழுகுவதனையும் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.
2. குறித்துரைக்கப்பட்ட தனிப்பட்டவர்கள் மற்றும் நிறுவனங்களின் பட்டியல் (கூறப்பட்ட ஒழுங்குவிதியின் பிரிவு 4(2) இல் உள்ள பட்டியலாகக் குறிப்பிடப்பட்டது) 2014 மாச்சு 21ஆம் நாளிடப்பட்ட இல.1854/41 கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது. பங்குத் தரகர்கள் சந்தேகத்திற்குரிய பயங்கரவாத நிதியிடலை வினைத்திறனுடன் கண்டறிவதனை உறுதிப்படுத்துவதற்காக பட்டியலிலுள்ள தனிப்பட்டவர்கள்/ நிறுவனங்களின் பெயர்களையும் விபரங்களையும் கொண்ட தரவுத் தளமொன்றினைப் பேணுதல் வேண்டும்.
3. பங்குத் தரகர்கள் தரவுத் தளத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்கள் இற்றைப்படுத்தப்பட்டு பிரத்தியேகத்தன்மை கொண்டனவாக விளங்குவதனை உறுதிப்படுத்த வேண்டியதுடன் குறித்துரைக்கப்பட்ட தனிப்பட்ட ஆட்கள் மற்றும் நிறுவனங்களுக்குச் சொந்தமான அனைத்து நிதியங்கள், ஏனைய நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொருளாதார மூலவளங்களை அடையாளம் கண்டு கொள்ளும் நோக்கத்திற்காக தலைமை அலுவலகம், கிளைகள் அல்லது துணைக் கம்பனிகளிலுள்ள ஊழியர்கள் இவ்விபரங்களை இலகுவாக அணுகுவதனையும் இயலச் செய்தல் வேண்டும்.

4. தகுதிவாய்ந்த அதிகாரிகளினால் பட்டியலுக்கான திருத்தங்கள் எப்பொழுது வர்த்தமானியில் வெளியிடப்படுகின்றதோ அதன்படி நிதியியல் உளவறிதல் பிரிவு அவற்றை பங்குத் தரகர்களின் இணங்குவிப்பு அலுவலர்களுக்கு மின்னஞ்சலூடாக அறிவிக்கும்.
5. பங்குத் தரகர்கள், நிதியியல் உளவறிதல் பிரிவிடமிருந்தான தகவல்களைப் பெற்றதும் மேலேயுள்ள பந்தி 2இன் நியதிகளுக்கிணங்க அவற்றினால் பேணப்படுகின்ற குறித்துரைக்கப்பட்ட தனிப்பட்டவர்கள்/ நிறுவனங்களின் தரவுத் தளத்தினை இற்றைப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
6. பங்குத் தரகர்கள் உத்தேச வாடிக்கையாளர்களுடன் ஏதேனும் புதிய வியாபாரத் தொடர்புகளை மேற்கொள்வதற்கு முன்னதாக அவர்களது பெயர்கள் பட்டியலில் இடம்பெறவில்லை என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். மேலும், வங்கிகள்/ நிதிக் கம்பனிகள் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ள நிறுவனங்கள் அல்லது தனிப்பட்டவர்களுடன் ஏதேனும் வியாபார தொடர்புகளையோ அல்லது இணைப்புக்களையோ கொண்டிருக்கவில்லை என்பதனை உறுதிப்படுத்தும் விதத்தில் ஏற்கனவேயுள்ள வியாபாரத் தொடர்புகளை நுணுக்கமாக ஆராய்தல் வேண்டும்.
7. குறித்துரைக்கப்பட்ட தனிப்பட்ட ஆட்கள்/ நிறுவனங்களின் விபரங்கள் எவரேனும் வாடிக்கையாளர்களுடன் பொருந்துவதாகக் காணப்படும் சந்தர்ப்பத்தில், பங்குத் தரகர்கள் 2012ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் ஒழுங்குவிதியின் 5ஆம் பந்தி மற்றும் தகுதிவாய்ந்த அதிகாரியினால் 2014 மே 22ஆம் திகதியிடப்பட்ட இல. 1863/25 கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை என்பனவற்றில் குறித்துரைக்கப்பட்ட ஆட்களை ஏதேனும் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்வதிலிருந்தும் தடை செய்ய வேண்டியதுடன் அனைத்து நிதிகள், ஏனைய நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொருளாதார மூலவளங்களையும் தாமதமின்றி முடக்குதல் வேண்டும்.
8. ஆளொருவரின் அல்லது நிறுவனமொன்றின் பெயர், பட்டியலிலிருந்து நீக்கப்படும் பொழுது பங்குத் தரகர்கள் 7ஆம் பந்தியின் நியதிகளுக்கிணங்க நடைமுறைப்படுத்தப்பட்ட நிதி முடக்கங்களை நீக்கி பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட ஆள் வழமையான கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ள அனுமதித்தல் வேண்டும்.
9. குறித்துரைக்கப்பட்ட தனிப்பட்ட ஆட்கள் மற்றும் நிறுவனங்களின் நிதிகள், ஏனைய நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொருளாதார மூலவளங்கள் என்பனவற்றை முடக்கும் பொழுது அல்லது அத்தகைய முடக்குதல்களை நீக்குகின்ற பொழுது அல்லது குறித்துரைக்கப்பட்ட ஆட்கள் அல்லது நிறுவனங்களினால் கொடுக்கல்வாங்கல்களுக்கான எத்தனிப்புக்கள் நிகழுமிடத்து பங்குத் தரகர்கள் அத்தகைய வாடிக்கையாளரைக் கண்டறிந்த நேரத்திலிருந்து 24 மணித்தியாலங்களுக்குள் அத்தகைய வாடிக்கையாளர்களினால் அவர்களின் கணக்குகளில் வைத்திருக்கப்படும் நிதியம், ஏனைய நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொருளாதார மூலவளங்கள் என்பன தொடர்பான விபரங்களை நிதியியல் உளவறிதல் பிரிவு தொலைநகல் இல.011-2477692 அல்லது 011-2477722 இற்கு அறிவிக்க வேண்டுமென்பதுடன் 011-2477125 என்ற தொலைபேசி இலக்கம் மூலமும் அறியத்தருதல் வேண்டும். அஞ்சல்/ தொலைநகல் மூலம் அனுப்பப்படுகின்ற விபரங்களுக்குப் புறம்பாக fiu@cbsl.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் அனுப்புதல் வேண்டும்.
10. பங்குத் தரகர்கள் மேலேயுள்ள பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தொடர்பூட்டல்களின் பிரதியொன்றினை தகுதிவாய்ந்த அதிகாரிக்கும் (தகுதிவாய்ந்த அதிகாரியின் அலுவலகம், பாதுகாப்பு நகர அபிவிருத்தி அமைச்சு, இல.15/5 பாலடக்ஷ மாவத்தை கொழும்பு 03) அனுப்பி வைத்தல் வேண்டும். விபரங்களை அஞ்சல் மூலம் அனுப்புவதற்குப் புறம்பாக camod@defence.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் அனுப்புதல் வேண்டும்.
11. பங்குத் தரகர்கள் 2012ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை தொடர்பான அலுவலர்களின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டியதுடன் அவற்றிற்கு கடுமையான முறையில் இணங்கி நடப்பதனையும் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். இணங்குவிப்பு அலுவலர்கள் யுஎன்எஸ்சிஆர் 1373 (2001) இனை நடைமுறைப்படுத்துவதற்காக எழுதப்பட்ட நடைமுறைகளையும் முறைமைகளையும் உருவாக்குவதற்கும் பேணுவதற்கும் யுஎன்எஸ்சிஆர் 1373 (2001) இற்கான அனைத்து தற்போதைய மற்றும், எதிர்காலத்தில் தொடர்ந்து வரும் தீர்மானங்களை உருவாக்குவதற்கும் பேணுவதற்கும் பொறுப்பாக இருப்பர்.

**சுற்றறிக்கை - 05/14** 2014 நவெம்பர் 27

சேரல்: அனைத்து உரிமம் பெற்ற வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

அன்புள்ள ஐயா/ அம்மணி,

## வெளிநாட்டு உள்முகப் பணவனுப்பல்களை அறிக்கையிடுதல்

2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் 15ஆம் பிரிவினது நியதிகளின்படி தனிப்பட்டவர்களினால் அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களினால் பெறப்படுகின்ற ஐ.அ.டொலர் 25,000 இற்குச் சமனான அல்லது அதனை விஞ்சிய அல்லது வேறு ஏதாவது வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமனான அனைத்து வெளிநாட்டு உள்முகப் பணவனுப்பல்களும் (கொடுக்கல்வாங்கலொன்றிற்கு அல்லது ஒரு கிழமைக்குள்ளான கொடுக்கல்வாங்கல்களின் கூட்டுத்தொகை) 2014 நவெம்பர் 24ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு அறிக்கையிடப்படவேண்டுமென இத்தால் பணிக்கப்படுகிறது. அறிக்கையானது குறைந்தபட்சம் பின்வரும் விபரங்களைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் இணைப்பு 1இல் உள்ள அறிவுறுத்தல்களுக்கிணங்க லங்காபின் கணனி முறைமைக்கு பதிவேற்றம் செய்யப்படுதலும் வேண்டும்.

1. கொடுக்கல்வாங்கல் இடம் பெற்ற திகதி
2. வெளிநாட்டு நாணயத்தின் தொகை
3. அனுப்பிய நாடு
4. அனுப்பியவரின் விபரங்கள்
5. நன்மைபெறுபவரின் விபரங்கள்

குறிப்பிட்ட வாரம் தொடர்பிலான மேற்குறிப்பிட்ட வாராந்த அறிக்கை அடுத்துவரும் திங்கட்கிழமையன்று நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்பதுடன் அத்தகைய அறிக்கையின் முதலாவது அறிக்கை 2014 திசெம்பர் 01ஆம் நாளன்று சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும்.

உங்கள் உண்மையுள்ள
**மேலதிகப் பணிப்பாளர்**
**நிதியியல் உளவறிதல் பிரிவு**

படி: இணங்குவிப்பு அலுவலர்கள்

**இணைப்பு I**

## வெளிநாட்டு உள்முகப் பணவனுப்பல்கள் தொடர்பில் இலத்திரனியல் நிதிய மாற்றல் உள்வருகை அறிக்கையினைச் சமர்ப்பிப்பது தொடர்பிலான அறிவுறுத்தல்கள்

- **ஐ.அ.டொலர் 25,000** இற்குச் சமனான அல்லது அதனை விஞ்சிய அல்லது அதற்குச் சமனான வேறு ஏதேனும் வெளிநாட்டு நாணயத்திலான **வெளிநாட்டு உள்முகப் பணவனுப்பல்கள்** தனியான இலத்திரனியல் நிதியக் கொடுக்கல்வாங்கல் உள்வருகை அறிக்கையொன்றாக கீழேயுள்ள படிவத்தில் அறிக்கையிடப்படுதல் வேண்டும்.
  - அறிக்கையிடும் பிரமாணம் - EFT IN (வெளிநாட்டு உள்முகப் பணவனுப்பல்களுக்கு மாத்திரம்)
  - அறிக்கையிடும் காலம் - வாராந்தம் (அடுத்துவரும் திங்கட்கிழமை)
  - LankaFIN கோவை சமர்ப்பிப்பு இலக்கம் - 10
  - கோவை வகை - Xml (அதே கோவை மாற்றல் படிவத்தினைப் பின்பற்றுக)

**தொடர்பு எண்: 34/07/029/0001/001** 2014 பெப்புருவரி 03

**சுற்றறிக்கை எண்: ஆர்ரிஜிஎஸ்/01/2014**

**சேரல்: லங்கா செட்டில் முறைமையின் அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும்**

### பெப்பச்சுவல் ரெஸநீஸ் லிமிடெட்டினை லங்கா செட்டில் முறைமையின் பங்கேற்பாளராக நியமித்தல்

இல. 10 அல்பிரட் ஹவுஸ் காடின்ஸ், கொழும்பு 3இல் அமைந்துள்ள **பெப்பச்சுவல் ரெஸநீஸ் லிமிடெட்** 1923ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டம் மற்றும் 1937ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க பதிவு செய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் என்பனவற்றின் நியதிகளில் அரச பிணையங்களின் முதனிலை வணிகராக நியமிக்கப்பட்டிருக்கிறது. இது 2014 பெப்புருவரி 05 இலிருந்து லங்கா செட்டில் முறைமையின் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை, பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைமை மற்றும் பத்திரங்களற்ற பிணையங்கள் வைப்பக முறைமை என்பனவற்றின் பங்கேற்பாளராகவும் நியமிக்கப்பட்டிருக்கின்றது.

பெப்பச்சுவல் ரெஸநீஸ் லிமிடெட்டின் சுவிப்ற் பயன்படுத்துநர் அடையாளக் குறியீடு, அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் கணக்கு இலக்கம் மற்றும் தொடர்பு விபரங்கள் என்பன கீழே தரப்பட்டுள்ளன:

| | |
|---|---|
| சுவிப்ற் பயன்படுத்துநர் அடையாளக் குறியீடு | : PPTLLKLXXXX |
| அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமைக் கணக்கு | : PPTLLKLXXXX0100053010 |
| **தொடர்பு விபரங்கள்:** | |
| முதன்மை நிறைவேற்று அலுவலர் | : திரு. அர்ஜுன் அலோசியஸ் |
| தொலைபேசி | : +94-11-4523600 |
| தொலைநகல் | : +94-11-4523620 |
| மின்னஞ்சல் | : arjun@perpetualtreasuries.com |

பெப்பச்சுவல் ரெஸநீஸ் லிமிடெட் அதன் முதனிலை பங்கேற்பாளர் வெளிநிலை அடையாள அட்டை PPTLLKLXXXX இனைப் பயன்படுத்தி 2014 பெப்புருவரி 05ஆம் நாளிலிருந்து லங்கா செட்டில் முறைமையில் பங்கேற்கும்.

ரஞ்சனி வீரசிங்க
**பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்**

என் டபிள்யு ஜீ ஆர் டி நாணயக்கார
**கண்காணிப்பாளர்/ பொதுப்படுகடன்**

**தொடர்பு எண்: 34/07/029/0001/001** 2014 பெப்புருவரி 18

**சுற்றறிக்கை எண்: ஆர்ரிஜிஎஸ்/02/2014**

**சேரல்: லங்கா செட்டில் முறைமையின் அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும்**

### 2014 பெப்புருவரி 23ஆம் நாளன்று நேரடி பரீட்சிப்புக்களை நடத்துவதற்காக லங்கா செட்டில் முறைமையைத் திறந்து விடுதல்

நேரடியான சூழ்நிலையொன்றில், பிரயோக மென்பொருளின் புதிய பதிப்பினை பரீட்சிக்கின்ற மட்டுப்படுத்தப்பட்ட நோக்கத்திற்காக **2014 பெப்புருவரி 23ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமையன்று** லங்கா செட்டில் முறைமை (அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறை மற்றும் பத்திரங்களற்ற தீர்ப்பனவு முறை) திறந்திருக்கும் என்பதனை தங்களுக்கு அறியத் தருகின்றோம். எனினும், மேலே குறிப்பிடப்பட்ட நாளில் ஏதேனும் கொடுக்கல்வாங்கல்களைத் தீர்ப்பனவு செய்வதற்கு ஏதேனும் தொடர்பான இடைமுக பிரயோகங்களை (திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் போன்றன) மேற்கொள்வதற்கு லங்கா செட்டில் முறைமை கிடைக்கத்தக்கதாக இருக்கமாட்டாது.

இதன்படி, மேலே குறிப்பிட்ட நாளில் இலங்கை மத்திய வங்கியின் தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தினால் குறித்துரைக்கப்பட்ட பிரயோக மென்பொருளின் புதிய பதிப்பினை பரீட்சிப்பதற்கான பரீட்சிப்பு கொடுக்கல்வாங்கல்களுக்காக மட்டுமே லங்கா செட்டில் முறைமை திறந்திருக்கும்.

ஆகவே நீங்கள் :

(1) 2014 பெப்புருவரி 24ஆம் நாளன்று நேரடித் தொழிற்பாடுகளுக்கான புதிய பதிப்புக் கிடைக்கும் வரை 2014 பெப்புருவரி 21ஆம் திகதியிலும் பார்க்க பிந்திய திகதியைப் பெறுமதி நாளாகக் கொண்ட முன்னோக்கிய திகதியிடப்பட்ட சுவிப்ற் செய்திகள் எவற்றையேனும் அனுப்ப வேண்டாம்.

(2) 2014 பெப்புருவரி 21ஆம் நாளிற்குப் பிந்திய திகதியை பெறுமதித் திகதியாகக் கொண்ட நீங்கள் ஏற்கனவே அனுப்பியிருக்கக்கூடிய (களஞ்சியப்படுத்தப்பட்டவை) ஏதேனும் முன்னோக்கிய திகதியிடப்பட்ட கொடுக்கல்வாங்கல்களை இரத்துச் செய்யுமாறும்.

(3) 2014 பெப்புருவரி 23ஆம் திகதி (நேரடி பரீட்சிப்பு நாள்) ஏதேனும் முன்னோக்கிய திகதியிடப்பட்ட கொடுக்கல்வாங்கல்களை அனுப்ப வேண்டாம். ஏனெனில் அத்தகைய பதிவுகள் நேரடி பரீட்சிப்பு முடிவடைகையில் முறைமையிலிருந்து நீக்கப்பட்டு விடும்.

(4) CBCELKLAXXX, CBCELKLSXXX மற்றும் CBCELKLXXXX என்பனவற்றினால் தயாரிக்கப்பட்ட 2014 பெப்புருவரி 23ஆம் நாள் பெறுமதித் திகதியாகக் கொண்டு கிடைக்கப்பட்ட அனைத்து சுவிப்ற் செய்திகளையும் பொருட்படுத்த வேண்டாம் என்றும்; அத்துடன் தயவுடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

நேரடி பரீட்சிப்பு <u>2014 பெப்புருவரி 23ஆம் திகதி மு.ப. 9.00 மணியிலிருந்து மு.ப. 11.30 மணி வரை</u> நடத்தப்படும்.

தேவையான பரீட்சிப்புத் திட்டம் இலங்கை மத்திய வங்கியின் தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தினால் ஒவ்வொரு பங்கேற்பாளர்களுக்கும் 2014 பெப்புருவரி 21ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ மின்னஞ்சல் மூலமாக நேரடியாக அனுப்பி வைக்கப்படும்.

ரஞ்சனி வீரசிங்க
**பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்**

யு.எல். முத்துகல
**மேலதிகக் கண்காணிப்பாளர்/ பொதுப்படுகடன்**

## 2014ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க பொதுவான பணிப்புரை - பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழியினூடாக மேற்கொள்ளப்படுகின்ற கொடுக்கல்வாங்கல்கள் மீது விதிக்கத்தக்க கட்டணம்

## 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் சட்டம்

2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் சட்டத்தின் 44ஆம் பிரிவின் பொதுவான பணிப்புரையின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் விடுக்கப்பட்ட பணிப்புரை.

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

கொழும்பு
2014 பெப்புருவரி 25

## பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழியினூடாக மேற்கொள்ளப்படுகின்ற கொடுக்கல்வாங்கல்கள் மீது விதிக்கத்தக்க கட்டணம்

இப்பணிப்புரையானது பொதுவான தன்னியக்கக் கூற்றுப்பொறி ஆழியினூடாக மேற்கொள்ளப்படுகின்ற கொடுக்கல்வாங்கல்கள் மீது விதிக்கத்தக்க கட்டணம் மீதான 2014ஆம் ஆண்டின் 1ஆம் இலக்கப் பொதுவான பணிப்புரையென எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழியினூடாக மேற்கொள்ளப்படும் கொடுக்கல்வாங்கல்கள் மீது விதிக்கத்தக்க கட்டணம் தொடர்பான 2013ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க பொதுவான பணிப்புரைக்குப் பதிலானதாகும். இப்பணிப்புரையானது, பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி உறுப்பினர்களுக்கு ஏற்புடைத்தானதாகவும் 2014 பெப்புருவரி 25ஆம் நாளிலிருந்து தொழிற்பாட்டிற்கு வருதலாதலும் வேண்டும்.

2. தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழியின் அனைத்து உறுப்பினர்களும் பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழியினூடாக மேற்கொள்ளப்படும் கொடுக்கல்வாங்கல்கள் மீது விதிக்கத்தக்க கட்டணத்தின் பின்வரும் வரையறைகளை பின்பற்றுதல் வேண்டும்.

2.1 அட்டை வழங்குநர்களினால் வாடிக்கையாளர்களிடமிருந்து விதிக்கப்பட வேண்டிய கட்டணம்:

2.1.1 நிதியினை மீளப் பெறுவதற்காக இன்னொரு வங்கியின் தன்னியக்கக் கூற்றுப் பொறியினை பயன்படுத்தும் வாடிக்கையாளர்களிடமிருந்து அட்டை வழங்குநரால் விதிக்கப்படும் கட்டணம் மீளப்பெறலொன்றிற்கு ரூ.30.00 (வரிகள் உட்பட) இனை விஞ்சக்கூடாது.

2.1.2 மீதி விசாரணைக்காக இன்னொரு வங்கியின் தன்னியக்கக் கூற்றுப் பொறியினை பயன்படுத்தும் வாடிக்கையாளரிடமிருந்து அட்டை வழங்குநர் விதிக்கக்கூடிய கட்டணம் ரூ.7.50 இனை விஞ்சக்கூடாது (வரிகள் உட்பட).

2.2 நிதி ஏற்பாட்டாளர்களினால் அட்டை வழங்குநர்களிடமிருந்து விதிக்கப்படத்தக்க பரஸ்பர ஏற்பாட்டுக் கட்டணம்:

2.2.1 அட்டை வழங்குநரின் வாடிக்கையாளரினால் எடுப்பனவு செய்யப்பட்ட நிதிக்காக அட்டை வழங்குநரிடமிருந்து நிதி ஏற்பாட்டாளரினால் விதிக்கப்படத்தக்க பரஸ்பர மாற்றல் கட்டணம் மீளப்பெறலொன்றிற்கு ரூ.35.00 இனை (வரிகள் உட்பட) விஞ்சக்கூடாது.

2.2.2 அட்டை வழங்குநரின் வாடிக்கையாளரினால் மீதி தொடர்பான விசாரணைக்காக அத்தகைய அட்டை வழங்குநரிடமிருந்து நிதி ஏற்பாட்டாளரினால் விதிக்கப்படத்தக்க பரஸ்பர மாற்றல் கட்டணம் ரூ.10.00 இனை (வரிகள் உட்பட) விஞ்சக்கூடாது.

**தொடர்பு எண்: 34/07/029/0001/002** 2014 மாச்சு 11

**சுற்றிக்கை எண்: ஆர்ரிஜிஎஸ்/03/2014**

**சேரல்: லங்கா செட்டில் முறைமையின் அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும்**

## லங்கா செட்டில் முறைமை 2014 மாச்சு 14ஆம் திகதி (வெள்ளிக்கிழமை) அன்று அதன் மாற்று அமைவிடத்திலிருந்து நேரடித் தொழிற்பாடுகளை மேற்கொள்ளும்

இலங்கை மத்திய வங்கி, தடங்கலற்ற வியாபார ஒழுங்குகளைப் பரீட்சிக்கின்ற நோக்கத்திற்காக லங்கா செட்டில் (ஆர்ரிஜிஎஸ் முறைமை மற்றும் லங்கா செகுயர் முறைமை) மற்றும் அதனுடன் தொடர்பான முறைமைகளின் தொழிற்பாடுகளை **2014 மாச்சு 14ஆம் திகதி (வெள்ளிக்கிழமை)** அன்று அதன் அனர்த்த மீட்பு அமைவிடத்திலிருந்து மேற்கொள்ளும் என்பதனை அறிவித்துக் கொள்கிறது.

இலங்கை மத்திய வங்கியின் இணையத்தளத்துடன் இணைக்கப்பட்டுள்ள உங்கள் நிறுவனத்திலுள்ள தனியாள் கணனி அனர்த்த மீட்பு அமைவிடத்தினை அணுகத்தக்க விதத்தில் ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ளது. எனினும், நீங்கள் 2014 மாச்சு 14ஆம் திகதிக்கு முன்னதாக இலங்கை மத்திய வங்கியின் தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தினை தொடர்பு கொண்டு இவ்விணைப்புத் தொடர்பாக பரீட்சித்துக் கொள்ளுமாறு கேட்டுக்

கொள்ளப்படுகின்றீர்கள். தேவையான உதவிகளுக்கு தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தின் பின்வரும் அலுவலர்களைத் தொடர்பு கொள்ளலாம்.

- திரு. லசித் பர்னாந்து - 2477124 (lasith@cbsl.lk)
- திரு. ருசிறு பொரலுகொட - 2398617 (rusiru@cbsl.lk)

நஞ்சனி வீரசிங்க
**பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்**

என் டபிள்யு ஜீ ஆர் டி நாணயக்கார
**கண்காணிப்பாளர்/ பொதுப்படுகடன்**

**தொடர்பு எண்: தொடர்பு எண்: 34/01/002/0044/001** 2014 ஏப்பிறல் 02

**சுற்றறிக்கை எண்: ஆர்ரிஜிஎஸ்/04/2014**

**சேரல்: லங்கா செட்டில் முறைமையின் அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும்**

### கார்கில்ஸ் பாங்க் லிமிடெட்டினை லங்கா செட்டில் முறைமையின் பங்கேற்பாளராக நியமித்தல்

இல. 696, காலி வீதி, கொழும்பு 3இல் அமைந்துள்ள **கார்கில்ஸ் பாங்க் லிமிடெட்டிற்கு** 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் வங்கித்தொழில் வியாபாரத்தினை மேற்கொள்வதற்கு உரிமம் வழங்கப்பட்டது. இது 1923ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டம் மற்றும் 1937ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க பதிவு செய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் என்பனவற்றின் கீழ் நேரடிப் பங்கேற்பாளராகவும் வணிகர் நேரடி பங்கேற்பாளராகவும் நியமிக்கப்பட்டிருக்கிறது.

இதன்படி, கார்கில்ஸ் பாங்க் லிமிடெட், லங்கா செட்டில் முறைமையின் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை, பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைமை மற்றும் பத்திரங்களற்ற பிணையங்கள் வைப்பக முறைமை என்பனவற்றின் பங்கேற்பாளராகவும் நியமிக்கப்பட்டிருக்கின்றது.

கார்கில்ஸ் பாங்க் லிமிடெட்டின் சுவிப்ற் பயன்படுத்துநர் அடையாளக் குறியீடு, அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் கணக்கு இலக்கம் மற்றும் தொடர்பு விபரங்கள் என்பன கீழே தரப்பட்டுள்ளன:

| | |
|---|---|
| சுவிப்ற் பயன்படுத்துநர் அடையாளக் குறியீடு | : CGRBLKLXXXX |
| அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமைக் கணக்கு | : CGRBLKLXXXX0100052026 |

**தொடர்பு விபரங்கள்:**

| | |
|---|---|
| முதன்மை நிறைவேற்று அலுவலர் | : திரு. ஜி.எல்.எச். பிரேமரத்ன |
| தொலைபேசி | : +94-11-3288116 |
| தொலைநகல் | : +94-11-2055575 |
| மின்னஞ்சல் | : harris.p@cargillsceylon.com |

கார்கில்ஸ் பாங்க் லிமிடெட் அதன் முதனிலை பங்கேற்பாளர் வெளிநிலை அடையாள அட்டை CGRBLKLXXXX இனைப் பயன்படுத்தி 2014 ஏப்பிறல் 7ஆம் நாளிலிருந்து லங்கா செட்டில் முறைமையில் பங்கேற்கும்.

நஞ்சனி வீரசிங்க
**பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்**

என் டபிள்யு ஜீ ஆர் டி நாணயக்கார
**பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்**

### 2014ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க பொதுவான பணிப்புரை - பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழியின் தொழிற்பாடுகள்

### 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைச் சட்டம்

2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைச் சட்டத்தின் 44ஆம் பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் ஆக்கப்பட்ட பொதுவான பணிப்புரை.

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
**நாணயச் சபையின் தலைவர் மற்றும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்**

கொழும்பு
2014 செத்தெம்பர் 01

### 2014ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க பொதுவான பணிப்புரை - பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழியின் தொழிற்பாடுகள்

இப்பணிப்புரையானது, 2014ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க பொதுவான பணிப்புரை - பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழியின் தொழிற்பாடுகள் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் லங்கா கிளியர் (பிறைவேற்) லிமிடெட் மற்றும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழியின் உறுப்பினர்களுக்கு ஏற்புடைத்தானதாகவும் 2014 செத்தெம்பர் 1ஆம் நாளன்று தொழிற்பாட்டிற்கு வருதலாதலும் வேண்டும்.

**2. வரைவிலக்கணங்கள்**

வேறுவிதமாகத் தேவைப்படுத்தினாலன்றி, இப்பணிப்புரையில்:

2.1 “பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழி” அல்லது “பொ.இ.நி.மா.ஆ.” என்பதன் கருத்து உள்நாட்டு வங்கிகளுக்கிடையிலான அதேநேர நிதிய மாற்றலுக்கு வசதியளிக்கும் லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட்டினால் தொழிற்படுத்தப்படும் ஒரு இலத்திரனியல் முறைமை எனப் பொருள்படுவதுடன் இது பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழி உறுப்பினர்களுக்கிடையிலான தீர்ப்பனவிற்கான முறைமைகள், செயன்முறைகள் மற்றும் நடவடிக்கை முறைமைகள் என்பனவற்றை உள்ளடக்கியுமிருக்கிறது.

2.2 “பொ.இ.நி.மா.ஆ. உறுப்பினர்” என்பது பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழியின் முதனிலை உறுப்பினர் மற்றும் இரண்டாந்தர உறுப்பினர் எனப் பொருள்படும்.

2.3 "பொ.இ.நி.மா.ஆ. முறைமை" என்பது பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழிக்காக லங்கா கிளியர் (பிறைவேற்) லிமிடெட்டினால் தொழிற்படுத்தப்பட்டு பேணப்படும் முறைமை மற்றும் செயன்முறையாகும். இது, பொ.இ.நி.மா. ஆழியினது தரவுகளை அனுப்புதல், பெறுதல், செயன்முறைப்படுத்தல் மற்றும் அவற்றைப் பேணுதல் என்பனவற்றிற்கான முறைமைகளை எவ்வித வரையறையுமில்லாமல் உள்ளடக்குகிறது.

2.4 "தீர்ப்பனவு வட்டம்" என்பது அடுத்த நாளின் 14:00:01 இலிருந்து 07:00:00 வரையான காலம் (தீர்ப்பனவு வட்டம் 1) அல்லது அதேநாளின் 07:00:01 இலிருந்து 14:00:00 வரையான (தீர்ப்பனவு வட்டம் 2) காலமாகும்.

2.5 "வாடிக்கையாளர்" என்பது கொடுப்பனவுக் கட்டளையொன்றினை வழங்குகின்ற அல்லது நெறிப்படுத்துகின்ற மற்றும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழி உறுப்பினர்கள் தொடர்பான கணக்குகளில் பற்று வைக்க அல்லது தொடர்பான பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழி உறுப்பினருக்குக் கொடுப்பனவு கட்டளையின் பெறுமதியளவிலான நாணயப் பெறுமதியினை வழங்குகின்ற சட்ட ரீதியான அல்லது இயல்பான ஆள் எனப் பொருள்படும்.

2.6 "தொழிற்பாட்டு ரீதியான நடைமுறைக் கைநூல்" என்பது பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழி உறுப்பினர்களுக்கு பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழியின் தொழிற்பாடுகள் தொடர்பாக லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட்டினால் தயாரிக்கப்பட்ட வழிகாட்டல்களை குறித்துரைக்கும் நடைமுறைகளையுள்ளடக்கியதொரு ஆவணமாகும்.

2.7 "முதனிலை உறுப்பினர்" என்பது அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையில் பங்கேற்பாளராகவுள்ள பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழி உறுப்பினரொருவராக இருப்பதற்கு இலங்கை மத்திய வங்கியினாலும் லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட்டினாலும் ஒப்புதலளிக்கப்பட்ட ஏதேனும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கி என்று பொருள்படும்.

2.8 "அ.நே.மொ.தீ.முறைமை" என்பது அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை எனப் பொருள்படும். இது மத்திய வங்கிக்குச் சொந்தமானதும் அதனால் தொழிற்படுத்தப்படுவதுமான முழுமையாக தன்னியக்கப்படுத்தப்பட்ட கொடுப்பனவு முறைமையொன்றாகும்.

2.9 "இரண்டாந்தர உறுப்பினர்" என்பது முதனிலை உறுப்பினரின் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை கணக்கினூடாக தேறிய நிலுவையை தீர்ப்பனவு செய்வதற்கு முதனிலை உறுப்பினருடன் ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளதும் பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி உறுப்பினராக இருப்பதற்கு இலங்கை மத்திய வங்கியினாலும் லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட்டினாலும் ஒப்புதலளிக்கப்பட்டதுமான சட்ட ரீதியான நிறுவனம் எனப் பொருள்படும்.

2.10 "உறுப்பினர் உடன்படிக்கை" என்பது பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழியின் உறுப்பினர் லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட் உடன் செய்து கொண்ட உடன்படிக்கையென பொருள்படும்.

**3. லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட் மற்றும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழி உறுப்பினரின் பொறுப்புக்கள்:**

3.1 பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழியில் பங்கேற்றல் மற்றும் தொழிற்பாடுகள் தொடர்பில் ஒவ்வொரு பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழி உறுப்பினரும் லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட்டும் உறுப்புரிமை உடன்படிக்கையொன்றை செய்து கொள்ளுதல் வேண்டும்.

3.2 ஒவ்வொரு பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழி உறுப்பினரும் லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட்டும் விதிகள், நடவடிக்கை முறைகள் என்பன வடிவிலான மற்றும் காலத்திற்குக் காலம் லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட்டினால் விபரிக்கப்பட்ட ஏனைய ஒழுங்குகள் உட்பட பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழியின் தொழிற்பாடுகள் தொடர்பில் அவற்றிற்கிடையேயான உடன்படிக்கைகளைப் பின்பற்றி நடத்தல் வேண்டும்.

3.3 ஒவ்வொரு பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழி உறுப்பினரும், லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட்டும் தொழிற்பாட்டு நடவடிக்கைக்காக கைநூலில் குறித்துரைக்கப்பட்டவற்றையும் வழிகாட்டல்களையும் பின்பற்ற உடன்பட்டுக் கொள்ளுதல் வேண்டும்.

3.4 ஒவ்வொரு பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழி உறுப்பினரும் லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட்டும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழி கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினால் விதிக்கத்தக்க ஏதேனும் வரையறைகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

**4. லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட்டின் பொறுப்புக்கள்**

4.1 லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழியின் ஏகத் தொழிற்பாட்டாளராகும்.

4.2 லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட் பின்வருவனவற்றிற்குப் பொறுப்பாக இருத்தல் வேண்டும்;

4.2.1 ஒவ்வொரு நாளும் இருபத்து நான்கு மணி நேரமும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழியினைத் தொழிற்படுத்தல்;

4.2.2 இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களப் பணிப்பாளரின் ஒப்புதலுடன் தகைமை வாய்ந்த நிறுவனங்களுக்கு பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழியில் முதலாந்தர மற்றும் இரண்டாந்தர உறுப்புரிமைகளை வழங்குதல்;

4.2.3 இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களப் பணிப்பாளரின் ஒப்புதலுடன் தெளிவானதும் அனைத்தையும் உள்ளடக்கியதுமான முறைமை விதிகளை ஏற்படுத்துதல். லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட்டினால் விடுக்கப்படுகின்ற முறைமை விதிகள் மற்றைய விடயங்களுடன் அதிகாரங்கள், உரிமைகள், லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட் மற்றும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழி உறுப்பினர்களின் கடமைகள் மற்றும் கடப்பாடுகள், சேருதல், விலகிக்கொள்ளுதல், நிறுத்துதல் மற்றும் இடைநிறுத்துதல் என்பன உள்ளிட்ட பங்கேற்புகளுக்கான நிபந்தனைகள், தொழிற்பாட்டுத் தேவைப்பாடுகள், பிணக்குகளைத் தீர்க்கும் பொறிமுறைகள் மற்றும் தகவல்களின் இரகசியத் தன்மையினை பேணுவதற்கான நிபந்தனைகள் என்பனவற்றைக் குறித்துரைத்தல் வேண்டும். இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களப் பணிப்பாளரின் இணக்கத்துடன் லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட் தேவையான வேளையில் முறைமையின் விதிகளை மாற்றமுடியும்;

4.2.4 பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழியின் தொழிற்பாடுகளுக்கு ஏற்புடைத்தான விளக்க விபரங்கள், நியமங்கள், பாதுகாப்புப் பண்புகள் மற்றும் கணக்காய்வு இணங்குவிப்பினை வரைவிலக்கணம் செய்தல்;

4.2.5 இலங்கை மத்திய வங்கியினால் நிர்ணயிக்கப்பட்ட வெட்டு நேரத்தின் போதோ அல்லது அதற்கு முன்னதாகவோ ஒவ்வொரு பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழி உறுப்பினரினதும் தேறிய நிலைமையினைப் பற்றிக் குறிப்பிடும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழியின் பல்புடை தேறிய தீர்ப்பனவு தொகுதி கோவையினை இலங்கை மத்திய வங்கிக்கு கிடைக்கச் செய்தல்;

4.2.6 பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழித் தொழிற்பாடுகளுடன் தொடர்பான ஏதேனும் பணி வழங்குநருடன் உடன்படிக்கைகள் மற்றும் ஒப்பந்தங்களை முறையாக மேற்கொள்ளுதல்;

4.2.7 3.4இல் தரப்பட்டுள்ள கிளை வாசகத்திற்கு உட்பட்டு காலத்திற்குக் காலம் லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட்டினால் திருத்தப்படக்கூடிய ஒரே சீரான கட்டணங்களையும் தண்டப் பண அமைப்பினையும் பின்பற்றுதல்;

4.3 பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழியினது தொழிற்பாடுகள் மற்றும் அவற்றுடன் தொடர்பான விடயங்கள் தொடர்பில் லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட், இலங்கை மத்திய வங்கியின் அறிக்கையிடும் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்;

4.4 லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட் தேவையானவிடத்து பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழி உறுப்பினர்களுக்கும் பொதுமக்களுக்கும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழி தொடர்பில் பயிற்சி, விழிப்புணர்வு மற்றும் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல் வேண்டும்;

**5. பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழி உறுப்பினர்களின் பொறுப்புக்கள்**

5.1 பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழியின் உறுப்பினரொருவர் லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட்டினால் தொழிற்படுத்தப்படும் தீர்ப்பனவு முறைமையினை விட மற்றைய எந்தவொரு தேசிய மட்டத்திலான வங்கிகளுக்கிடையிலான தீர்ப்பனவு மற்றும் கொடுத்துத் தீர்த்தல் முறைமைகளிலும் ஈடுபடக்கூடாது.

5.2 ஒவ்வொரு பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழி உறுப்பினரும் பின்வருவனவற்றிற்குப் பொறுப்பானவராக இருத்தல் வேண்டும்;

5.2.1 லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட்டினால் குறிப்பிடப்பட்ட பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழியின் முறைமை விதிகளைப் பின்பற்றுவதற்கு;

5.2.2 பொதுவான நிதிய மாற்றல் ஆழியின் சுமூகமான தொழிற்பாடுகளுக்காக காலத்திற்குக் காலம் லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட்டினால் குறித்துரைக்கப்பட்ட தொழில்நுட்ப, நிருவாக மற்றும் ஏனைய தேவைப்பாடுகளைப் பின்பற்றுவதற்கு;

5.2.3 அதேநேரத்தில் வாடிக்கையாளர்களுக்கு பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழியினூடாகக் கொடுக்கல்வாங்கல்கள் நிறைவடைந்தமை பற்றி அல்லது நிறைவடையாமை பற்றி தெரிந்து கொள்ளும் விதத்தில் நடைமுறைகளை அத்துடன்/ அல்லது பொறிமுறைகளை நிறுவுவதற்கு;

5.2.4 இலங்கை மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்பட்ட வெட்டு நேரத்தில் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையிலுள்ள பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழி பல்புடை ரீதியான தேறிய தீர்ப்பனவுத் தொகுதியினைத் தீர்ப்பனவு செய்வதற்கு அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமைக் கணக்கில் போதுமான நிதியம் இருப்பதனை உறுதிப்படுத்துவதற்கு;

5.2.5 தரவுத் தளங்களின் கிரமமான பின்னூட்டல்களையும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழியின் தொழிற்பாடுகளுடன் தொடர்பான அதன் அனைத்துத் தகவல்கள் மற்றும் தரவுத் தளங்களையும் கிடைக்கச் செய்வதற்கும், கணனி முறைமை பழுதடைகின்ற அல்லது தரவுகள் பழுதடைந்து போதல் அல்லது இழக்கப்படுதல் போன்ற சந்தர்ப்பங்களில் மீட்பு நடவடிக்கைகளை உருவாக்கிப் பேணுதல்;

5.2.6 நாளாந்தக் கொடுக்கல்வாங்கல் அறிக்கைகளை மீளிணக்கப்படுத்தல் மற்றும் தீர்ப்பனவு அறிக்கை கிடைக்கப் பெற்று 24 மணித்தியாலங்களுக்குள் ஏதேனும் குறைபாடுகளிருப்பின் அவற்றினை எழுத்தில் லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட்டிற்கு அறிவிப்பதற்கு;

5.2.7 பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழி தொடர்பாக இலங்கை மத்திய வங்கியின் ஒப்புதலுடன் லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட்டினால் குறித்துரைக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல் வரையறைகளைப் பின்பற்றுவதற்கு;

5.2.8 பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் தொழிற்பாடுகள் மற்றும் தொடர்பான விடயங்கள் தொடர்பில் இலங்கை மத்திய வங்கியின் அறிக்கையிடும் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல்;

5.2.9 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் நியதிகளுக்கிணங்கவும் நிதியியல் உளவறிதல் பிரிவின் அறிவித்தல்களுக்கிணங்கவும் விடுக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின்படி இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழியினூடாக மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடுவதற்கு.

**6. தடங்கலற்ற வியாபாரத் திட்டமிடல்**

6.1 எல்லா நேரங்களிலும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழிப் பணியின் கிடைப்பனவினை உறுதிப்படுத்தும் விதத்தில் லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட் மற்றும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழி என்பனவற்றின் உறுப்பினர்கள் தொடர்பான பணிப்பாளர் சபைகளினால் ஒப்புதலளிக்கப்பட்ட பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழியின் தொழிற்பாட்டிற்கான நன்கு வரைவிலக்கணம் செய்யப்பட்ட தடங்கலற்ற வியாபாரத் திட்டமிடலொன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

6.2 இடையூறுகளற்ற தொழிற்பாடுகளை உறுதிப்படுத்துகின்ற விதத்தில் லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட் மற்றும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழி என்பனவற்றின் உறுப்பினர்கள் முழுமையாக கருவி மயப்படுத்தப்பட்ட அனர்த்த மீட்பு அமைவிடத்தினையும் நன்கு பயிற்றப்பட்ட அனர்த்த முகாமைத்துவத்தினையும் வியாபார மீட்புக் குழுவினையும் கொண்டிருத்தல் வேண்டும்.

6.3 எந்தவொரு இடையூறுகளுமில்லாமல் தொழிற்பாடுகள் கொண்டு நடத்தப்படுவதனை உறுதிப்படுத்தும் விதத்தில், தொழிலாளர் பிணக்குகள் உட்பட, எதிர்பாராத சூழ்நிலையில் பணிக்கமர்த்தப்படுவதற்காக இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழியின் மையத் தொழிற்பாடுகள் தொடர்பில் தேர்ச்சியும் பயிற்சியும் பெற்ற பின்னூட்டல் அலுவலர்களை லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட் கொண்டிருத்தல் வேண்டும்.

6.4 பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழி அதன் தொழிற்பாடுகளை ஆற்றுவதற்குத் தடையாக விளங்கும் ஏதேனும் தொழில்நுட்ப அல்லது தொழிற்பாட்டுப் பிரச்சனைகளை லங்கா கிளியர் லிமிடெட் உணருமாயின் அத்தகைய பிரச்சனைகள் தெரிய வந்தவுடன் உடனடியாக இலங்கை மத்திய வங்கிக்கு தெரியப்படுத்தப்படல் வேண்டும். முக்கியமான அமைவிடத்தில் திருத்த முடியாத பழுதுகள் நிகழ்ந்திருக்கும் சந்தர்ப்பத்தில் லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட் உடனடியாக அதனை இலங்கை மத்திய வங்கிக்கு அறிவிக்க வேண்டியதுடன் அனர்த்த மீட்பு அமைவிடத்திலிருந்து தொழிற்பாடுகளை ஆரம்பிக்க வேண்டும் என்பதுடன் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழி பல்புடைத் தேறிய தீர்ப்பனவுத் தொகுதி கோப்பினையும் அனர்த்த மீட்பு அமைவிடத்திலிருந்து சமர்ப்பித்தல் வேண்டும். பிரதான இடத்திலும் அனர்த்த மீட்பு அமைவிடத்திலும் நீண்ட காலம் திருத்த முடியாத பழுதுகள் ஏற்படும் சந்தர்ப்பத்தில் லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட் இது பற்றி மத்திய வங்கிக்கு உடனடியாக அறிவிக்க வேண்டியதுடன், இறுதித் தீர்ப்பனவு வட்டத்திலிருந்து முறைமை பழுதடைந்த நேரம் வரையிலான காலப்பகுதிக்காக பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழியின் பல்புடை தேறிய தீர்ப்பனவினைப் பெறுவதற்கான மாற்று ஏற்பாட்டு முறைகளையும் பயன்படுத்துதல் வேண்டும் என்பதுடன் அவற்றை இலங்கை மத்திய வங்கிக்குக் கிடைக்கச் செய்தலும் வேண்டும்.

7. **இரகசியமானது**

லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட் மற்றும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழி உறுப்பினர்கள் அனைவரும் அனைத்துத் தரவுகள், தகவல்கள் மற்றும் பதிவேடுகள் தொடர்பில் இரகசியத்தினைப் பேண வேண்டும் என்பதுடன் அதன் அலுவலர்கள், ஊழியர்கள், முகவர்கள் அத்துடன்/ அல்லது ஏதேனும் பதவியில் தொழில்புரியும் எவரேனும் ஆள் எல்லா நேரங்களிலும் இரகசியத்தினைப் பேணுவதை உறுதிப்படுத்த வேண்டும்.

8. **பொது**

8.1 முன்னுள்ளவற்றை நிறைவேற்றுவது மற்றும் அவற்றிற்குப் பங்கமில்லாமல், இலங்கை மத்திய வங்கி காலத்திற்குக் காலமும் எந்தவொரு நேரத்திலும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழி மற்றும் லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட் என்பனவற்றின் தொழிற்பாடுகள் தொடர்பில் அத்தகைய தகவல்களை வழங்குமாறு லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட்டினையும் பொதுவான இலத்திரனியல் நிதியமாற்றல் ஆழி உறுப்பினர்களையும் கோரலாம் என்பதுடன் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழி உறுப்பினர்கள் அத்தகைய தகவல்களை இலங்கை மத்திய வங்கிக்கு வழங்குதலும் வேண்டும்.

8.2 இப்பணிப்புரையானது மேலதிகமானதாகவும் ஏதேனும் எழுதப்பட்ட சட்டங்கள் மற்றும் விதிகள், ஒழுங்குவிதிகள், நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் வலுக்களை குறைக்காததொன்றாக விளங்குமென்பதுடன் லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட் மற்றும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழியின் உறுப்பினர்கள் இவற்றிற்கு உட்பட்டவர்களாகவும் அத்துடன்/ அல்லது காலத்திற்குக் காலம் உட்படுபவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

8.3 பொதுவாக மேற்குறிப்பிட்ட பந்தியின் பொதுவான தன்மைக்கு பங்கமெதுவுமின்றி இப்பணிப்புரையானது 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டத்தினால் விதிக்கப்பட்ட ஏதேனும் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களை மட்டுப்படுத்துகின்ற விதத்தில் அல்லது ஏதேனும் விதிகள், ஒழுங்குவிதிகள், அறிவுறுத்தல்கள், நெறிப்படுத்தல்கள் அல்லது ஏதேனும் எழுதப்பட்ட சட்டங்களின் கீழ் விடுக்கப்பட்ட கட்டளைகளை மட்டுப்படுத்துகின்ற விதத்தில் பொருள் கொள்ளப்படுதல் கூடாது.

**தொடர்பு எண்: 34/07/029/0001/002** 2014 ஒத்தோபர் 02

**சுற்றறிக்கை எண்: ஆர்ரிஜிஎஸ்/05/2014**

**சேரல்: லங்கா செட்டில் முறைமையின் அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும்**

**2014 ஒத்தோபர் 6ஆம் திகதியை அரச மற்றும் சிறப்பு வங்கி விடுமுறையாகப் பிரகடனப்படுத்தல்**

கஜ் பெருநாள் (இத்-உல்-அல்கா) 2014 ஒத்தோபர் 05ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை வருவதன் காரணமாக அரசாங்கம் 2014 ஒத்தோபர் 06ஆம் திகதியினை (திங்கட்கிழமை) அரச மற்றும் சிறப்பு வங்கி விடுமுறையாகப் பிரகடனப்படுத்தியிருப்பதன் காரணமாக அன்று லங்கா செட்டில் முறைமை வியாபாரத்திற்காக திறக்கப்படமாட்டாது என்பதனை தங்களுக்கு அறியத் தருகின்றோம். 2014 ஒத்தோபர் 06ஆம் திகதியை பெறுமதித் திகதியாகக் கொண்ட எந்தவொரு கொடுக்கல்வாங்கல்களையும் முறைமையில் பதிவு செய்வதனை தவிர்த்துக் கொள்ளுமாறு அனைத்துப் பங்கேற்பாளர்களும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். 2014 ஒத்தோபர் 06ஆம் திகதியை பெறுமதித் திகதியாகக் கொண்ட கொடுக்கல்வாங்கல்களை நீங்கள் ஏற்கனவே பதிவு செய்திருப்பின் அத்தகைய கொடுக்கல்வாங்கல்களை லங்கா செட்டிலின் அடுத்த வேலை நாளின் பெறுமதித் திகதியான 2014 ஒத்தோபர் 07 இற்கு மீளப் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

நஞ்சனி வீரசிங்க
**பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்**

யு.எல். முத்துகல
**பதில் கண்காணிப்பாளர்/ பொதுப்படுகடன்**

**தொடர்பு எண்: 34/07/029/0001/002** 2014 ஒத்தோபர் 13

**சுற்றறிக்கை எண்: ஆர்ரிஜிஎஸ்/06/2014**

**சேரல்: லங்கா செட்டில் முறைமையின் அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும்**

**வரையறுக்கப்பட்ட அமானா வங்கியின் பெயர் மாற்றம்**

2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திற்கு அமைவாக அமானா வங்கி பிஎல்சி என்ற பெயரின் கீழ் வரையறுக்கப்பட்ட அமானா வங்கியானது வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனியொன்றாகப் பதிவு செய்யப்பட்டது.

இதற்கமைய லங்கா செட்டில் முறைமையின் நிலையான தரவு 2014 ஒத்தோபர் 14ஆம் நாளிலிருந்து கீழே காட்டப்பட்டவாறு மாற்றப்படவுள்ளது.

<u>பங்கேற்கும் நிறுவனத்தின் பெயர்:</u> அமானா வங்கி பிஎல்சி

அமானா வங்கி பிஎல்சி இனது கணக்கின் பெயரும் சுவிப்ற் வங்கி அடையாளக் குறியீடும் மாற்றமின்றிக் காணப்படும்.

நஞ்சனி வீரசிங்க
**பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்**

என் டபிள்யு ஜீ ஆர் டி நாணயக்கார
**கண்காணிப்பாளர்/ பொதுப்படுகடன்**

**தொடர்பு எண்: 34/07/029/0001/002** 2014 ஒத்தோபர் 29

**சுற்றிக்கை எண்: ஆர்ரிஜிஎஸ்/07/2014**

**சேரல்: லங்கா செட்டில் முறைமையின் அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும்**

**லங்கா செட்டில் முறைமை 2014 நவெம்பர் 07ஆம் திகதி (வெள்ளிக்கிழமை) அன்று அதன் மாற்று அமைவிடத்திலிருந்து நேரடித் தொழிற்பாடுகளை மேற்கொள்ளும்**

இலங்கை மத்திய வங்கி, லங்கா செட்டில் (ஆர்ரிஜிஎஸ் முறைமை மற்றும் லங்கா செகுயர் முறைமை) மற்றும் அதனுடன் தொடர்பான முறைமைகள், தடங்கலற்ற வியாபார ஒழுங்குகளைப் பரீட்சிக்கின்ற நோக்கத்திற்காக அவற்றின் தொழிற்பாடுகளை **2014 நவெம்பர் 07ஆம் திகதி (வெள்ளிக்கிழமை)**

அன்று அதன் அனர்த்த மீட்பு அமைவிடத்திலிருந்து மேற்கொள்ளும் என்பதனை அறிவித்துக் கொள்கிறது.

இலங்கை மத்திய வங்கியின் இணையத்தளத்துடன் இணைக்கப்பட்டுள்ள உங்கள் நிறுவனத்திலுள்ள தனியாள் கணனி அனர்த்த மீட்பு அமைவிடத்தினை அணுகத்தக்க விதத்தில் ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ளது. எனினும், நீங்கள் **2014 நவெம்பர் 07**ஆம் திகதிக்கு முன்னதாக இலங்கை மத்திய வங்கியின் தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தினை தொடர்பு கொண்டு இவ்விணைப்புத் தொடர்பாக பரீட்சித்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். தேவையான உதவிகளுக்கு தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தின் பின்வரும் அலுவலர்களைத் தொடர்பு கொள்ளலாம்.

- திரு. லசித் பர்னாந்து - 2477124 (lasith@cbsl.lk)
- திரு. றுசிறு பொரலுகொட - 2398617 (rusiru@cbsl.lk)

ரஞ்சனி வீரசிங்க
**பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்**

யு.எல். முத்துகல
**பதில் கண்காணிப்பாளர்/ பொதுப்படுகடன்**

**தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல.: ஆர்டிடி/எஸ்ஈபிஜ/2009/07/(ஏ-02)**

பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
இல. 30, சனாதிபதி மாவத்தை,
கொழும்பு 01.
2014 ஏப்பிறல் 10

சேரல்: அனைத்துப் பங்குபற்றும் நிதியியல் நிறுவனங்களுக்கும்

கனம் ஐயா/ அம்மணி,

**சுயவேலை வாய்ப்பு ஊக்குவிப்பு முன்னெடுப்புக் கடன் திட்டத்தின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கான திருத்தங்கள்**

சுயவேலை வாய்ப்பு ஊக்குவிப்பு முன்னெடுப்புக் கடன் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக 2009 செத்தெம்பர் 15ஆம் திகதியைக் கொண்ட இல. ஆர்டிடி/எஸ்ஈபிஜ/2009/07 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றன;

**1.2. கொடுகடன் கூறு**

பிரிவு 1.2.2 இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக "பிரதேச அபிவிருத்தித் திணைக்களம், இளைஞர் விவகார தேர்ச்சி அபிவிருத்தி அமைச்சினால் அடையாளம் காணப்பட்ட துணைக் கடன்பாட்டாளர்களின் குறுங்கால, நடுத்தர கால மற்றும் நீண்ட காலத் துணைச் செயற்றிட்டத்திற்கு மீள்நிதியிடுவதற்கான ஏற்பாடாக ரூபா இருநூற்று ஐம்பது மில்லியன் கொண்ட இலங்கை அரசாங்கத்தின் நிதியினைப் பயன்படுத்தும் என்பதுடன் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் அதாவது இலங்கை வங்கி, மத்திய வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கி, சம்பத் வங்கி, அட்டன் நஷனல் வங்கி, வர்த்தக வங்கி, செலான் வங்கி, செலான் வங்கி, தேசிய அபிவிருத்தி வங்கி மற்றும் டிஎவ்சிசி வங்கி" என்பனவற்றினால் நிதியிடப்படும் என்ற சொற்கள் இடப்படும்.

**10. கடன் நிபந்தனைகள்**

- **துணைக் கடன்களுக்கான வட்டி வீதம்:**

  துணைக் கடன்பாட்டாளர்களிற்குப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களிலிருந்து கிடைக்கும் துணைக் கடன்களுக்கான வட்டி வீதம் ஆண்டொன்றிற்கு 10 சதவீதத்திலிருந்து (10%) ஆண்டொன்றுக்கு 9 சதவீதத்திற்கு (9%) குறைக்கப்பட்டது.

- **துணைக் கடன்பாட்டாளர்களுக்கான கடன் எல்லை:**

  தனிப்பட்ட துணைக் கடனின் உயர்ந்தபட்ச அளவு ரூ.250,000 இலிருந்து ரூ.500,000 இற்கு அதிகரிக்கப்பட்டது

சுயவேலை வாய்ப்பு ஊக்குவிப்பு முன்னெடுப்புக் கடன் திட்டத்தின் மற்றைய அனைத்து நியதிகளும் நிபந்தனைகளும் மாற்றமின்றியிருக்குமென்பதுடன், மேலே குறிப்பிடப்பட்ட திருத்தங்கள் 2014.04.10 இலிருந்து நடைமுறைக்கிடப்படும்.

உங்கள் உண்மையுள்ள
ஏ எம் ஆர் கே அத்தநாயக்க
**பதில் பணிப்பாளர்/ பிரதேச அபிவிருத்தி திணைக்களம்**
**இலங்கை மத்திய வங்கி**

2014 யூன் 6

இலங்கை வங்கி
மக்கள் வங்கி
கொமர்ஷல் வங்கி
ஹட்டன் நஷனல் வங்கி
செலான் வங்கி
சம்பத் வங்கி
டிஎவ்சிசி வங்கி
யூனியன் வங்கி
பிரதேசிய சங்வர்த்தன வங்கி
தேசிய அபிவிருத்தி வங்கி
சணச அபிவிருத்தி வங்கி
லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி

## புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்திற்கு ஏற்புடைத்தான நிதியின் அளவு, வட்டி வீதம் மற்றும் அரச வட்டி உதவுதொகை வீதம் என்பனவற்றில் திருத்தம்

நிதி திட்டமிடல் அமைச்சு புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்திற்கு ஏற்புடைத்தான நிதியின் அளவு, வட்டி வீதம் மற்றும் அரச வட்டி வீத உதவுதொகை வீதம் என்பனவற்றை திருத்தியமைத்திருக்கிறது. திருத்தங்கள் பின்வருமாறு;

1. **நிதியின் அளவு**

   நிதியின் திருத்தப்பட்ட அளவு இணைக்கப்பட்டிருக்கிறது. 2011 செத்தெம்பர் 23ஆம் நாளிடப்பட்ட இல.ஆர்டிடி/என்சிஆர்சிஎஸ்/2011 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தலின் இணைப்பு II இல் திருத்தப்பட்ட அளவின் மூலம் பதிலீடு செய்யப்படுகிறது.

2. **வட்டி வீதங்கள்**

| இலங்கை அரசாங்கத்தினால் செலுத்தப்படும் உதவுதொகை | கடன்பாட்டாளருக்கான வட்டி வீதம் | பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கான பயனுறு வட்டி வீதம் |
|---|---|---|
| ஆண்டிற்கு 5 சதவீதம் | ஆண்டிற்கு 7 சதவீதம் | ஆண்டிற்கு 12 சதவீதம் |

புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்களுக்காக, 2014 யூன் 01ஆம் நாளிலிருந்து மேலே குறிப்பிடப்பட்ட திருத்தங்களை பிரயோகிக்குமாறு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகிறது.

உங்கள் உண்மையுள்ள
**பணிப்பாளர்/ பிரதேச அபிவிருத்தி திணைக்களம்**

**இணைப்பு II**

## புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம்

### தகுதி பெற்ற பயிர்களுக்கான திருத்தப்பட்ட நிதியின் அளவு

| பயிர் | | | நிலம் பண் படுத்தல் | நாற்று மேடை மற்றும் பயிரிடல் | வளமாக்கி | இரசாயனம் (பூச்சி/ களை பங்கசுக் கொல்லி) | மற்றையவை | மொத்த செலவு | ஏக்கர் ஒன்றிற்கான உயர்ந்தபட்சக் கடன் தொகை | நில அலகுகளின் பரப்பு (ஏக்கர்) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | குறைந்தது | கூடியது |
| 1. | நெல் | | | | | | | | | | |
| | | நீர்ப்பாசனம் | 12,274 | 4,796 | 1,870 | 3,677 | 17,348 | 39,965 | 30,000 | 0.25 | 10.0 |
| | | மழை நீர் | 13,241 | 6,844 | 2,336 | 5,290 | 15,066 | 42,777 | 32,000 | 0.25 | |
| 2. | மிளகாய் | | 24,002 | 17,959 | 17,468 | 31,832 | 25,680 | 116,941 | 88,000 | 0.125 | 2.0 |
| 3. | வெங்காயம் | | 14,089 | 74,589 | 34,727 | 15,895 | 48,010 | 187,310 | 140,000 | 0.125 | 2.0 |
| 4. | பருப்பு வகை | | | | | | | | | | |
| | | தட்டைப்பயறு | 4,147 | 4,838 | - | 8,262 | 11,215 | 28,462 | 21,000 | 0.125 | |
| | | பயறு | 10,108 | 4,269 | - | 6,715 | 14,726 | 35,818 | 27,000 | 0.125 | |
| | | உழுந்து | 12,509 | 2,830 | - | 1,645 | 11,317 | 28,301 | 21,000 | 0.125 | 5.0 |
| | | சோயா அவரை | 5,612 | 3,904 | 4,963 | 6,710 | 8,113 | 29,302 | 22,000 | 0.125 | |
| | | குரக்கன் | 11,367 | 5,969 | - | - | 7,537 | 24,873 | 19,000 | 0.125 | |
| | | சோளம் | 13,617 | 9,572 | 7,268 | 7,704 | 7,421 | 45,582 | 34,000 | 0.125 | 10.00 |
| 5. | எண்ணெய் விதைகள் | | | | | | | | | | |
| | | நிலக்கடலை | 5,085 | 16,077 | - | 8,897 | 11,799 | 41,858 | 31,000 | 0.125 | |
| | | எள்ளு | 9,329 | 4,979 | - | - | 10,694 | 25,002 | 19,000 | 0.125 | 5.0 |
| | | சூரியகாந்தி | 5,160 | 3,870 | 3,225 | 1,290 | 5,160 | 18,705 | 14,000 | 0.125 | |

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 6. | கிழங்கு வகை | | | | | | | | | | |
| | | உருளைக்கிழங்கு | 31,291 | 176,812 | 70,804 | 29,640 | 27,069 | 335,616 | 252,000 | 0.125 | 2.0 |
| | | வத்தாளை | 10,449 | 5,515 | 7,013 | 6,192 | 16,254 | 45,423 | 34,000 | 0.125 | |
| | | மரவள்ளி | 3,225 | 7,869 | 8,483 | 8,514 | 14,964 | 43,055 | 32,000 | 0.125 | 5.0 |
| | | பால் கிழங்கு | 25,800 | 15,480 | 6,450 | - | 10,320 | 58,050 | 44,000 | 0.125 | |
| 7. | காய்கறிகள் | | | | | | | | | | |
| | | கத்தரிக்காய் | 7,920 | 6,336 | 14,494 | 27,324 | 24,288 | 80,362 | 60,000 | 0.125 | |
| | | வெண்டிக்காய் | 5,720 | 7,260 | 9,479 | 7,480 | 11,220 | 41,159 | 31,000 | 0.125 | |
| | | பீட்ரூட் | 32,844 | 21,349 | 11,885 | 10,532 | 16,065 | 92,674 | 70,000 | 0.125 | |
| | | அவரை | 12,180 | 33,640 | 17,400 | 15,776 | 12,760 | 91,756 | 69,000 | 0.125 | |
| | | கோவா | 37,513 | 30,246 | 29,389 | 30,236 | 31,492 | 158,876 | 119,000 | 0.125 | |
| | | கரட் | 36,740 | 16,636 | 34,618 | 27,052 | 27,858 | 142,904 | 107,000 | 0.125 | |
| | | குடை மிளகாய் | 27,086 | 18,503 | 23,108 | 43,305 | 37,888 | 149,890 | 112,000 | 0.125 | |
| | | தக்காளி | 23,457 | 9,343 | 22,050 | 42,430 | 55,234 | 152,514 | 114,000 | 0.125 | 2.0 |
| | | லீக்ஸ் | 34,748 | 19,100 | 15,148 | 13,328 | 28,917 | 111,240 | 83,000 | 0.125 | |
| | | முள்ளங்கி | 18,088 | 9,282 | 5,614 | 5,593 | 10,829 | 49,406 | 37,000 | 0.125 | |
| | | நோகோல் | 18,088 | 14,923 | 5,614 | 6,188 | 9,996 | 54,809 | 41,000 | 0.125 | |
| | | லூவா | 6,050 | 11,220 | 8,847 | 12,100 | 33,220 | 71,437 | 54,000 | 0.125 | |
| | | பாவாற்காய் | 6,380 | 14,410 | 8,472 | 10,450 | 35,970 | 75,682 | 57,000 | 0.125 | |
| | | புடலங்காய் | 6,050 | 12,760 | 9,750 | 11,770 | 34,210 | 74,540 | 56,000 | 0.125 | |
| | | பூசணிக்காய் | 19,986 | 8,313 | 7,498 | 8,686 | 6,256 | 50,739 | 38,000 | 0.125 | |
| 8. | ஏனையவை | | | | | | | | | | |
| | | இஞ்சி | 4,640 | 75,400 | 6,960 | - | 5,800 | 92,800 | 70,000 | 0.250 | 2.0 |

9. நாற்றுமேடைகளுக்கான உயர்ந்தபட்சத் தொகை ரூ.500,000.00

**குறிப்பு:** மொத்தக் கடன் தொகையில் உயர்ந்தபட்சம் 60 சதவீதம் வரையிலான தொகையினை நிலத்தினைப் பண்படுத்தல், விதை, பயிர், வளமாக்கி, பூஞ்சணவன், பூச்சிகளின் தாக்கம் போன்றவற்றிற்காக முதல் தவணையிலும் மீதியினை கள அலுவலரின் விதந்துரைப்பின்படி வளமாக்கியின் கொள்வனவு அல்லது அறுவடைக்கென ஒன்று அல்லது இரண்டு தவணைகளிலும் வழங்க வேண்டுமென்ற நிப்நதனைக்குட்பட்டு கடன்பாட்டாளர்களின் தேவைப்பாடுகளுக்கிணங்க பயிர்ச்செய்கைக் கடன்களை வழங்குவதற்கு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

கிளை முகாமையாளர்கள் ஒவ்வொரு வேளாண்மையாளரினாலும் தேவைப்படுத்தப்பட்ட தொகையினை அத்தகைய மேற்குறிப்பிட்ட செலவினை ஈடுசெய்வதற்கான அவரின் இயலாற்றலை பரிசீலனையில் கொண்டு அவரின் சொந்தக் கருத்தின்படி கடனை விடுவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பயிர்ச்செய்கை மாதிரி, நீர்ப்பாய்ச்சப்படுகின்ற நிலமா அல்லது மழை நீரை நம்பிய நிலமா, பயிர்ச்செய்கைப் பருவகாலம் - சிறுபோகம் அல்லது பெரும்போகம், கலப்புப் பயிர்ச்செய்கை மற்றும் மீள்கொடுப்பனவிற்கான வேளாண்மையாளர்களின் இயலாற்றல் போன்றவற்றிற்கிணங்க ஏக்கரொன்றிற்கான மேற்குறிப்பிட்ட உயர்ந்தபட்சக் கடன் தொகைக்குட்பட்டு, ஒவ்வொரு வேளாண்மையாளர்களுக்கும் கடன்களை வழங்குவதற்கான தீர்மானத்தினை மேற்கொள்ள கிளை முகாமையாளர்கள் தகுதியுடையவர்களாவர்.

**தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல.: ஆர்டிடி/சிஜிஎஸ்பிஏ/14/1**

பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
இல. 30, சனாதிபதி மாவத்தை,
கொழும்பு 01.
தொலைபேசி : 2477447/2477528
தொலைநகல் : 2477734/2477733
2014 யூன் 17

சேரல்: அனைத்துப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கும்

கனம் ஐயா/ அம்மணி,

## இலங்கை மத்திய வங்கி அடகுபிடித்தல் முற்பணங்களுக்கான கொடுகடன் உத்தரவாதத்திட்டம்

**1. அறிமுகம்**

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை 2014.05.19 அன்று நடைபெற்ற அதன் கூட்டத்தில் உரிமம் பெற்ற வங்கிகளினால் வழங்கப்பட்ட அடகுபிடித்தல் முற்பணங்களுக்காக அரசாங்கத்தின் சார்பில் கொடுகடன் உத்தரவாதத் திட்டமொன்றினை நடைமுறைப்படுத்த ஒப்புதலளித்தது. இத்திட்டமானது இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்படும். இத்திட்டமானது 2014 யூன் 17ஆம் நாள் தொடங்கப்படவுள்ளது.

**2. திட்டத்தின் நோக்கங்கள்**

அடகுபிடித்தல் முற்பணங்கள் பொருளாதாரத்தில் முக்கியமான வகிபாகமொன்றினைக் கொண்டிருக்கின்றன. வேளாண்மையாளர்கள், சிறுவியாபாரச் சொந்தக்காரர்கள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாண்மையாளர்கள் தமது பொருளாதார மற்றும் வியாபார நடவடிக்கைகளுக்காக அடகுபிடித்தல் முற்பணங்களைப் பயன்படுத்துகின்றனர். மேலும், அடகுபிடித்தல் முற்பணத்தில் ஒரு பகுதி நுகர்வு நோக்கங்களுக்காகவும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, அடகுபிடித்தல் முற்பணங்களூடாக பகிர்ந்தளிக்கப்பட்ட கொடுகடனின் அளவு பொருளாதாரத்தில் இன்றியமையாததொரு பங்கினையாற்றுகின்றது.

பன்னாட்டுச் சந்தையில் தங்கத்தின் விலைகள் வீழ்ச்சியடைந்தமையின் காரணமாக அடகு முற்பணங்களின் அளவும் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்திருக்கிறது. முக்கியமான உரிமம் பெற்ற வங்கிகள், சராசரியாக பெறுமதி விகிதத்தில் 65 சதவீதத்தினைக் கடனாக வழங்கியமையினால் கொடுகடன் அளவிலேற்பட்ட வீழ்ச்சி குறிப்பிடத்தக்களவில் காணப்படுகிறது. மேலும், உரிமம் பெற்ற வங்கிகளினால் விதிக்கப்பட்ட வட்டி வீதங்கள் ஆண்டிற்கு 16 சதவீதத்திலிருந்து 20 சதவீதம் வரையில் காணப்பட்டன. உயர்ந்த வட்டி வீதங்களும் அடகு முற்பணங்களைப் பெறுவதனை உற்சாகமிழக்கச் செய்தன.

தற்பொழுது, பெரும்பாலான உரிமம் பெற்ற வங்கிகள் 65 சதவீதம் கொண்ட கடனுக்கான பெறுமதி விகிதத்தில் அடகுபிடித்தல் முற்பணங்களை வழங்கின. இது தங்க ஆபரணங்களுக்கான கடன் வழங்கல் தொடர்பான உரிமம் பெற்ற வங்கிகளின் இடர்நேர்வு ஆர்வம் 65 சதவீதம் கொண்ட பெறுமதிக்கு வீழ்ச்சியடைந்தமையினை எடுத்துக்காட்டியது. மறுசொல்லில் கூறுவதாயின், உரிமம் பெற்ற வங்கிகள் தங்க விலைகள் 65 சதவீதத்துடன் ஒன்றுசேர்ந்த வட்டியையும் கூட்டிய தொகைக்குக் கீழே வீழ்ச்சியடைவதன் காரணமாக அடகு முற்பணங்கள் செலுத்தத் தவறுவதனால் தோன்றுகின்ற ஏதேனும் இழப்புக்களை ஏற்றுக்கொள்ள விரும்புகின்றன என்பதேயாகும்.

அடகுபிடித்தல் முற்பணங்களினூடாக கொடுகடனின் அளவினை அதிகரிக்கும் பொருட்டு, இத்திட்டம் பெறுமதிக்கான கடன் வழங்கல் விகிதத்தினை குறிப்பிட்ட உரிமம் பெற்ற வங்கியொன்றின் தற்போதைய விகிதத்திலிருந்து 15 சதவீதத்தினால் அதிகரிப்பதற்கு ஆலோசனை வழங்குகின்றது. உரிமம் பெற்ற வங்கிகளின் இடர்நேர்விற்கான ஆர்வம் பெறுமதிக்கான கடன் விகிதத்துடன் ஒன்றுசேர்ந்த வட்டியினால் எடுத்துக்காட்டப்படுவதனால், அதிகரிக்கின்ற கடனுக்கான பெறுமதி விகிதமானது தங்கத்தின் விலைகள் வீழ்ச்சியடையுமாயின் அது செலுத்தத் தவறும் இடர்நேர்வுகளை அதிகரிப்பதுடன் இத்திட்டமானது கொடுகடன் உத்தரவாதங்களூடாக அதிகரித்த பெறுமதிக்கான கடன் வழங்கல் விகிதத்தின் தொகைக்கு கடன் வழங்கும் உரிமம் பெற்ற வங்கிகளுக்கு பாதுகாப்பினை வழங்குகின்றது.

## 3. திட்டத்தின் தொழிற்பாடு

இத்திட்டமானது, தங்கத்தின் விலைகள் வீழ்ச்சியடைந்தமையின் விளைவாக அடகுபிடித்தல் முற்பணங்கள் செலுத்தத் தவறுவதனால் ஏற்படும் இழப்புக்களைக் கொண்டிருக்கும் உரிமம் பெற்ற வங்கிகளுக்கு கொடுகடன் உத்தரவாதங்களை வழங்குகின்றது.

திட்டமானது, கொடுகடன் உத்தரவாதப் பாதுகாப்பினை வழங்குவதற்கு, ஏற்கனவேயுள்ள தங்கத்தின் விலைகளையும் தற்போதைய மட்டம் மற்றும் தொடர்பான வட்டிக்கு மேலாக (ஆண்டிற்கு 15 சதவீதத்தினை விஞ்சாத வட்டி வீதமொன்றில்) 15 சதவீதம் கொண்ட பெறுமதிக்கான கடன் விகிதத்தில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட அடகுபிடித்தலுக்கான முற்பணங்களின் அளவினையும் பரிசீலனையில் கொள்ளும். அக்குறிப்பிட்ட உரிமம்பெற்ற வங்கி, தங்க விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியினால் உந்தப்பட்ட செலுத்தத் தவறுகைகளின் காரணமாக அதன் அடகுபிடித்தல் முற்பணங்களின் மீது இழப்புக்கள் ஏற்படுமிடத்து இக்கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின் மூலம் நன்மைகளைப்பெற விரும்புமிடத்து அந்த உரிமம் பெற்ற வங்கி அவற்றின் அடகுபிடித்தல் முற்பணங்களின் மீது ஆண்டிற்கு 1 சதவீதக் கொடுகடன் உத்தரவாதக் கட்டணத்தினைச் செலுத்துவதன் மூலம் இக்கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின் கீழ் பாதுகாப்பினைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஓராண்டு காலப்பகுதிக்காக வழங்கப்பட்ட ஏதேனும் அடகுபிடித்தல் முற்பணங்களுக்கான செலுத்தத் தவறுகை என்பது அடகுமுற்பணம் வழங்கப்பட்ட திகதியிலிருந்த 15 மாதங்களின் பின்னரேயே பரிசீலனையில் கொள்ளப்படும். 15 மாதங்கள் முடிவடையும் பொழுது உரிமம் பெற்ற வங்கி இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தில் வெளியிடப்பட்ட தங்கத்தின் விலையினைக் கவனத்தில் கொண்டு தங்கத்தின் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சிதான் செலுத்தத் தவறியமைக்கான காரணமாக அமைந்ததா என்பதனை தீர்மானிக்க வேண்டும். உரிமம் பெற்ற வங்கி அவ்வாறு தீர்மானிக்குமிடத்து உரிமம் பெற்ற வங்கி கொடுகடன் உத்தரவாதக் கோவையின் உரித்தான தொகையைக் கணக்கிட்டு அதனை மத்திய வங்கிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய கோரல்கள் அட்டவணை 1 மற்றும் இணைப்பு 1இல் விபரிக்கப்பட்டவாறு அடகு வைக்கப்பட்ட நேரத்தில் தங்க ஆபரணத்தின் பெறுமதியில் 17.81 சதவீதம் கொண்ட உயர்ந்தபட்ச வரையறைக்குட்பட்டு, இலங்கை மத்திய வங்கியினால் கௌரவிக்கப்படும்.

## 4. தகைமைத் தேவைப்பாடுகள்

4.1 இவ்வறிவுறுத்தல்களின் நோக்கத்திற்காக, "அடகுபிடித்தல்" என்பது தங்கத்தினால் செய்யப்பட்ட தனிப்பட்ட ஆபரணங்களைப் பிணையாகக் கொண்டு பணத்தினைக் கடனாக வழங்குவதென்பதும் உரிமம் பெற்ற வங்கியினால் 12 மாதங்களை விஞ்சாததொரு காலப்பகுதிக்கு தங்க ஆபரணத்தின் சொந்தக்காரர்களுக்கு வழங்கப்படவுள்ள கடனுக்கான பிணையாக உரிமம் பெற்ற வங்கியினால் ஏற்றுக்கொள்ளப்படுமொன்று எனவும் கருதப்படுகிறது.

4.2 இத்திட்டத்தின் கீழ் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் உரிமம் பெற்ற வங்கிகள் என வரைவிலக்கணம் செய்யப்படுகின்றன (அதாவது உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்)

4.3 இவ்வறிவுறுத்தல்களின் திகதியிலிருந்து 2014 திசெம்பர் 31 வரை அல்லது நாணயச் சபையினால் நீடிக்கப்படக்கூடிய அத்தகைய வேறு ஏதேனும் திகதி வரை பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் வழங்கப்படுகின்ற அடகுபிடித்தல் முற்பணங்கள், பின்வரும் நியதிகளையும் நிபந்தனைகளையும் நிறைவு செய்யுமிடத்து இக்கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின் மூலம் நன்மைபெற உரித்துடையனவாகும்:

(அ) பெறுமதி விகிதத்திற்கான கடன் வழங்கல் குறிப்பிட்ட பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் தற்போதைய மட்டத்திற்கு 15 சதவீதத்திற்கு மேலாக இருக்க வேண்டுமென்பதுடன் அது 80 சதவீதத்தினை விஞ்சக்கூடாது. மொத்த வெளிப்படுத்துகை பின்வருமாறு கணிக்கப்படுகிறது.

உதாரணம்:

| பொறுப்பினைக் கணித்தல் | | | | | |
|---|---|---|---|---|---|
| விபரணம் | அடகுபிடித்தல் நேரத்தில் குறிப்பிட்ட பொருட்களின் சந்தைப் பெறுமதி ரூ. | அடகு பிடித்தல் முற்பணம் ரூ. | ஆண்டிற்கு 15 சதவீதம் வட்டி ரூ. | அடகுபிடிக்கப்பட்ட 12 மாதங்களுக்குப் பின்னர் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் மொத்த வெளிப்படுத்துகை ரூ. | அடகுபிடிக்கப்பட்ட 15 மாதங்களின் பின்னர் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் மொத்த வெளிப்படுத்துகை ரூ. |
| 80 சதவீதம் பெறுமதி விகிதத்திற்கான கடன் வழங்கல் | 100.0 | 80.0 | 12.0 | 92.0 | 95.0 |

(ஆ) அடகுபிடித்தல் மீது விதிக்கப்படுகின்ற வட்டி வீதம் அனைத்துக் கட்டணங்களையம் விதிப்புக்களையும் உள்ளடக்கியிருப்பதுடன் இது 15 சதவீதத்தினை விஞ்சக்கூடாது;

(இ) இத்திட்டத்திற்கு தகைமை பெறுவதற்கு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் அடகுபிடித்தல் முற்பணங்கள் மீது 1 சதவீதம் கொண்ட கொடுகடன் உத்தரவாதக் கட்டுப்பணம் செலுத்தப்படுதல் வேண்டும்;

(ஈ) உயர்ந்தபட்சக் கடன் எல்லை ஆளொருவருக்கு ரூ.500,000 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது;

4.4 அடகு முற்பணங்கள் தனியாள் ரீதியில் ஆபரணங்களின் தங்கப் பெறுமதிக்கு மாத்திரம் வழங்கப்பட வேண்டுமேயொழிய வர்த்தக அளவுகளிலல்ல.

**5. தங்க ஆபரணங்களை மதிப்பீடு செய்யும் முறை**

5.1 அடகு வைக்கப்பட்ட ஆபரணங்களின் பெறுமதி பின்வருமாறு மேற்கொள்ளப்படல் வேண்டும்:

(அ) தங்க ஆபரணங்களின் தரத்தினை நிர்ணயிப்பதற்கான நியம அளவு முறையாக "காரட்" விளங்குதல் வேண்டும்;

(ஆ) தங்க ஆபரணங்களின் நிறையினை நிர்ணயிப்பதற்கான நியம அளவு முறையாக "கிராம்" இருத்தல் வேண்டும்;

(இ) 9 காரட்டிற்கு குறைவான தரத்தினைக் கொண்டுள்ள ஆபரணத்தினைப் பிணையாக ஏற்றுக்கொள்ளக்கூடாது;

(ஈ) பொருளொன்றினை மதிப்பிடுகையில், பங்கேற்கும் நிதியியல் நிறுவனம் ஆபரணத்திலுள்ள தங்கத்தின் பெறுமதியினை மட்டுமே கருத்திற் கொள்ளவேண்டும்;

(உ) இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட விலையிலும் பார்க்கக் கூடுதலான விலையில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் எதுவும் எந்தவொரு தங்க ஆபரணத்தினையும் மதிப்பிடக்கூடாது.

5.2 தங்க ஆபரணங்களின் பெறுமதியினை நிர்ணயிக்கையில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் பின்வருவனவற்றை வழிகாட்டிகளாகக் கொள்ளுதல் வேண்டும்:

(அ) இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தில் வெளியிடப்பட்ட செலாவணி வீதம் மற்றும் தங்கத்தின் விலை;

(ஆ) அத்தகை மதிப்பீடுகளின் நோக்கத்திற்காக தங்கத்தின் விலையானது பின்வரும் உதாரணத்தின் அடிப்படையில் கணிக்கப்படுதல் வேண்டும்.

உதாரணம்:

| இலங்கை ரூபாவில் தங்கத்தின் விலையினைக் கணித்தல் | | |
|---|---|---|
| **2014.05.23ஆம் நாளில் உள்ளவாறு தங்கத்தின் விலை** | **ஐ.அ.டொலர்** | **இலங்கை ரூபா** |
| தங்க ரோய் அவுன்ஸ் (31.1034768 கிராம்) | 1,294.00 | 168,676.14 |
| சவரின் ஒன்றிற்கான தங்கத்தின் விலை (8 கிராம்) | 332.82 | 43,384.51 |

குறிப்பு: 2014.05.23 அன்றிலுள்ளவாறு ஐ.அ.டொலர்/ இலங்கை ரூபா செலாவணி வீதம் - ரூ.130.3525

*மூலம்: இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தில்: http://www.cbsl.gov.lk/ உள்ளவாறான விலைகள்*

(இ) இத்திட்டத்தின் நோக்கத்திற்காக, அனைத்துப் பெறுமதிகளும் இலங்கை ரூபாவில் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

**6. கொடுகடன் உத்தரவாதத்திற்கான விண்ணப்பம்**

6.1 இக்கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தில் பங்கேற்பதற்கான விண்ணப்பத்தினை விபரிக்கப்பட்ட படிவம் ஆர்டிடி/சிஜிஎஸ்பிஏ(1) (இணைப்பு 2) இன்படி தயாரித்து பணிப்பாளர், பிரதேச அபிவிருத்தித் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி, இல. 30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01 என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். விபரிக்கப்பட்ட படிவம் கிளையினால் தயாரிக்கப்பட்டு தொடர்பான பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தினூடாக இலத்திரனியல் ரீதியாக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

6.2 முன்னைய காலப்பகுதியில் (மாதத்தின் 1ஆம் நாளிலிருந்து மாதத்தின் இறுதி நாள் வரை) வழங்கப்பட்ட முற்பணங்களுக்காக நடப்பு மாதத்தின் 15ஆம் திகதிக்கு முன்னதாக ஆர்டிடி/சிஜிஎஸ்பிஏ(1) படிவத்தில் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்கள் கையொப்பமிட்டு அனுப்பி வைத்தல் வேண்டும்.

**7. உத்தரவாத உள்ளடக்கத் தொகைக் குறிப்பு**

கொடுகடன் உத்தரவாத விண்ணப்பம் முறையாக ஏற்றுக்கொள்ளப்பட்டதும் இலங்கை மத்திய வங்கி பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்திற்கு அவற்றின் காலப்பகுதிக்கான அடகு முற்பணத்தினை உள்ளடக்கும் விதத்தில் உத்தரவாதத் தொகைக்கான குறிப்பொன்றினை (இணைப்பு 3) வழங்கும்.

**8. கட்டுப் பணக் கொடுப்பனவு**

8.1 கொடுகடன் உத்தரவாதக் கட்டுப்பணம் ஆர்டிடி/சிஜிஎஸ்பிஏ(1) (இணைப்பு 2) சமர்ப்பிக்கப்படுவதுடன் சேர்த்து செலுத்தப்படல் வேண்டும்.

8.2 அடகுமுற்பணக் கொடுகடன் உத்தரவாதத் திட்டக் கணக்கு (க/கு இல.54526) என்ற பெயருக்கு வரையப்பட்ட காசோலையை கணக்குப் பெறுநர் மட்டும் என்ற குறிப்புடன் பணிப்பாளர், பிரதேச அபிவிருத்தித் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 1 என்ற முகவரிக்கு அனுப்பி வைப்பதன் மூலம் அல்லது அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை அல்லது இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவுகள் மூலம் அதே கணக்கிற்கு கட்டணங்களை அனுப்பி வைக்கமுடியும்.

**9. கோரல்கள்**

9.1 இத்திட்டத்தின் கீழ் செய்யப்பட்ட கோரல்கள் தங்க விலைகளின் அடிப்படையில் கௌரவிக்கப்படும். அடகு முற்பணம் செலுத்தப்படாது இருப்பினும் கூட, தற்பொழுது நிலவுகின்ற தங்க விலைகள் முற்பணம் வழங்கப்படுகின்ற 15 மாத இறுதியிலுள்ள அடகு முற்பணத்தினையும் ஒன்றுசேர்ந்த வட்டியினதும் பெறுமதியினை ஈடுசெய்யக்கூடியதாக இருக்குமாயின், இத்திட்டத்தின் கீழ் கொடுகடன் உத்தரவாதக் கொடுப்பனவு வழங்கப்படமாட்டாது.

9.2 இத்திட்டத்தின் கீழ் கொடுகடன் உத்தரவாதத்தினைக் கோருவதற்கு அத்தகைய முற்பணங்கள் உரித்துடையனவாகவும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் செலுத்தத் தவறியமையின் காரணமாக இழப்புக்களை அடைவனவாகவும் இருக்கின்றன என்ற நிலைமைக்குட்பட்டு அவ்வடகு முற்பணம் செலுத்தத் தவறும் பொழுது மட்டும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் கொடுகடன் உத்தரவாதக் கோரல்களுக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையனவாகும்.

9.3 இத்திட்டத்தின் நோக்கத்திற்காக, செலுத்தத் தவறியதாக இருக்கும் அடகு முற்பணம் என்பது குறித்துரைக்கப்பட்ட கால முடிவில் அல்லது குறித்த தவணைத் திகதியில் (ஒரே கொடுப்பனவாக) ஒரே தவணையில் கொடுகடன் வசதிகள் இணங்கப்பட்ட காலப்பகுதி முடிவிலிருந்து அல்லது தவணைத் திகதியிலிருந்து 90 நாட்களுக்கிடையில் செலுத்தப்படாதிருப்பது எனக் கருதப்படும்.

9.4 இழப்பு தொடர்பான கணிப்பீடுகளின் நோக்கத்திற்காக, தொடர்பான தங்க விலை என்பது செலுத்தத் தவறிய திகதியிலுள்ள தங்கத்தின் விலையாக இருத்தல் வேண்டும் (அதாவது அடகு முற்பணம் வழங்கப்பட்ட திகதியிலிருந்து 15 மாதங்களுக்குப் பின்னர்) விலைகளில் ஏற்படும் வீழ்ச்சியின் காரணமாக பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கேற்படும் தொடர்பான இழப்புக்கள் சதவீதமாக அட்டவணை 2இல் தெளிவாக்கப்பட்டுள்ளன.

9.5 இத்திட்டத்தின் கீழ் அடகு முற்பணங்கள் செலுத்தத் தவறுவதனால் ஏற்படுகின்ற ஏதேனும் இழப்புக்களுக்கான கொடுப்பனவுகள் கீழே 9.6ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தொகைக்கு மட்டுப்படுத்தப்படும்.

9.6 உத்தரவாதத்தின் உயர்ந்தபட்ச நீடிப்பு, தொடர்பான வட்டி வீதங்களுடன் சேர்த்து பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் வழங்கப்பட்ட தற்போதைய மட்டத்திற்கு மேலே 15 சதவீத பெறுமதி விகிதத்திற்கான கடன் வழங்கல் வீதத்தில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் கணிக்கப்பட்ட முற்பணங்களுக்கும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் தொடர்பான வட்டி வீதங்களுடன் சேர்த்து வழங்கப்படும் தொகைக்குமிடையிலான வேறுபாட்டிற்கு மட்டுப்படுத்தப்படும்.

9.7 இக்கொடுகடன் உத்தரவாத நோக்கங்களுக்காக வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு ஏதேனும் தொகை இழப்பில் இருக்குமிடத்து, பங்கேற்கும் நிதியியல் நிறுவனம் செலுத்தத் தவறிய 30 நாட்களுக்குள் கோரல்களை ஆர்டிடி/சிஜிஎஸ்பிஏ(2) (இணைப்பு 4) இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். மேற்குறிப்பிட்ட ஆர்டிடி/சிஜிஎஸ்பிஏ(3) படிவத்தினை தொடர்பான பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தினூடாக இலத்திரனியல் மூலம் சமர்ப்பிக்க வேண்டும்.

**10. பரிசோதனைகள்**

இத்திட்டத்தின் நோக்கங்களுக்குத் தேவைப்படுமிடத்து இலங்கை மத்திய வங்கி, இத்திட்டத்தின் கீழ் உத்தரவாதப்படுத்தப்பட்ட எந்தவொரு கடன் தொடர்பிலும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் கணக்கேடுகளையும் ஏனைய பதிவேடுகளையும் பரிசோதனை செய்வதற்கான உரிமையைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

**11. தகவல்களைச் சமர்ப்பித்தல்**

இத்திட்டத்தின் கீழ் உத்தரவாதப்படுத்தப்பட்ட ஏதேனும் அடகு முற்பணங்களுடன் தொடர்பாக இலங்கை மத்திய வங்கி ஏதேனும் தகவல்களைத் தேவைப்படுத்தும் பொழுது பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் அத்தகைய தகவல்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**12. திருத்தியமைத்தல் மற்றும் துணைநிரப்பல் ஏற்பாடுகள்**

12.1 அத்தகைய திருத்தியமைத்தல் அல்லது மீளப்பெறல் திகதிக்கு முன்னதாக இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் உத்தரவாதங்களிலிருந்து எழுகின்ற உரிமைகள் அல்லது கடப்பாடுகளைப் பாதிக்காமல் இத்திட்டத்தினை திருத்தியமைப்பதற்கான அல்லது மீளப்பெறுவதற்கான உரிமையினை மத்திய வங்கி தன்னகத்தே கொண்டுள்ளது.

12.2 இத்திட்டத்தின் கீழ் விசேடமாக குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் தொடர்பில் இலங்கை மத்திய வங்கி இத்திட்டத்தின் நோக்கங்களுக்குத் தேவையானதாக இருக்குமிடத்து அத்தகைய துணைநிரப்பல்களை அல்லது மேலதிக ஏற்பாடுகளை மேற்கொள்ள முடியும்.

**13. விளக்கம்**

இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏதேனும் ஏற்பாடுகள் பற்றி பங்குபற்றும் நிதியியல் நிறுவனங்களுக்கு உறுதியாகத் தெரியாதிருக்கும் சந்தர்ப்பத்தில் அல்லது ஏதேனும் எதிர்பாராத நிகழ்வுகள் அல்லது அதிலுள்ள துணை விடயங்கள் ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் அது தொடர்பில் இறுதியானதும் முடிவானதுமான தீர்மானங்களைக் கொண்டிருக்கும் மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளரிடமிருந்து விளக்கங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

பணிப்பாளர்
**பிரதேச அபிவிருத்தி திணைக்களம்**

**இணைப்பு 1**

**அட்டவணை 1இல் காட்டப்பட்டுள்ள உதாரணத்தினை பின்வருமாறு விபரிக்கலாம்.**

2014 சனவரி 1ஆம் நாளன்று தங்க ஆபரணத்தின் பெறுமதி ஐ.அ.டொலர் 1,000 டொலர் என வைத்துக் கொள்வோம். ஐ.அ.டொலரொன்றிற்கான செலாவணி வீதம் ஐ.அ.டொலரொன்றிற்கு ரூ.130/- எனவே தங்க ஆபரணத்தின் பெறுமதி ரூ.130,000/- ஆகும். எனவே, 80 சதவீதம் கொண்ட பெறுமதி விகிதத்தில் வழங்கப்பட்ட அடகு முற்பணத் தொகை ரூ.104,000/- ஆக இருக்கும். 15 மாத இறுதியில் இவ்வடகு முற்பணம் செலுத்தப்படாதிருக்குமாயின் ஆண்டொன்றிற்கு 15 சதவீத வட்டி வீதத்தில் இம்முற்பணம் மீது ஒன்று சேர்ந்த வட்டி ரூ.19,500/- ஆக இருக்கும். எனவே, இவ்வடகு முற்பணம் தொடர்பில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்திற்கு வரவேண்டிய மொத்தத் தொகை ரூ.123,500/- ஆக இருக்கும். இதேபோன்று 65 சதவீதம் கொண்ட கடன் பெறுமதி விகிதத்தில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு வரவேண்டிய தொகை ரூ.100,344/- ஆக இருக்கும். இதன்படி, மத்திய வங்கியின் கொடுகடன் உத்தரவாத கோரலின் உயர்ந்தபட்சக் கொடுப்பனவு ரூ.23,156/- இல் மட்டுப்படுத்தப்படும் (ரூ.123,500 இற்கும் ரூ.100,344 இற்குமிடையிலான வேறுபாடு).

இப்பொழுது அடகு முற்பணத்தின் ஆரம்பத் திகதியிலிருந்து 15 மாத இறுதியிலுள்ள தங்கத்தின் விலையினை பரிசீலனையில் கொள்ளுங்கள். அட்டவணை 1இல் விளக்கப்பட்டவாறு தங்கத்தின் விலை 1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைவதாக வைத்துக் கொள்வோம். தங்கத்தின் விலை 1 சதவீதத்தினால் மாத்திரம் வீழ்ச்சியடையுமாயின் அப்பொழுது தங்க ஆபரணத்தின் பெறுமதி ரூ.128,700/- ஆக இருக்கும். அடகு முற்பணம் செலுத்தத் தவறிருப்பினும் கூட பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்திற்கு எந்த இழப்பும் ஏற்படாது. பதிலாக, பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்திற்கு ரூ.5,200/- இலாபம் ஏற்படும்.தங்கத்தின் விலை 5 சதவீதத்தினால் வீழ்ச்சியடையுமாயின் அப்பொழுது ஆபரணத்தின் பெறுமதி 15 மாத இறுதியில் ரூ.123,500/- ஆக இருக்கும் என்பதுடன் அந்நிலையில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் இலாபமோ இழப்போ அற்ற நிலையிலிருக்கும். அட்டவணை 1இல் விளக்கப்பட்டவாறு தங்கத்தின் விலை 5 சதவீதத்திற்கும் அப்பால் வீழ்ச்சியடையுமாயின், பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்திற்கு இழப்பு

ஏற்படும். உதாரணமாக தங்கத்தின் விலை 6 சதவீதத்தினால் வீழ்ச்சியடையுமாயின் பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்திற்கான இழப்பு ரூ.1,300/- ஆக இருப்பதுடன், மற்றைய நிபந்தனைகள் யாவும் பூர்த்தி செய்யப்பட்டிருக்குமிடத்து பங்கேற்கும் நிதியியல் நிறுவனம் கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின் கீழ் இவ்விழப்பினைக் கோருவதற்கு உரித்துடையதாக இருக்கும்.

அட்டவணை 1இல் விளக்கப்பட்டவாறு, விலை 22.812 சதவீதத்தினால் வீழ்ச்சியடையுமாயின் ஆபரணத்தின் விலை ரூ.100,344/- ஆக இருக்குமென்பதுடன் பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்திற்கு ஏற்படும் இழப்பு ரூ.23,156/- ஆக இருக்கும். இது 65 சதவீதம் கொண்ட பெறுமதி விகிதத்திற்கான கடனிலும் ஆண்டிற்கு 15 சதவீதம் கொண்ட வட்டி வீதத்திலும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் இடர்நேர்வாகும். ஆகவே, இலங்கை மத்திய வங்கியின் உத்தரவாதம் ரூ.23,156/- இற்கு மட்டுப்படுத்தப்படுவதுடன் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் இம்மட்டத்திற்கு கீழே வீழ்ச்சியடைவதனால் ஏற்படும் இழப்புக்களைத் தாங்க வேண்டியுமிருக்கும். உதாரணமாக விலை 25 சதவீதத்தினால் வீழ்ச்சியடையுமாயின் தங்க ஆபரணத்தின் விலை ரூ.97,500/- ஆக இருக்கும். இது தொடர்பான இழப்பு ரூ.26,000/- ஆக இருக்கும். இதன்படி, கொடுகடன் திட்டப் பாதுகாப்பின் கீழ் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் உயர்ந்தபட்சம் ரூ.23,156/- இனைக் கோரமுடியும். மீதி ரூ.2,844/- பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் தாங்க வேண்டிய இழப்பாக இருக்கும்.

**அட்டவணை 1**

**எண்ணியல் விளக்கம்**

| | அடகு வைக்கும் நேரத்தில் குறிப்பிட்ட பொருட்களின் சந்தைப் பெறுமதி ரூ. | அடகு முற்பணம் ரூ. | 15 மாதங்களுக்கான ஆண்டொன்றிற்கு 15 சதவீத வட்டி ரூ. | 15 மாத அடகுபிடித்தலின் பின் இடர்நேர்விற்குள்ளாகும் மொத்தத் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 80 சதவீதம் கொண்ட பெறுமதி வீதத்திற்கு கடன் | 130,000 | 104,000 | 19,500 | 123,500 |
| 65 சதவீதம் கொண்ட பெறுமதி வீதத்திற்கு கடன் | 130,000 | 84,500 | 15,844 | 100,344 |
| கொடுகடன் உத்தரவாதக் கோரல்களின் உயர்ந்தபட்சக் கொடுப்பனவு | | | | 23,156 |
| ஆபரணத்தின் தங்கப் பெறுமதியின் சதவீதமாக உயர்ந்தபட்சப் பொறுப்பு | | | | 17.81 |
| 80 சதவீத பெறுமதி வீதத்திற்கான கடனில் மொத்த இடர்நேர்விற்குள்ளாகும் தன்மையின் சதவீதமாக உயர்ந்தபட்சப் பொறுப்புக்கள் | | | | 18.75 |

| அடகு வைத்த திகதி | தங்க ஆபரணத்தின் பெறுமதி ஐ.அ. டொலர் | ஐ.அ. டொலர்/ இலங்கை ரூபா செலாவணி வீதம் | தங்க ஆபரணத்தின் பெறுமதி ரூ. | செலுத்தத் தவறிய திகதி | 2015.03.31 இலுள்ளவாறு தங்கத்தின் பெறுமதி | | 80 சதவீத பெறுமதி விகிதத்திற்கான கடனில் மொத்த இலாபம்/ (இழப்பு) ரூ. | மத்திய வங்கியினால் செலுத்தப்படவிருக்கும் கொடுகடன் உத்தரவாதக் கோரல்கள் ரூ. | பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கான இழப்புக்கள் ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | % | ரூ. | | | |
| 2014.01.01 | 1,000.00 | 130 | 130,000 | 2015.03.31 | | | | | |
| | | | | தங்க விலைகள் இத் தொகையினால் வீழ்ச்சியடைந்த தாக எடுகோள் கொள்ளவும் | 1 | 128,700 | 5,200 | | |
| | | | | | 2 | 127,400 | 3,900 | | |
| | | | | | 3 | 126,100 | 2,600 | | |
| | | | | | 4 | 124,800 | 1,300 | | |
| | | | | | 5 | 123,500 | - | | |
| | | | | | 6 | 122,200 | (1,300) | 1,300 | |
| | | | | | 7 | 120,900 | (2,600) | 2,600 | |
| | | | | | 10 | 117,000 | (6,500) | 6,500 | |
| | | | | | 15 | 110,500 | (13,000) | 13,000 | |
| | | | | | 20 | 104,000 | (19,500) | 19,500 | |
| | | | | | 21 | 102,700 | (20,800) | 20,800 | |
| | | | | | 22 | 101,400 | (22,100) | 22,100 | |
| | | | | | 22.812 | 100,344 | (23,156) | 23,156 | |
| | | | | | 25 | 97,500 | (26,000) | 23,156 | 2,844 |
| | | | | | 30 | 91,000 | (32,500) | 23,156 | 9,344 |
| | | | | | 35 | 84,500 | (39,000) | 23,156 | 15,844 |
| | | | | | 40 | 78,000 | (45,500) | 23,156 | 22,344 |
| | | | | | 45 | 71,500 | (52,000) | 23,156 | 28,844 |
| | | | | | 50 | 65,000 | (58,500) | 23,156 | 35,344 |

இணைப்பு 2

படிவம்: ஆர்டிடி/சிஜிஎஸ்பிஎ (1)

பணிப்பாளர்
பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
30, சனாதிபதி மாவத்தை
கொழும்பு 01

**அடகு முற்பணங்களுக்கான கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின் கீழான விண்ணப்பம்**

பகிர்ந்தளிப்பு மாதம்: ---------------------------------------------- ஆண்டு: ----------------------------------------------

| திகதி | வட்டி வீதம் ஆண்டிற்கு | அடகு வைத்த பொருட்களின் மொத்தப் பெறுமதி | பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தத் தொகை | கொடுபடத்தக்க மொத்தக் கட்டுப்பணம் |
|---|---|---|---|---|
| | 15% | | | |
| | 14% | | | |
| | 13% | | | |
| | 12% | | | |
| | 11% | | | |
| | மொத்தத் தொகை | | | |

| | |
|---|---|
| பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர்: ........................................<br>கிளை: ................................................<br>கிளை முகாமையாளரின்<br>கையொப்பம்: .......................................... திகதி: ..........................................<br>அலுவலக முத்திரை: | தலைமை அலுவலகத்திலுள்ள திகதி: ..............................<br>அதிகாரமளிக்கப்பட்ட<br>அலுவலரின் கையொப்பம்: ...................................<br><br>அலுவலக முத்திரை: |

இணைப்பு 3

**அடகு முற்பணங்களுக்கான கொடுகடன் உத்தரவாதத் திட்டம்**
இலங்கை மத்திய வங்கி
**கொடுகடன் உத்தரவாத உள்ளடக்கத் தொகைக் குறிப்பு**
**தொடர்பு எண் .............................**

இவ்வுத்தரவாத உள்ளடக்கத் தொகை குறிப்பானது
அடகு முற்பணத்தினை உறுதிப்படுத்துவதற்காக வழங்கப்படுகிறது
.................................................. (பங்கேற்பு நிதி நிறுவனத்தின் பெயர்)
.............................................. கிளையினால் (கிளையின் பெயர்)
வழங்கப்பட்ட ரூ........................ (சொற்களில் தொகை)
ரூ........................ (இலக்கத்தில் தொகை) கொண்ட தொகையானது

2014 யூன் 17ஆம் திகதியிடப்பட்ட இல. ஆர்டிடி/சிஜிஎஸ்பிஎ/14/1 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கிணங்க அடகு முற்பணங்களுக்கான கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின் கீழ் உத்தரவாதப்படுத்தப்பட்டிருக்கிறது.

இலங்கை மத்திய வங்கியின் உயர்ந்தபட்சக் கொடுகடன் உத்தரவாதப் பொறுப்பு முற்பணம் வழங்கப்பட்ட திகதியன்று காணப்பட்ட அடகு வைக்கப்பட்ட பொருளின் தங்கப் பெறுமதியில் 17.81 சதவீதமாக இருக்கும்.

.................................................. ..............................................................................
திகதி பணிப்பாளர்
பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்

அட்டவணை 2

கடனுக்கான பெறுமதியில் 80 சதவீதத்திற்கான பெறுமதி அட்டவணை (ஆயத்தக் கணிப்புச் சுவடி)

| | அடகு வைக்கும் நேரத்தில் குறிப்பிட்ட பொருட்களின் சந்தைப் பெறுமதி ரூ. | அடகு முற்பணம் ரூ. | 15 மாதங்களுக்கான ஆண்டொன்றிற்கு 15 சதவீத வட்டி ரூ. | 15 மாத அடகுபிடித்தலின் பின் இடர்நேர்விற்குள்ளாகும் மொத்தத் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 80 சதவீதம் கொண்ட பெறுமதி வீதத்திற்கு கடன் | 100.00 | 80.00 | 15.00 | 95.00 |
| 65 சதவீதம் கொண்ட பெறுமதி வீதத்திற்கு கடன் | 100.00 | 65.00 | 12.19 | 77.19 |
| கொடுகடன் உத்தரவாதக் கோரல்களின் உயர்ந்தபட்சக் கொடுப்பனவு | | | | 17.81 |
| ஆபரணத்தின் தங்கப் பெறுமதியின் சதவீதமாக உயர்ந்தபட்சப் பொறுப்பு | | | | 17.81 |
| 80 சதவீத பெறுமதி வீதத்திற்கான கடனில் மொத்த இடர்நேர்விற்குள்ளாகும் தன்மையின் சதவீதமாக உயர்ந்தபட்சப் பொறுப்புக்கள் | | | | 18.75 |

| அடகு வைத்த திகதி | தங்க ஆபரணத்தின் பெறுமதி ஐ.அ. டொலர் | ஐ.அ. டொலர்/ இலங்கை ரூபா செலாவணி வீதம் | தங்க ஆபரணத்தின் பெறுமதி ரூ. | செலுத்தத் தவறிய திகதி | 2015.03.31 இலுள்ளவாறு தங்கத்தின் பெறுமதி | | 80 சதவீத பெறுமதி விகிதத்திற்கான கடனில் மொத்த இலாபம்/ (இழப்பு) ரூ. | மத்திய வங்கியினால் செலுத்தப்படவிருக்கும் கொடுகடன் உத்தரவாதக் கோரல்கள் ரூ. | பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கான இழப்புக்கள் ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | % | ரூ. | | | |
| 2014.01.01 | 0.77 | 130 | 100 | 2015.03.31 | | | | | |
| | | | | தங்க விலைகள் இத் தொகையினால் வீழ்ச்சியடைந்ததாக எடுகோள் கொள்ளவும் | 1 | 99.00 | 4.00 | | |
| | | | | | 2 | 98.00 | 3.00 | | |
| | | | | | 3 | 97.00 | 2.00 | | |
| | | | | | 4 | 96.00 | 1.00 | | |
| | | | | | 5 | 95.00 | 0.00 | 0.00 | |
| | | | | | 6 | 94.00 | (1.00) | 1.00 | |
| | | | | | 10 | 90.00 | (5.00) | 5.00 | |
| | | | | | 15 | 85.00 | (10.00) | 10.00 | |
| | | | | | 20 | 80.00 | (15.00) | 15.00 | |
| | | | | | 21 | 79.00 | (16.00) | 16.00 | |
| | | | | | 22 | 78.00 | (17.00) | 17.00 | |
| | | | | | 22.81 | 77.19 | (17.81) | 17.81 | 0.00 |
| | | | | | 23 | 77.00 | (18.00) | 17.81 | 0.19 |
| | | | | | 25 | 75.00 | (20.00) | 17.81 | 2.19 |
| | | | | | 30 | 70.00 | (25.00) | 17.81 | 7.19 |
| | | | | | 35 | 65.00 | (30.00) | 17.81 | 12.19 |
| | | | | | 40 | 60.00 | (35.00) | 17.81 | 17.19 |
| | | | | | 45 | 55.00 | (40.00) | 17.81 | 22.19 |
| | | | | | 50 | 50.00 | (45.00) | 17.81 | 27.19 |

**இணைப்பு 4**

படிவம்: ஆர்டிடி/சிஜிஎஸ்பிஏ (2)

பணிப்பாளர்
பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
30, சனாதிபதி மாவத்தை
கொழும்பு 01

**அடகு முற்பணங்களுக்கான கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின் கீழான கோரல் படிவம்**

கொடுகடன் உத்தரவாத உள்ளடக்க தொகை தொடர்பு எண்: ...............................................

20.... ஆண்டின் ................ மாதத்திற்கான பின்வரும் அடகு முற்பணம் செலுத்தப்படாதிருக்கிறதென இத்தால் வெளிப்படுத்துகிறோம். இம்முற்பணங்கள், அடகு முற்பணங்களுக்கான கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின் உள்ளடக்கத் தொகைக் குறிப்பின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன. அவை தொடர்பான விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

.................% வீதத்தில்

| பகிர்ந்தளிப்பு | | செலுத்தத் தவறிய தொகை (ரூ.) | | | | மொத்தக் கோரல் தொகை (ரூ.) |
|---|---|---|---|---|---|---|
| திகதி | தொகை (ரூ.) | திகதி | மூலதனம் | வட்டி | மொத்தம் | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

| | |
|---|---|
| பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயர்: ........................... ................................................................. <br>கிளை: .................................................. <br>கிளை முகாமையாளரின் கையொப்பம்: ........................................... திகதி: ......................... <br>அலுவலக முத்திரை: | தலைமை அலுவலகத்திலுள்ள அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பம்: ............. திகதி: ..................... <br>..................................................................................... <br>அலுவலக முத்திரை: |

**தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல.: ஆர்டிடி/சிஎஸ்டிடிஎல்எஸ்/2013/01/(ஏ-01)**

பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
இல. 30, சனாதிபதி மாவத்தை,
கொழும்பு 01.
தொலைபேசி : 2477447,2477472,2398748
தொலைநகல் : 2477734,2477733
2014 யூலை 17

அனைத்துப் பங்குபற்றும் நிதியியல் நிறுவனங்களுக்கும்

**வர்த்தக அளவிலான பாற்பண்ணை அபிவிருத்திக் கடன் திட்டத்தின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கான திருத்தம்**

வர்த்தக அளவிலான பாற்பண்ணை அபிவிருத்திக் கடன் திட்டத்தின் நடைமுறைப்படுத்தலுக்காக விடுக்கப்பட்ட 2013 மே 10ஆம் திகதியிடப்பட்ட இல. ஆர்டிடி/சிஎஸ்டிடிஎல்எஸ்/2013/01 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தலின் 5ஆம் பிரிவு பின்வருமாறு வாசிக்கப்படும் விதத்தில் திருத்தப்படுகிறது.

5. **குறைந்தபட்ச நடவடிக்கை:** குறைந்தபட்சம் 7 பசுக்களைக் கொண்ட பாற்பண்ணையொன்று

வர்த்தக அடிப்படையிலான பாற்பண்ணை அபிவிருத்திக் கடன் திட்டத்தின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் மற்றைய அனைத்து நியதிகளும் நிபந்தனைகளும் மாற்றமின்றியிருக்கும் என்பதுடன் மேலே குறிப்பிடப்பட்ட திருத்தம் 2014 யூலை 17ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதலாதலும் வேண்டும்.

எம் ஜே எஸ் அபேசிங்க
**பணிப்பாளர்**
**பிரதேச அபிவிருத்தி திணைக்களம்**

**தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல.: ஆர்டிடி/சிஜிஎஸ்பிஏ/14/1/(ஏ-01)**

பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
இல. 30, சனாதிபதி மாவத்தை,
கொழும்பு 01.
2014 ஒத்தோபர் 09

சேரல்: அனைத்துப் பங்குபற்றும் நிதியியல் நிறுவனங்களுக்கும்

கனம் ஐயா/ அம்மணி

**அடகு முற்பணங்களுக்கான கொடுகடன் உத்தரவாதத் திட்டம் இல. ஆர்டிடி/சிஜிஎஸ்பிஏ/14/1 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தலுக்கான திருத்தம்**

2014 யூன் 17ஆம் திகதியிடப்பட்ட இல. ஆர்டிடி/சிஜிஎஸ்பிஏ/14/1 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தலின் பிரிவு 4.3(ஆ) 2014 ஒத்தோபர் 09ஆம் திகதியிலிருந்து பின்வருமாறு திருத்தப்படுகின்றமை பற்றி தங்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகிறது.

**4.3(ஆ)** அடகு முற்பணம் மீது விதிக்கப்படுகின்ற வட்டி வீதம் ஆண்டிற்கு 12 சதவீதத்தினை விஞ்சக்கூடாது. இது அனைத்துக் கட்டணங்களையும் விதிப்புக்களையும் உள்ளடக்குகிறது.

அடகு முற்பணத்திற்கான கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின் ஏனைய நியதிகளும் நிபந்தனைகளும் மாற்றமடையாது இருக்கின்றன.

உங்கள் உண்மையுள்ள
**பணிப்பாளர்**
**பிரதேச அபிவிருத்தி திணைக்களம்**

**தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல.: ஆர்டிடி/பிஆர்/2010/03/(ஏ-03)**

பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
த.பெ. 590,
இல. 30, சனாதிபதி மாவத்தை,
கொழும்பு 01.
2014 நவெம்பர் 05

தொலைபேசி : 2477447/2477437/2477472/2477448
தொலைநகல் : 2477733/2477734

சேரல்: அனைத்துப் பங்குபற்றும் நிதியியல் நிறுவனங்களுக்கும்

கனம் ஐயா/ அம்மணி

**சுபீட்சக் கடன் திட்டம் (சௌபாக்கியா) - வட்டி வீதங்களுக்கான திருத்தங்கள்**

2011 ஏப்பிறல் 01ஆம் திகதியிடப்பட்ட இல. ஆர்டிடி/பிஆர்/2010/03 கொண்ட தொழிற்பாட்டு (திருத்தப்பட்டது) அறிவுறுத்தல் மூலம் திருத்தப்பட்டவாறான 2010 மாச்சு 22ஆம் திகதியிடப்பட்ட இல. ஆர்டிடி/பிஆர்/2010/03 கொண்ட மேற்குறிப்பிட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் பிரிவு 3.6 மற்றும் 3.7 என்பன 2014 நவெம்பர் 05ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் பின்வருமாறு திருத்தப்படுகின்றன.

3.6 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கான மீள்நிதியிடல் கடன்களின் மீதான வட்டி வீதம் : ஆண்டிற்கு 3 சதவீதம்

3.7 துணைக் கடன்களுக்கான வட்டி வீதம் : ஆண்டிற்கு 8 சதவீதம்

உங்கள் உண்மையுள்ள
எம் ஜே எஸ் அபேசிங்க
**பணிப்பாளர்/பிரதேச அபிவிருத்தி திணைக்களம்**

**தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல.: ஆர்டிடி/சிஎஸ்டிடிஎல்எஸ்/2013/01(ஏ-02)**

பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
இல. 30, சனாதிபதி மாவத்தை,
கொழும்பு 01.
தொலைபேசி : 2477447,2477472,2398748
தொலைநகல் : 2477734,2477727
2014 திசெம்பர் 03

சேரல்: அனைத்துப் பங்குபற்றும் நிதியியல் நிறுவனங்களுக்கும்

**வர்த்தக அளவிலான பாற்பண்ணை அபிவிருத்திக் கடன் திட்டத்தின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கான திருத்தம்**

வர்த்தக அளவிலான பாற்பண்ணை அபிவிருத்திக் கடன் திட்டத்தின் நடைமுறைப்படுத்தலுக்காக விடுக்கப்பட்ட 2013 மே 10ஆம் திகதியிடப்பட்ட இல. ஆர்டிடி/சிஎஸ்டிடிஎல்எஸ்/2013/01 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தலின் 7.2ஆம் பிரிவு பின்வருமாறு வாசிக்கப்படும் விதத்தில் திருத்தப்படுகிறது.

**7.2 கடன்பாட்டாளருக்கான வட்டி வீதம்:** கடன்பாட்டாளருக்கான கடன்கள் மீதான வட்டி வீதம் ஆண்டிற்கு 6 சதவீதமாக இருக்கும்.

வர்த்தக அடிப்படையிலான பாற்பண்ணை அபிவிருத்திக் கடன் திட்டத்தின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் மற்றைய அனைத்து நியதிகளும் நிபந்தனைகளும் மாற்றமின்றியிருக்கும் என்பதுடன் மேலே குறிப்பிடப்பட்ட திருத்தம் 2014 திசெம்பர் 03ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதலாதலும் வேண்டும்.

எம் ஜே எஸ் அபேசிங்க
**பணிப்பாளர்**
**பிரதேச அபிவிருத்தி திணைக்களம்**

பிரதிகள்:

1. முதன்மைக் கணக்காளர்/ இலங்கை மத்திய வங்கி
2. பணிப்பாளர்/ உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி
3. மாகாண முகாமையாளர்கள்/ இலங்கை மத்திய வங்கியின் மாகாண அலுவலர்கள்
4. கணக்காய்வாளர் நாயகம்
5. செயலாளர்/ விலங்கு வளர்ப்பு மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி
6. செயலாளர்/ பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
7. செயலாளர்/ நிதி திட்டமிடல் அமைச்சு

**தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல.: ஆர்டிடி/சிஜிஎஸ்பிஏ/14/1(ஏ-02)**

பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
இல. 30, சனாதிபதி மாவத்தை,
கொழும்பு 01.
2014 திசெம்பர் 30

சேரல்: அனைத்துப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கும்

கனம் ஐயா/ அம்மணி

**அடகு முற்பணத்திற்கான கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின் இல. ஆர்டிடி/சிஜிஎஸ்பிஏ/14/1 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கான திருத்தம்**

மேற்குறிப்பிட்ட அடகு முற்பணத்திற்கான கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்குப் பின்வரும் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளமை பற்றி தங்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

1. பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் வரைவிலக்கணம் 2015 சனவரி 01ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் மாற்றப்பட்டிருக்கிறது. இதன்படி ஆர்டிடி/சிஜிஎஸ்பிஏ/14/1 இலக்க தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் பிரிவு 4.2 பின்வருமாறு திருத்தப்பட்டிருக்கிறது.

   "4.2 இத்திட்டத்தின் கீழ் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் என்பது உரிமம் பெற்ற வங்கிகள் (அதாவது உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்) மற்றும் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் என வரைவிலக்கணம் செய்யப்படுகிறது."

2. மேலும், அடகு முற்பணங்களுக்கான கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின் தொழிற்பாடுகள் 2015 யூன் 30ஆம் நாள் வரை நீடிக்கப்பட்டிருக்கிறது. இதன்படி, பிரிவு 4.3 பின்வருமாறு திருத்தப்படுகிறது.

   "4.3 இவ்வறிவுறுத்தல்களின் திகதியிலிருந்து 2015 யூன் 30ஆம் திகதி வரை அல்லது நாணயச் சபையினால் நீடிக்கப்படக்கூடிய அத்தகைய திகதி வரை பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் வழங்கப்பட்ட அடகு முற்பணங்கள் பின்வரும் நியதிகள் மற்றும் நிபந்தனைகள் நிறைவேற்றப்படுவதற்குட்பட்டு, இக்கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின் மூலம் நன்மையடைவதற்கு உரித்துடையனவாகும்:

   (அ) பெறுமதி விகிதத்திற்கான கடன் வழங்கல் குறிப்பிட்ட பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் தற்போதைய மட்டங்களுக்கு 15 சதவீதத்திற்கு மேலாக இருப்பதோடு 80 சதவீதத்தினை விஞ்சக்கூடாது. மொத்த வெளிப்படுத்துகை பின்வருமாறு கணிக்கப்படுகிறது.

உதாரணம்

**பொறுப்பினைக் கணித்தல்**

| விபரணம் | அடகுபிடித்தல் நேரத்தில் குறிப்பிட்ட பொருட்களின் சந்தைப் பெறுமதி ரூ. | அடகு பிடித்தல் முற்பணம் ரூ. | ஆண்டிற்கு 12 சதவீதம் வட்டி ரூ. | அடகுபிடிக்கப்பட்ட 12 மாதங்களுக்குப் பின்னர் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் மொத்த வெளிப்படுத்துகை ரூ. | அடகுபிடிக்கப்பட்ட 15 மாதங்களின் பின்னர் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் மொத்த வெளிப்படுத்துகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 80 சதவீதம் பெறுமதி விகிதத்திற்கான கடன் வழங்கல் | 100.00 | 80.00 | 9.60 | 89.60 | 92.00 |

(ஆ) அடகுபிடித்தல் மீது விதிக்கப்படுகின்ற வட்டி வீதம் அனைத்துக் கட்டணங்களையும் விதிப்புக்களையும் உள்ளடக்கியிருப்பதுடன் இது 12 சதவீதத்தினை விஞ்சக்கூடாது;

(இ) இத்திட்டத்திற்கு தகைமை பெறுவதற்கு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் அடகுபிடித்தல் முற்பணங்கள் மீது 1 சதவீதம் கொண்ட கொடுகடன் உத்தரவாதக் கட்டுப்பணம் செலுத்தப்படுதல் வேண்டும்;

(ஈ) உயர்ந்தபட்சக் கடன் எல்லை ஆளொருவருக்கு ரூ.500,000 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது;"

3. அடகுபிடித்தல் முற்பணத்திற்கான கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின் ஏனைய நியதிகளும் நிபந்தனைகளும் மாற்றமின்றி இருக்கின்றன.

உங்கள் உண்மையுள்ள
**பணிப்பாளர்**
**பிரதேச அபிவிருத்தி திணைக்களம்**

## 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக்குத்தகைக்கு விடுதல் சட்டம்

2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதி குத்தகைக்குவிடுதல் சட்டத்தின் பிரிவு 4(1) மற்றும் 6 என்பனவற்றுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 35ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியும் நிதி திட்டமிடல் துறைக்குப் பொறுப்பான அமைச்சருமானவரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்

மகிந்த ராஜபக்ஷ
**சனாதிபதியும் நிதி திட்டமிடல் அமைச்சரும்**
**கொழும்பு**

2014 பெப்புருவரி மாதம் 11ஆம் நாள்

## 2014 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நிதி குத்தகைக்கு விடுதல் (பதிவு செய்தல் மற்றும் ஆண்டு உரிமக் கட்டணங்கள்) ஒழுங்குவிதிகள்

எடுத்துக்காட்டல்

1. இவ்வொழுங்குவிதிகள் 2013ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதி குத்தகைக்குவிடுதல் (பதிவு செய்தல் மற்றும் ஆண்டு உரிமக் கட்டணங்கள்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், உடனடியாக தொழிற்பாட்டிற்கு வருதலாதலும் வேண்டும்.

உரிமத்திற்கு விண்ணப்பிக்கின்ற பகிரங்கக் கம்பனியின் வழங்கப்பட்டு இறுக்கப்பட்ட குறைந்தபட்ச மூலதனம்

2. 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடுதல் சட்டத்தின் பிரிவு 3(இ)இன் நோக்கங்களுக்காக, இச்சட்டத்தின் கீழ் உரிமம் பெறுவதற்காக விண்ணப்பிக்கின்ற பகிரங்கக் கம்பனியொன்றின் குறைந்தபட்ச வழங்கப்பட்டு இறுக்கப்பட்ட மூலதனத்தின் அளவு பின்வருமாறு இருத்தல் வேண்டும்.

| வழங்கப்பட்டு இறுக்கப்பட்ட குறைந்தபட்ச மூலதனம் ரூ. மில்லியன் | நடைமுறைக்கு வரும் நாள் |
|---|---|
| 250 | 2014.01.01 இலிருந்து |
| 300 | 2015.01.01 இலிருந்து |

எது எவ்வாறெனினும் வழங்கப்பட்ட சாதாரண பங்குகள், வழங்கப்பட்ட ஒன்றுசேராத பங்குகள், மீட்கப்பட முடியாத முன்னுரிமைப் பங்குகள் என்பன காசிற்காக வழங்கப்பட்டவையாக இருக்குமிடத்து, மாத்திரம் அவை செலுத்தப்பட்டவையாகக் கருதப்படலாம்.

பதிவிற்கான விண்ணப்பக் கட்டணம்

3. சட்டத்தின் பிரிவு 4(1)(உ) இன் நோக்கங்களுக்காக, பதிவிற்கான விண்ணப்பக் கட்டணம் ரூ.100,000 ஆக இருத்தல் வேண்டும்.

பதிவுக் கட்டணம்

4. சட்டத்தின் 3ஆம் பிரிவின் கீழ் பதிவினைப் பெற்றுக் கொள்வதற்கு ஏற்புடைத்தான கட்டணமான ரூ.500,000 இனை (பதிவு செய்யப்பட்ட கலண்டர் ஆண்டிற்கானது) பதிவுத் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ இலங்கை மத்திய வங்கிக்குச் செலுத்துதல் வேண்டும்.

ஆண்டு உரிமக் கட்டணம்

5. சட்டத்தின் 6ஆம் பிரிவின் நோக்கங்களுக்காக, சட்டத்தின் 3ஆம் பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு நிதிக் குத்தகை நிறுவனமும், 2014ஆம் ஆண்டிற்கு ஏற்புடையதான ஆண்டு உரிமக் கட்டணத்தினையும் அதனை அடுத்துவரும் ஒவ்வொரு ஆண்டிற்குமான கட்டணத்தினையும் மொத்தச் சொத்துக்களின் அடிப்படையில் கீழே எடுத்துக்காட்டப்பட்டவாறு இலங்கை மத்திய வங்கிக்கு செலுத்துதல் வேண்டும்.

| முன்னைய கலண்டர் ஆண்டின் முடிவிலுள்ளவாறு நிறுவனத்தின் மொத்தச் சொத்துக்கள் | ஆண்டு உரிமக் கட்டணம் (ரூ.) |
|---|---|
| ரூ. 1 பில்லியன் அல்லது அதற்குக் குறைவானது | 250,000 |
| ரூ. 1 பில்லியனுக்கு மேல் ஆனால் ரூ.10 பில்லியனுக்குக் குறைவானது அல்லது சமனானது | 500,000 |
| ரூ. 10 பில்லியனுக்கு மேல் | 1,000,000 |

நீக்கிவிடுதல்

6. 2010ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடுதல் (பதிவு செய்தல் மற்றும் உரிமக்கட்டணம்) ஒழுங்குவிதி இத்தால் நீக்கப்படுகிறது.

## 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டம்

2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் 12ஆம் பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் விடுக்கப்பட்ட பணிப்புரை.

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

கொழும்பு
2014 மாச்சு 31

## 2014ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (வட்டி வீதங்கள்) பணிப்புரை

எடுத்துக்காட்டல்

1. 1.1 இப்பணிப்புரையானது 2014ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (வட்டி வீதங்கள்) பணிப்புரை என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் நியதிகளின் கீழ் உரிமம் பெற்ற ஒவ்வொரு நிதிக் கம்பனிக்கும் ஏற்புடைத்ததாதலும் வேண்டும்.

1.2 இப்பணிப்புரையின் ஏற்பாடுகள், இப்பணிப்புரையின் திகதியிலிருந்து ஏற்றுக்கொள்ளப்பட்ட அல்லது புதுப்பிக்கப்பட்ட மற்றும் வழங்கப்பட்ட ஏதேனும் தவணை வைப்பு, மாற்றல் செய்ய முடியாத வைப்புச் சான்றிதழ்கள் மற்றும் படுகடன் சாதனங்கள் என்பனவற்றிற்கு ஏற்புடைத்தாதல் வேண்டும்.

தவணை வைப்பிற்கான உயர்ந்தபட்ச வட்டி வீதம்

2. 2.1 தவணை வைப்புக்களின் மீது நிதிக் கம்பனியொன்றினால் செலுத்தப்படத்தக்க ஆண்டு வட்டி வீதம் கீழே எடுத்துக்காட்டப்பட்டவாறு வட்டி வீதங்களின் உயர்ந்தபட்ச மேல் எல்லையினை விஞ்சக்கூடாது.

| தவணை வைப்பு முதிர்ச்சிக் காலம் | வட்டி வீதங்களின் உயர்ந்தபட்ச மேல் எல்லை | |
|---|---|---|
| ஓராண்டு அல்லது அதற்கும் குறைவானவை | வைப்புக்கள் திரட்டப்படுவதற்கு முன்னைய முற்போந்த காலாண்டுப் பகுதியில் நிதிக் கம்பனிகளுக்கு பணிப்பாளரினால் அறிவிக்கப்பட்ட 364 நாள் திறைசேரி உண்டியல்களின் காலாண்டுச் சராசரி நிறையேற்றப்பட்ட விளைவு வீதங்கள் | 3.00 சதவீதப் புள்ளிகளைக் கூட்டியது |
| ஓராண்டிற்கு மேல் - 3 ஆண்டுகள் | | 4.00 சதவீதப் புள்ளிகளைக் கூட்டியது |
| 3 ஆண்டுகளுக்கு மேல் | | 5.50 சதவீதப் புள்ளிகளைக் கூட்டியது |

2.2 ஆளொருவரிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக்கொள்ளுமிடத்து அல்லது அவரால் புதுப்பிக்கப்படுமிடத்து அத்தகைய வைப்புக்களை அவர் மேற்கொள்ளும் பொழுது அல்லது புதுப்பிக்கும் வேளையில் அவர் ஐம்பத்தைந்து (55) வயதிற்கு மேற்பட்டவராக இருப்பின் (இதனகத்துப் பின்னர் மூத்த பிரசை எனக் குறிப்பிடப்படுவார்) நிதிக் கம்பனியொன்று மேலேயுள்ள பந்தியில் (2.1)இல் குறிப்பிடப்பட்டவாறான வட்டி வீதங்களின் உயர்ந்தபட்ச மேல் எல்லைக்குக் கூடுதலாக ஒரு சதவீதத்தினை விஞ்சாத வட்டியொன்றினை கூடுதலாகச் செலுத்தலாம்.

சேமிப்பு வைப்புக்களுக்கான உயர்ந்தபட்ச வட்டி வீதம்

3. 3.1 எந்தவொரு சேமிப்பு வைப்பின் மீதும் நிதிக் கம்பனியொன்றினால் செலுத்தப்படத்தக்க உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள் சேமிப்பு வைப்புக்கள் திரட்டப்படுவதற்கு முன்னைய முற்போந்த காலாண்டுப் பகுதியில் நிதிக் கம்பனிகளுக்கு பணிப்பாளரினால் அறிவிக்கப்பட்ட 91 நாள் திறைசேரி உண்டியல்களின் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதத்தினை விஞ்சக்கூடாது.

3.2 சேமிப்பு வைப்புக்கள் மூத்த பிரசையொருவரினால் பேணப்படுமிடத்து நிதிக் கம்பனியானது பந்தியில் (3.1) உள்ளவாறு, வட்டி வீதங்களின் உயர்ந்தபட்ச மேல் எல்லைக்குக் கூடுதலாக ஒரு சதவீதப் புள்ளியை விஞ்சாத விதத்தில் மேலதிக வட்டி வீதமொன்றினைச் செலுத்தலாம்.

மாற்றல் செய்யமுடியாத வைப்புச் சான்றிதழுக்கான உயர்ந்தபட்ச கழிவு வீதம்

4. முதிர்ச்சியின் போது மீட்கத்தக்க பெறுமதியிலும் பார்க்க குறைந்த விலைகளைக் கொண்ட மாற்றல் செய்யமுடியாத வைப்புச் சான்றிதழ்களின் வழங்கல் மீது நிதிக் கம்பனியொன்றினால் அனுமதிக்கத்தக்க கழிவு வீதம் கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணையிலுள்ள சாதனத்தின் மீதான உயர்ந்தபட்ச ஆண்டு விளைவு வீதத்தினை விஞ்சக்கூடாது.

| மாற்றல் செய்யமுடியாத வைப்புச் சான்றிதழ்களின் முதிர்ச்சிக் காலம் | விளைவு வீதத்தின் உயர்ந்தபட்ச மேல் எல்லை | |
|---|---|---|
| ஓராண்டு அல்லது அதற்கும் குறைவானவை | வைப்புக்கள் திரட்டப்படுவதற்கு முன்னைய முற்போந்த காலாண்டுப் பகுதியில் நிதிக் கம்பனிகளுக்கு பணிப்பாளரினால் அறிவிக்கப்பட்ட 364 நாள் திறைசேரி உண்டியல்களின் காலாண்டுச் சராசரி நிறையேற்றப்பட்ட விளைவு வீதங்கள் | 3.00 சதவீதப் புள்ளிகளைக் கூட்டியது |
| ஓராண்டிற்கு மேல் - 3 ஆண்டுகள் | | 4.00 சதவீதப் புள்ளிகளைக் கூட்டியது |
| 3 ஆண்டுகளுக்கு மேல் | | 5.50 சதவீதப் புள்ளிகளைக் கூட்டியது |

படுகடன் சாதனங்களுக்கான வட்டி/ கழிவிடல்/ நறுக்குகளின் உயர்ந்தபட்ச ஆண்டு வீதம்

5\. 5.1 படுகடன் சாதனமொன்றின் மீது நிதிக் கம்பனியொன்றினால் செலுத்தப்படத்தக்க வட்டி/ கழிவிடல்/ நறுக்கு தொடர்பான உயர்ந்தபட்ச ஆண்டு வீதம் கீழே எடுத்துக்காட்டப்பட்டவாறு முதிர்ச்சிக் காலத்திற்கான வட்டி வீதம்/ கழிவு நறுக்கு வீதத்திற்கான உயர்ந்தபட்ச மேல் எல்லையை விஞ்சக்கூடாது:-

| மாற்றல் செய்யமுடியாத வைப்புச் சான்றிதழ்களின் முதிர்ச்சிக் காலம் | உயர்ந்தபட்ச ஆண்டு வட்டி/கழிவிடல்/நறுக்கு | |
|---|---|---|
| ஓராண்டு அல்லது அதற்கும் குறைவானவை | வைப்புக்கள் திரட்டப்படுவதற்கு முன்னைய முற்போந்த காலாண்டுப் பகுதியில் நிதிக் கம்பனிகளுக்கு பணிப்பாளரினால் அறிவிக்கப்பட்ட 364 நாள் திறைசேரி உண்டியல்களின் காலாண்டுச் சராசரி நிறையேற்றப்பட்ட விளைவு வீதங்கள் | 3.00 சதவீதப் புள்ளிகளைக் கூட்டியது |
| ஓராண்டிற்கு மேல் - 3 ஆண்டுகள் | | 4.00 சதவீதப் புள்ளிகளைக் கூட்டியது |
| 3 ஆண்டுகளுக்கு மேல் | | 6.50 சதவீதப் புள்ளிகளைக் கூட்டியது |

5.2 படுகடன் சாதனமொன்றின் மீது நிதிக் கம்பனியொன்றினால் செலுத்தப்படக்கூடிய வட்டி/ கழிவிடல்/ நறுக்கு என்பனவற்றின் ஆண்டு வீதம் மிதக்கும் அடிப்படையில் இருக்குமிடத்து வட்டி/ கழிவிடல்/ நறுக்கு என்பனவற்றின் உயர்ந்தபட்ச ஆண்டு வீதம், ஒவ்வொரு வட்டி/ நறுக்கு காலமும் தொடங்குவதற்கு முன்னதாக முற்போந்த காலாண்டில் நிதிக் கம்பனிக்கு பணிப்பாளரினால் அறிவிக்கப்பட்ட 364 நாள் திறைசேரி உண்டியல்களின் காலாண்டு நிறையேற்றப்பட்ட சராசரி வீதத்தினை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

5.3 படுகடன் சாதனமொன்றின் மீது நிதிக் கம்பனியொன்றினால் செலுத்தப்படக்கூடிய வட்டி/ கழிவிடல்/ நறுக்கு என்பனவற்றின் ஆண்டு வீதம் நிலையான அடிப்படையில் இருக்குமிடத்து, வட்டி/ கழிவிடல்/ நறுக்கு என்பனவற்றின் உயர்ந்தபட்ச ஆண்டு வீதம், பொதுமக்களுக்கு படுகடன் சாதனங்களின் திகதி அல்லது கழிவிடல் திகதி அறிவிக்கப்படுவதற்கு முன்னதாக முற்போந்த காலாண்டில் நிதிக் கம்பனிக்கு பணிப்பாளரினால் அறிவிக்கப்பட்ட 364 நாள் திறைசேரி உண்டியல்களின் காலாண்டு நிறையேற்றப்பட்ட வீதத்தினை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

காலாண்டு நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம்

6\. 6.1 பணிப்பாளர் மாச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 30 மற்றும் திசெம்பர் 31இல் முடிவடைகின்ற ஒவ்வொரு காலாண்டிற்கும் ஏற்புடைத்தான 91 நாள் மற்றும் 364 நாள் திறைசேரி உண்டியல்களின் காலாண்டு நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதங்களை அறிவிப்பார்.

6.2 அத்தகைய வட்டி/ கழிவிடல்/ நறுக்குக் கொடுப்பனவுக் காலப்பகுதிக்கு ஏற்புடைத்தான காலாண்டு நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதங்கள் நிதிக் கம்பனியினால் ஒவ்வொரு நறுக்குக் கொடுப்பனவுக் காலம் தொடங்குவதற்கு முன்னதாக கொழும்பு பங்கு பரிவர்த்தனை மற்றும் நம்பிக்கைப் பொறுப்பாளர்களுக்கு அறிவிக்கப்படல் வேண்டும்.

அறிக்கையிடல்

7\. ஒவ்வொரு நிதிக் கம்பனியும், பணிப்பாளரினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தலின்படி தவணை வைப்புக்கள், சேமிப்பு வைப்புக்கள், மாற்றத்தகாத வைப்புச் சான்றிதழ்கள் மற்றும் படுகடன் சாதனங்கள் என்பனவற்றிற்குப் பிரயோகிக்கத்தக்க வட்டி வீதம்/ கழிவிடல்/ நறுக்கு வீதங்களின் விபரங்களை அத்தகைய நிதிக் கம்பனிகள் ஒவ்வொரு மாதமும் அடுத்துவரும் மாதத்தின் 7ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ சமர்ப்பித்தல் வேண்டும்.

வரைவிலக்கணம்

8\. இப்பணிப்புரையில்

8.1 "தவணை வைப்புக்கள்" என்பது குறிப்பிட்ட காலத்தின் பின்னர் மீளக் கொடுப்பனவு செய்ய வேண்டுமென்ற உடன்படிக்கையுடன் நிதிக் கம்பனியொன்றினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏதேனும் வைப்பு எனப் பொருள்படும்.

8.2 "படுகடன் சாதனம்" என்பது பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான முறிகள், தொகுதிக் கடன்கள், வர்த்தகப் பத்திரங்கள், வாக்குறுதிச் சான்றிதழ்கள் அல்லது வேறு ஏதேனும் படுகடன் சாதனங்கள் எனப் பொருள்படும்.

8.3 "பணிப்பாளர்" என்பது இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளர் எனப் பொருள்படும்.

நீக்கப்படுதல்

9\. 2013ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (வட்டி வீதங்கள்) பணிப்புரை இத்தால் நீக்கப்படுகிறது.